413

# கலைமகள்

413



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
26 JUL 1941
MADRAS

விஷு ௵

6 As

ஆனி ௴




வாஹினி பிக்சர்ஸ் லிமிடெட், 43, ஆச்சாரப்பன் தெரு, மதராஸ்.




புதிய வெளியீடு !

"ஸாவித்ரி"யிலிருந்து

ஷாந்தா ஆப்தே பாடியது } N. 18129 { உயர்மிது / ஸஹியேன்

எல்லா " எச். எம். வி." கிராமபோன் வியாபாரிகளிடமும் கிடைக்கும்

- " ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ் " -

## இன்ஷ்யூர்
செய்யுங்கள்

# ஜூபிடர் ஜெனரல்
## இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

கீழ்க்கண்ட இன்ஷ்யூரன்ஸ் அலுவல்களைக் கவனிக்கும்
ஆயுள், நெருப்பு, கப்பல், மோட்டார்கார், பஸ்கள்,
டாக்ஸிகள், தொழிலாளர் நஷ்ட ஈடு

சமுத்திரம்
சாதனம் ரெயில்வே சாதனம்
தபால்

பிரபல இந்திய இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி
வாக்களிக்கப்பட்ட மூலதனம்
**ஒன்றரைக் கோடி ரூபாய்**
எங்கும் ஏஜெண்டுகள் தேவை
பிராஞ்சு ஆபீஸ்: 99, அரண்மனைக்காரத் தெரு, மதராஸ்.
பிராஞ்சு மானேஜர்: N. வேங்கடராம அய்யர்.

---

SRIMAD
# Valmiki Ramayanam
COMPLETE WITH INDEX
**Special Features of our edition:**

(1) Ours is an Authoritative Text of the Great Epic;
(2) Printed in fine Devanagari Types on special costly paper;
(3) Has Seventeen (17) Tri-Colour Half-tone Illustrations;
(4) Its very neat and attractive binding;
(5) Complete index of verses and proper names.

Indispensable for Daily Parayanam. Order your Copy immediately

| | | |
|---|---|---|
| THICK PAPER EDITION | .. | Rs. 4 0 0 |
| SPECIAL THIN PAPER EDITION | ... | Rs. 5 0 0 |

*(Postage or Rail Charges extra. Free Packing.)*

மானேஜர்—கலைமகள்—மயிலாப்பூர்

## முக்கிய அறிவிப்பு

சந்தா நேயர்கள் பலர் தமக்குப் பிரதிகள் கிடைக்காவிடின் குறிப்பிட்ட பிரதி கிடைக்கவில்லையென்று பல மாதங்கள் கழித்துக் கடிதம் எழுதுகிறார்கள். விலாச மாறுதலையும் அவ்விதமே முதலில் தெரிவியாமல் பத்திரிகை கிடைக்கவில்லை என்று எழுதுகிறார்கள். விலாச மாறுதலை இங்கிலீஷ் ௴ 10-ஆம் தேதிக்குள் தெரிவிப்பது நலம். கலைமகள் இதழ் ஒவ்வொன்றும் தமிழ் ௴ முதல் தேதி (இங்கிலீஷ் ௴ சுமார் 16-ஆம் தேதி) வெளிவரும். 20 தினங்களுக்குள் இதழ் கிடைக்காவிடின் கடிதம் எழுதினால் அதை மீண்டும் அனுப்ப இயலும்.

கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை


## ஆரம்ப பாடசாலைக்குரிய எமது புதிய தமிழ்ப் பிரசுரங்கள்

இவைகள் புதிய பாடதிட்டத்தை அனுசரித்து எழுதப்பட்டவை.

நமது

# தாய்மொழி வாசகம்

ஆசிரியர்

N. பரமசிவ அய்யர், பி. ஏ., எல். டி.

| | | | | |
|---|---|---|---|---|
| முதற் புத்தகம் | ... | 0 | 2 | 6 |
| இரண்டாம் புத்தகம் | ... | 0 | 3 | 6 |
| மூன்றாம் புத்தகம் | ... | 0 | 4 | 6 |
| நான்காம் புத்தகம் | ... | 0 | 5 | 0 |
| ஐந்தாம் புத்தகம் | ... | 0 | 6 | 0 |

பி. ஜி. பால் அண்டு கம்பெனி

4, பிரான்ஸிஸ் ஜோசப்புத் தெரு,

சென்னை.

# கலைமகள்

தொகுதி ௧௬] விஷு ௵ ஆனி ௴ [பகுதி ௧௧௪
ஜூன், 1941

## பொருளடக்கம்

1. வித்துவான் தியாகராச செட்டியார்—மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் ... 617
2. தமிழ்ப் பாஷைக்குஉள்ள குறைகள்—சி. சுப்பிரமணிய பாரதியார் ... 623
3. பாரதியாரின் 'குயில்'—'மாரார்' ... 627
4. 'சனியன் தொலைந்தது'—ரா. ஸ்ரீ. தேசிகன், எம்.ஏ.... 634
5. நீர்க்குமிழி—எப். டபிள்யூ. பெயின் (கி. சாவித்திரி அம்மாள் மொழிபெயர்ப்பு) ... 641
6. ரானடேயின் பெருந்தன்மை—எஸ். ஆர். வேங்கடராமன், பி.ஏ., பி.எல். ... 653
7. லட்சியச் சிதைவு—ரா. சு. கிருஷ்ணஸ்வாமி ... 657
8. சியாமளா—கமலா பத்மநாபன் ... 663
9. ஸுலுக்களின் பழக்க வழக்கங்கள் (படங்களுடன்) டர்பன் ச. முனிஸ்வாமி பிள்ளை ... 672
10. கலிங்கத்தில் பிறந்த பௌத்த கீதை— ரெ. கிருஷ்ணையங்கார் ... 676
11. பிறந்த நாள்—கி. சங்கரநாராயணன், பி.ஏ., பி.எல். . 685
12. தெய்வசித்தம்—'மாயாவி' ... 690
13. ஒரு பைத்தியம்—நா. ராமரத்னம், எம்.ஏ. ... 703
14. மகிஷவாகன பண்டிதர் (படங்களுடன்)—'உமா' ... 708
15. மண்ணாசை—'சித்ரா' ... 712
16. மதிப்புரை ... 717
17. குறிப்பும் திரட்டும் ... 720

அட்டைப் படம்: சென்னை ஹைகோர்ட்டு

முகப்புப் படம்: ஸம்ராட் அசோகன்

விஸ்வா & கோ
ஆர்டிஸ்ட்ஸ், பிளாக் அண்ட் ரப்பர் ஸ்டாம்பு மேக்கர்ஸ்
50, வாலாஜா ரோட்,
மவுண்ட் ரோட், மதராஸ்.




# தொகுதி ௧௧

## பகுதி ௧௦௯—௧௧௪

[விக்கிரம ௵ தைமீ௴ முதல்
விஷ ௵ ஆனிமீ௴ வரை]

—:o:—

ஆசிரியர்:
ஆர். நாராயணசாமி ஐயர், பி.எ., பி.எல்.

1941

சென்னை லா ஜர்னல் அச்சுக்கூடம், மயிலாப்பூர்

(உரிமை பதிவு செய்யப்பட்டது)

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
சென்னை-600 008

# பத்தொன்பதாந் தொகுதியின் பொருளடக்கம்


| | |
|---|---|
| அக்நிஸ்தோமம்—சி. சுப்பிரமணிய பாரதியார் ... | 7 |
| அதிலும் ஒரு லாபம்—ஸரஸ்வதி அம்மாள் ... | 155 |
| அரசன் ஆணை—தி. நா. சுப்பிரமணியன் ... | 181 |
| அரசாங்கத்தாரும் தொழில்களும்—டாக்டர் ஜே. ஸி. குமரப்பா ... | 390 |
| அலமேலுவின் அஹிம்ஸாதர்மம்—ந. சிதம்பர சுப்ரமண்யன் ... | 49 |
| அஜந்தா பிரயாணம்—எஸ். ஆர். வேங்கடராமன், பி.ஏ., பி.எல். ... | 418 |
| ஆச்சரியமா ? ஏமாற்றமா ?—கி. சந்திரசேகரன் .. | 140 |
| ஆயா—து. ராமமூர்த்தி ... | 68 |
| இரண்டு உபநிஷத்துக்கள்—சி. சுப்பிரமணிய பாரதியார்... | 521 |
| இளவரசர் துறவு—மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் ... | 1 |
| உண்மைப் பொருள்—பெ. நா. அப்புஸ்வாமி ஐயர், பி.ஏ., பி. எல். ... | 329 |
| எதிர்பாராதது—கௌரி ... | 606 |
| எலியோ எலி—பெ. நா. அப்புஸ்வாமி ஐயர், பி.ஏ., பி.எல். | 136 |
| என் புத்தகங்கள்—'குமுதினி' ... | 578 |
| எனது சிந்தனை—கி. சாவித்திரி அம்மாள் ... | 165 |
| எசுநாதரின் உபதேசக் கதைகள்—ரா. ஸ்ரீ. தேசிகன், எம். ஏ. ... | 375 |
| ஐவர்மலை—ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளை, பி.ஏ.,பி.எல்., | 559 |
| ஐ. ஸி. எஸ்.—ந. பிச்சமூர்த்தி, பி. ஏ. ... | 470 |
| ஒரு பைத்தியம்—நா. ராமரத்னம், எம். ஏ. ... | 703 |
| கடவுளுக்கு வைத்தியம்—சங்கரராம் ... | 55 |
| கண்டதும் காணாததும்—சு. குருசாமி, பி. ஏ., எல். டி... | 239 |
| கண்ணீர்த் துளிகள்—த. நா. குமாரஸ்வாமி, பி. ஏ. ... | 150 |
| கத்தரிக்காயின் உறவினர்கள்—விசாலி ராஜம் ... | 249 |
| "கதவை மூடுவானேன் ?"—எஸ். ஆர். வேங்கடராமன், பி.ஏ., பி.எல். ... | 283 |
| கதை எழுதும் விதம்—'கொனஷ்டை' ... | 145 |
| கப்பலோட்டிய தமிழன்—வரகவி திரு. அ. சுப்பிரமணிய பாரதியார் ... | 177 |
| கலிங்கத்தில் பிறந்த பௌத்தகீதை—ரெ. கிருஷ்ணையங்கார் | 676 |
| கலை—சி. சுப்பிரமணிய பாரதியார் ... | 315 |
| கலை அரங்கம்—மே. சு. இராமசுவாமி ... | 293 |

கவியும் உருவமும்—டி. கே. சிதம்பரநாத முதலியார், பி. ஏ., பி. எல். ... 191
களவியல்—'வாவலிஷ்டன்' ... 586
கஜகர்ப்பம்—ம. அனந்தராமன், எம். ஏ., எம். எஸ்ஸி ... 215
காலதேவதையின் நகைகள்—'கொனஷ்டை' ... 452
குரங்கு சொன்ன யுக்தி—'ஸேஞு' ... 613
குழந்தைகளின் கனவும் கிலியும்—எஸ். ஜகந்நாதன் ... 274
குழந்தை மோட்டார்—கமலா பத்மநாபன் ... 457
குறிப்பும் திரட்டும் ... 512, 720
கைக்கிளை—ராவ்பகதூர் ஸி. எம். இராமசந்திர செட்டியார், பி. ஏ., பி. எல். ... 89
கொள்ளிப் பிசாசு—தி. வாசுதேவன் ... 447
சங்க இலக்கியம்—ராவ்சாகிப் எஸ். வையாபுரிப் பிள்ளை, பி. ஏ., பி. எல். ... 383
சககமனம்—ரா. ஸ்ரீ. தேசிகன், எம். ஏ. ... 225
சர்க்கரைப் பொங்கல்—கே. வீ. வீரராகவையர், எம். ஏ., எல். டி. ... 169
சரிகைச் சேலை—கி. ஸரஸ்வதி அம்மாள் ... 492
'சனியன் தொலைந்தது'—ரா. ஸ்ரீ. தேசிகன், எம். ஏ. ... 634
சாந்தி—து. ராமமூர்த்தி ... 537
சியாமளா—கமலா பத்மநாபன் ... 663
சிற்பியின் கனவு—'கும்பன்' ... 323
சுயபுத்தி இல்லாத மூடன்—எஸ். ஸோமாஸ்கந்தன் ... 298
சோழமண்டலத் தமிழும் ஈழமண்டலத் தமிழும்—சுவாமி விபுலானந்தர் ... 82
தமிழ்நாட்டுச் சாஸனங்கள்—தி. நா. சுப்பிரமணியன் 220, 395, 529
தமிழ்ப் பாஷைக்கு உள்ள குறைகள்—சி. சுப்பிரமணிய பாரதியார் ... 623
தமிழ்ப் பாஷையின் குறைகள்—'தேசநன்மை நாடுவோன்' 500
தமிழில் எழுத்துக்குறை—சி. சுப்பிரமணிய பாரதியார் ... 206
தமிழில் முதல் அச்சுப் புஸ்தகம்—பி. கோதண்டராமன், எம். ஏ., பி. எல்., தி. நா. சுப்பிரமணியன் ... 464, 466
தனிமை இரக்கம்—சி. சுப்பிரமணிய பாரதியார் ... 47
தாயும் சேயும்—பி. எஸ். சுப்பிரமணியன் ... 368
திருக்கேதீச்சரம்—குல. சபாநாதன் ... 129
தில்லையின் புராதனக் கல்வெட்டுக்கள்—எஸ். ஆர். பாலசுப்பிரமணிய ஐயர், எம்., ஏ. எல். டி. ... 26
துரைசாமியின் ராஜிநாமா—'ராகோ' ... 337
தூமகேது—'சம்பந்தம்' ... 196
தெய்வசித்தம்—'மாயாவி' ... 690
தெய்வத்தின் சொந்த நாடு—டாக்டர் பி. என். ராமஸுப்ரஹ்மண்யம் ... 76
தேவியின் தியாகம்—தே. ஸ்ரீ. ... 210
நண்பன் மனைவி—கே. ஸ்ரீநிவாஸ், பி. ஏ. ... 289
நவீன ஸக்குபாய்—க. நா. சுப்பிரமணியம், பி. ஏ. ... 105

நாடோடிப் பாட்டுக்கள்—பி. கோதண்டராமன், எம். ஏ., பி. எல். ... 589
'நான் எப்படித் தூங்குவேன்?'—எஸ். ஆர். வேங்கடராமன், பி.ஏ., பி.எல். ... 113
நிறமாலை—ஆர். கே. விசுவநாதன், எம். ஏ. ... 342
நீர்க்குமிழி—எப். டபிள்யூ. பெயின் (கி. சாவித்திரி அம்மாள் மொழிபெயர்ப்பு) ... 263, 346, 476, 544, 641
நூற்றெட்டுத் தேங்காய்—ந. பிச்சமூர்த்தி, பி. ஏ. ... 123
"பங்காளி"—எஸ். ராமன் ... 554
பங்கிம் சந்திரரின் நாவல்களில் இயற்கை வருணனை—பி. கோதண்டராமன், எம். ஏ., பி. எல். ... 96
பத்திரிகைக்குப் புத்துயிர்—கி. சங்கரநாராயணன், பி. ஏ., பி. எல். ... 34
பாரதியாரின் 'குயில்'—'மாரார்' ... 627
பிச்சைக்காரர்—சி. வைத்தியலிங்கம் ... 443
பிறந்த நாள்—கி. சங்கரநாராயணன், பி.ஏ., பி.எல். ... 685
புத்தரும் தீண்டாமையும்—சி. தேசிகவிநாயகம் பிள்ளை ... 61
புது அனுபவம்—பி. வி. சுப்பிரமணியன், பி. ஏ. ... 118
புது யுகமா?—'குமுதினி' ... 506
புரையேறும் காரணம்—வ. வேணுகோபாலன் ... 400
மகிஷவாகன பண்டிதர்—'உமா' ... 708
மண்ணாசை—'சித்ரா' ... 712
ஷை —'ராமநரசன்' ... 362
மண்மணம்—'மாரார்' ... 236
மதிப்புரை 302, 406, 717
மாங்குடி சிதம்பர பாகவதர்—ராவ்பகதூர் கே. வி. கிருஷ்ணஸ்வாமி ஐயர், பி. ஏ., பி. எல். ... 525
மின்னலுக்கு—சுத்தானந்த பாரதியார் ... 95
முக்கூடற்பள்ளு—டி. கே. சிதம்பரநாத முதலியார், பி. ஏ., பி. எல். ... 317
யுத்தகாலத்தில் தூது செல்லும் பறவைகள்—எஸ். எஸ். ராமசாமி, பி, எஸ்ஸி., பி. எல். ... 65
ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் உபதேசக் கதைகள்—ரா. ஸ்ரீ. தேசிகன், எம். ஏ. ... 427
ராமதீர்த்தரின் உபதேசக் கதைகள்— ஷை ... 582
ரானடேயின் பெருந்தன்மை—எஸ். ஆர். வேங்கடராமன், பி. ஏ., பி. எல். ... 653
ராஜ்யஸ்ரீயின் விடுதலை—ரா. ஆறுமுகம் ... 433
ரெலடிவிடி அல்லது சார்புநிலைக் கொள்கை—பெ. நா. அப்புஸ்வாமி ஐயர், பி. ஏ., பி. எல். ... 572
ரோமநாட்டுச் சிறுவன்—சு. வேங்கடசுப்பிரமணியம் ... 503
லட்சியச் சிதைவு—ரா. சு. கிருஷ்ணஸ்வாமி ... 657
வங்க விழாக்கள்—வே. ரா. சுந்தரராமன், எம். ஏ. ... 254
வித்தியானந்தன்—ஸரோஜா ... 566

வித்துவான் தியாகராச செட்டியார்—மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் ... 201, 305, 409, 513, 617
விதி—புரசு பாலகிருஷ்ணன், எம். பி., பி. எஸ். ... 16
வேதகாலத்தில் தாய்நாட்டன்பு—ஆர். கே. பார்த்தஸாரதி, எம். ஏ. ... 245
ஸ்வர்க்கம் தந்த வரம்—கவி பச்சன் (கா. ஸ்ரீ. ஸ்ரீநிவாஸா சாரியார் மொழிபெயர்ப்பு) ... 562
ஸேவாகிராமத்தில் ஒரு தினம்—'குமுதினி' ... 39
ஸௌலுக்களின் பழக்கவழக்கங்கள்—டர்பன் ச. முனிஸ்வாமி பிள்ளை ... 672
ஸௌந்தர்ய நர்த்தனம்—டாக்டர் வே. ராகவன், எம். ஏ., பிஎச். டி. ... 598
ஹம்பி—'மூர்த்திவாஸன்' ... 161
ஹிமாலய யாத்திரை—டி. எஸ். அவிநாசிலிங்கம் செட்டியார், பி. ஏ., பி. எல்., எம். எல். ஏ. ... 10

## கட்டுரை எழுதியவர்கள்

அப்புஸ்வாமி ஐயர், பே. நா., பி.ஏ., பி.எல்:
உண்மைப்பொருள் ... 329
எலியோ எலி ... 136
ரெலடிவிடி அல்லது சார்புநிலைக் கொள்கை ... 572
அவிநாசிலிங்கம் செட்டியார், டி. எஸ்., பி.ஏ., பி.எல்:
ஹிமாலய யாத்திரை ... 10
அனந்தராமன், ம., எம். ஏ., எம். எஸ்ஸி:
கஜ கர்ப்பம் ... 215
ஆறுமுகம், ரா:
ராஜ்யஸ்ரீயின் விடுதலை ... 433
இராமசந்திர செட்டியார், ஸி. எம்., ராவ்பகதூர், பி.ஏ., பி.எல்:
கைக்கிளை ... 89
இராமசுவாமி, மே. சு:
கலை அரங்கம் ... 293
'உமா':
மகிஷவாகன பண்டிதர் ... 708
கமலா பத்மநாபன்:
குழந்தை மோட்டார் ... 457
சியாமளா ... 663
கிருஷ்ணஸ்வாமி ஐயர், கே. வி., ராவ்பஹதூர், பி.ஏ., பி.எல்:
மாங்குடி சிதம்பர பாகவதர் ... 525
கிருஷ்ணஸ்வாமி, ரா. சு:
லட்சியச் சிதைவு ... 657
கிருஷ்ணையங்கார், ரே:
கலிங்கத்தில் பிறந்த பௌத்த கீதை ... 676
'கும்பன்':
சிற்பியின் கனவு ... 323

குமரப்பா, ஜே. ஸி., டாக்டர்:
அரசாங்கத்தாரும் தொழில்களும் ... 390
குமாரஸ்வாமி, த. நா., பி. ஏ:
கண்ணீர்த் துளிகள் ... 150
'குமுதினி':
என் புத்தகங்கள் ... 578
புது யுகமா? ... 506
ஸேவாகிராமத்தில் ஒரு தினம் ... 39
குருசாமி, சு., பி. ஏ., எல். டி:
கண்டதும் காணாததும் ... 239
'கோனஷ்டை':
கதை எழுதும் விதம் ... 145
காலதேவதையின் நகைகள் ... 452
கோதண்டராமன், பி., எம்.ஏ., பி. எல்:
தமிழில் முதல் அச்சுப் புஸ்தகம் ... 464
நாடோடிப் பாட்டுக்கள் ... 589
பங்கிம்சந்திரரின் நாவல்களில் இயற்கை வருணனை ... 96
கேளரி:
எதிர்பாராதது ... 606
சங்கரநாராயணன், கி., பி.ஏ., பி.எல்:
பத்திரிகைக்குப் புத்துயிர் ... 34
பிறந்த நாள் ... 685
சங்கரராம்:
கடவுளுக்கு வைத்தியம் ... 55
சந்திரசேகரன், கி., எம். ஏ., பி. எல்.:
ஆச்சரியமா? ஏமாற்றமா? ... 140
சபாநாதன், குல:
திருக்கேதீச்சரம் ... 129
'சம்பந்தம்':
தூமகேது ... 196
சாமிநாதையர், உ. வே., மகாமகோபாத்தியாய டாக்டர்:
இளவரசர் துறவு ... 1
வித்துவான் தியாகராச செட்டியார் ... 201, 305, 409, 513, 617
சாவித்திரி அம்மாள், கி:
எனது சிந்தனை ... 165
நீர்க்குமிழி ... 263, 346, 476, 544, 641
'சித்ரா':
மண்ணாசை ... 712
சிதம்பர சுப்ரமண்யன், ந:
அலமேலுவின் அஹிம்ஸா தர்மம் ... 49
சிதம்பரநாத முதலியார், டி. கே., பி.ஏ., பி.எல்:
கவியும் உருவமும் ... 191
முக்கூடற்பள்ளு ... 317

சுத்தானந்த பாரதியார்:
மின்னலுக்கு ... 95
சுந்தரராமன், வே. ரா., எம். ஏ:
வங்க விழாக்கள் ... 254
சுப்பிரமணிய பாரதியார், சி:
அக்னிஸ்தோமம் ... 7
இரண்டு உபநிஷத்துக்கள் ... 521
கலை ... 315
தமிழ்ப்பாஷைக்கு உள்ள குறைகள் ... 623
தமிழில் எழுத்துக்குறை ... 206
தனிமை இரக்கம் ... 47
சுப்பிரமணிய பாரதியார், வரகவி திரு. அ:
கப்பலோட்டிய தமிழன் ... 177
சுப்பிரமணியம், க. நா., பி. ஏ:
நவீன ஸக்குபாய் ... 105
சுப்பிரமணியன், தி. நா:
அரசன் ஆணை ... 181
தமிழ்நாட்டுச் சாஸனங்கள் 220, 395, 529
தமிழில் முதல் அச்சுப் புஸ்தகம் ... 466
சுப்பிரமணியன், பி. எஸ்.
தாயும் சேயும் ... 368
சுப்பிரமணியன், பி. வி., பி. ஏ:
புது அனுபவம் ... 118
சோமசுந்தரம் பிள்ளை, ஜே. எம்., பி. ஏ., பி. எல்:
ஐவர்மலை ... 559
'தேச நன்மை நாடுவோன்':
தமிழ்ப் பாஷையின் குறைகள் ... 500
தேசிகவிநாயகம் பிள்ளை, சி:
புத்தரும் தீண்டாமையும் ... 61
தேசிகன், ரா. ஸ்ரீ., எம். ஏ:
ஏசுநாதரின் உபதேசக் கதைகள் ... 375
சககமனம் ... 225
'சனியன் தொலைந்தது' ... 634
ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் உபதேசக் கதைகள் ... 427
ராமதீர்த்தரின் உபதேசக் கதைகள் ... 582
தே. ஸ்ரீ:
தேவியின் தியாகம் ... 210
பச்சன், கவி:
ஸ்வர்க்கம் தந்த வரம் ... 562
பார்த்தஸாரதி, ஆர். கே., எம். ஏ:
வேதகாலத்தில் தாய்நாட்டன்பு ... 245
பாலகிருஷ்ணன், புரசு., எம். பி., பி. எஸ்:
விதி ... 16
பாலசுப்பிரமணிய ஐயர், எஸ். ஆர்., எம். ஏ., எல். டி:
தில்லையின் புராதனக் கல்வெட்டுக்கள் ... 26

பிச்சமூர்த்தி, ந., பி. ஏ:
ஐ. ஸி. எஸ். ... 470
நாற்றெட்டுத் தேங்காய் ... 123
பேயின், எப். டபிள்யூ:
நீர்க்குமிழி ... 263, 346, 476, 544, 641
'மாயாவி':
தெய்வசித்தம் ... 690
'மாரார்':
பாரதியாரின் 'குயில்' ... 627
மண்மணம் ... 236
முனிஸ்வாமி பிள்ளை, டர்பன் சா:
ஸுலுக்களின் பழக்க வழக்கங்கள் ... 672
'மூர்த்திவாஸன்':
ஹம்பி ... 161
ராகவன், வே., டாக்டர், எம். ஏ., பிஎச். டி:
ஸௌந்தர்ய நர்த்தனம் ... 598
ரா. கோ:
துரைசாமியின் ராஜிநாமா ... 337
ராமசாமி, எஸ். எஸ், பி. எஸ்ஸி., பி. எல்:
யுத்தகாலத்தில் தூதுசெல்லும் பறவைகள் ... 65
'ராமநரஸன்':
மண்ணாசை ... 362
ராமமூர்த்தி, து:
ஆயா ... 68
சாந்தி ... 537
ராமரத்னம், நா, எம். ஏ:
ஒரு பைத்தியம் ... 703
ராமன், எஸ்:
"பங்காளி" ... 554
ராமஸுப்ரஹ்மண்யம், பி. என்., டாக்டர்:
தெய்வத்தின் சொந்த நாடு ... 76
வாசுதேவன், தி:
கொள்ளிப் பிசாசு ... 447
'வாஸிஷ்டன்':
களவியல் ... 586
விசாலி ராஜம்:
கத்தரிக்காயின் உறவினர்கள் ... 249
விசுவநாதன், ஆர். கே., எம். ஏ.:
நிறமாலை ... 342
விபுலானந்தர், சுவாமி:
சோழமண்டலத் தமிழும் ஈழமண்டலத் தமிழும் ... 82
வீரராகவையர், கே. ஸீ., எம். ஏ., எல். டி:
சர்க்கரைப் பொங்கல் ... 169
வேங்கடசுப்பிரமணியம், சு:
ரோமநாட்டுச் சிறுவன் ... 503

வேங்கடராமன், எஸ். ஆர்., பி.ஏ., பி.எல்:
அஜந்தா பிரயாணம் ... 418
'கதவை மூடுவானேன்?' ... 283
'நான் எப்படித் தூங்குவேன்?' ... 113
ரானடேயின் பெருந்தன்மை ... 653
வேணுகோபாலன், வ:
புரையேறும் காரணம் ... 400
வைத்தியலிங்கம், சி:
பிச்சைக்காரர் ... 443
வையாபுரிப்பிள்ளை, எஸ்., ராவ்சாகிப், பி. ஏ., பி. எல்:
சங்க இலக்கியம் ... 383
ஜகந்நாதன், எஸ்:
குழந்தைகளின் கனவும் கிலியும் ... 274
ஸ்ரீநிவாஸ், கே., பி. ஏ:
நண்பன் மனைவி ... 289
ஸ்ரீநிவாஸாசாரியார், கா. ஸ்ரீ:
ஸ்வர்க்கம் தந்த வரம் (மொழிபெயர்ப்பு) ... 562
ஸரஸ்வதி அம்மாள், கி:
அதிலும் ஒரு லாபம் ... 155
சரிகைச் சேலை ... 492
ஸரோஜா:
விசுதியானந்தன் ... 566
'ஸேனு':
குரங்கு சொன்ன யுக்தி ... 613
ஸோமாஸ்கந்தன், எஸ்:
சுயபுத்தி இல்லாத மூடன் ... 298

---

# தனிப் படங்கள்

எதிர்ப்பக்கம்
அடையாற்றிலுள்ள ஹிந்துக் கோயில் .. 165
அமெரிக்கக் காட்சிகள் (4 படங்கள்) .. 80, 81
இளவரசர் துறவு .. 1
கும்பகோணம் சார்ங்கபாணி கோயிற் காட்சிகள் (3 படங்கள்) .. 88, 89, 117
கும்பகோணம் மகாமகக் குளம் .. 117
கோபாலகிருஷ்ண கோகலே .. 116
தண்டலம் கோபால ராவ் .. 513
திருவாரூர்க் கோயில் .. 305
பொங்கல் காட்சிகள் (8 படங்கள்) .. 116, 117
மகாராஜா சுவாதித் திருநாள் .. 201
ராமகிருஷ்ண பரமஹம்ஸர் .. 409
வாரங்கல் காட்சிகள் .. 165
ஸம்ராட் அசோகன் .. 617
ஹம்பியில் சில காட்சிகள் (6 படங்கள்) .. 164, 165




ஸம்ராட் அசோகன்
(கலிங்கப்போரின் பின்)

ஓவியர் : ஸ்ரீ எம். எஸ். சர்மா




# வித்துவான் தியாகராச செட்டியார்

மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர்

## ௧

### நண்பர்கள்

தியாகராச செட்டியார் கும்பகோணத்தில் அடியெடுத்து வைத்தது முதலே புகழும் பாக்கியமும் அவரைத் தேடிவந்து அடைந்தன என்றே சொல்லவேண்டும். எல்லோரும் உத்தியோகத்தைத் தேடி அலைந்து கொண்டிருக்க, உத்தியோகம் அவரைத் தேடி வந்தது. கும்பகோணத்தில் எல்லோரும் புதியவர்களாக இருந்தாலும் கோபாலராவ் இவரிடத்தில் விசேஷ மதிப்புடையவராக இருந்ததே இவருக்குப் பெரிய பலமாயிற்று. 'முன்பு அறியாத ஒருவரை வலிய அழைத்து விட்டோமே. இவர் தம் பெயரையும் நம் பெயரையும் காப்பாற்ற வேண்டுமே!' என்ற கவலை கோபாலராவுக்கு இருந்திருக்கலாம். ஆதலால் அவர் அடிக்கடி செட்டியார் பாடம் நடத்தும்போது இவருடைய வகுப்புக்குச் சென்று கவனிப்பார்; தனியே சந்திக்கும் காலங்களில் தமிழ் நூல்களில் நுணுக்கமாக உள்ள விஷயங்களைப்பற்றிய கேள்விகளைக் கேட்பார். பாடம் சொல்லவேண்டிய செய்யுட்களையும் எங்ஙனம் போதிக்க எண்ணியுள்ளாரென்பதையும் விசாரிப்பார். பண்டமில்லாதவராக இருந்தால் கோபாலராவ் இவ்வாறு செய்துவந்த சோதனைக்குப் பயந்து ஒரு வாரங்கூட நிலைத்திராமல் வேலையை விட்டுவிட்டுப் போயிருப்பார். செட்டியார் நன்றாகப் படித்தவராதலின் கோபாலராவினுடைய சோதனைகளில் நல்ல வெற்றி பெற்றார். 'இத்தகைய அறிவாளியின் மனத்தில் நல்ல எண்ணம் உண்டாக்கவேண்டும்' என்ற

விருப்பத்தால் இவர் கோபாலராவின் மனம் உவக்கும்படி தம் புலமைத்திறத்தை வெளிப்படுத்தி வந்தார். கோபாலராவ் நாளுக்கு நாள் செட்டியாருடைய கல்வியை உணர்ந்து மிக்க திருப்தி அடைந்தார். அடிக்கடி கலாசாலைத் தலைவராகிய போர்ட்டர் துரையினிடம் இவருடைய தகுதியை எடுத்துச் சொல்லிவந்தார்.

இவர் பாடம் சொல்லிக்கொடுக்கும்போது மாணாக்கர்களுடைய தகுதியறிந்து கற்பித்தார். அதனால் அவர்கள் இவர்பால் அன்புடையவர்களாயினர். அதற்கு முன் தமிழ்வகுப்பில் மாணாக்கர்களுக்கு அதிக ஊக்கம் இராது. அவர்கள் போக்கை அறிந்து செட்டியார் அவர்களை வசப்படுத்தினர். அவர்கள், 'பல உபாத்தியாயர்களுக்குள் இவரும் ஒருவர்' என்று எண்ணாமல் பயபக்தியோடு இவர்பால் நடந்து வரலாயினர்.

முதலில் சக்கரபாணிப் பெருமாள் கோயிலின் தெற்கு வீதியில் தென்சிறகில் வசதியான வீடொன்றை வாடகைக்குப் பேசி அதில் இவர் இருந்துவந்தார். தினந்தோறும் தவறாமல் சிவபூஜை செய்து வருபவராதலின் அதற்கு வேண்டிய பத்திர புஷ்பச் செடிகளை அவ்வீட்டின் பின்புறத்தில் வைத்துப் பயிர் செய்தார். அவை உடனே உபயோகப்படாமையின் அந்நகரில் பத்திரபுஷ்பங்கள் கிடைக்கும் இடங்களுக்குச் சென்று சென்று எடுத்து வந்து பூஜை செய்தார்.

இவ்வாறு பத்திரபுஷ்பங்களுக்காக இவர் தினந்தோறும் வெளியிடங்களில் அலைந்து வருவதை அறிந்த வராகக் குளத்தங்கரை ரங்கசாமி ஐயங்காரென்ற கனவான் தம்முடைய தோட்டத்திலுள்ளவற்றை வேண்டியமட்டும் எடுத்து உபயோகித்துக் கொள்ளலாமென்று இவரிடம் சொன்னர். அவரது தோட்டம் செட்டியார் குடியிருந்த வீட்டிற்கு அருகில் இருந்தது. தாம் செய்யும் சிவபூஜைக்கு அந்த ஸ்ரீ வைஷ்ணவர் பத்திர புஷ்பங்களை உதவ முன்வந்தது இவருக்கு ஆச்சரியத்தை உண்டாக்கியது. அது முதல் இவர் அத்தோட்டத்தில் வேண்டிய பத்திர புஷ்பங்களை எடுத்துப் பூஜை செய்து இன்புற்றார்.

வரவரத் தியாகராச செட்டியாருக்குக் கும்பகோணத்திலுள்ள கனவான்களில் பலர் நண்பராயினர். 'கும்பகோணம் கலாசாலையில் நூதனமாக வந்திருக்கும் பண்டிதர் மிகப் பெரிய வித்துவான். அவர் மிக அருமையாகப் பாடம் சொல்கிறார்' என்ற புகழ் எங்கும் பரவியது. அயலூர்களிலிருந்து கும்ப

கோணத்திற்கு வரும் வித்துவான்களும் தமிழன்புடைய பிறரும் செட்டியாரிடம் வந்து இவருடைய பழக்கத்தைச் செய்துகொண்டு போயினர். இங்ஙனம் இவருக்கு அன்பரானவர்கள் பலர்.

அந்நகரத்தில் கடலங்குடித் தெருவில் கா. சாமி ஐயரென்ற வக்கீல் ஒருவர் இருந்தார். அவர் செட்டியாருடைய நண்பர்களில் ஒருவர்; வடமொழியிலும் தமிழிலும் பயிற்சியுள்ளவர்; நல்ல பூஸ்திதி யுடையவர்.

ஒருசமயம் தம் கையிலிருந்த பணம் செலவாகிவிட்டமையால் செட்டியார், 'ஒரு வண்டி நெல் அனுப்பவேண்டும்; அடுத்தமாதம் சம்பளம் வந்தவுடன் பணம் கொடுத்துவிடுவேன்' என்று சாமி ஐயருக்கு எழுதி அனுப்பினர். அவர் உடனே நெல்லை அனுப்பி விட்டார். ஒரு வண்டி என்பது இருபது கலம் கொண்டது.

அடுத்த மாதம் சம்பளம் வாங்கியவுடன் செட்டியார் நெல்லுக்குரிய தொகையைச் சாமி ஐயரிடம் கொண்டுபோய்க் கொடுத்தபோது அவர் அதை வாங்க மறுத்தார். "நீங்கள் நெல் வேண்டுமென்று கேட்டபோது நான் அளவற்ற சந்தோஷத்தை அடைந்தேன். உங்களுக்கு என்றைத்தினம் அந்த நெல்லை அனுப்பினேனே அன்றே அதைச் சிவார்ப் பணம் செய்துவிட்டேன். சிறந்த தமிழ் வித்துவானும் சிவபக்த சிரோமணியுமாகிய உங்களுக்கு உபயோகப்படும்படி அனுப்புவதற்கு ஒரு சந்தர்ப்பம் நேர்ந்ததை என் பாக்கிய மென்றே எண்ணுகிறேன். இந்த ஊரிலும் அயலூர்களிலும் உங்களுக்கு வேண்டியவர்கள் பலர் இருக்கும்போது என்னிடம் கேட்டது எனக்கு ஒரு பெருமையை உண்டாக்கியது" என்று அவர் சொன்னர்.

யாரிடத்தும் ஒரு பொருளை உபகாரமாகப் பெற்றுக் கொள்ளும் வழக்கம் இவர்பால் இல்லை. ஆதலின், "முதல் முதலில் உங்களிடம் நெல் வாங்கும்போது விலையில்லாமல் பெறுவது நியாயமன்று. எனக்கு உங்கள் ஆசீர்வாதத்தால் ஒரு குறைவும் இல்லை. நீங்கள் நெல்லை முன்பு அனுப்பிவிட்டுப் பின்பு பணம் வாங்கிக்கொள்வதே பெரிய உபகாரம். என்னைத் தர்மசங்கட நிலைமைக்கு உள்ளாக்கவேண்டாம். இதைப் பெற்றுக் கொள்ளவேண்டும்" என்று செட்டியார் எவ்வளவோ வற்புறுத்திச் சொல்லியும் அவர் அதைப் பெற்றுக்கொள்ளவில்லை. செட்டியார் பணத்தைத் திருப்பிக் கையில் கொணர்ந்து விட்டார்.

## 10

### ஆசிரியரோடு பழகுதல்

கும்பகோணத்திற்கு வந்து வேலை ஒப்புக்கொண்ட சில நாட்களுக்குப் பின் செட்டியார் மாயூரம் சென்று மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களைக் கண்டு தாம் கும்பகோணத்திற்கு வந்து விட்டதைச் சொன்னார். பிள்ளையவர்கள் அடிக்கடி இவரைச் சந்திக்கலாமென்று சந்தோஷப்பட்டார். அதுமுதல் செட்டியார் வாரந்தோறும் மாயூரம் சென்று தம் ஆசிரியரைப் பார்த்து ஸல்லாபம் செய்து இன்புற்று வரலானார்.

ஒரு சமயம் பிள்ளையவர்களுடன் திருவாவடுதுறை சென்று அங்கே ஆதீனத்தலைவராக இருந்த ஸ்ரீ அம்பலவாண தேசிகரையும் அப்போது சின்னப்பட்டத்திலிருந்த மேலகரம் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரையும் தரிசித்து இன்புற்றார். மடத்தின் அமைப்பையும் அங்குள்ள வரையறைகளையும் தினந்தோறும் நடைபெறும் பூஜை அன்னதானம் வித்தியாதானம் முதலியவற்றையும் கண்டு ஆச்சரியமடைந்தார். அந்த இடத்தின் பழக்கத்தால் நல்ல பயன்களை அடையலாமென்றெண்ணி மகிழ்ந்தார்.

மேலகரம் சுப்பிரமணிய தேசிகர் சிறந்த அறிவாளியாதலின் செட்டியாரைக் கண்டு பழகின முதல் நாளிலேயே இவருடைய தமிழறிவின் ஆழத்தை உணர்ந்துகொண்டார். பிள்ளையவர்களிடத்தில் அவருக்கு அளவற்ற மதிப்பும் கருணையும் உண்டு. அப்புலவர் பெருமானுடைய மாணாக்கர்களுள் சிறந்தவரென்பதும், ஒரு சிறந்த கலாசாலையில் தமிழாசிரியராக விளங்குபவரென்பதும் சேர்ந்து தேசிகர் உள்ளத்தில் செட்டியார்பால் நன்குமதிப்பை உண்டாக்கின. அதனால் செட்டியார் சந்தர்ப்பம் கிடைக்கும்போது திருவாவடுதுறைக்குச் சென்று ஆதீனத் தலைவர்களோடு ஸம்பாஷித்து வரும் வழக்கமும் ஏற்பட்டது.

அக்காலத்தில் கும்பகோணத்தில் இருந்த சைவப் பிரபுக்கள் சிலருடைய வேண்டுகோளுக்கு இணங்கிப் பிள்ளையவர்கள் அந்நகரத்திற்கு வந்து தங்கிக் கும்பகோண புராணத்தைத் தமிழில் இயற்றத் தொடங்கினர். அந்நகரிலுள்ள திருவாவடுதுறை மடத்தில் தம் பரிஜனங்களோடு தங்கியிருந்தார். இவ்வாறு ஒரு சந்தர்ப்பம் நேர்ந்ததுபற்றித் தியாகராச செட்டியார் உள்ளம் பூரித்தார். கலாசாலைக்குச் சென்ற நேரம் போக மற்றச்

சமயங்களிலெல்லாம் தம் ஆசிரியரிடம் சென்று அவர் சொல்லும் புராணச் செய்யுட்களை எழுதுவதும், தமக்குத் தமிழ் நூல்களில் உண்டான சந்தேகங்களைக் கேட்டுத் தெளிவதும் போன்ற காரியங்களைச் செய்துவந்தார்.

ஒரு நாள் பிள்ளையவர்களைக் கலாசாலைக்கு அழைத்துச் சென்றார். அக்கவிஞரை நாற்காலியில் அமரச் செய்து இவர் சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்தார். மாணாக்கர்களுக்கு அடிக்கடி பிள்ளையவர்களுடைய பெருமையைச் செட்டியார் எடுத்துச் சொல்வது வழக்கம். அவ்வாறு காதால் கேள்வியுற்றிருந்த அப் புலவர்பிரானை நேரே பார்த்தபோது பிள்ளைகளுக்கு ஆனந்தம் உண்டாயிற்று. செட்டியார் அவரை நமஸ்காரம் செய்ததைக் கண்டு அவர்கள் ஸ்தம்பித்துவிட்டார்கள்.

பிள்ளையவர்கள் அவ்வகுப்பிலுள்ள ஒரு பையனை (சப் ரிஜிஸ்டிராராயிருந்த இளையான்குடி எஸ். ராமசாமி ஐயரை)ப் பார்த்து, "ஏதேனும் ஒரு செய்யுள் சொல்லப்பா" என்று கேட்டார். உடனே அவ்விளைஞன்,

"கார்பெற்ற தோகையோ கண்பெற்ற வாண்முகமோ
நீர்பெற் றுயர்ந்த நிறைபுலமோ—பார்பெற்று
மாதோடு மன்னன் வரக்கண்ட மாநகருக்
கேதோ வுரைப்ப னெதிர்"

என்ற பாடலை மெல்லப் பொருள்விளங்கும்படி சொன்னான்.

"இச்செய்யுள் எந்த நூலில் உள்ளது?" என்று தமிழ்க் கவிஞர் கேட்டார்.

"நளவெண்பாவில் இருக்கிறது."

"எந்தச் சந்தர்ப்பத்தில் வருகிறது?"

"நளமகாராஜன் தான் இழந்த நாட்டை மீட்டும் பெற்றுத் தமயந்தியுடன் தன் நகரத்தை அடைந்தபோது குடிகள் சந்தோஷமடைந்ததாக உள்ள சந்தர்ப்பத்தில் வருகிறது."

"கடவுள் வணக்கமாக ஒரு பாடலைச் சொல்லாமல் இந்தப் பாடலை நீ சொன்னதற்குக் காரணம் என்ன?" என்று அக் கவிஞர் கேட்டார். 'அதுதான் ஞாபகத்திற்கு வந்தது' என்று அவன் சொல்வானென்று அவர் எதிர்பார்த்திருக்கலாம். அவனோ அவர் உள்ளம் குளிரும்படி விடை அளித்தான்: "தாங்கள் இங்கே வந்தது எங்கள் மனத்தில் நிறைந்த இன்பத்தை உண்டாக்கியது. அந்த இன்பம் இப்படி இருக்கிறதென்று தெரிவிப்பதற்காகவே

இதைச் சொன்னேன்'' என்று அவன் கூறினவுடன், எல்லா மாணாக்கர்களும் தங்கள் கரகோஷத்தால் அக்கருத்தை ஆமோதித்தார்கள். ''தியாகராசு, பிள்ளைகளை நன்ருகப் பழக்கியிருக்கிருய்'' என்று சொல்லிப் பிள்ளையவர்கள் சந்தோஷித்தார்.

பிறகு செட்டியாரைப் பாடம் நடத்தும்படி சொல்லி அவர் அங்ஙனம் நடத்தும்போது கேட்டு மகிழ்ந்து பாராட்டி விட்டுச் சென்ருர்.

கும்பகோண புராண அரங்கேற்றம் நடைபெற்றபோதும் பிள்ளையவர்கள் இயற்றிய வேறு பிரபந்தங்களிற் சில அரங்கேற்றப் பெற்ற போதும் தியாகராச செட்டியார் இருந்து பல வகையில் பிள்ளையவர்களுக்குத் துணைபுரிந்தார். அக்காலங்களில் சில விஷமிகள் அரங்கேற்றத்திற்கிடையே ஆட்சேபங்களை எழுப்பித் தடை விளைவித்தனர். அப்போதெல்லாம் செட்டியார் அவ்வாட்சேபங்களுக்குத் தக்கபடி விடை கூறியதோடு அங்ஙனம் செய்தவர்களை எல்லோரும் பரிகசிக்கும்படி அவர்களுடைய அறியாமையை வெளிப்படுத்தினர். பிள்ளையவர்கள் மிகவும் பொறுமையோடு விடை அளிப்பதையும் செட்டியார் அதோடு நில்லாமல் அந்த விஷமிகளைக் கேள்விகள் கேட்டுக் கலங்கவைப்பதையும் கண்ட ஜனங்கள், ''யானைக்கேற்ற அங்குசம் இவரே'' என்று செட்டியாரைப் பாராட்டினர்கள். தடை எழுப்பினவர்கள் வாயிழந்து தம் மதியிழந்து மறைந்தனர்.



# தமிழ்ப் பாஷைக்கு உள்ள குறைகள்

## (பி. ஏ. பரீக்ஷை தேறிய ஒரு வாலிபனுடைய எண்ணங்கள்)

சி. சுப்பிரமணிய பாரதியார்

**வா**லிபன்: தமிழ்ப்பாஷை ஒன்றுக்கும் பிரயோஜனம் இல்லை. இது சீக்கிரம் அழிந்தால்தான் நமது நாடு பிழைக்கும்.

**புலவன்:** ஏதப்பா, உனக்கு இந்தப் பாஷையிலே இவ்வளவு கோபம் உண்டாயிருக்கின்றது?

**வா:** நவீன நாகரிகத்தினுடைய சங்கதி உமக்குத் தெரியாதையா! மனித ஜாதி குரங்கு நிலைமையினின்றும் மாறிக் காட்டுமனிதன் ஸ்திதிக்கு வந்தபோது உங்கள் தமிழ்ப் பாஷை ஏற்பட்டது. இப்போது உலகம் எவ்வளவோ மாறிப் போய்விட்டது. மனிதனுடைய அறிவு எவ்வளவோ விசாலமடைந்து போயிருக்கிறது. வானத்தில் உள்ள கிரகங்கள், நக்ஷத்திரங்கள் முதலியவற்றையெல்லாம் மனித அறிவு ஊடுருவிச் சென்றிருக்கிறது. பதார்த்தங்களின் அணுக்களிலே எல்லாம் மனுஷபுத்தி நுழைந்து சென்றிருக்கிறது. பிரகிருதி விநோதங்களை மனிதன் எவ்வளவோ அதிகமாக ஆராய்ச்சி செய்திருக்கிறான். சமுத்திரத்து ஜலம் அனைத்தையும் குடத்துக்குள்ளே எப்படி அடைக்க முடியும்? அது போலவே அளவின்றி விரிந்து கிடக்கும் மனுஷ புத்தியின் நவீன சலனங்களை எல்லாம் உம்முடைய பண்டைக்காலத்துத் தமிழிலே கொண்டு நுழைப்பது மிகவும் பிராணபத்தாய் இருக்கின்றது. நாம் நாகரிகம் அடையவேண்டுமானால் இந்தத் தமிழ்ப்பாஷையை முற்றும் கைவிட்டு விடவேண்டும்.

**புல:** 'நாம்' என்று யாரையப்பா சேர்த்துச் சொல்கிறாய்? உன் மட்டிலே நீ பேசுவதைப் பார்த்தால் ஞானக் கடலின் கரை கடந்தவனாக நினைத்துக் கொண்டிருக்கிறாய். உன்னைப்போல் இங்கிலீஷ் படியாத மற்ற ஜனங்கள் தமிழ்ப்பாஷையை எப்படிக் கைவிட முடியும்? ஒரு பாஷையை நீ மரக்கிளை என்று நினைத்துக் கொண்டிருக்கிறாயா? அதை ஜனங்கள் பிடித்துத் தொத்திக்கொண்டு விடமாட்டோம் என்கிறார்களென்று எண்ணுகிறாயா? மனுஷபாஷைகள் மனுஷ வாழ்க்கையோடு ஒட்டி உடன் வளர்ந்த பொருள்களல்லவோ? தலைமுறை தலைமுறையாய் எத்தனையோ நூற்றாண்டுகளாக ஒரு நாட்டார் பேசிவரும் பாஷை அவர்களின் உயிரோடு ஒன்றி விடுகின்றது. மனித அறிவுவளர்ச்சிக்குப் பாஷை ஒரு கண்ணாடி. ஒரு நாட்டாரின் அறிவு வளர்ந்துகொண்டு வரவர அந்நாட்டின் பாஷையும் விசாலம் அடைந்துவருகிறது. அன்னிய ராஜாங்கம், தாரித்திரியம், சரீர பலக்குறைவு, நோய், உற்சாகமின்மை முதலிய காரணங்க

ளால் இப்போது இழிவு கொண்டு போயிருக்கும் தமிழ்நாட்டு ஜனங்கள், ஆங்கிலேயர் முதலிய சுதந்திர நாட்டாரைப் போல் விருத்தி அடைந்து வருதல் அசாத்தியமாக இருக்கிறது என்பது ஒருவாறு மெய்யாக இருக்கலாம். அதற்குப் பாஷையைக் குற்றம் சொல்வதிலே என்ன பிரயோஜனம் இருக்கிறது? 'ஆடத் தெரியாத தாசி கூடம் போதாது என்பதுபோல'க் கதை சொல்லுகிறாயே?

வா: போமையா! பொதுப் படையாகப் பேசிக்கொண்டு போவதிலே என்ன பயன் இருக்கிறது? இப்போது ஐரோப்பியர்கள் பூமி நூல், வான நூல், கடல் நூல், பிராணி நூல், அணு நூல் முதலிய நூல்களிலே எல்லாம் அளவு கடந்த முதிர்ச்சி பெற்றிருக்கிறார்கள். மின்சாரம், காந்தம் இவற்றின் குணதிசயங்களைப் பற்றி நவீன ஆராய்ச்சி வரம்பு இல்லாதிருக்கிறது. மின்சாரம், நீராவி என்பவற்றைத் துணையாக வைத்துக் கொண்டு மனித ஜாதியின் சௌகர்யங்களுக்கும் அபிவிருத்திக்கும் பயன் படுமாறு ஆயிரக் கணக்கான யந்திரங்களும் கருவிகளும் ஏற்பட்டிருக் கின்றன. இவ்வளவிலே புதிய பதங்களும், புதிய கருத்துக்களும் லக்ஷக் கணக்காக உண்டாயிருக்கின்றன. இவற்றுக்கு எல்லாம் தமிழ்ப் பாஷை யிலே பெயரும் கிடையாது, மண்ணும் கிடையாது. இப்படி இருக்க நீர் ஏதோ பொதுப்படையாக உருட்டிக்கொண்டு பேசுகிறீர்!

புல: அடடா! உனது விவகாரத்தின் நுட்பத்தை என்னென்று சொல்வேன்! நீ ஓயாமல் அடுக்கிக்கொண்டு போன நவீன ஆராய்ச்சிக் கதைகள் எல்லாம் தமிழ் நாட்டு ஜனங்களுக்குள்ளே வழக்கமான பிறகல்லவோ அவை தமிழ்ப் பாஷையிலே வழங்குவதற்குச் சுலபமாகும். தமிழ் நாட்டிலேயோ பொது ஜனங்களுக்கு எழுதப் படிக்கத் தெரிவது கூட அருமையாய் இருக்கிறது. வயிற்றுப் பிழைப்பே பெரிய கஷ்டமாய் இருக்கின்றது. ராஜாங்கத்தார் பொதுஜனக் கல்விக்கு மிகவும் வெட்கக் கேடான சிறு தொகை செலவிடுகின்றார்கள். சிறுபான்மையோருக்குத் தரப்படும் கல்விகூட அவர்களைக் குமாஸ்தாக்களாக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் கொடுக்கப்படுவதேயன்றி வேறு எவ்விதமான பெருந் தொழிலுக்கும் தகுதியாக்க அன்று. எனவே இந்நாட்டார் பொது வாக மிகவும் அறிவு சுருங்கிப் போயிருக்கிறார்கள். இதற்குப் பாஷை என்ன செய்யும்? நீராவியால் ஓட்டப்படும் ரெயில்வண்டி இந்நாட்டிலே வழக்கமாய் இருக்கிறது. இப்போது பொது ஜனங்கள் அதற்கு வார்த்தை ஏற்படுத்திக்கொள்ளாமலா இருக்கிறார்கள்? மின்சாரசக்தியால் தந்தி ஏற் படுத்தப்பட்டிருக்கிறது. அதற்குத் தமிழர்கள் வார்த்தை உண்டாக்கிக் கொள்ளவில்லையா? கோவணம் இல்லாத நிர்வாண தேசத்தாரின் பாஷை யிலே பட்டு அங்கவஸ்திரத்திற்குப் பெயர் கிடையாதென்றால் அதற்கு அவர்களுடைய பாஷையின்மேல் என்ன குற்றம் இருக்கிறது? துணியைக் கொண்டு கொடுத்து வழக்கப்படுத்தினால் முறையே வார்த்தைகளும் உண்டாக்கிக்கொள்வார்கள். தமிழ் நாட்டிலே தொழில் வகைப்பாடும்,

ஆலோசனை மிகுதியும் ஏற்பட்டால் தமிழ்ப்பாஷை அன்றைக்கே வளர்ந்து விடும். இப்படிக்கின்றி இந்தப் பாஷையையே ஒழித்துவிடவேண்டும் என்று சொல்லுவது மகா மூடத்தனம் அல்லவா? கண்ணிலே வியாதி கொண்டிருக்கும் ஒருவன் அதன் மூல காரணங்களைத் தெரிந்துகொண்டு ஔஷதப் பிரயோகம் செய்யாமல், இந்தக் கண்களையே ஒழித்துவிட்டு நல்ல பிரகாசமுள்ள இரண்டு பிரான்ஸ் தேசத்துக் கண்கள் வாங்கி வைத்துக் கொள்ளவேண்டும் என்று யோசிப்பது நல்ல அறிவாகுமா? உன் கண்களை நீக்கிவிட்டுப் பிரான்ஸ் தேசத்துக் கண்களை வாங்கிவைத்துக் கொள்வது சாத்தியமா?

**வா:** ஏனையா சும்மா வளர்க்கிறீர்? நான் சொல்வதன் குறிப்பு உமக்குத் தெரியவில்லையே! தமிழ்ப் பாஷை இயற்கையிலேயே நவீனக் கருத்துக்களுக்குப் பொருத்தம் உடையதன்று. இப்போது கவிதை விஷயத்தை எடுத்துக் கொள்வோம். இதற்கும் மின்சாரம், காந்தம் முதலிய பூத சாஸ்திர அபிவிருத்திகளுக்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாதல்லவா? இதில்கூடத் தமிழ்ப்பாஷை ஏன் இத்தனை சீர்கெட்டு இருக்கிறது? டெனிஸன் முதலிய நவீன ஆங்கிலக் கவிகளையும், சூரியநாராயண சாஸ்திரி முதலிய தமிழ் நாட்டுப் புலவர்களையும் ஒப்பிட்டுப் பாரும். ஆங்கிலப் படிப்பற்ற தமிழ்ப் புலவர்களின் நிலைமை சொல்லவேண்டியது இல்லை.

**புல:** யோசனையின்றி ஏனடா பேசுகிறாய்? தமிழ்நாடு இப்போது சுதந்திரமும், செல்வமும், சரீர பலமும், மனோபலமும் இழந்து தாழ்ந்த நிலைமைக்கு வந்துவிட்டது. எனவே இந்நாட்டில் உயர்ந்த கவிஞர் இல்லாமல் போய்விட்டார்கள். நோய்கண்ட மாமரத்திலே நல்ல பழம் எங்ஙனம் தோன்றும்? மரத்தின் நோயைத் தீர்த்தல்லவோ பிறகு கனியினுடைய ருசியைப் பார்க்கவேண்டும்? தமிழர்களைப் புனிதப்படுத்திப் பிறகு பார்த்தால் தமிழ்ப் பாஷையின் நறுமணம் விளங்கும். தமிழர்கள் நேர்மையாய் இருந்த காலத்தில் திருத்தக்கதேவர், இளங்கோ, கம்பர் முதலிய எண்ணிறந்த தமிழ்ப் புலவர் இருந்து அருமையான தெய்விகப் பாடல்கள் பாடியிருக்கிறார்கள்.

**வாலி:** சும்மா ஸ்தோத்திரம் பண்ணுதேயும்; கம்பன், டம்பன் எல்லாம் நானும் கொஞ்சம் பார்த்திருக்கிறேன்.

**புல:** அப்பா, தயை செய்து உளறாதே. காலேஜுகளிலே கம்ப ராமாயணம் சொல்லித் தரப்படும் மாதிரியிலே உனக்கும் உன்போன்றார்க்கும் தமிழ்ப் புலவர்களிடம் வெறுப்பு ஏற்படுதல் சகஜமேயாம். எனினும், போப் முதலிய ஆங்கிலேய வித்துவான்கள்கூடப் பண்டைத் தமிழ்ப் புலவர்களின் ஆழ்ந்த கருத்துக்களையும் பெருமைகளையும் கண்டு மிகுந்த வியப்படைகிறார்கள்.

கம்ப ராமாயணத்திலே ஸீதை தனியாக அசோக வனத்திலே இருக்கும்போது ராமபிரான் அவ்வப்போது செய்த செய்கைகளையும் விளையாடிய

விளையாட்டுக்களையும் நினைத்து நினைத்து வருந்திக்கொண்டிருப்பதாகச் சில பாடல்கள் சொல்லப்படுகின்றன. அதிலே ஒரு பாட்டை உனக்கு எடுத்துச் சொல்லிப் பொருள் கூறுகின்றேன். அது ஸ்ரீ ராமன் பட்டாபிஷேகம் பெறும்படி கட்டளை இடப்பட்ட காலத்திலேயும், 'ராஜ்யத்தை விட்டு வனாந்தரம் செல்' என்று கட்டளையிடப்பட்டபோதும் ஒரேமாதிரி மனமுடையவனாக முகம் மலர்ந்திருந்த வியப்பை ஸீதை நினைத்துப் பார்த்துக்கொள்வதாகக் கூறப்படுகிறது. அப்பாட்டைக் கேள் :—

"மெய்த்தி ருப்பத மேவென்ற காலையும்
இத்தி ருத்துறந் தேகென்ற போதிலும்
சித்தி ரத்தி னலர்ந்தசெந் தாமரை
ஒத்தி ருக்கு முகத்தினை யுன்னுவாள்."

(பாடலின் பொருள் சொல்லுகிறார்.)

பார்த்தாயா? இதிலே என்ன ஓசை நயமும், சொல் நயமும், பொருள் இன்பமும் மலிந்துகிடக்கின்றன. இதை உனக்கு ஒரு திருஷ்டாந்தமாகச் சொன்னேன். இவ்வாறு கம்பராமாயணத்திலே ஆயிரக்கணக்கான பாட்டுக்கள் செறிந்து கிடக்கின்றன. மாம்பழம் அழுகி இருக்கும்போது தின்று பார்த்தவன் பொதுப்படையாக மாம்பழமே கெட்ட பொருள் என்று நிந்திப்பதுபோல, தமிழ்ப் பாஷையும் தமிழர்களும் பதனம் அடைந்து போயிருக்கும் இந்தக் காலத்தைக் கவனித்துவிட்டு நீ பாஷையையே குற்றஞ் சொல்லுவது நியாயமன்று. மஹரிஷி பாலகங்காதர திலகர் முதலிய மஹான்கள் சொல்லும் வழிகளைப் பின்பற்றி நமது நாடு செல்வமும் பெருமையும், சுதந்திரமும் பெற்ற பிறகு, நமது பாஷை இருக்கும் மாதிரியைப் பார்த்தால் அப்போது ஆச்சரியம் அடையத்தக்க விதமாக இருக்கும்.

(பாரதியார் நடத்திய 'இந்தியா' என்னும் பத்திரிகையில் வெளிவந்தது.)



# பாரதியாரின் 'குயில்'

'மாரார்'

பாரதியாரால் இயற்றப்பட்டுள்ள நூல்களுள், 'குயிற்பாட்டு' பொருள் மென்மையும், சொல்லினிமையும் செவ்வனே சேர்ந்துள்ள ஒரு நூதனமான ரஸம் பொருந்திய காவியம். அது ஒரு கதாரூபமான காவியமென்பது எல்லோரும் அறிந்த விஷயமே. அக்கதையில் சிருங்கார ரஸமும் ஹாஸ்ய ரஸமும் தேனும் பாலும் போல் வெளிப்படையாகக் கலந்துள்ளன; உட்கருத்தில் சாந்திரஸமும் தோன்றுகிறது. அது காரணம் பற்றியே அச்செய்யுள் ஒரு நூதன ரஸத்தைச் சுரக்கிற தென்று சொல்லத் தகும்.

கதையுருவமடைந்த காவியத்தின் முக்கிய லக்ஷணம், படிப்பவர்களுக்கு அக்கதையில் நேரும் சம்பவங்களில் ஒரு ருசியும், அவை மேன்மேலும் எப்படி மாறி முடிவு பெறுமென்று ஆலோசிப்பதில் ஓர் அவாவும் ஏற்படத்தக்க கற்பனைகள் அமைதல். கவிகளில் சிலர் வருணனையில் ஈடுபட்டுக் கதையை மறந்துவிட்டவர் போல் காட்டிவிடுகிறார்கள். இது இவ்வகைக் காவியத்துக்குச் சாதாரணமாக நேரக்கூடிய தோஷம். பாரதியார் அதை நன்கு உணர்ந்தவராதலால் 'குயிலி'ல்

> "நாசக் கதையை நடுவே நிறுத்திவிட்டுப்
> பேசு மிடைப்பொருளின் பின்னே மதிபோக்கிக்
> கற்பனையும் வர்ணனையுங் காட்டிக் கதைவளர்க்கும்
> விற்பனர்தஞ் செய்கை விதமுந் தெரிகிலன்யான்"

என்று கூறியுள்ளார். குயிற் பாட்டில் கதையின் சம்பவங்கள் ஓர் இடத்திலாவது வர்ணனைகளில் மறையவில்லை; அன்றியும் எங்ஙனம் கதை முடியுமென்ற குதூகலம் குறையாமல் வளர்ந்து எடுத்த காவியத்தை ஒரே மூச்சில் கடைசிவரையில் படித்து முடிக்க அவை தூண்டுகின்றன.

இக்காவியத்தினுள் அடங்கிய கதையைப் பாரதியார் தம் 'பட்டப்பகலில் தோன்றும் நெட்டைக்கனவு' நிகழ்ச்சியென்கிறார். அந்நிகழ்ச்சிகளைச் சுருங்கச் சொல்வது எளிது. ஒரு புருஷன் சோலையொன்றில் ஒரு கருங்குயில் இனிமையாகப் பாடுவதைக் கேட்டு அச்சிறு பறவையைக் கண்ணினால் கண்டு காதலிக்கிறான். பட்சியும் அவனிடம் தன் ஆழ்ந்த காதலைக் கூறிவிட்டுத் தங்கள் இருவரின் காதல் நிறைவேறுவதற்குச் சில இடையூறுகள் இருப்பதைத் தெரிவித்து, நான்காம் நாள் மறுபடியும் வந்து தன்னைப் பார்க்கும்படி வேண்டிக்கொள்கிறது. மறுநாள் அப்புருஷன் காதலின் கொடுமையால் மற்ற எல்லாவற்றையும் மறந்து சோலையினுள் பிரவேசித்தவுடன் அக்குயில் ஓர் ஆண் குரங்கை அணுகிப் பதைத்து விம்மித் தன் காதலைத் தெரிவித்துக் குரங்கினழகைப் பலவாறாகப் புகழ்ந்து, மனிதனைக் காட்டிலும் குரங்கின் பெருமையை உயர்த்திக் கூறுவதைக் கேட்கிறான்:—

> "ஆடிக் குதிக்கும் அழகிலுமை நேர்வதற்கே
> கூடிக் குடித்துக் குதித்தாலும், கோபுரத்தில்
> ஏறத் தெரியாமல் ஏணிவைத்துச் சென்றாலும்,

வேறெத்தைச் செய்தாலும், வேகமுறப் பாய்வதிலே
வானரர்போ லாவாரோ? வாலுக்குப் போவதெங்கே?
ஈனமுறுங் கச்சை இதற்கு நிகராமோ?
பாகையிலே வாலிருக்கப் பார்த்ததுண்டு கந்தைபோல்,
வேகமுறத் தாவுகையில் வீசி யெழுவதற்கே
தெய்வங் கொடுத்த திருவாலைப் போலாமோ?''

குயிலின் காதற் பாட்டைக் கேட்டதும் சினங்கொண்டு அப்புருஷன் தன் வாளை அந்தக் குரங்கின்மேல் வீசுகிறான். குரங்கும் குயிலும் மறைந்து ஒளிகின்றன. மறு நாள் காதல் மயக்கங்கொண்டு முன்போலச் சோலைசென்று குயிலைத் தேடுகையில், அது ஒரு கிழக் காளைமாட்டைத் தன் பொன்போன்ற குரலினால் போற்றி அதனிடம் வைத்த தன் காதலைப் புலம்பிக் கூறக்கேட்கிறான்: குயில்,

''நந்தியே,
பெண்டிர் மனத்தைப் பிடித்திழுக்கும் காந்தமே,
காமனே மாடாகக் காட்சிதரு மூர்த்தியே,
நீள முகமும், நிமிர்ந்திருக்கும் கொம்புகளும்,
பஞ்சுப் பொதிபோற் படர்ந்த திருவடிவும்,
மிஞ்சும் புறச்சுமையும் வீரத் திருவாலும்,
வானத் திடிபோலே மாவென் றுறுமுவதும்
ஈனப் பறவை முதுகின்மே லேறிவிட்டால்
வாலைக் குழைத்து வளைத்தடிக்கும் நேர்மையும்பல்
காலநான் கண்டு கடுமோக மெய்திவிட்டேன்''

என்று எருதின் எழிலுக்குக் கவிபாடித் தன்னை அடியாளாக அங்கீகரிக்கவேண்டுமென்று வேண்டிக்கொண்டு, தனக்கு அந்தப் பாக்கியம் கிடைத்தால் தான் தன் அன்பைக் காண்பிக்கும் விதத்தையும் எடுத்துரைக்கிறது:—

''வந்து முதுகில் ஒதுங்கிப் படுத்திருப்பேன்
வாலிலடி பட்டு மனமகிழ்வேன் மாவென்றே
ஒலிடுநும் பேரொலியோ டொன்றுபடக் கத்துவேன்
மேனியிலே யுண்ணிகளை மேவாது கொன்றிடுவேன்
கானிடையே சுற்றிக் கழனியெலா மேய்ந்துநீர்
மிக்கவுண வுண்டுவாய் மென்றசைதான் போடுகையில்
பக்கத் திருந்து பலகதைகள் சொல்லிடுவேன்
காளை யெருதரே, காட்டிலுயர் வீரரே,
தாளைச் சரணடைந்தேன் தையலெனைக் காத்தருள்வீர்
காதலுற்று வாடுகின்றேன்.''

இந்த வார்த்தைகளைச் செவியுற்றதும், அந்தப் புருஷன் முன்போல் கோபம் மிகுந்து, வாளை எடுத்து அந்தக் காளையின்மேல் வீசுகிறான். காளை ஓடி மறைகிறது; குயிலும் மறைகிறது. காதல் வெறிகொண்ட அப்புருஷன் நான்காம் நாள் குயிலைத் தேடி மாஞ் சோலைக்குச் சென்று, அங்கே அப்பட்சியைக் கண்டு சொல்லுகிறான்:—

''நீசக் குயிலே, நிலையறியாப் பொய்ம்மையே,
ஆசைக் குரங்கினையும், அன்பா ரெருதினையும்,

எண்ணிநீ பாடும் இழிந்த புலைப்பாட்டை
நண்ணியிங்குக் கேட்க நடத்திவந்தாய் போலுமெனை."

அதுகேட்ட குயில் தான் செய்த பிழையை ஒப்புக்கொண்டபோதிலும் பிழை தனதன்றென்றும் எல்லாம் அந்தப் புருஷனது செயலின் பயனென்றும் கூறுகிறது:

"என்மேல் பிழையில்லை யாரிதனை நம்பிடுவார்!
நின்மேற் சுமைமுழுது நேராகப் போட்டுவிட்டேன்."

அது எவ்வாறென்று புருஷன் வினவ, குயில் தன் பழைய கதையை விரித்துரைக்கின்றது. ஒரு முனிவர் தனக்குப் பின்வரும் நிகழ்ச்சிகளைக் கூறினதாகத் தெரிவிக்கின்றது. முன்பிறப்பில் இக்குயில் குயிலி என்ற பெயர் வாய்ந்து ஒரு வேடப் பெண்ணாகப் பிறந்திருந்தது. அவளழகைக் கண்டு மோகித்த மாமன் மகன் மாடனென்றவன் அவளை மணக்க விரும்பிப் 'பொன்னை மலரைப் புதுத்தேனை நித்தங் கொடுத்துச் சித்தம் வருந்தினதால்' அவனுக்கு மாலையிட வாக்களித்தாள். அவனிடம் மையலினால் அங்ஙனம் எண்ணவில்லை. பிறகு,

"நாடனைத்து மஞ்சி நடுங்குஞ் செயலுடையான்
மொட்டைப் புலியனுந்தன் மூத்த மகனான
நெட்டைக் குரங்கனுக்கு நேரான பெண்வேண்டிக்"

குயிலியை அவள் தகப்பனிடம் வேண்டினான். தகப்பன் மகிழ்ச்சியடையவே, 'கண்ணாலம்' நிச்சயமாயிற்று. கல்யாணத்துக்குச் சில நாட்கள்முன் குயிலியின் பூங்காவனத்தில் சேரமான் மைந்தன் வேட்டைக்காக வரவும், இருவரும் ஒருவரை ஒருவர் கண்டு, "அன்னதொரு நோக்கினிலே ஆவி கலந்துவிட்டார்." மன்னவன் மகனும் குயிலியை மணஞ்செய்துகொள்வதாக வாக்களிக்க, இருவரும் ஆவலுடன் தழுவிநிற்கும் சமயத்தில், மாடனும் நெட்டைக்குரங்கனும் இச்செய்தியை எப்படியோ அறிந்து வெறிகொண்டு காதலர்கள் தேவசுகம் அனுபவிக்குமிடம் சேர்ந்து, கடுஞ்சினத்துடன் அரசகுமாரன்மேல் வாட்களைவீச, அவனும் திரும்பிப் பார்த்துத் தன் வாளையுருவி அவர்களை வீழ்த்தினான். மன்னவன் சோர்வெய்தி விழுந்துவிடவும், குயிலி மனமழிந்து புலம்பவே, அவளைத் தேற்றிப் பின்னொரு பிறப்பில் தாங்களிருவரும் கலந்துவாழ நேரும் என்று உரைத்து மாண்டான். அவன் இப்பொழுது ஒரு மானிடனாகப் பிறந்திருக்கிறான். இறந்த மாடனும் நெட்டைக் குரங்கனும் வன்பேயாகி இப்பிறப்பில் குயிலி மானிடனையே காமுறுவாள் என்று நிச்சயித்து அதைத் தடுப்பதற்காகக் குயிலைச் சுற்றி எங்கும் அது செல்லுந் திக்கிலெல்லாம் சென்று அதன் மனத்தைக் கலக்கிவருகிறார்கள். இவ்வாறு முனிவர் சொல்லவும், குயில் அவரைப் பார்த்து, "இந்தத் தீய பேய்கள் இப்பிறவியிலும் நான் என் காதலரைச் சேராதபடி தீங்கு இழைத்தால் நான் என்ன செய்வேன்? அவர் மனிதப்பிறப்பினர்; நானோ குயிலுருவங் கொண்டிருக்கிறேன். என்னிடம் அவருக்கு எப்படிக் காதல் இசையும்" என்று வினவ, முனிவர் "இப்பொழுதும் நீ பெண்ணாய்த்தான் பிறந்தாய். அந்தப் பேயிரண்டும் உன்னுருவை மறப்புறுத்தி வருகின்றன. உனக்கும் அம்மானிடனுக்கும் எவ்விதம் காதல் ஜனித்து நீங்கள் சுகம் பெறுவீர்களென்பதை நீயே பின்னறிந்து கொள்வாய்" என்று சொல்லிவிட்டுச் சந்தி ஜபத்துக்குக் காலம் வந்துவிட்டதால் மறைந்துவிட்டார்.

குயில் தன் கதையைச் சொல்லி முடிக்கிறது. உடனே புருஷன் அருங் குயிலை முத்தமிடக் குயிலின் உருவம் மறைந்து அழகுக்கரசியான ஒரு பெண்மணி

எதிரில் தோன்றுகிறாள். புருஷன் அவளை அணைத்து ஆனந்தவெள்ளத்தில் அமிழ்ந்து வருகையில் கண்விழிக்க, சோலையும் நங்கையும் மறைந்து, கவி தன் பழம் பாய், பண்டைச்சுவடி, எழுதுகோல் இவற்றைச் சுற்றிலும் பார்க்கிறார். எல்லாம் பகற்கனவென்று அறிகிறார்.

இதுவரையில் கதையின் சுருக்கத்தைப் படித்தவர்களுக்குக் குயிலில் அபூர்வ மாயுள்ள ஒரு சுவை நன்கு விளங்கும். உதாரணமாக: மேலே எடுத்துக்காட்டியுள்ள குரங்கின் கௌரவத்தையும் மாட்டின் மகிமையையும் பற்றிக் குயில் புகழ்ந்துபேசிய வார்த்தைகளில், உண்மையான காதல் மொழியென்று வெளிப்படையாகக் காண்கிறவிடங்களில், ஹாஸ்யரஸம் உள்ளிருந்து உவப்பை உண்டாக்குகிறதென்பதைச் சொல்லவேண்டியதில்லை. இவ்வாக்கியங்களில் எதிர்மறை இலக்கணை (irony) யென்று சொல்லத்தக்க ஒரு காவிய குணம் பிரகாசிக்கிறது. மேல்தோன்றும் பொருளுக்கு நேர்விரோதமான பொருள் உள்ளடங்கி நகைச்சுவையை வளர்க்கிறது. இந்த விஷயத்தைப்பற்றி 1935-ஆவது வருஷத்திய கலைமகள் தொகுதி-அ, 222-ஆம் பக்கத்தில், சென்னைப் பிரஸிடென்ஸி காலேஜ் ஆங்கில ஆசிரியரும், காவிய ரஸத்தை ருசிபார்த்து அதன் தாரதம்மியத்தை நன்கு உணர்ந்து அனுபவித்துப் பிறர்க்கும் அதை எடுத்துக்காட்டி அவர்களும் அதைப் பருகி ஆனந்திக்கும்படி செய்யும் திறமை பொருந்தியவருமாகிய ஸ்ரீமான் கே. ஸ்வாமிநாதையர் அவர்கள், குயில் பாட்டைக் 'காவியத்திலும் ஹாஸ்யரஸத்திலும் மகாகாவிய லக்ஷணங்களைப் புரளியாய்ப் பிரயோகிப்பதிலும்' இன்னும் மற்றுமுள்ள குணங்களிலும் ஆங்கிலக் கவி சாஸருடைய 'சேவலும் நரியும்' என்ற காவியத்தையும், போப்பின் 'மயிர்ச்சுருட்களவு' அல்லது 'கேசஹரணம்' என்று பிரசித்திபெற்ற இதிகாசப்போலிக் காவியத்தையும் ஒத்து விளங்குகிறதென்று காட்டியிருக்கிறார். இதிகாசப்போலி வகையான காவியங்கள் தமிழில் அருமருந்து போல் கிடைப்பது அரிது. இம்முறையைக் குயில் பாட்டில் கைக்கொண்டு அச்சுவையை வெளிப்படுத்தியது பாரதியாரின் கவிநயத்தின் ஒரு மேன்மையான அம்சம்.

பாரதியாரின் செய்யுட் குணங்களில் சிறந்ததொன்றாய்ப் பாராட்டத்தக்கது என்னவெனில்: பண்டிதர்களில் பலர் தமிழ்க் காவியங்கள் இயற்றுங்கால் அவைகளில் சிலேடை, யமகம் முதலிய சொல்லணிகளைக் கையாள்வதும், நாட்டுவழக்கில் காணமுடியாது பண்டைக்காவியங்களிலே ஒளிந்து கிடந்து வருகிற மொழிகளைப் பிரயோகித்தலுமே கவியின் சிறப்பென்று நினைத்து வந்தார்கள். உரையாசிரியர் உதவியின்றிப் பொருள் விளங்குமாயின், அது நற்கவியல்ல என்பது அவர்கள் சமயம்போலும். பாரதியார் குயிற்பாட்டிலும் மற்றுமுள்ள செய்யுட்களிலும் இவ்வழக்கத்தைக் கைவிட்டு எளியநடையில் இனியவோசையுடன் நாட்டில் நன்கு வழங்கும் மொழிகளையே உபயோகித்து, இவைகளால் வரும் கவிநயம் மற்றக் காவியங்களிலுள்ள நயத்திலும் சற்றேனும் குன்றிடாது விளங்குவதை நிதரிசனமாகக் காண்பித்திருக்கிறார். அவர் அபூர்வச்சொற்களை வேண்டித் தியானித்துக் கஷ்டப்பட்டு அவைகளைப் பிரயோகிக்கிறவர் அல்லர். சுலபமான சொற்கள் இனிய வோசையுடன் தாமாகவே வாணியின் அநுக்கிரகத்தால் அவர் நாவுக்கு ஓடிவந்து பொருளுக்கு ஏற்ப வாக்கியத்தில் உசிதமான இடங்களில் தாம்தாமே பொருந்தியபடி அமர்ந்து காண்கின்றன. மேலே உதாரணமாகக் கூறப்பட்டுள்ள இடங்களில் இதைக் கண்டுகொள்ளலாம். வேறு உதாரணம் வேண்டுமானால் பின்வரும் அடிகளைக் கவனிக்க:—

"காட்டில் விலங்கறியுங் கைக்குழந்தை தானறியும்
பாட்டின் சுவையதனைப் பாம்பறியு மென் றுரைப்பார்."

எல்லோரும் அறிந்த வடமொழிச் செய்யுளுக்கு இவ்வளவு அழகான எளிய நடையில் வேறு மொழிபெயர்ப்பு அமைய முடியுமோ? குயில் வானரத்தினிடம் தன் சிறுமையை,

"பிச்சைப் பறவைப் பிறப்பிலே தோன்றிடினும்
நிச்சயமா முன்புரிந்த நேமத் தவங்களினால்
தேவரீர் காதல்பெறுஞ் சீர்த்திகொண்டேன்; தம்மிடத்தே
ஆவலினாற் பாடுகின்றேன் ஆரியரே கேட்டருள்வீர்."

என்று வெகு அடக்கமாய்க் கூறியதில் சொல்லழகும், சற்றேனும் சிரமமின்றி வந்த மோனையினழகும், ஓசையினழகும் யாவரும் மெச்சி மகிழத்தக்கவையல்லவா?

கதாரஸத்தைப் பிரதானமாகக் கொண்ட இந்தக் காவியத்தில் வருணனைக்கு இடம் அதிகமில்லை என்று பாரதியாரே காட்டியுள்ளாரென்பது முன்னமே சொல்லப்பட்டது. அது உண்மையென்றாலும் ஓர் இடத்தில் கதையின் நிகழ்ச்சியொன்றில் 'வெள்கி மனம் குலைந்து' கதாநாயகனான புருஷன் சூரியோதயத்தின் சோதியைப் புகழுகிற முறையைச் சற்று நோக்குவோம்:—

"மேலைக் கதையுரைக்க வெள்கிக் குலையுமனம்
காலைக் கதிரழகின் கற்பனைகள் பாடுகிறேன்
தங்க முருக்கித் தழல்குறைத்துத் தேனாக்கி
எங்கும் பரப்பியதோ ரிங்கிதமோ? வான்வெளியைச்
சோதி கவர்ந்து சுடர்மயமாம் விந்தையினை
ஓதிப் புகழ்வார் உவமையொன்று காண்பாரோ?
கண்ணையினி தென்றுரைப்பர் கண்ணுக்குக் கண்ணாகி
விண்ணை யளக்குமொளி மேம்படுமோ ரின்பமன்றோ?
மூலத் தனிப்பொருளை மோனத்தே சிந்தைசெய்யும்
மேலவரு மஃதோர் விரியுமொளி யென்பாரேல்,
நல்லொளிக்கு வேறுபொருள் ஞாலமிசை யொப்புளதா?
மண்ணைத் தெளிவாக்கி நீரில் மலர்ச்சிதந்து
விண்ணை வெளியாக்கி விந்தைசெயுஞ் சோதியினைக்
காலைப் பொழுதினிலே கண்விழித்து நான்தொழுதேன்."

சோதியின் துதியெனக் கூடிய இவ்வடிகளைப் படிக்கும்பொழுது ஆங்கில மகாகவியொருவர் கண்ணையிழந்து காணமுடியாச் சோதியின் மகிமையைப் புகழ்ந்துள்ள வர்ணனை ஞாபகத்துக்கு வருகிறது. பாரதியின் வருணனை ஆங்கிலத்திலுள்ள வர்ணனைக்குச் சிறிதேனும் அழகில் தாழ்ந்து நிற்கவில்லை.

'குயில்' விஷயமாகக் கவனிக்கவேண்டிய அம்சம் இன்னும் ஒன்று உண்டு. செய்யுளின் முடிவில் கவி,

"ஆன்ற தமிழ்ப்புலவீர், கற்பனையே யானாலும்
வேதாந்த மாக விரித்துப் பொருளுரைக்க
யாதானுஞ் சற்றே யிடமிருந்தாற் கூறீரோ?"

என்று கேட்கிறார். சிலர் இவ்விடத்தில் நம் நாட்டிலுள்ள புலவர்கள் எவ்விதமான கதைகளிலும் கவி எண்ணியே இராத வேதாந்தப்பொருளைத் தங்கள் மனம்போன

படி கற்பித்துக் கதையின் சுவையை மறந்து சாஸ்திரதத்துவத்தில் ஈடுபட்டு மயங்குகிறார்களே என்று பாரதியார் புரளி பண்ணுகிறார் என நினைக்கிறார்கள். ஸ்ரீமான் ஸ்வாமிநாதையர் மேற்குறிப்பித்த கட்டுரையில், "செய்யுளானது தனது சொந்த பலத்தால் நிற்கவேண்டும். மதம், நெறி, அல்லது தேசபக்தி என்ற கோலையூன்றி நிற்கலாகாது. இவ்விதச் சுயபலத்தையுடையது குயிற் பாட்டு" என்று எழுதியுள்ளார். இதிலிருந்து மதம் நெறி சம்பந்தமான பொருள் 'குயிலி'ல் இல்லை என்று தீர்மானமாக ஏற்படாவிட்டாலும், அவரது அபிப்பிராயமும் அப்படியிருக்குமென்று எண்ண இடமுண்டு. ஆதலால் இந்த விஷயத்தைப்பற்றிச் சற்று ஊன்றிப் பார்க்க வேண்டியது அவசியமாகும். காவிய ரஸம் குறைந்துள்ள சமயநூல்களைக் காவியமென்று புகழ்வது தவறென்பதில் சந்தேகமில்லை. சமயக்கொள்கைகளை உள்ளடக்கினாலும் மகாகவியொருவன் தன் மனோபாவத்தின் பெருமையினாலும் வாணியின் அனுக்கிரகத்தாலும் தன் நூலில் சொற்சுவையும், பொருட்சுவையும் மிகுந்து காட்டும்படி அமைக்கமுடியுமென்பதற்கு நம் தமிழ்ச் செய்யுட்களிலும் மேல்நாட்டுக் காவியங்களிலும் உதாரணங்கள் அநேகம் விரிந்துகிடக்கின்றன. மேலும் 'குயிலி'ல் வெளிப்படையாயுள்ள கதையின்போக்கும் அதன் சொல் இனிமையுமே மதிக்கத்தக்கவை. வேறோர் உட்கருத்தும் அறியாமல் அச்செய்யுளின் அழகை அனுபவிக்கமுடியுமென்பதும் உண்மைதான். ஆனாலும் கதையின் உள்ளே ஒரு மறைபொருளைக் கவி பதித்திருந்தால் அதை நாம் அறிந்த பொழுதுதான் காவியத்தின் ரஸத்தைப் பூர்ணமாக ருசிக்கலாகும். உட்கருத்தை வெளிக்கதையில் ரஸம் சுரக்குமாறு கவி எவ்விதம் நிகழ்ச்சிகளைக் கற்பித்திருக்கிறார் என்று பார்ப்பதில் மனத்திற்கு ஓர் உல்லாசம் உண்டாகும். இக்காரணங்களைக் கொண்டு குயிலில் பாரதியாரின் உள்நோக்கமாக வேறு ஏதேனும் விளங்குகிறதாவென்று ஆலோசிப்போம்.

கீழே சொல்லப்பட்ட கதைச்சுருக்கத்தில் சில விநோதமான சம்பவங்களைக் காண்கிறோம். குயிலில் (பூர்வஜன்மத்தில்) தன் மாமன் மகனான மாடனைத் தன்னவன் என்பதற்காக அவனிடம் மெய்க்காதல் இன்றியும் மணம் செய்துகொள்ளச் சம்மதிக்கிறாள். பிறகு,

"நாடனைத்து மஞ்சி நடுங்குஞ் செயலுடையான்"

ஆன மொட்டைப் புலியன் மூத்தமகனான நெட்டைக்குரங்கனுக்கு அவன் அந்தஸ்துக்காக மதித்துக் குயிலியின் தகப்பன் அவளைக் கல்யாணஞ் செய்துகொடுப்பதாக நிச்சயமாகிறது. உண்மையான அன்பில்லாமல் இவர்கள் இருவரையும் மணஞ்செய்துகொள்ள ஒப்புக்கொண்ட தோஷத்தினாலே பின் மன்னவன் மைந்தனிடம் காதல் மிக அடைந்தும் அவனுடன் சுகம் அனுபவிக்கத் தடையேற்படுகிறது. இந்தக் கருமத்தின் பாசத்தினால் மறுபிறப்பிலும் குயிலிக்குப் பலவிதக் கேடுகள் விளைகின்றன. அவள் தன் உண்மையான சொரூபத்தை மறந்து தன்னை ஒரு பேதைப்பட்சியென்று நினைக்கும்படிப் பேய்களாய் மாறின மாடனும் குரங்கனும் துன்புறுத்துகிறார்கள். கேவலம் உணவை அசைபோடுவதுதவிர வேறொன்றும் அறியாமல் பொதிபோல் பருத்துக் குயிலின் காதல் மொழிக்கு யாதொரு பதிலும் சொல்வதற்கு அறிவில்லாத கிழ எருதைக் குயில் நேசித்து அதனிடம் மோகித்துப் புகழ்கிறது. இன்னும் ஒருநாள் குரங்கைப் புகழ்ந்து அதனிடம் அன்புகாட்டியபோது குரங்கு மாட்டைப்போல் சும்மா இராமல்,

"தாவிக் குதிப்பதுவும் தாளங்கள் போடுவதும்
கண்ணைச் சிமிட்டுவதும் காலாலுங் கையாலும்

மண்ணைப் பிருண்டியெங்கும் வாரி யிறைப்பதுவும்
ஆசைக்குயிலே அரும்பொருளே தெய்வதமே
பேச முடியாப் பெருங்காதல் கொண்டுவிட்டேன்"

எனப் பேசிக் குதிக்கிறது. ஒரு பட்சி மாட்டினிடமும் குரங்கினிடமும் காதல் கொள்ளுகிற நிகழ்ச்சி அஸம்பாவிதமென்பது ஒன்று. பின்பு மாடனும் குரங்கனும் பேயாகித் தன்னுருவத்தைக் குயில் மறந்துபோகும்படி செய்கின்றனர். பிறகு குயில் முனிவரிடம் பேசினபிறகு ஒரு பெண்ணுருவமடைந்து புருஷனிடம் தன் மெய்க் காதலைச் சொல்லி, இருவரும் ஆவிபொன்றாகி ஆனந்திப்பதும் இரண்டாவதாகச் சிந்திக்கத்தக்கது. குயில் சேதனன் அல்லது ஜீவன். தனது என்கிற மமதையினாலும், தான் என்ற கர்வரூபமான அகந்தையாலும், புருஷன் என்கிற ஆத்மாவினிடம் தனக்கு நேரக்கூடிய மெய்யானந்தத்தை மறந்து, தன் மாமன் மகனான மாடனிடமும் தான் என்ற அகந்தை மிகுந்த குரங்கனிடமும் குயிலிபோலியன்பு காட்டுகிறாள். இந்தக் கரும வசத்தால் பின்ஜன்மத்தில் தன் ஸ்வரூபம் மறந்து ஜடமாகிப் பண்டைப் பிரகிருதி யின் பரிணாமமாகிற சரீரத்தில் அன்பு வைக்கிறாள். அந்த மயக்கந் தெளிந்தவுடன் சரீரத்தைக்காட்டிலும் சற்று மேலான மனத்தின்மேல் அன்பு காட்டுகிறாள். மனமோ எப்பொழுதும் நிலையின்றி இங்குமங்கும் நம்முள் அடங்காமல் திரிந்து ஓடிக்குதித்துச் சேஷ்டைகள் செய்துவருகிறது. மனத்தையும் இந்திரியங்களையும் குரங்குக்கு ஒப்பிட்டுச் சொல்வது நம் நாட்டவர்க்குச் சாதாரணமான உவமையல்லவா? பிறகு பரமகுருவின் உபதேசம் பெற்று, இந்த இருவகை மயக்கமுந் தெளிந்து, புருஷ னென்கிற ஆத்மாவை உள்ளபடி அறிந்து, அவனிடம் மெய்யன்பு வைத்துத் தன் உண் மையான ரூபம் பெற்று, அவ்வாத்மாவினிடம் ஒன்றாகிப் பரமானந்தமடைகிறாள் என்கிற உட்பொருளை இதில் பாரதியார் வைத்துள்ளார் என்பதில் சந்தேகிக்க இட மொன்றுங் காணோம். இதை மனத்தில் வைத்துக்கொண்டு காவியத்தை மறுபடியும் படிக்கும்பொழுது மற்றும் பல பொருத்தங்கள் வெளிப்படையாகப் புலப்படும். பொருளின் மேன்மை உயர்ந்து காட்டலினால் காவியத்தின் சிறப்பும் ஓங்கி விளங்கும் என்பது இக்கட்டுரையின் முக்கியமான கருத்து.



# ‘சனியன் தொலைந்தது’

ரா. ஸ்ரீ. தேசிகன், எம். ஏ.

## 1

கிறிஸ்துமஸ் பண்டிகை விடுமுறை நாட்கள் ஆரம்பமாகிவிட்டன. மன்னார்குடி பிண்ட்லே ஹாஸ்டலிலிருந்து மாணவர்கள் அநேகமாய்த் தங்கள் தங்கள் ஊர்களுக்குப் போய்விட்டார்கள். ஹாஸ்டலில் தங்கிய பிள்ளைகள் பத்துப் பேர்களே. அவர்களும் தங்கள் அறைகளைப் பூட்டிவிட்டுத் தாமரைக் குளக்கரை நாடகக் கொட்டகைக்கு ‘நந்தனார்’ சரித்திரம் பார்க்கச் சென்றனர். சமையற்காரர்களும் தங்கள் காரியங்களை முடித்துக்கொண்டு உறங்கலாயினர். ஹாஸ்டல் மாடியில் இரண்டு அறைகளில் மாத்திரம் ஹரிகேன் விளக்குகள் எரிந்துகொண்டிருந்தன. வெளியிலே பாட்டையில் போகிற வண்டிச்சத்தமும் அடங்கிவிட்டது. ஊரடங்கினாலும் பக்கத்துக் குளங்களிலிருந்து தவளைகள் இடுகிற இடைவிடாத கத்தல்மாத்திரம் கேட்டுக்கொண்டிருந்தது.

மணி பத்து. பரந்த வெண்ணிலாவிலே பக்கத்துக் குட்டைகள், குளங்கள், ஓடைகள், வாய்க்கால்கள், வயல்கள், வயல்களுக்குக் கிழக்கேயுள்ள சிறு குடிசைகள், ஹாஸ்டலுக்குப் பின்புறத்தில் சற்றுத் தெற்கேயுள்ள சோலைகள், ஹாஸ்டலுக்கு முன்னுள்ள மிஷன் ஆஸ்பத்திரி எல்லாம் துயின்றுகொண்டிருந்தன.

மாடியில் ஓர் அறையில் சாய்ந்த நாற்காலியில் ஒருவர் படுத்துக்கொண்டு வேட்ஸ்வொர்த்தை வாசித்துக்கொண்டிருந்தார். ஒரு கணம் கண் புத்தகத்தில் விழுந்தது; மற்றொரு கணம் ஜன்னல் வழியாய் நிலவில் மூழ்கிய காட்சிக்குச் சென்றது. வாட்டமுற்ற அவர் மனத்திற்குப் பொழுது நத்தை ஊர்வதுபோலப் பட்டது.

அவர் அறையோ அலங்கோலமாயிருந்தது. ஒரு புறத்தில் மேஜை முழுதும் கன்னாபின்னா என்று புத்தகங்கள் குவிந்து கிடந்தன. ஒரு மூலையில் தோய்க்காதபடி ஐந்தாறு நாள் விழுப்புத்துணிகள் சுருட்டி எறியப்பட்டிருந்தன. திறந்த மைக்கூடு மூடப்படவில்லை. பேனா ஒரு மூலை; பிளாட்டிங் பேப்பர் ஒரு மூலை. மேஜைப் புத்தகக்குவியலுக்கு மேலே இரண்டு காகிதங்கள் பிரிந்து கிடந்தன. காகிதங்களுக்கருகே கோர்ட்டு ஸம்மன் காகிதம் இருந்தது. களைபிடுங்காத தோட்டம்போல் விளங்கும் ஒரு மனத்தின் சாயைதானோ இவர் அறை என்று சொல்லும்படியிருந்தது சூழ்நிலைத்தோற்றம். ஒரு கடிதம் தம் மனைவி கங்கா பாய் கைப்பட மதனப்பள்ளியிலிருந்து வந்த கடிதம்; சற்றுக் குணம் என்று அதில் வரையப்பட்டிருந்தது. மற்றொரு கடிதத்தில் கும்பகோணத்தில் தம் பிள்ளைகள் சாமி, கிட்டு ஆகியவர்களுக்கு உடம்பு சுரமென்று கண்டிருந்தது. இவ்விரு கடிதங்களும் ஏககாலத்தில் வந்தன. கடிதங்கள் வந்து ஒரு வாரத்திற்குமேல் ஆகப்போகிறது.

கடிதங்களை ஒருதரம் பார்க்கிறது, அவைகளைக் கீழே போடுகிறது; புத்தகத்தை எடுக்கிறது, இரண்டு வரிகளை வாசிக்கிறது, அதைக் கீழே வைக்கிறது; மறுபடியும் ஜன்னல் வழியாய் நிலவு படிந்த காட்சிகளைப் பார்க்கிறது—அந்த அலுவல்களில் காலத்தைத் தள்ளினார்.

'ஒரு வாரமாய் இன்னும் கடிதம் வரவில்லையே! பையன்களுக்கு என்னவாயிருக்கிறதோ உடம்பு? மதனப்பள்ளியில் அவள் உடம்புதான் என்னவாயிருக்கிறதோ' என்று சிந்தித்துக்கொண்டிருக்கும் தறுவாயில் ஓர் ஆந்தையின் ஒற்றைக்குரல் கேட்டது.

அதைக் கேட்டவுடன் மனத்தில் சஞ்சலங்கள் அலைக்குமேல் அலையாக எழுந்தன. அவர் தாய் இறக்கும்போது இதே நிலவுதான்; இதே மாதிரியான ஆந்தை ஒற்றைக்குரல்தான். மறுநாட்காலையில் தாய் இறந்துபோனாள் என்ற தந்தி வந்தது. இப்படி நிகழ்ந்த பழைய கோரமான காட்சிகள், ஞாபகங்கள் மடைதிறந்த வெள்ளமென அவர் மனத்தில் பாய்ந்தன.

'நாளைக்கு ஒன்றும் வராமல் இருக்கவேண்டுமே' என்ற பிரார்த்தனை, 'அப்படி வந்தால் நாம் என்ன பண்ணிக்கொள்ளப்போகிறோம்' என்ற மனத்தேறுதல்—இவைகள் மாறி மாறி வந்தன 'அவன் கொடுத்த பிச்சை. குழந்தைகளை அவன் காப்பாற்றமற் போவானா? மதனப்பள்ளியிலிருந்து சற்றுக் குணமென்று கடிதம் வந்திருக்கிறதே' என்று நினைத்தார். அப்பொழுது ராஜகோபாலஸ்வாமி கோயில் மணியின் மதுர ஒலி நிலவின் அமைதியின் குறுக்கே மெள்ள வந்தது.

'கோயில் மணி அடிக்கிறது. ஒன்றும் பண்ணாது' என்று மனத்தைச் சமாதானம் செய்துகொண்டார் அவர். ஆனால் கோர்ட்டு ஸம்மன் கடிதத்தில் அவர் பார்வை விழுந்ததும், மனம் மறுபடியும் சஞ்சலமுற்றது. தம்மீது போடப்பட்டிருக்கும் வியாஜ்யத்தின் தொந்தரவு, அதற்காக அடிக்கடி பள்ளிக்கூடத்தில் லீவு கேட்பதனால் அதிகாரிகள் அதிருப்தி அடைவார்களோ என்ற பயம், வேலைபோனால் குடும்பம் நிர்க்கதியாய்ப் போய்விடுமே என்ற கவலை ஆகிய எல்லாம் அவரை வாட்டத் தொடங்கின.

இப்படி அல்லற் கடலில் மனம் அலைகிற நிலையிலே, ஒருவர் கதவைத் தட்டுகிற சத்தங் கேட்டது.

"யார் அங்கே? வந்துவிட்டேன்" என்றார் சௌந்தரராஜ ராவ்.

"நான்தான் நாராயணன்."

"நாராயண ஐயரா? வாருங்கள்."

"என்ன பண்ணிக்கொண்டிருக்கிறீர்கள்?"

"என்ன பண்ணுகிறது? ஏதோ தூக்கம் வரவில்லை. ஏதானும் வாசிக்கலாமென்று புஸ்தகத்தை எடுத்தால் படிப்பு ஓடமாட்டேன் என்கிறது."

"வெளியிலே பக்கத்துக் குளக்கரைப் படிக்கட்டிலே உட்காருவோமா?" என்று கேட்டார் நாராயணையர்.

"எனக்கும் அப்படித்தான் உத்தேசம். உங்கள் அறைக்கு வரலாமென்று யோசித்தேன்; ஏதோ பேப்பர்கள் திருத்திக்கொண்டிருந்தீர்கள்."

"ஆமாம். பி. ஏ., பேப்பர்களைத் திருத்திக்கொண்டிருந்தேன். திருத்திவிட்டு ஊருக்குப் போய்வரலாமென்று நினைக்கிறேன்."

"நீங்களும் ஊருக்குப் போய்விட்டால், நான் தனியாய்த்தான் இருக்கவேண்டும். உங்களிடம் மனசைக் கொட்டி ஆற்றிக்கொண்டிருந்தேன். தெய்வம் என்னை ரொம்பச் சோதிக்கிறது. சம்சாரம் ஒருபக்கம், குழந்தைகள் ஒருபக்கம். பகலானால்

பைத்தியம் பிடித்ததுபோல் இருக்கிறது. ராத்திரியானால் தொலையாத கவலை. என்ன பண்ணுகிறது?''

''என்ன பண்ணமுடியும்? நம்மால் என்ன முடியும்?''

''என்றைக்கு ஊருக்குப் போகப்போகிறீர்கள்?''

''இரண்டொரு நாள் கழித்துப் போகலாமென்று உத்தேசம்.''

இப்படிச் சம்பாஷணை நடந்துகொண்டிருக்கும்போது விளக்கைத் தணிய வைத்து அறையைப் பூட்டிவிட்டு வெளியிலே நகர்ந்தார் சௌந்தரராஜராவ். இருவரும் குளக்கரைப் படித்துறையில் உட்கார்ந்தார்கள். குளத்துக் குறிய அலைகளின் மீது நடந்துவரும் காற்று மேலேபடச் சற்று மௌனமாயிருந்தார்கள்.

சில நிமிஷங்கள் கழிந்தன.

''என்னை அடுத்த வருஷம் எல்.டிக்கு அனுப்புவது நிச்சயந்தானே?'' என்று வினவினார் சௌந்தரராஜராவ்.

''ஆமாம். அதற்கென்ன சந்தேகம்? பள்ளிக்கூடம் கிறிஸ்துமஸ் பண்டிகைக்கு மூடுவதற்குமுன் துரையைக் காண நேர்ந்தது. அவர் உங்கள் வேலையைப் பற்றிச் சிலாகித்துப் பேசினார்.''

''பேசினாரா? நல்லது. யாரோ ஜோஸப் என்பவர் தீவிரப் பிரயத்தனஞ் செய்வதாகக் கேள்விப்படுகிறேனே. ஒரு கிறிஸ்துவர் வருகிறதாயிருந்தால், கிறிஸ்துவ அபிமானத்தை நீக்கி என்னை வைத்துக்கொள்ளுவார்களா? நாற்பதுவயது கழித்து இந்த வேலை கிடைத்திருக்கிறது. இது போய்விட்டால்...........''

''இதற்குமுன் என்ன பண்ணிக்கொண்டிருந்தீர்கள்?''

''கடை வைத்தேன்.''

''கடையா? நீரா?''

''ஆமாம். அதிலே வந்த நஷ்டந்தான் இந்தத் துன்பங்களுக்கெல்லாம் காரணம். சில்லறைக் கடன்களையெல்லாம் தீர்த்துவிட்டேன். என் தமையனார் சம்சாரந்தான் என்னைப் பண்ணுத ஹிம்சையெல்லாம் செய்துவருகிறாள்.''

''அவள் உங்களுக்கு விரோதமாவானேன்?''

''அதைச் சொல்லுகிறேன் கேளுங்கள்'' என்று தம் கதையைச் சொல்ல ஆரம்பித்தார் சௌந்தரராஜ ராவ்.

## 2

''என் தமையனார் தாசில் வேலை பார்த்துவந்தார். அப்பொழுது நிலம் வாங்க வேண்டுமென்று உத்தேசித்தார். தெம்பரையில் நல்ல நிலங்கள் விலைக்கு வந்தன. கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர் வாங்கினால் லஞ்சம் கிஞ்சம் வாங்கினார் என்ற பெயர் வந்துவிடுமோ என்று என் பேரில் வாங்கச்சொன்னார் என் தமையனார். அவர் பரம சாது. ஆனால் கொஞ்சங்கூடத் தைரியமில்லாதவர். அவர் சம்சாரம் அவரைப் பம்பரம்போல் ஆட்டிவைத்தாள். அவளுக்குக் குழந்தையில்லை. என்பேரில் நிலம் வாங்கினதும், தாயாதிக்காரன் சொத்தைப் பிடுங்கிக்கொள்ள உபாயம் பண்ணுகிறானென்று என்னிடத்தில் அந்த அம்மாளுக்குக் கோபம் எழுந்தது. கோபம் பரமவிரோதமாய் முற்றிப்போய்விட்டது. என் தமையனாரைக் கொத்தித் தின்றுவிட்டாள். என்னோடு பேசுகிறதாயிருந்தால் சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டுதான் பேசுவார் என் தமைய

ஞர்; அவ்வளவு பயம் அவளிடத்தில். நான் ஓர் உபாயம் பண்ணினேன். நிலத்தின் பெறுமானத்திற்கு ஒரு நோட்டை எழுதிக்கொடுத்தேன் என் தமையனார் சம்சாரத்திற்கு.''

''நல்ல காரியம் பண்ணினீர் ஐயா'' என்றார் நாராயணையர்.

''தர்மம் அல்லவா?'' என்றார் சௌந்தரராஜராவ்.

''தர்மத்தின் பலன் தெரிகிறதா, இப்பொழுது? தர்மமாவது கிர்மமாவது? தர்மம் பண்ணுகிறவர்களுக்குக் காலமா இது?''

''என்னவோ எனக்கு அது நியாயமென்று பட்டது. மேலும் கையிலுள்ள என் பணத்தைக் கடையில் போட்டேன். கடையில் நஷ்டமாய்விட்டது; என் தமையனார் காலமானார். பணத்திற்கு என் தமையனார் சம்சாரம் நெருக்க ஆரம்பித்துவிட்டாள். 'பணமில்லை. உன் நிலத்தை எடுத்துக்கொள்' என்றால் அதற்கு மாட்டேன் என்கிறாள். பிராது பண்ணியாகிவிட்டது. அதுதான் தெரியுமே. மாசம் மாசம் ஒத்திப்போய்க் கொண்டேயிருக்கிறது ஈரங்கி. அந்த அம்மாளுக்கு இருக்கிற கோபதாபத்தைச் சொல்லிமுடியாது. என்னை ஒருநாளாவது ஜெயிலில் வைத்துப் பார்க்கவேண்டுமென்று ஆசை.''

''அவ்வளவு கடின சித்தமா அவளுக்கு?''

''என்ன பண்ணுகிறது? ஒவ்வொருவருக்கு ஒவ்வொருவிதமாயிருக்கிறது மனசு. அவள் மனசைப் பகவான்தான் திருத்தவேண்டும்.''

''பகவான் திருத்துவதாவது? இதுமாதிரி சிந்தையெல்லாம் சிதையிலேதான் திருந்தவேணும்.''

''இப்படி அடிக்கடி லீவு வாங்குகிறேனே. துரை ஏதாவது வித்தியாசமாய் நினைத்துக்கொள்ளுகிறாரோ?''

''உங்களிடத்தில் துரைக்கு ரொம்ப அனுதாபம். எலையஸ் டாக்டர் துரையிடம் உங்களைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்.''

''அவரும் நீங்களும் எனக்குத் தைரியம் சொல்ல இருக்கிறீர்கள். அவருடைய புன்சிரிப்பும் அவருடைய அனுகூலமான வார்த்தையும் என் கஷ்டத்திலே, என் வயிற்றிலே அமிர்தத்தை வார்க்கிறதுபோல இருக்கும். ஓர் உண்மையான கிறிஸ்துவர் என்றால் அவருக்குத்தான் தகும்.''

''ஆமாம். எல்லோரிடத்திலும் ஒரேவித அன்புதான் அவருக்கு. நானும் பார்த்திருக்கிறேன்'' என்றார் நாராயணையர்.

''எலையஸ் சொல்லியிருக்கிறாரா? அப்படியானால் கவலைப்பட நியாயமில்லை; இருந்தாலும் பயமாயிருக்கிறது.''

''ஒன்றும் கவலைப்படாதேயுங்கள்.''

''அந்தக் கவலையிருக்கட்டும். இன்னும் ஒரு கவலை வந்து பாடுபடுத்துகிறது. என் பையன்களுக்கு உடம்பு அசௌகரியமென்று கடிதம் வந்தது. சுரம் எப்படியிருக்கிறதோ தெரியவில்லை. மதனப்பள்ளியிலிருந்தும் கடிதம் வந்து ஒரு வாரத்திற்கு மேல் ஆகிவிட்டது.''

''கடிதம் வராததனால் க்ஷேமமென்று நினைத்துக்கொள்ளுங்கள்.''

இதற்குள் கோயில்மணி பன்னிரண்டு அடித்தது. ''நாழிகை ஆகிவிட்டது; போவோமோ அறைக்கு?'' என்றார் நாராயணையர்.

"போவோமே" என்று பதில் கூறினர் சௌந்தரராஜராவ். இருவரும் தம் தம் படுக்கைகளில் படுத்தனர். சௌந்தரராஜராவுக்குத் தூக்கம் வரவில்லை. க்ஷயரோகத்தில் எலும்பெடுத்து மதனப்பள்ளி ஆஸ்பத்திரியில் படுத்திருக்கும் தம் மனைவி கங்காபாயிடத்திற்கும் கும்பகோணத்தில் பாட்டன் வீட்டில் வளரும் பையன்களிடத்திற்கும் சிந்தை திரிய ஆரம்பித்தது; உத்தியோகத்தைப்பற்றிய கவலையும் எழுந்தது. எத்தனை சமாதானங்கள் சொல்லியும் பலிக்கவில்லை. பள்ளிக்கூடம் திறந்ததும் கோர்ட்டு வாசலில் நிற்கவேண்டுமேயென்ற துன்பமும் அவரைத் தொடர்ந்தது. ஆந்தையின் ஒற்றைக் குரலை நினைக்கிறபொழுது ஒரு திடுக்கிடலும் வந்தது. பொழுது வளர்ந்தது. கண்களும் அயரவில்லை. கடைசியில் விடியற்காலம் நான்குமணிக்குத் தம்மை அறியாமல் தூங்க ஆரம்பித்துவிட்டார்.

## 3

அதே வெண்ணிலா இரவு. கும்பகோணத்தில் ஒரு வாசல் அறையில் ஓர் அம்மாள் பிரக்ஞை தவறிப் படுத்திருக்கிருள். பக்கத்து அலமாரியில் மருந்துக் குப்பிகள் வைக்கப்பட்டிருக்கின்றன. பெனைல் நாற்றம் அடிக்கிறது. பக்கத்தில் ஒரு கும்மட்டியில் ஒரு விதவை பால் காய்ச்சிக்கொண்டிருக்கிருள். உள்ளே யமுனுபாய் அடிக்கடி பிதற்றுகிருள். "ஈரங்கி என்னைக்கு, கோபாலா?......உன்னை ஜெயிலில் வைத்துப் பார்க்கணும்......" என்று சொல்லிப் பல்லை நறநறவென்று கடிக்கிருள். கண்கள் பயங்கரமாய்ச் சுழல்கின்றன. மறுபடியும் மௌனந்தான்.

வாசலில் டாக்டரோடு பேசிக்கொண்டிருந்தான் கோபாலராவ். அவன் யமுனுபாயின் உடன் பிறந்தவன்.

"என்னவாயிருக்கிறது? குணப்படுமோ?" என்று கேட்டான் கோபாலராவ்.

"என்னத்தைச் சொல்லுகிறது? வயசான தேகம். எல்லாவற்றிற்கும் நான் கொடுத்த மருந்தை இரண்டுமணிக்கு ஒருதரம் கொடுங்கள். நாளை ஒருநாள் போக வேண்டும். வந்து பார்க்கிறேன். எதற்கும் அந்த அம்மாளுக்கு வேண்டிய மனுஷ்யர்களுக்குத் தந்தி கொடுத்து வாவழைத்துக்கொள்ளுங்கள்" என்று சொல்லிவிட்டுக் காரில் ஏறிப் போய்விட்டார் டாக்டர்.

இரவு முழுவதும் அந்த அறையில் பிதற்றல்தான். விடியற்காலத்தில் பிதற்றலும் அடங்கிவிட்டது. வாயும் அடைத்துவிட்டது; கண்களும் எங்கேயோ செருகிவிட்டன; கூப்பிட்டால் பேச்சுவார்த்தையில்லை.

தலையணையைச் சரியாய் வைக்கிறமாதிரி தலைமாட்டில் கிடந்த யமுனுபாயின் கொத்துச்சாவியை ரகசியமாய் எடுத்துக்கொண்டு அவள் பெட்டிகளைத் திறந்து பத்திரங்கள், நகைகள் எல்லாவற்றையும் உள்ளூரிலிருக்கும் தன் மாமனர் வீட்டிற்கு அப்புறப்படுத்திவிட்டான் கோபாலராவ். தமையன், தாயாதிக்காரன் வந்துவிட்டால் என்ன பண்ணுகிறது? அதற்குவேண்டிய முன்ஜாக்கிரதை செய்தாகிவிட்டது. இப்பொழுது துக்கம் அடைக்கக் கண்ணீர்விட்டழ அவகாசம் இருந்தது.

"யமுனு, நீ போகிருயே அம்மா, உன்னைவிட்டு நான் எப்படியிருப்பேன்!" என்று சொல்லவும் ஆரம்பித்தான் கோபாலராவ். யமுனுபாயின் உதடுகள் சுளித்துக்கொண்டிருந்தன. கடைசியில் சாயங்காலம் நான்குமணிக்கு அந்தச் சேஷ்டையும் அடங்கி, மூச்சுப் போய்விட்டது. கோபாலராவ் மனைவியின் அழுகைக் குரல் கேட்டது. பக்கத்துவீட்டுக்காரர்கள் வெளியிலே வேடிக்கை பார்க்க வந்துவிட்டார்

கள். புரோகிதரும் வீட்டிற்குள் நுழைந்துவிட்டார். கோபாலராவ் தன் தமையனுக்கும் சௌந்தரராஜ ராவுக்கும் தந்தி அடித்துவிட்டான்.

* * * * *

இரவு வெகுநேரம் விழித்த சோர்வினால் காலை எட்டுமணிவரையில் தூங்கினார் சௌந்தரராஜ ராவ். தேகத்தில் ஒரு சுறுசுறுப்பில்லை; மனத்தில் ஒரு மகிழ்ச்சியில்லை. ஏதோ பல்தேய்த்தார், ஏதோ குளித்தார், ஏதோ சாப்பிட்டார். உள்ளத்தில் அதே கவலைதான்; அதே பயந்தான். கவலையும் பயமும் மாறிமாறி வந்தன. ஆந்தையின் ஒற்றைக்குரலும் பயங்கரமாய்ச் சிந்தையில் ஒலித்தது.

தபாற்காரனுக்காக ஜன்னல் வழியாய்ப் பார்த்தார். மணி பத்தடித்தது. தபாற்காரன் தூரத்தில் வருவதைப் பார்த்துக் கீழே ஓடினார்.

"தபாலுண்டா?" என்றார் சௌந்தரராஜராவ்.

"இல்லை" என்றான் தபாற்காரன்.

"கவனித்துப் பார், அப்பா" என்று கேட்டார்.

"இருந்தால் கொடுக்கமாட்டேனா?" என்று சொல்லிவிட்டு அகன்றுவிட்டான் அவன்.

தபாற்காரன் போனவழியே பார்த்து நின்றார் சௌந்தரராஜராவ். அவன் மறைந்துவிட்டான். டாக்டர் ஐலையஸுடன் பேசலாம் என்று ஆஸ்பத்திரிக்குப் போனார். டாக்டர் அங்கே இல்லை. ஆஸ்பத்திரியிலிருந்து பள்ளிக்கூடத்திற்குப் போனார். பள்ளிக்கூடத்திற்கு வந்த தபால்களையெல்லாம் புரட்டிப் பார்த்தார். ஒரு கடிதமாவது அவருக்கு இல்லை.

'என்ன, இன்றைக்கும் வரவில்லையே' என்று மனம் நைந்து நடக்கலானார்.

காலேஜிற்குத் தெற்கே கொஞ்சதூரத்தில் ஒரு வாய்க்காலுண்டு. மழைக்காலத்தில் அதில் ஜலம் இருக்கும்; கோடைக்காலத்தில் வறண்டுபோய் உதிர்ந்த இலைகளினால் மூடப்பட்டிருக்கும். டிசம்பர் மாதத்தில் தண்ணீர் வற்றவில்லை. சலசலவென்று ஓடிக்கொண்டிருந்தது. இரண்டு பக்கங்களிலுமுள்ள மரங்களின் நிழல் அவ்வாய்க்காலில் நெருங்கிவிழுந்தது. தண்ணீர்க்கரை வழியாய் மேற்கே கோப்பிரளயம் என்ற குளத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்தார் சௌந்தரராஜராவ். அங்கே குளத்து மண்டபத்தில் உட்கார்ந்துகொண்டு இளைப்பாறினார். மனம் எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணமிட்டது. குளத்துச் சிறு அலைகள் கரைமீது இன்பமாய் மோதின. பக்கத்துத் தோப்புக்களில் பறவைகள் கூவின. இவைகள் அவர் காதில் விழவில்லை. தம் எண்ணங்களிலே அவர் சிறைப்பட்டிருந்தபடியால் உலக வெளிக் காட்சிகள் அவர் கண்களில் படவில்லை; உலகத்து ஒலிகளை அவர் செவிமடுக்கவில்லை. இதைவிட்டுக் கிளம்பி வடக்கே ருக்மிணி தீர்த்தம், கிருஷ்ண தீர்த்தம், கோயில் முதலியவைகளைக் கடந்து ஹரித்திராநதி என்ற பெருங்குளத்திற்குப் போனார். அக்குளத்து நடுவில் ஒரு பெரிய மண்டபம் உண்டு. அதிலுள்ள தோணியில் ஏறி மண்டபத்திற்குச் சென்றார். மண்டபத்திற்கு நீல ஆடை சுற்றினதுபோல் கிடந்த நீர்நிலையைப் பார்த்தார். பார்த்தென்ன? மனத்திற்கு நிம்மதி ஏற்படவில்லை. ஏதோ ஒன்று அவரை நல்ல நிலையில் இல்லாதபடி தள்ளிக்கொண்டுபோவது போலப் பட்டது.

தோணியில் ஏறிக் கரைவந்து சேர்ந்து தம் வழி நடக்கலானார். வெயிலின் கடுமை குறைந்துகொண்டு வந்தது. சூரியன் மேற்றிசையில் இறங்கிக்கொண்டிருந்

தான். தம் ஹாஸ்டலை நோக்கிச் சோர்ந்து தள்ளாடிக்கொண்டு வந்தார் சௌந்தரராஜராவ். ஹாஸ்டல் வாசலை அணுகினதும் ஒருவன் பைசைகிளும் கையுமாய், "யார் சௌந்தரராஜராவ்?" என்று அவரையே கேட்டான்.

"என்ன சொல்? நான்தான்."

"பள்ளிக்கூடத்துக்குப் போயிருந்தேனுங்க, உங்களைக் காண."

"பள்ளிக்கூடத்திலிருந்து" என்று அவன் வாய் எடுக்குமுன்னே அவர் தேகத்தில் ஒரு பதற்றம்; வேலைக்கு ஹானிவந்துவிட்டதோ என்ற பயம் அவர் மனத்தில் எழுந்தது.

"என்ன சமாசாரம்?" என்றார் சௌந்தரராஜராவ்.

"தந்தி, சாமி."

"தந்தியா? எந்த ஊர்?"

"எந்த ஊர் என்று எங்களுக்குத் தெரியுமா, சாமி?"

திடீரென்று சௌந்தரராஜ ராவுக்கு மார்பு படபடவென அடித்தது.

இந்தச் சமயத்திற்கு ஆந்தையின் அச்சான்னிய சத்தமும் மனத்திற்கு வந்தது. தம் மனைவிக்கோ, பிள்ளைக்கோ ஆபத்து வந்துவிட்டது என்று முடிவுகட்டினார் சௌந்தரராஜராவ்.

கையெழுத்துப் போட்டுத் தந்தியை வாங்கினார். உடைத்தார்; கை நடுங்கிற்று. உடம்பில் உயிர்போய் வந்தது: "யமுனாபாய் இறந்துவிட்டாள். உடனே வரவேண்டும்" என்று இருந்தது. தந்தியை ஒருதரம் படித்தார்; இரண்டுதரம் படித்தார். அதைப் பார்த்த தம் கண்களையே அவர் நம்பவில்லை.

இதற்குள், "யஜமான், இனாம்" என்றான் தந்தி கொண்டுவந்தவன். பையில் கைவிட்டு ஏதோ அவனுக்குத் தந்தார். எது கொடுத்தோம் என்ற விஷயமே அவருக்குத் தெரியாது. அவன் அதை வாங்கிக்கொண்டு கிளம்பிப் போய்விட்டான். தந்தியை எடுத்துக்கொண்டு மாடியறைக்குப் போனார். தம்மை நசுக்கிக்கொண்டிருந்த ஒரு பெரும்பாரம் தெய்வசதியாய் அகன்றதனால் சந்தோஷம் வந்தது. 'சீ! சாவிலும் சந்தோஷத்தை அடைகிறாயா? ஆயிரம் கஷ்டத்தை உண்டுபண்ணினாலும் தமையனார் சம்சாரமாயிற்றே? அவள் நெஞ்சீரல் தீராமல் போனாளே' என்ற எண்ணம் குறுக்கிட்டது.

இப்போராட்டத்துடன் நாராயணையரிடம் போனார்.

"கையில் என்ன?" என்று நாராயணையர் வினவினார்.

"தந்தி" என்றார் சௌந்தரராஜராவ்.

"தந்தியா?" என்று சொல்லி வாங்கி வாசித்தார் நாராயணையர்.

"ஐயா, உம்மைப் பிடித்த சனியன் தொலைந்தது. போய் முழுகுங்கள்."

"அந்த ஆத்மா சாந்தி அடையாமல் போகிறதே?"

"ஆத்மா, அனாத்மா ரொம்பக் கண்டுவிட்டீர்களோ? என்ன கதையாயிருக்கு!"

சௌந்தரராஜராவ் ஒன்றும் சொல்லவில்லை. திகைத்து நின்றார். "சனியன் தொலைந்தது; முழுகுங்கள்" என்ற குரல் நாராயண ஐயரிடமிருந்து வந்துகொண்டிருந்தது.

---

# நீர்க்குமிழி

எப். டபிள்யூ. பேயின்

[ஆங்கில மூலத்திலிருந்து ஆசிரியர் அனுமதியுடன் கி. சாவித்திரி அம்மாள் மொழிபெயர்த்தது.]

(சென்ற இதழ் 553-ஆம் பக்கத் தொடர்ச்சி)

## 18

பப்ளூவுக்கு ஆச்சரியமும் துக்கமும் இரக்கமும் உண்டாயின. மடைதிறந்ததுபோல் அவள் மூச்சுவிடாமற் பேசிய சொற்களின் அர்த்த மொன்றும் அவனுக்கு விளங்கவில்லை. அவன் திக்பிரமையுடன் கேட்டுக் கொண்டிருந்தான். அவள் தன் கையை அவன் கைமீது வைத்ததும் எரியும் பொருள் கைமேற் பட்டதுபோல் சுரீரென்று சுடவே அவன் திடுக்கிட்டான்.

கன்னங்களில் வழிந்தோடிய கண்ணீர்த்தாரைக்கு இடையே சற்றுப் புன்னகை தோற்ற, அவள் மீண்டும் கூறலானாள்:

"பப்ளூ, ஹரிணி ஒரு சிறந்த விருட்சத்தின்மீது படர்ந்த கொடி என்பது உனக்குத் தெரியுமா? ஆனால் அவ்விருட்சம் இப் பொழுது மறைந்து போய்விட்டது. உள்ளுக்குள்ளேயே செல்லரித்துப் புரையாய்ப் போன மரமோ என்னவோ அது; யார் கண்டார்கள்? கறையான் முழுதும் அரித்த பிறகு அங்கே வெறும் மண்ணைத் தவிர வேறு என்ன இருக்கும்? வெளிப்பார்வைக்கு விருட்சம் எவ்வளவோ அழகாய்த்தான் இருந்தது. ஆனால் உள்ளே ஒன்றும் இல்லாமல் படு சூன்யமாயிருந்த விஷயம் அச்சிறு கொடிக்கு எப்படித் தெரியும்? தற்செயலாய் உள்ளே பார்க்க நேர்ந்தபோது அங்கே நான் கண்டது இங்கே மிகவும் புண்படுத்திவிட்டது" என்று கூறி அவள் தன் இரு கைகளையும் ஹிருதயத்தின்மீது வைத்துக்கொண்டு விம்மி விம்மி அழத் தொடங்கினாள். பிறகு திடீரென்று மறுபடியும் சிறிதே சிரித்துக் கொண்டாள்.

"முத்தென்றும், ரத்தினமென்றும், மயிலென்றும், அன்னமென்றும் கூறும்படி இருந்தவள் இப்பொழுது உடைந்துபோன சட்டிக்குச் சமான மாய்விட்டாள். ஏதோ தங்கப் படகென்று சொன்னேனே, அந்தப் படகு கடலென்ற பெயர் காதில் படுவதற்கு முன்னமேயே நாசமாகி விட்டது. பப்ளூ, அது தங்கப்படகு என்று கூறியதெல்லாம் வெறும் பொய். அது முழுப்பொத்தலான ஓர் அற்பப் படகு. கல்லைப்போல் ஒரு நிமிஷம் நீருக்கடியில் அமிழ்ந்துபோய்விட்டது. வெறும் பொத்தலான

அப்படகு கணக்கற்ற ஸ்திரீகளை ஏற்றிக்கொண்டு எவ்வாறு மிதந்து செல்ல முடியும்? அது இவ்வளவு கேவலமாக இருந்ததைக் கண்டபொழுது ஹரிணி அடைந்த வேதனை அவளுக்கல்லவோ தெரியும்! அந்தத் தங்கப் படகு ஒரு நரகமாயிருந்தது. ஏனெனில் அதில் இருந்த ஸ்திரீகள் அனைவருக்கும் ஒருவரை ஒருவர் கண்டால் விஷமாயிருந்தது. ஹரிணியோ அழுது அழுது மாய்ந்துபோனாள். எல்லோரும் கடைசியில் அவள் அங்கிருக்கவேண்டாமென்று கூறிவிடவே, சாமு அவளை அங்கிருந்து அழைத்துச் சென்றான். ஹரிணி இறந்துபோனது அப்பொழுதுதான் என்று நினைக்கிறேன். அங்கிருந்து செல்வதற்கே அவள் மிக்க வேதனையை அடைந்தாள்; அக்கஷ்டம் தாங்காமல்தான் அவள் இறந்திருக்கவேண்டும். அவள் செத்துப்போன பிறகே சாமு அவளை எடுத்துச் சென்றான். சாமு வைக் கண்டால் அவளுக்கு ஒரே நடுக்கம். பப்ரூ, சாமுவின் விஷயத்தில் நீ ஜாக்கிரதையாக இரு. அவன் யாரையும்விட, அந்த ஸ்திரீகள் எல்லா ரையும்விட, இன்னும் கொடியவன். அவன் சிரிப்பைக் கேட்டு ஹரிணி நடுங்குவாள். அச்சிரிப்பு அந்த ஸ்திரீகளுடைய சிரிப்பைக் காட்டிலும் இன்னும் எவ்வளவோ கொடிது. சாமு அவளை அழைத்துப் போகும் பொழுது இந்த மணல்வெளியில் தன்னை விட்டுச் செல்லும்படி அவள் எவ்வளவோ மன்றாடிக் கேட்டுக்கொண்டாள். அப்படிச் செய்திருந்தால் அவள் அங்கேயே இறந்துபோய் மறுபடியும் தன் தந்தையையும் பப்ரூவை யும் பார்க்காதிருப்பாளல்லவா? பப்ரூ, அவள் திரும்பிவருவதற்குள் நீ ஏன் செத்துப்போகாமல் இருந்தாய்?—சாமு, ஹரிணியின் உயிரற்ற உடலை முத்தமிடுவதற்காகவா அதிரூபர் அவளை உன்னிடம் ஒப்பித்தார்?''

அவள் கூறுவதைக் கேட்டுக்கொண்டிருந்த பப்ரூவின் உள்ளம் இருந் தாற்போல் இருந்து பகீரென்றது; "ஐயோ! ஹரிணீ! ஹரிணீ!'' என்று அவன் கத்தினான்.

திடீரென்று ஹரிணி கீழே விழுந்து அவன் கால்களைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக்கொண்டாள். இந்தச் செயலைக் கண்டு ஓர் ஈட்டி தன் அடிவயிற்றில் பாய்ந்ததுபோல் தோன்ற அவன் மனம் பதறி விம்மி விம்மி அழத் தொடங்கினான். அவன் குனிந்து பரபரப்புடன் அவளைத் தூக்கி நிறுத்தித் தடுமாறிய குரலில், "ஹரிணி, உன் புத்தி பேதித்துவிட்டதா? வா; உன்னை அகத்திற்கு அழைத்துப் போகிறேன்'' என்றான்.

அச்சொற்களைக் கேட்டு அவள், "வேண்டாம், வேண்டாம்'' என்று கத்தினாள்; "அங்கே என்னை விரட்டியடிக்க என் தந்தையின் பிசாசு காத்திருக்குமே? வா; நாம் எங்கேயாவது இருட்டாயிருக்கும் தனி இடத் திற்குச் செல்வோம்'' என்று கூறி அவள் அவனைக் கையைப் பிடித்து இழுத்துச் செல்லத் தொடங்கினாள்.

போகும்போது, அவள் தாழ்ந்த குரலில் சொல்லலானாள்: "பப்ரூ! எனக்கு நீ ஓர் உபகாரம் செய்யவேண்டும். உன் கத்தியால் நீ

என்னைக் கொன்றுவிடுகிறாயா? இல்லாவிடில் நானே இவ்வுடலைத் துறக்க வேண்டி நேரும்.''

இதைக்கேட்ட பப்ரூ திடுக்கிட்டவனாய், "ஹரிணி, உனக்கு என்ன பைத்தியம் பிடித்துவிட்டதா? நானா உன்னைக் கொல்வது? உன்னையா? என் உயிருக்குயிராய் இருக்கும் உன்னையா?'' என்றான்.

ஹரிணி மௌனமாய்ச் சிறிது நேரம் அவனை நோக்கினாள். சொல்ல முடியாத மனோவேதனையுடன் கூடிய அவள் பார்வையில் நிராசையும் ஏமாற்றமுங்கூடக் கலந்திருந்தன. அவள் மறுபக்கம் திரும்பி மிகவும் வருத்தத்துடன் தனக்குள்ளேயே, "ஐயோ! இவனும் எனக்குச் சத்துருவாகிவிட்டானே! ஒருவரும் என்னைக் கொல்லவும் மாட்டேனென்கிறார்களே. எப்படியாவது இறந்தால் போதும் என்றிருக்கும் என்னை இவ்வுடலில் சிறையிட்டு உயிரோடிருக்கும்படி செய்கிறார்களே. நான் எவ்வளவு வேண்டிக்கொண்டும் சாமுகூட என்னை நோக்கிச் சிரித்துவிட்டுப் பேசாமல் இருந்துவிட்டான்....என்னைத்தான் வெகுநாட்களுக்கு முன்னமேயே கொன்றாய்விட்டதே! இப்பொழுது வெறும் உயிரற்ற உடலல்லவா இது?'' என்று கூறிக்கொண்டாள். ஒரு நிமிஷம் ஏதோ யோசனையில் ஆழ்ந்தவளாய் நின்றவள் திடீரென்று திரும்பிப் பப்ரூவை நோக்கினாள். அப்பொழுது வெளுத்து வாடிய அவளது முகத்தில் விளங்கிய பார்வையிலே கவலை, கஷ்டம், வேதனை எல்லாம் ஒருங்கே காணப்பட்டன. மறுநிமிஷமே அப்பார்வை வெறுப்பும் கோபமும் நிரம்பியதாய் மாறிவிட்டது.

ஏதோ ரகசியமாய்க் கூற விரும்பியவளைப்போல் பப்ரூவினருகில் நெருங்கியவள் திடீரென்று ஒரு பெருஞ்சிரிப்புடன் அவன் கன்னத்தில் பளீரென்று ஓர் அறை கொடுத்து மிகவும் ஏளனமாய், "நீயும் என்னைக் கொல்லமாட்டாயா? ஐயோ பப்ரூ, உனக்கு ஒன்றுமே இன்னும் விளங்கவில்லை போலும்! வெகு நாட்களுக்கு முன்பு உனக்குக் கதைகளெல்லாம் சொல்லுவாளே, அந்த ஹரிணியை உனக்கு நினைவு இருக்கிறதா? அவள் இப்பொழுது செத்துப்போய்விட்டாளே. அவர்கள் அவள் ஹிருதயத்தை வெளியே எடுத்துப் பிய்த்து எறிந்து விட்டார்கள். பிறகு அவமானம் துக்கம் இவைகளையே போர்வையாகப் போர்த்தி அவள் உடலைத் தனியே திரியும்படி விட்டு விட்டார்கள். நீ அதைக் கொன்று ஒழிக்க மாட்டேன் என்கிறாய். வெகுகாலத்திற்கு முன்பு ஹரிணி வாழ்ந்திருந்த இந்த வனத்தில் உயிருடன் தவிக்கும்படி நீ அந்தப் பாழும் உடலை விட்டு வைக்க வேண்டும் என்கிறாய். எதற்காக உயிருடன் இருக்க வேண்டும்? ஒவ்வொரு நிமிஷமும் நடந்ததெல்லாம் ஞாபகம் வந்து துன்புறுவதற்கும், மீளாத் துக்கமாய் மாறிய ஒரு சந்தோஷத்தின் நினைவு எழுந்து உள்ளம் குமுறுவதற்குமா? மரத்துக்கு மரம் தாவும் குரங்குகள் இப்படித்தான் ஒரு பழத்தைச் சின்னபின்னமாகக் கடித்துத் தரையில் எறியும். ஹரிணியின் உயிரற்ற உடலை கண்டு உனக்குச் சந்தோஷம் உண்டாகுமா?

ஐயோ! நீ அவளைக் கொல்லமாட்டேன் என்கிறாயே! இந்த வனத்தில் உன்னுடன் இருக்கும்பொழுது உன்னைப்பற்றி நினைப்பாள் என்று எண்ணுகிறாயா? ஐயோ! அவள் அவரைப்பற்றியல்லவா நினைத்துக்கொண்டிருப்பாள்? உன்னைப் பார்க்கும்பொழுதெல்லாம் உன்னையும் அவரையும் ஒப்பிட்டுப் பார்ப்பாள். அவர் வெறுத்துத் தள்ளியதைத்தான் நீ காதலிக்க வேண்டும். உனக்குமுன் குரங்குகள் கடித்து எறிந்த பாகங்களையேதான் நீ ருசி பார்ப்பாய். அது மிகவும் புளிப்பதைக் கண்டு உன் அன்பெல்லாம் ஒரு நிமிஷம் வெறுப்பாக மாறிவிடும். உன்னைக் கண்டாலே அவளுக்கு ஆகாமற் போய்விடும். அவள் உன்னை நோக்கும்பொழுதெல்லாம், நீ பார்க்கச் சகியாமல் எவ்வளவு விகாரமாயிருக்கிறாயென்று அவள் நினைப்பது உனக்கு விளங்கும். ரஸத்தை உறிஞ்சிவிட்டுச் சக்கையை எறிவதுபோல் அவர்களால் எறியப்பட்டுக் கிடக்கும் இவ்வுடல் காக்கை குத்திப் போட்ட தவளைக்குஞ்சுபோல் குற்றுயிராய்க் கிடக்கின்றது. அம்புபட்டுக் காயமடைந்த மானொன்று காட்டிலேயே விடப்பட்டுச் சாகாமல் கழுகுகள் பக்கத்தில் காத்திருக்க எவ்வாறு மரணவேதனையுடன் கிடக்குமோ, அந்த நிலையில்தான் அவளும் இருக்கின்றாள். சிங்கம் தின்று விட்டுப்போன எச்சிலைத் தின்னும் நரிபோன்றதுதான் உன் நிலைமை. வேறொருவன் அவள் உள்ளத்தில் ஆழ்ந்துகிடக்கிறான் என்று தெரிந்தபிறகும் அவளுடன் உன்னால் வாழமுடியுமா? நாயைப்போல் பிணத்தை உன்னால் தின்னமுடியுமா? ஐயோ பப்ரூ! உனக்கு விளங்கவில்லையா? உன்னை விட்டு வேறொருவனை நாடி அவள் சென்றவளல்லவா? அவனன்றோ அவள் உயிரற்ற உடலில் இப்பொழுது வாசம் செய்கிறான்!" என்றாள்.

## 19

இவ்வாறு அவள் கூறுவதைக் கேட்டுக்கொண்டிருந்த பப்ரூ திடீரென்று விழித்துக்கொண்டவன்போல் ஆனான்; சாமு போகும்பொழுது கூறிய வார்த்தைகள் அவன் ஞாபகத்துக்கு வந்தன. ஹரிணியின் மீதுள்ள அளவுகடந்த பிரேமையினாலும் தன்னைத் தானே குறைவாக எண்ணிக்கொண்டிருந்ததனாலும் ஏற்பட்ட திரையானது அவன் கண்ணினின்றும் விலகியது. சாமு, அதிரூபன், ஹரிணி இம்மூவருடைய இகழ்ச்சிக்கும், வெறுப்பிற்கும் எவ்வாறு பாத்திரமாயிருந்தோம் என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் அவனுக்குத் திடீரென்று நன்கு புலப்பட்டது. அவமானமும் கோபமும் அவன் உள்ளத்தினின்றும் குமுறி எழுந்தன. அதனோடு தன் தாழ்வான நிலைமையை உணர்ந்ததும் அவன் ஹிருதயம் வெடித்துவிடும்போல் இருந்தது. ஹரிணியை மீண்டும் பார்த்ததால் ஏற்பட்ட சந்தோஷமெல்லாம் ஒரு நொடியில் அவன் மனத்தை விட்டு அகன்றுவிட்டது.

வெகுநேரம்வரை அவன் அவளை மௌனமாய்ப் பார்த்துக்கொண்டு நின்றான். அணையும் தறுவாயிலிருக்கும் தீபத்தை நம்பி இருட்டில் காத்

திருப்பவனைப்போல் மேன்மேலும் நம்பிக்கையை அவன் இழக்க லானான்.

"இவள் கூறுவது உண்மையே! விதியானது அதிரூபனுடைய உரு வில் வந்து எங்களிருவருடைய சந்தோஷத்தையும் நாசமாக்கிவிட்டதோடு இவளையும் சேர்த்து அழித்துவிட்டது" என்று அவன் தானே கூறிக்கொண் டான். பிறகு தன் தீர்மானத்தை எதிர்பார்த்து நிற்கும் ஹரிணியை நோக்கி, "ஹரிணீ, ஆம். நீ கூறுவது சரி; நான் எண்ணியதுதான் தவறு. இதற்கு ஒரு வழியே உள்ளது. ஆம், இறந்துபோவதே மிகவும் நலம்" என்று கூறி அவன் தன் கத்தியை உறையினின்றும் வாங்கிக் கையில் பிடித்துக்கொண்டான்.

அதைப் பார்த்ததும் ஹரிணி சந்தோஷ ஆரவாரம் செய்தாள். பிறகு அவள் வேகமாய் அவனருகில் வந்து நின்றுகொண்டு தன் மார்பில் இருந்த ஆடையைக் கீழே தள்ளித் திறந்த மார்பைக் காட்டினாள். "இதோ பார். நான் தயாராயிருக்கிறேன்" என்று கூறி அவன் கத்தியால் குத்தப்போவதை ஆவலாய் எதிர்பார்த்து நின்றாள்.

துக்கம் தேங்கிய பார்வையுடன் பப்ரூ அப்பொழுதும் பேசாமல் நின்றான். அவன் முகத்தில் அப்பொழுது கோபமென்பது சிறிதும் காணப்படவில்லை. "இவ்வழகிய மார்பில் இக்கத்தியைச் செருகிவிடட் டுமா?" என்று தனக்குள்ளேயே கேட்டுக்கொண்டான்; அப்போது சிறிதே தயக்கம் உண்டாயிற்று. அவன் கண்களில் ஒரு நீர்த்திவலை தோன்றிக் கீழே உதிர்ந்தது.

'ஆஹா! இவ்வளவு அழகையும் அடைந்து அனுபவித்தவன் அவனல் லவா?' என்ற எண்ணம் தோன்றவே அவன் தன் கண்களைத் துடைத்துக் கொண்டு சரேலென்று கையை ஓங்கினான். மறுக்ஷணம் அவன் கையி லிருந்த கத்தியானது ஹரிணியின் மார்பிற்குள் பிடிவரையில் சென்று விட்டது.

## 20

ஒரே ஒரு சிறு கத்தல்; அவ்வளவுதான்; ஹரிணி கீழே சாய்ந்த தும் அவள் உயிர் போய்விட்டது. தரையில் விழாதவண்ணம் அவளைத் தாங்கிக்கொள்வதற்குக்கூடப் பப்ரூ முயலவில்லை. அசைவற்றுக் கிடக்கும் அவளைத் தான் நின்ற இடத்திலிருந்தபடியே மௌனமாய்ப் பார்த்துக் கொண்டு நின்றான். வெகுநேரம் சென்றபிறகு அவன் கீழே உட்கார்ந்து அவளை மெதுவாய் எடுத்துத் தன்மேலே சார்த்திக்கொண்டு ஒரு குழந்தை யைத் தேற்றுவதுபோல் ஏதேதோ சொல்லத் தொடங்கினான்.

"இனி உன் கஷ்டமெல்லாம் தீர்ந்தது. நீ இறப்பதே நலமென்று எண்ணித்தான் நான் உன்னை மீளாத் தூக்கத்தில் ஆழ்த்திவிட்டேன். ஹா! ஆயினும் அக்காரியத்தைச் செய்ய நான் எவ்வளவு பாடுபட்டேன்

என்பது உனக்கு ஒருநாளும் தெரிவதற்கில்லையே! நீ இனி எழுந்திருக்காமல் எல்லா ஞாபகத்தையும் அடியோடு மறந்தவளாய்த் தூங்குவாய். இந்த நெடுந்துயிலினின்றும் இனி நீ விழித்தெழவேண்டியதே இல்லை.

"ஹரிணியின் தீக்கனவுகளெல்லாம் ஹரிணியுடன் தொலைந்துவிட்டன. இப்பொழுது இவள் பழைய ஹரிணியாகிவிட்டாள். இவளுக்கு உயிரில்லை என்ற வித்தியாசம் ஒன்றுதான்.—ஆம்; நீ இறந்ததே நலம். உன் அவமானம் துன்பம் யாவற்றையும் ஒரு நிமிஷத்தில் நான் அழித்துவிட்டேனல்லவா? ஹா! நீ கொஞ்சமும் மனம் சலிக்காமல் என் கத்திக்கு இரையாகச் சித்தமாயிருந்தாயே! நீ உயிரிழப்பதோடு நானும் இறக்கும்படி நீ செய்தாயென்பது உனக்குத் தெரிந்திருந்தால் இறப்பதில் நீ இவ்வளவு சந்தோஷப்பட்டிருக்கமாட்டாய். இனிக் கூடிய சீக்கிரத்தில் நான் உன்னைப் பின்பற்றவேண்டியவனே. அது வெகு சுலபம். உன்னைக் கொல்வதுதான் மிகவும் சிரமமாயிருந்தது. அது என்னையே கொன்றுகொள்வதுபோல் இருந்தது. சற்று நாம் இந்நிலவில் உட்கார்ந்து முன்போல் பேசிக்கொண்டிருப்போமா? ஆனால் நீ முன்போல் என்னைக் கூப்பிட்டுக் கதைகள் சொல்லமுடியாதே. உயிரோடிருக்கும்பொழுது நீ பிறருக்கு உரியவளானாய். இறந்தபிறகு நீ எனக்கே சொந்தமானாய். எனக்கு அது போதும். உன்மேல் எனக்கு ஒருவித வருத்தமும் இல்லை. என்னைக்காட்டிலும் உனக்கே நீ அதிகமாகத் தீங்கிழைத்துக்கொண்டாய். நீ பிருகு மகரிஷியைப்பற்றிக் கூறிய கதை உனக்கு ஞாபகம் இருக்கிறதா? அடிபட்டவனைக் காட்டிலும் அடித்தவனுக்கே வருத்தம் அதிகம் என்னும் உண்மையை நான் இப்பொழுது நன்றாக அறிந்துகொண்டேன். உன்னைக் கொல்லும்பொழுது நான் அனுபவித்த கஷ்டம் எனக்கல்லவா தெரியும்? பழிக்குப் பழி வாங்க வேண்டுமென்பதற்கா நான் உன்னைக் கொன்றேன்! ஹா! உன்மேல் எனக்கு ஒரு கோபமும் இல்லை. என் ஆத்திரமெல்லாம் உன்னை இக்கதிக்குக் கொண்டுவந்த பாபிகள் மேலல்லவா?"

இவ்வாறு கூறியதும் ஏதோ ஞாபகம் வந்தவனாய் அவன் சட்டென்று ஹரிணியின் உடலைக் கீழே கிடத்திவிட்டு எழுந்து நின்றான். அதிரூபனால் அவளுக்கு நேர்ந்த தீங்கு இப்பொழுதுதான் முதல் தடவை அவன் உள்ளத்தில் ஓர் ஈட்டியைப் பாய்ச்சியதுபோன்ற உணர்ச்சியை எழுப்பியது.

அவன் கோபத்துடன் தனக்குள்ளேயே, "ஹா! எனக்கு இப்பொழுதுதான் ஞாபகத்திற்கு வந்தது: தெய்வாதீனம்! நான் இறந்துபோகாமல் இருக்கிறேன்" என்று முணுமுணுத்துக்கொண்டான். பிறகு கீழே கிடக்கும் ஹரிணியின் உடலை நோக்கி, "ஹரிணி, என்னை மன்னித்துவிடு. நீ என்னை மடையனென்று கூறியது சரியே. உனக்குச் செய்த தீங்குக்குப் பதில் பழிவாங்காமல் உன்னைப் பின்தொடருவதாயிருந்தேனே! அப்படிச் செய்வதற்கு முன் உன்பொருட்டு நான் செய்யும் கடமையொன்று இருக்கிறதென்று இப்பொழுது ஞாபகம் வந்துவிட்டது. வெகு சீக்கிரத்தில் அக்

காரியத்தை நன்ருகச் செய்து நிறைவேற்றுவேனென்று உனக்கு நிச்சயமாகச் சொல்லுகிறேன். ஹரிணி தன் ஸ்தானத்தில் வேறு நீண்ட கடினமான கைகளை வைத்துச் சென்றிருக்கிருளென்பதை அந்தப் பாபிகளுக்குக் காட்டியபிறகே நான் உயிரை விடுவேன். ஹா! அதிரூப மகாராஜனே! கொஞ்சம் பொறுத்துக்கொள். ஹரிணியின் ஆத்மாவானது தன் சரீரத்தை விட்டு என் சரீரத்தில் பிரவேசித்து உன்னைக் கடைசியாக ஆலிங்கனம் செய்யப்போகிறதென்பதை அறிந்துகொள்" என்ருன்.

இவ்வாறு கூறி அவன் குனிந்து தன் கைகளை அவள் கைகளுடன் சேர்த்துவைத்துப் பார்த்துச் சிரித்துக்கொண்டான். பிறகு அவளை மெதுவாய்த் தூக்கி நூதனமாய் மணந்த மனைவியைத் தாங்கிச் செல்லும் மணமகன்போல் ஆனந்தத்துடன் அந்நிலா எறிக்கும் இரவில் அவர்கள் இருந்த வீட்டிற்குச் சென்ருன். அங்கே தளிர்களினுலாகிய படுக்கையில் அவளைக் கிடத்தினுன்; அவள் அழகை மீண்டும் ஒருமுறை கண்ணுரப் பருகினுன். பிறகு சிறிது தயக்கத்துடன் அவளை நெற்றியில் முத்தமிட்டு, "நான் இப்பொழுது உன்னை எவ்வளவு தரம் முத்தமிட்டாலும் உனக்குக் கஷ்டம் இராது. இவ்வாறு ஒருதடவை முத்தமிட முன்பு நான் எவ்வளவு ஜன்மங்கள் வேண்டுமானுலும் எடுக்கச் சித்தமாயிருந்தேன். ஆனுல் நீ உயிருடன் இருக்கும்போது உன்னை முத்தமிடும் பாக்கியமெல்லாம் வேருெருவனுக்கே உரியதாயிருந்தது" என்ருன்.

தன் ஹிருதயத்துக்கு ஆதாரமாக இருந்த வஸ்து ஒன்று திடீரென்று அழிந்துவிட்டதுபோன்ற உணர்ச்சி அவனுக்கு உண்டாயிற்று. துக்கம் தாங்கமுடியவில்லை. தலையில் அடித்துக்கொண்டு கைகளைப் பிசைந்த வண்ணம், "ஹரிணீ, ஹரிணீ!" என்று கதறி அழத்தொடங்கினுன். அவன் நிலைமையைப் பார்க்கும்பொழுது அவன் ஆத்மா தன் தனிமையைக் கண்டு அச்சமுற்று வெளியேற முயன்றதுபோல் தோன்றிற்று. சிறிது நேரத்திற்குப் பிறகு அழுது அழுது ஓய்ந்தவன்போல் அவன் வருந்துவதை நிறுத்தி வெகுநேரம்வரையில் கதவுவழியாய் வெளியே அமைதி குடிகொண்ட வனத்தைப் பார்த்தவண்ணம் உட்கார்ந்திருந்தான். கடைசியாய் அவன் திரும்பி ஒரு நிமிஷம் ஹரிணியைப் பார்த்தான். பிறகு குனிந்து அவள் மார்பில் குத்தியபடியே இருந்த கத்தியை வெடுக்கென்று பிடுங்கிக்கொண்டு கதவை ஜாக்கிரதையாய்த் தாழிட்டுவிட்டு வெளியே சென்ருன். கையிலிருந்த கத்தியை நிலவில் உற்றுப் பார்த்தவண்ணம் சற்று நின்ருன். பிறகு அதை உறையில் செருகியவனுய், "இவள் ரத்தத்தில் நனைந்த இக்கத்தியானது இனி அவன் ரத்தத்தில் தோயும்வரை இவ்வுறையிலேயே உலர்ந்துகொண்டிருக்கட்டும்" என்று தானே கூறிக்கொண்டான்.

## 21

இதன் மத்தியில் அதிரூபன் ஹரிணியை முற்றும் மறந்தவனுய், மது வெறிகொண்ட வண்டு ஒரு மலரில் இருக்கும் தேனைப் பருகியதும் அதை

விட்டு மற்றொரு மலரை நாடிச் செல்லுவதேபோல், தன் இச்சைப்படி நடப்பவனுயிருந்தான். அவனால் புறக்கணிக்கப்பட்ட பெண்கள் வாடிய தாமரைமலரின் இதழ்கள் உதிர்ந்து நிறம் மாறி நீரின் அடியில் கிடப்பது போல் கவனிப்பாரற்றுக் கிடந்தனர்.

ஒருநாள் அவன் வழக்கம் போல் தன்னைச் சேர்ந்தவர்கள் சிலருடன் மதுவை அருந்திக்கொண்டு உற்சாகமாய் அரண்மனையில் வீற்றிருந்தான். அச்சமயம் திடீரென்று வாயில் காவலன் உள்ளே பிரவேசித்து, "மகாராஜா, வாசலில் ஒரு கிழச்சந்யாசி அரசருடைய தரிசனம் வேண்டுமென்று நிற்கிறார். இப்பொழுது பார்க்கமுடியாதென்றால் கேட்கவில்லை. ஒருகால் பைத்தியம் பிடித்தவராயிருக்கலாம். தாம் ஒரு தேவனென்றும் வெகுநாட்கள் கழித்து இங்கே பார்க்கவந்திருப்பதாயும் சொல்லுகிறார். மகாராஜாவினது ஆக்ஞை எதுவோ?" என்றான்.

அதைக் கேட்டு அதிரூபன் நகைத்து, "அவன் ஒரு தேவனென்றால் வாசலில் காத்திருப்பானேன்? யார் கண்டார்கள்? தேவர்கள் எந்தச் சமயத்திலும் எந்த ரூபத்தில் வேண்டுமென்றாலும் வருவார்கள் என்று சொல்லுவார்கள். பிரதீஹாரி, நீ சென்று தெய்வத்தன்மைக்கு அறிகுறியான ஏதாவது ஓர் அடையாளத்தைக் காண்பிக்கும்படி கேட்டு வா. பிறகு பார்த்துக் கொள்வோம்" என்றான்.

சற்றுப் பொறுத்துப் பிரதீஹாரி திரும்பி வந்து, "மகாராஜா! அந்தச் சந்யாசி, 'நான் தான் காலகாலனென்று மகாராஜாவிடம் சொல்லு. ஆயினும் காலனென்றால் அவருக்கு மட்டுமேயன்றி வேறொருவருக்கும் அல்ல. வெகுகாலத்திற்குமுன்பு என் கண்ணினின்றும் கிளம்பிய அக்கினியால் அவரது உடலைச் சுட்டெரித்தேன். இப்பொழுது அவர் அடைந்திருக்கும் தேகம் எத்தகையது என்று பார்க்க விரும்புகிறேன்' என்கிறார்" என்றான்.

அதைக் கேட்ட அதிரூபன் மிகவும் களிப்புடன், "சரி; இனி வேறு ருசு வேண்டியதில்லை. இச்சந்யாசி தேவலோகத்திலிருந்து வந்தவரென்பது ஐயமற விளங்குகிறது. அவரை உள்ளே வரச் சொல்" என்று கட்டளையிட்டான். பிறகு தனக்குள்ளேயே, "யாராவது சமீபத்தில் இருக்கும் ஓர் அரசனிடமிருந்து வரும் தூதனுயிருக்கலாம். அதை மறைப்பதன்பொருட்டுத் தான் தேவலோகத்திலிருந்து வந்தவனென்று குறும்பாகச் சொல்லுகிறானென்று நினைக்கிறேன். இல்லையெனில் வேறு ஏதாயினும் முக்கியமான காரியமாகவும் இருக்கலாம். எப்படி இருந்தால் என்ன? அவனை உள்ளே வரவிடுவதற்கு என்ன பயம்?" என்று கூறிக்கொண்டான்.

சிறிது நேரத்திற்கெல்லாம் நெடுநெடுவென்று மரம்போல் வளர்ந்திருந்த அந்தச் சந்யாசி உள்ளே பிரவேசித்தார். அவர் தலையிலிருந்து கால்வரையிலும் விபூதி பூசியிருந்தார். இடுப்பில் ஒரு சிறு காஷாய வஸ்திரம். கழுத்தில் ஒரு ருத்திராக்ஷ மாலை. நரைத்துச் சடையாய்த் திரிந்திருந்த தலைமயிர், தாடி, மீசை இவை அவர் முகத்தை மறைத்திருந்த

மையால் அது நன்கு வெளித் தெரியாமல் இருந்தது. அவர் உள்ளே நுழைந்ததும் மிகவும் பிரகாசமாய் விளங்கிய அவர் கண்களிலிருந்து, பயமும் கொடூரமும் நிறைந்த வனவிலங்கின் பார்வையைப்போன்ற ஒரு பார்வை அதிரூபன் மேற் பதிந்தன. அவரது தேகமும் அச்சமுற்றதுபோல் சிறிது நடுங்கியது.

அவரை ஆச்சரியத்துடன் நோக்கிய அதிரூபன் சிறிது பரிகாசமாய், "தேவரீரைத் தெரிந்துகொள்ளவில்லையே? கைலாசத்திலிருக்கும் மகாதேவரென்றே நினைக்கிறேன். அப்படி இல்லையென்றாலும், அவர் தேவரீரைப் பார்த்துப் பொறாமைப் படத்தான்வேண்டும். தேவரீருடைய உயரமும், தேகமுழுவதும் பூசிய திருநீறும், சடையும், திறந்தால் என்னை எரித்துவிடுமோவென்று தோன்றும் நெற்றிக்கண்ணும்—" என்று கூறிமுடிப்பதற்குள், அந்தச் சந்யாசி ஒரு பெரிய சிரிப்புச் சிரித்தார்.

"அரசனே! என் நெற்றிக்கண்ணைப்பற்றி இனி உமக்குப் பயம் வேண்டாம். இந்தத் தடவை நான் முற்றும் வேறுவிதமான அக்கினியினால் உன்னை எரிக்கப்போகிறேன். மான் கண்கள்போன்ற கண்களும், ரத்தம் போன்ற சிவந்த இதழ்களுமுடைய ஒரு கட்டழகியின் ஆலிங்கனத்தினின்றும் ஏற்படுவது அது."

"முனிபுங்கவரே, இத்தகைய விஷயம் தேவரீரைப் போன்றவர்களிடம் எதிர்பார்க்கக் கூடியதே. சமாசாரத்தை உடனே கூறுங்கள். நான் மிகவும் ஆவலுள்ளவனாயிருக்கிறேன்" என்றான் அதிரூபன்.

அதற்குப் பதில் கண்களைச் சிமிட்டியவண்ணம் அந்தச் சந்யாசி, "காமதேவனே, ஓர் உத்தமகுலத்துப் பெண்மணியானவள் தன் காதலனைச் சந்திக்கச் செல்லும்பொழுது தன் மேனி முழுவதையும் ஆடையால் மறைத்துக்கொண்டு கால் சதங்கைகளும் கைவளைகளும் குலுங்காவண்ணம் ஜாக்கிரதையாகச் செல்லுவாள்; உன்னைவிட இதை வேறு யார் நன்கு அறிவார்கள்? நான் கூறப்போகும் விஷயங்களை உன்னையன்றி வேறொருவரும் கேட்கலாகாது. நான் இவர்கள் அனைவர் எதிரிலும் கூறினேனேயாகில் நீயே பிறகு என் மதியீனத்திற்காக என்னைத் தண்டிப்பாய்" என்றார்.

அதைக் கேட்ட அதிரூபனது ஆவல் மிகவும் அதிகமாய்விட்டது. 'நான் நினைத்தபடியேதான் இருக்கிறது. தான் வந்த காரியத்தை மிகவும் சாமர்த்தியமாகச் செய்யும் ஒரு காதல் தூதன்தான் இவன்' என்று எண்ணியவனாய்ச் சாமுவைப் பார்த்து, "சாமு, எல்லோருடனும் இவ்விடமிருந்து சற்று வெளியே போய் இரு" என்றான்.

வந்த சந்யாசியானவர் சாமுவைச் சிறிது நோக்கிவிட்டு அதிரூபனிடம் மெதுவாய், "மகாராஜனே, சாமு உன்னுடைய தோழனென்று கேள்விப்பட்டிருக்கிறேன். அவன் சமீபத்திலேயே இருக்கட்டும். நான் வந்த விஷயத்தைப்பற்றிக் கேட்டபிறகு, உனக்குத் திருப்தியாயிருந்தால் நானும் அவனும் மேல் நடக்கவேண்டிய காரியங்களைப்பற்றிக் கவனித்துக்கொள்வோம்" என்றார்.

"நல்லது சாமு, நான் கூப்பிடும்பொழுது வருவதற்கு நீ தயாராக இரு" என்முன் அதிரூபன். அவர்கள் யாவரும் அவ்விடம் விட்டு அகன்றதும் அவன், "சரி, சந்யாசியே! சமாசாரத்தை இனிமேல் தாமதிக்காமல் சொல்லும். உம்மை யார் அனுப்பியது?" என்று கேட்டான்.

"ஹரிணி" என்முர் சந்யாசி; "நீ அவளை மறந்துவிட்டாலும் அவள் உன்னை மறக்கவில்லை. ஆனல் அவள் தன் தேகத்தைத் துறந்துவிட்டு நான் கூறியதுபோல் உன்னைக் காடாலிங்கனம் செய்வதற்கென்று என் தேகத்தில் பிரவேசித்திருக்கிருள்."

இச்சொற்களைக் கேட்ட அதிரூபனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. ஆச்சரியத்துடன் அச்சந்யாசியை விழித்துப் பார்த்தான். சந்யாசியோ முழக்கத்துடன் அவன்மேற் பாய்ந்து அவனைக் கீழேதள்ளி அவன் மார்பின் மீது உட்கார்ந்துகொண்டார். பிறகு இடுப்பினின்றும் கத்தியை உருவி மரத்தில் ஆணியறைவதுபோல் அதைப் பலமாய் அவன் மார்பில் செலுத்திவிட்டார்.

சந்யாசியின் கத்தலைக் கேட்டுச் சாமு மற்றவர்களுடன் உள்ளே ஓடிவந்தான். அவனைக் கண்டதும் அவர் எழுந்து நின்முர். பிறகு சிரித்துக்கொண்டே சாமுவின் மேல் பாய்ந்து அவன் மயிரைப் பிடித்து உலுக்கினர். அவரை இன்னரென்று அறிந்து கொண்ட சாமு திக்பிரமையுடன் நிற்கையில் அவன் தம்மை நன்கு பார்த்துத் தெரிந்து கொள்ளட்டும் என்று நினைப்பவர்போல் அவர் சற்றுப் பேசாமல் இருந்தார். பிறகு தம் கையை உயர்த்தி மிகவும் மெதுவான குரலில், "ஸ்! மேலுலகத்தினின்றும் ஹரிணி கூப்பிடுவது உனக்குக் கேட்கவில்லையா? வா; நாம் இருவரும் அவளைப் பார்க்கச் செல்வோம்" என்று கூறிவிட்டு ஆலமரத்தின் விழுது போன்ற தம் கைகளால் சாமுவின் கழுத்தை எட்டிப் பிடித்துக்கொண்டார். அச்சமயம் ஹரிணிக்குத் தீங்கு விளைத்தவனைப் பழி வாங்கவேண்டுமென்ற எண்ணம் தோன்றவும் ஒரு ராக்ஷஸனுடைய பலம் அவருக்குக் கிட்டியது போல் தோன்றிற்று.

"பதரே, இப்பொழுது ஹரிணியைப் பார்த்துச் சிரி; பார்ப்போம்" என்று கூறிக்கொண்டே அவர் சுற்றிலும் இருப்பவர்களைக் கொஞ்சமும் கவனியாமல் சாமுவின் கழுத்தைப் பிடித்துத் திருகவும் அவன் கண்கள் பிதுங்கி வெளியே வந்து விடும்போல் இருந்தன. அதைக் கண்டு அங்கிருந்தவர்கள் கும்பலாய்ப் பப்ரூவின்மேல் பாய்ந்து கையிலிருந்த ஆயுதங்களினல் அவனைத் தோன்றிய இடங்களிலெல்லாம் காயப்படுத்தினர்கள். ஆனல் அவர்கள் என்ன செய்தும் சாமுவின் கழுத்தைத் திருகிக் கொண்டிருந்த பப்ரூவின் கைகளைமட்டும் அவர்களால் விலக்கமுடியவில்லை. சாமு இறந்த பிறகும் அக்கைகள் இரும்புவளையங்கள்போல் அவன் கழுத்தைப் பற்றியபடியே இருந்தன.

பப்ரூ கூறியதுபோலவே அவ்விரு பகைவர்களும் ஒருங்கே இவ்வுலகை நீத்துச் சென்றனர். சாமுவும் அதிரூபனும் வேறு ஜன்மத்தை அடைந்

தார்கள். பப்ரூவோ நான் கதை ஆரம்பத்தில் கூறியதுபோல் தான் செய்த பாபத்தின் பலனாக ஓர் ஒட்டகமாகப் பிறந்தான்.

2/1.866

## 22

இவ்வாறு சந்திரமௌளியான பரமேசுவரர் கதை கூறி முடித்தார். சிறிது பொறுத்துத் தேவியானவள் மிருதுவான குரலில், "ஐயோ பாவம்! மானிடப்பெண்கள் துஷ்டர்களான காதலர்களிடமிருந்து எவ்வளவு தீங்கையும் கஷ்டத்தையும் அனுபவிக்கிறார்கள்! அவ்விரு கொடியவர்களுக்கும் பதில் செய்ததற்காகப் பப்ரூவையும் மன்னித்துக் கொண்டாடவேண்டுமேயன்றி இவ்வாறு ஒட்டகத்தின் ஜன்மத்தை அடையும்படி தண்டிப்பது நியாயமல்லவென்றே எனக்குத் தோன்றுகிறது" என்றாள்.

உமாதேவியை அன்புடன் நோக்கிச் சிவபெருமான் கூறலானார்: "ஹைமவதீ, உலகம் தெரியாமல் ஒருவருக்கு நேர்ந்த துர்க்கதியை நினைத்து வருத்தமும் இரக்கமும் உற்று நீயும் மற்றெல்லா ஸ்திரீகளையும் போலத்தான் பேசுகிறாய். அது உனக்கு மிகவும் அழகையும் சிறப்பையுமே அளிக்கின்றது. ஆயினும் நீ நினைப்பது தவறு. முற்பிறவியில் செய்த தீவினைகளின் பலனைப் பப்ரூ அனுபவித்தான். அது உனக்கு எப்படித் தெரியும்? அதனுடன் ஹரிணி கூறாமல் இருக்கும்பொழுதே அவன் அவளுக்கு இழைக்கப்பட்ட தீங்கிற்குப் பதில் பழிவாங்குவதென்று கிளம்பினானல்லவா? அவ்வாறு செய்வதற்கு அவனுக்கு என்ன அதிகாரம்? அவன் செய்ததற்குமேல் இன்னும் அதிக பயங்கரமான தண்டனை அவர்கள் பெற இருந்தார்கள். அதை அவன் அறியவில்லை. ஹரிணிக்கு நேர்ந்த தீங்கிற்குப் பழிவாங்குவதை எல்லாம் வல்ல இறைவன் கவனித்துக்கொள்வானென்று அவன் பேசாமல் இருக்கவேண்டியதல்லவா? மனிதர்கள் இயற்றும் துஷ்கருமங்கள் நிழல்போல் ஒவ்வொரு பிறவியிலும் அவர்களைப் பின்தொடர்ந்து அவைகளின் பலனை அவர்கள் அனுபவிக்கும்படி செய்கின்றன. அப்பொழுதுதான் அவர்கள் செய்த பாபங்களுக்குப் பிராயச்சித்தம் ஏற்படுகின்றது. இவ்வாறு கணக்கற்ற ஜன்மங்கள் எடுத்து அனுபவித்தபிறகு கடைசியில் அவர்களுக்கு விமோசனம் உண்டாகிறது. இதைக்காட்டிலும் நியாயமாயும் தகுந்ததாயும் பயங்கரமானதாயுமுள்ள தண்டனை மனிதர்களுக்குப் பிறர் அளிக்கமுடியுமா?"

* * *

இவ்வாறு கூறிவிட்டுப் பரமேசுவரர் தம் தேவியைக் கைகளில் ஏந்தியவாறு அவ்விடத்தை விட்டு எழுந்தார். இருவரும் தம் இருப்பிடமாகிய கைலையை நோக்கி மேகம்போல் வானத்தில் மிதந்து சென்றனர். அந்த ஒட்டகத்தின் எலும்புக்குவியல் மட்டும் மணலில் அப்படியே கிடந்தது.

சிறிது நேரத்திற்கெல்லாம் ஆகாயத்தில் சந்திரன் உதித்தான்; "உன்னுடைய கிரணங்களின் உதவியால் நான் இன்னும் எவ்வளவு வெளுப்பாக

இருக்கிறேன், பார்'' என்று கூறுவதுபோல் அவ்விருண்ட பூமியினின்றும் அந்த எலும்புக்குவியல் சிரித்தவண்ணம் அச்சந்திரனை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்தது; அது தன்னுடைய பிரதிபிம்பமோவென்று அதனை நோக்கிச் சந்திரன் திகைப்பது போல் தோன்றிற்று.

இரவில் காற்றுக் கிளம்பி, ஆகாயத்திலிருந்த மேகங்களைச் சிதற அடிப்பதுபோல் மணலை வாரி இறைத்து அவ்வெலும்புக்குவியலை மணலுக்குள் மூழ்கடித்துவிட்டது, அக்காற்று வீலென்று சுழன்று சுழன்று அடித்து ஓயும்போது அப்பாலைவனத்தில் பலியிடப் பெற்றவர்களுக்காக உலகமே வாய்விட்டு வருந்துவதுபோல் தோன்றிற்று.

முற்றிற்று



# ரானடேயின் பெருந்தன்மை

எஸ். ஆர். வேங்கடராமன், பி. ஏ., பி. எல்.

இந்தியாவில் ராஜப்பிரதிநிதி வேலைபார்த்தவருள் ரிப்பன் பிரபு மிகவும் பிரசித்தி பெற்றவர். உண்மையிலேயே அவர் ஒரு பெரியவர். நல்ல உயர்ந்த லக்ஷியங்களும் பரந்த நோக்கமும் உதார மனமும் படைத்தவர். இந்தியர்களிடத்து அதிக அன்பும் கருணையும் வாய்ந்தவர். மற்றெல்லா நாடுகளிலும் அந்த அந்த நாட்டார், எப்படித் தம் தேசநடவடிக்கைகளைத் தாமே மேற்கொண்டு பொறுப்புடன் நடத்தி வருகின்றார்களோ அம்மாதிரியே இந்தியாவிலும் இந்தியர்கள் நாட்டின் வியவகாரங்களை நடத்த வேண்டும் என்ற எண்ணத்திற்குத் தம் முழு ஆதரவையும் ரிப்பன் பிரபு கொடுத்தார். அவர் 1880 முதல் 1886-ஆம் வருஷம் வரை இந்தியாவில் ராஜப்பிரதிநிதி வேலை பார்த்தார். அந்தச் சமயத்தில் அவர் தேச நலத்தை வளர்க்கும் பல சீர்திருத்தங்களைச் செய்தார்; சட்டங்களையும் உண்டாக்கினர். நாட்டில் ஸ்தல சுய ஆட்சியை ஏற்படுத்தியது ரிப்பன் பிரபுவே. முனிஸிபாலிடிகள், ஜில்லாபோர்டுகள் இவற்றைப் பொதுஜனங்கள் சரியாக நடத்தினால் அரசியல் ஸ்தாபனங்களில் பதவி வகித்துத் திறமையாகத் தம் கடமைகளைச் செய்வதற்கு இந்தியர்களுக்கு வேண்டிய பழக்கம், அனுபவம், அறிவு, ஆற்றல் இவை ஏற்படும் என்று ரிப்பன் பிரபு எண்ணி இந்த ஸ்தல சுய ஆட்சிச் சட்டத்தை ஏற்படுத்தினர். ரிப்பன் பிரபுவின் கீர்த்திக்கு இந்தச் சட்டமே காரணம். அதனால் அவர் இந்தியர்களின் நன்றியறிதலுக்குப் பாத்திரமானர். ராஜப்பிரதிநிதி வேலைபார்த்து அவர் இந்தியாவைவிட்டு இங்கிலாந்துக்குச் சென்றபோது, இந்தியாவில் பல பாகங்களிலும் அவர் செய்த அரிய ஸேவையை எண்ணிப் பல இந்தியத் தலைவர்கள் கூட்டங்களைக் கூட்டி, அவற்றில் ரிப்பன் பிரபுவின் ஆட்சியைப்பற்றிப் புகழ்ந்து பேசினர்கள்.

சென்னையில் இருப்பவர்களுக்கு ரிப்பன் பிரபுவின் பெயரை ஞாபகமூட்ட வேண்டியதில்லை. நமது நகர பரிபாலனசபைக் கட்டிடத்திற்கு ரிப்பன் பெயர் இடப்பட்டிருக்கிறது. இதோடு மிகவும் வேலைப்பாடமைந்த ஓர் அழகிய சிலையும் சென்னையில் இருக்கிறது. அந்தச் சிலை சென்ற பத்துப் பதினைந்து வருஷங்களுக்குள் பட்டபாடு எல்லோருக்கும் தெரியும். சிலையைச் செய்து முதலில் மவுண்டு ரோட்டில், திருவல்லிக்கேணி ரோடு, எல்லிஸ் ரோடு, ஹாரிஸ் ரோடு, மவுண்டு ரோடு, இந்த நான்கு ரஸ்தாக்களும் சேரும் சந்தியில் ரிப்பன் பிரபுவை இழுத்து விட்டார்கள். பிறகு சில வருஷங்களுக்கு முன்புதான் அந்தச் சந்தியிலிருந்து மறுபடியும் கிளப்பி மவுண்ட்ரோட்டில் சற்று மேற்கே தள்ளிப் போஸாட்டோ ஹோட்டலுக்கு முன்பாக நிறுத்தினர்கள். இம்மாதிரி சந்தியில் இழுத்து விடுகிறதைப் பார்த்த ரிப்பன் பிரபுவுக்கு இந்த மவுண்ட் ரோட்டைவிட்டு நிம்மதியான ஓர் இடத்துக்குப் போய்விடவேண்டுமென்று தோன்றிற்று; இப்போது அவர் தம் பெயருள்ள, சென்னை நகரபரிபாலன சபையான ரிப்பன் கட்டிடத் தோட்டத்திற்குப் போய்விட்டார்,

ரிப்பன் பிரபு ஏற்படுத்திய ஸ்தல சுய ஆட்சிச் சட்டத்தின்படி நம் நாடெங்கும் முனிஸிபாலிடிகள் ஏற்பட்டன. அவ்விதமே மஹாராஷ்டிர தேசத்திலுள்ள பூனா நகரிலும் ஒரு நகரபரிபாலன சபையை ஏற்படுத்த முயற்சிகள் நடந்தன. அதற்கு அங்கத்தினர்களை எப்படித் தெரிந்தெடுப்பது என்ற விஷயத்தைப்பற்றிப் பூனாவில் இரண்டு கக்ஷிகள் ஏற்பட்டன. ஒரு கக்ஷியினர் நகரசபை அங்கத்தினர்களை அரசாங்கத்தாரே நியமனம் செய்யவேண்டும் என்றார்கள். வேறு கக்ஷியினர் நகரவாசிகளே தெரிந்தெடுக்கவேண்டுமென்றார்கள். முதல் கக்ஷியைக் குண்டே (Kunte) என்ற ஒரு பிரபல பூனா நகரவாசி ஆதரித்தார். அவர் அரசாங்க உத்தியோகஸ்தர் அல்லரெனினும், முதல் கக்ஷிக்குத் தலைவராக விளங்கியது விந்தையே. அவர் நன்றாகப் பேசும் வல்லமையுடையவராம். பூனா நகரம் முழுதும் அவர் கூட்டங்களைக் கூட்டி இது விஷயமாய்ப் பேசிவந்தார். ரிப்பன் பிரபுவின் ஸ்தல சுய ஆட்சிச் சட்டத்தின் கீழ்ப் பூனாவில் முதல்முதலாக நகரசபை ஏற்படப் போவதால், அதைச் சிறப்பாய் நடத்தவேண்டுமென்றும், அப்படிச் சிறப்பாய் நடத்துவதற்கு அரசாங்கத்தாரே நகரசபைக்கு அங்கத்தினர்களை நியமனம் செய்யவேண்டுமென்றும், ஜனங்களே தெரிந்தெடுத்தால் மனஸ்தாபமும் கக்ஷிப் பிரதி கக்ஷியும் ஏற்படுமென்றும் குண்டே தம் கக்ஷிக்கு அனுகூலமாகப் பிரசாரம் செய்துவந்தார்.



பழைய ரௌண்ட் டாணாவும்
ரிப்பன் சிலையும்

அங்கத்தினர்களை நகரவாசிகளே தெரிந்தெடுக்கவேண்டுமென்பது இரண்டாவது கக்ஷியின் கொள்கை. இதற்குத் தலைமை வகித்து உழைத்துவந்தவர் மகாதேவ் கோவிந்த ரானடே என்பவர். இவர் அக்காலத்தில் நியாயாதிபதி வேலையில் இருந்தார். அரசாங்க ஊழியர். தம் ஓய்வு நேரங்களில் ஜனநாயகம் நிறைந்த நகரசபையைப் பூனாவில் ஏற்படுத்தவேண்டுமென்று பிரசாரம் செய்தார். ரானடே பாரியான தேகமுடையவர்; உயரமானவர்; கம்பீரமான தோற்றமுடையவர். எளிய நடையுடை பாவனை உடையவர்; அதிக படிப்பாளி; மேதாவி. சிறுவயதில் அதிகமாகப் படித்ததில் கண் திருஷ்டி குறைந்து எப்போதும் ஒரு கண்ணிலிருந்து நீர் வடிந்துகொண்டேயிருக்கும். அந்த நிலைமையிலும், புத்தகங்களையும் பத்திரிகைகளையும் கடிதங்களையும், பிறர் படிக்கக் கேட்டு விஷயங்களை அறிவார். அவர் தம் வருமானத்தில் செம்பாதிக்கு மேலாகவே ஏழைப்பையன்களுக்கும் பொதுநல ஊழியத்திற்கும் செலவுசெய்வார்.

ரானடே அங்கத்தினர்களை நகரவாசிகளே தெரிந்தெடுக்கவேண்டுமென்று பிரசாரம் செய்துவந்தார். நம் நாட்டுமக்கள் அரசாங்கத்தில் இன்னும் அதிகமான பங்கு எடுத்துக்கொண்டால்தான் நாடு முன்னேற்றமடையும்; நாட்டிலுள்ள துவேஷம், வகுப்புவாதம் இவை ஒழியும். ஒற்றுமை ஏற்படும். இவற்றையெல்லாம் வளர்ப்பது ஜனநாயக அரசாங்கம். ஜனங்களின் பிரதிநிதியென்பவன் எல்லாரிடத்தும் பழகவேண்டும். அவர்களது அன்பையும் நம்பிக்கையையும் பெறவேண்டும். அவர்களது குறையை அறியவேண்டும். இந்தக் குணங்களை உண்டாக்குவது

பிரதிநிதித்துவம் நிறைந்த அரசியல் முறைதான். அந்த முறையை இப்போது ஸ்தல ஸ்தாபனங்களில் மேற்கொள்ளும் சமயம் வாய்த்திருக்கிறது. ஜனங்களுக்கு நகரபரி பாலன சபையில் ஒரு வசதி ஏற்பட்டிருக்கிறது. அதன் முழுப்பொறுப்பும் ஜனங்களுடையதே. அதைச் சரியாய் நடத்தினால் மக்களின் ஆற்றலும் அறிவும் பெருகும். ஜனங்களுக்கும் நாட்டிற்கும் நன்மையேற்படும். ஆகையால் மக்களே நகரசபைக்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கவேண்டுமென்று ரானடே பிரசாரம் செய்துவந்தார்.

எதிர்க் கக்ஷிக்குத் தலைமை வகித்து ரானடே தமக்கு விரோதமாய்ப் பிரசாரம் செய்துவருகிறார் என்பதை அறிந்த குண்டேக்கு ரானடேயின்மீது அதிகமான துவேஷம் உண்டானது. ஆகவே குண்டே, பூனமுழுதும் ஆங்காங்குக் கூட்டங்களைக் கூட்டி, ரானடேயையும் அவரது கக்ஷியின் கொள்கையையும் கண்டித்துப் பேசினார். ரானடேயின் விசேஷகுணம் ஒன்று என்னவென்றால், தம்மை யார் யார் என்ன குறை கூறுகிறார்கள், தம்மிடத்தில் என்ன குணங்களைக் காண்கின்றனர் என்னும் இவற்றை அறிந்துகொள்வதில் அதிக ஊக்கம். தம்மைப்பற்றிப் புகழ்ச்சியாய்ப் பேசுபவர்களின் பேச்சைக் கவனிக்கவேமாட்டாராம். ஆகவே குண்டே, தம்மை நிந்தித்துப் பேசி வருவதை ரானடே அறிந்தார். அடுத்த தடவை குண்டே பூனவில் ஓரிடத்தில் பேசுவதாக ஏற்பாடாயிருந்ததை அறிந்து ரானடே அங்கே போவதாகத் தீர்மானித்தார். அந்தக் கூட்டத்திற்கு ஏராளமான ஜனங்கள் வந்திருந்தனர். அதற்கு ரானடேயின் சிஷ்யரான கோபாலகிருஷ்ண கோகலேயும் சென்றிருந்தார். இடமில்லாமையால், கோகலே வாசற்படியண்டை உட்கார்ந்தார். இந்தக் கூட்டத்திற்கு ரானடேயும் சிறிது நேரங்கழித்து வந்து கோகலேயின் சமீபத்தில் உட்கார்ந்தார்.

அதுவரையில் கூட்டத்தை நேரே பார்த்துப் பேசிக்கொண்டிருந்த குண்டே, ரானடேயைக் கூட்டத்தில் கண்டதும் தம் முதுகை ரானடேயின் பக்கம் திருப்பி, சுவரைப் பார்த்துப் பேசிவிட்டுத் தம் இடத்தில் அமர்ந்தார். ஒரு சிறந்த தேசபக்தரென்றும், மஹாராஷ்டிரத்திலேயே பொதுவாழ்க்கைக்கு விதை நட்டவரென்றும், பெரிய அரசியல் பொருளாதார வாதியென்றும், சமூகச் சீர்திருத்தக்காரரென்றும், அப்பழுக்கற்ற வாழ்க்கையுடையவரென்றும் புகழ் எடுத்த மகாதேவ கோவிந்த ரானடேக்கு ஏற்பட்ட மரியாதையைப் பாருங்கள்! ரானடேயைப் போலல்லாத சிறிய மனிதர்கள் என்ன செய்திருப்பார்கள்? "இந்தக் குண்டேப் பயலுக்கு இவ்வளவாயிற்று? இருக்கட்டும்; இவனை இதோ பார், சட்னி பண்ணுகிறேன். இது பண்ணுகிறேன், அது பண்ணுகிறேன் ஹா ஹ" என்று நம்முள் சிலர் எண்ணியிருக்கலாம். ஆயினும் ரானடே என்ன செய்தார் தெரியுமா? குண்டே பேச்சை நிறுத்தியதும், ரானடே மெதுவாகத் தம்மிடம் விட்டு எழுந்து குண்டே உட்கார்ந்திருந்த இடத்திற்குச் சென்று அவர் பக்கத்தில் உட்கார்ந்தார். உடனே குண்டேயைப் பார்க்க வேண்டுமே! குண்டேயின் மூஞ்சியில் எள்ளும் கொள்ளும் வெடித்தன. அவர் கண் சிவந்தது. முகம் கடுகடுத்தது. உதடு துடித்தது. ரானடேயை என்ன சொல்வாரோ, செய்வாரோவென்று யாவரும் பயந்தனர். ஆனால் குண்டே உடனே தம்மிடத்தை விட்டு எழுந்து வீதியில் காத்திருந்த தம் வண்டியில் ஏறச்சென்றார். ரானடேயும் முகத்தில் ஒருவிதமான கோபக் குறியுமில்லாது சாந்தமுகத்துடன் குண்டேயைப் பின்தொடர்ந்தார். குண்டேயைப் பார்த்து, "குண்டே சாகேப், வாரும், நாம் இருவரும் என் வண்டியிலே போகலாம்" என்றார் ரானடே. குண்டே திரும்பி ரானடேயைப் பார்த்தார். 'நம்மைச் சமாதானப்படுத்தத்தான் ரானடே கூப்பிடுகிறார். இவரோடு சமாதானம் செய்து

கொள்ளக்கூடாது' என்று எண்ணிய குண்டே வெகு கோபத்துடன், "நான் உம்முடைய வண்டியில் வரத் தயாராயில்லை" என்று சொல்லிவிட்டுத் தம் வண்டியில் ஏறினார். அதற்கு ரானடே, "ரொம்ப சரி, தாங்கள் என் வண்டியில் வரத் தயாராயில்லாவிட்டால் போகிறது. நானே உம்முடைய வண்டியில் வருகிறேன். உம்முடன் பேசி அதிக நாளாயிற்று. பேசவேண்டியது எவ்வளவோ இருக்கிறது" என்று சொல்லித் தாமே குண்டேயினுடைய வண்டியில் உட்கார்ந்து கொண்டாராம். குண்டேக்கு இன்னது செய்வதென்று புரியவில்லை.

குண்டேயும் ரானடேயும் சுமார் இரண்டுமணிநேரம் பேசிக்கொண்டே வண்டியில் சவாரிசெய்துவிட்டு வீடு வந்தார்களாம். வழியில் இருவரும் என்ன பேசினார்களோ தெரியாது. மறுநாள் குண்டே ரானடே கக்ஷியில் சேர்ந்துகொண்டதுதான் தெரியும். அதன்பிறகு இருவருக்கும் நேசம் ஏற்பட்டது.






இந்தியாவில் கோஹினூர்போன்ற மருந்து


# கோவலன்—கண்ணகி

('சிலப்பதிகார'க் கதை)

ஏ. எஸ். பஞ்சாபகேச ஐயர், எம். ஏ., ஐ. ஸி. எஸ்.
ஆங்கிலத்தில் ஆக்கியதைத் தழுவி

தி. அ. சாமிநாத ஐயர்
தமிழில் எழுதியது.
விலை ரூ. 1—0—0

**பி. வரதாச்சாரி அண்டு கம்பெனி**
8, லிங்க செட்டித் தெரு,
சென்னை.




*Retail Branch:*

**285, China Bazar Road.**

---

## கலைமகள் புதிய லோகல் ஏஜெண்டுகள்

1. ஸ்ரீ கே. எம். முத்தையா,
   மோகனூர் (கரூர்வழி)
2. ஸ்ரீ எ. வேங்கடராமையர்,
   கொட்டூர், பேரளம்
3. ஸ்ரீ கே. வி. ஸங்கபதி நாயுடு,
   நியூஸ் ஏஜெண்டு, கரூர்
4. ஸ்ரீ டி. ஸதாசிவம் பிள்ளை,
   நியூஸ் ஏஜெண்டு,
   கோடவாசல்
   (தஞ்சாவூர் ஜில்லா)

இவர்களுக்குப் புதிய சந்தாதார் சேர்க்கவும் பழைய சந்தா வசூல் செய்யவும் அதிகாரம் அளித்துள்ளோம்.

மானேஜர், கலைமகள், மயிலாப்பூர்

---

மகத்தான

## சரித்திரப் படம்

ஒருவன் ராஜ விசுவாசி
இன்னொருவன் நாட்டுக்
கும் மன்னனுக்கும்
துரோகி!

இவ்விருவரும் தாங்கள் மேற்கொண்ட காரியத்தில் எப்படி மோதிக் கொள்கிறார்கள் என்பதைப் பாருங்கள்!

வாணி பிக்சர்ஸாரின் சரித்திரப் படம்



చంద్రహాస

## சந்திரஹாஸா

நடிகர்கள்:

| | |
|---|---|
| மாதவபெட்டி | புலிப்பட்டி |
| | ஜி. என். சாமி |
| சூரியகுமாரி | |
| | கவி: துமக வேங் |
| பால ஸரஸ்வதி | கடராமையா |

விவரங்களுக்கு

**வாணி பிக்சர்ஸ்**

11, எட்வர்ட் எலியட்ஸ் ரோட்,
மயிலாப்பூர், சென்னை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
26 JUL 1941
MADRAS

# லட்சியச் சிதைவு

ரா. சு. கிருஷ்ணஸ்வாமி

## 1

இந்தப் பிரவிருத்தியினால் வரும் பணத்தைக் கொண்டு கோட்டை கட்ட விரும்பவில்லை சாரதா. இதில் பணம் சம்பாதித்து வாழ்வைக் கழிக்க வேண்டிய அவசியமும் அவளுக்கு இல்லை. அவள் தந்தை அவளுக்குப் போதிய அளவிற்கு மேலாகவே சொத்தும் சுதந்திரமும் அளித்திருந்தார்.

சாரதா பணக்காரி மட்டுமல்ல; நன்கு படித்தவளாகவும் இருந்தாள். தற்கால மோஸ்தரிலே படித்த பெண்ணாதலால் அதற்கு ஏற்றபடி கல்யாணம் வேண்டாம் என்று தீர்மானித்துவிட்டாள்.

இதற்கு அவளைப் பிடித்திருந்த நாகரிகப் பைத்தியம் மட்டும் காரணமன்று. லட்சியப்பிசாசு வேறு அவளைப் பற்றிக்கொண்டு நன்றாக ஆட்டிவைத்தது. ஸ்திரீகள் சுதந்திரம், சம உரிமை, ஸ்திரீ சமூக முன்னேற்றம்—இவை போன்ற விஷயங்களெல்லாம் தன் கவனத்தில் பதிந்திருந்தபோதிலும் சாரதாவின் மனோலோகத்திலே சர்வாதிகாரம் நடத்திய விஷயம் இதுதான்.

அந்தக் காலத்தில் பத்திரிகைகளில் அடிபட்ட சர்ச்சைகளிலெல்லாம் அலாதியானதும் ருசிகரமானதுமான செய்தி ஒன்று எல்லோரது வம்புப் பேச்சையும் தன் பக்கமே கவர்ந்திருந்தது. 'குடும்பஸ்திரீகள் சினிமாவில் நடிக்கலாமா, கூடாதா?' என்ற பிரச்னை ஸ்திரீசமூகத்தில், முக்கியமாகக் கலாசாலையினின்றும் வெளியேறிய நாகரிக நங்கையர் சங்கங்களில் ஒரு புரட்சி உண்டுபண்ணிற்று என்றே சொல்லவேண்டும்.

நடுத்தெரு அம்மாமிகள் கழகம் அதை எதிர்த்து ஒரு தீர்மானம் நிறைவேற்றியதுதான் தாமதம்; ஊரிலுள்ள நங்கையர் நாகரிக்க் குழாமும், கலாசாலைக் கன்னியர் கழகமும், சுயமரியாதைப் பெண்கள் குழுவும், சுதந்திர மங்கையர் கூட்டமும் பிரச்னையை ஆதரித்து ஆர்ப்பாட்டங்கள் செய்தன. இன்னும் மூலை முடுக்குகளில் பெயர் தெரியாது பதுங்கிக் கிடந்த பல கும்பல்களும் தங்கள் தங்கள் அபிப்பிராயங்களை வெளியிட்டன.

இவற்றாலெல்லாம் யாதொரு பலனும் ஏற்படவில்லை. ஆனால் களங்கமற்ற நீலவானிலே திடீரென மேகங்கள் சூழ்ந்து மின்னல் நாட்டியமாடக் கர்ஜிக்கும் இடியோசை போல, விசேஷமற்றுச் சென்ற உலக அரங்கலும் ஒரு செய்தி திடீரெனப் பரவி மக்களைக் கலங்க அடித்தது.

'சாரதா சினிமாவில் சேர்ந்துவிட்டாள்', 'உன்னத குலரத்தினமாகிய சாரதா வெள்ளித்திரையில் விரைவினில் மின்னுவாள்' என்பன போன்ற விளம்பரங்கள் சமூகத்தையே கலக்கிவிட்டன என்றுதான் சொல்ல வேண்டும்.

சாரதா, லட்சியப் பித்துப் பிடித்தலைந்த உயர்குடும்ப நாகரிக நாரீமணி; தன் சுதந்திரப் போக்கிலே என்னதான் செய்வாள் என்று சொல்லமுடியாதெனப் பேசிவந்தவர்களுக்குக்கூட இது ஆச்சரியமாகத்தான் இருந்தது. அவர்கள் முற்றும் எதிர்பாராத விஷயம் அவள் சினிமாவில் நடிப்பாள் என்பது.

அம்மாமிகள் மூஞ்சியைச் சுளித்து, 'காலம் போகிற போக்கு!' என முத்தாய்ப்பு வைத்தனர். ஊர்ப்பெரியவர்களோ 'உதவாக்கரை' எனக் கையைக் கழுவினர். சாரதா விவாகம் செய்துகொள்வதில்லை என்று கூறிவிட்டாலும், நெஞ்சம் கலங்காமல் திரிந்த சில வாலிபர்கள் இச்செய்தியைக் கேட்டு, 'லட்சியமாவது மண்ணாங்கட்டியாவது' என மனமிடிந்து நழுவினர்.

பிறருடைய அபிப்பிராயங்களைச் சட்டை செய்பவளல்ல சாரதா. அவளுக்குத் தனது லட்சியமே குறி. இப்பொழுதும் தன் மனம் போன போக்கிலேயே நடந்து வந்தாள்.

* * * *

சாரதா சினிமா வானில் வெள்ளித்திரையில் நக்ஷத்திரமாகப் பிரகாசிக்கத் தயாராக இருந்தாள் என்பதை அறிந்து அவள் விருப்பத்தை நிறைவேற்றிச் சந்தர்ப்பம் அளித்த பெருமை 'புதுமைப் பிக்சர்ஸா'ரையே சேர வேண்டுமென்றாலும் அதற்கு முக்கிய காரணஸ்தர் டைரக்டர் ராகவன் அவர்களே.

டைரக்டர் ராகவன் சினிமாக் கலைக்காகவே அரும் பாடு படுபவர். அவர் சினிமாத்தொழிலைக் கலைநோக்குடன் மேற்கொண்டவர். அவருடைய சிருஷ்டிகள் எவ்வளவோ வெற்றிகரமாக விளங்கினும் ராகவன் மகிழ்வடையவில்லை. "இன்னும் மக்கள் சினிமா உலகை இழிவாக எண்ணுகின்றனரே. இதைப் போக்க வழியில்லையா!" என ஏங்கினார்.

'இல்லாமலென்ன! குடும்பஸ்திரீகளும், உயர்குலத்தவர்களும் நடிக்க ஆரம்பித்தால் இந்த மட்டமான அபிப்பிராயம் மறையாமல் போகுமா?' என அவரது அந்தராத்மா சொல்லியது.

அதன் எதிரொலியே போலத் தொனித்தது 'மங்கையர் கழக' ஆண்டு விழாவிலே நங்கையரின் லட்சியம்பற்றிப் பறையறைந்த சாரதா தேவியின் சொல்மாரி. பத்திரிகையில் சாரதாவின் பிரசங்கத்தைப் படித்த டைரக்டர் ராகவன் ஒரு துள்ளுத் துள்ளினார். தாம் கனவுகண்டது உண்மையிலே பலித்துவிடும் போலிருக்கிறதே என உவகை கொண்டார்.

அவரது பகீரதப் பிரயத்தனங்களின் பலனாகச் சினிமா வானிலே, ஈடு இணையற்ற ஒரு வெள்ளி முளைப்பு எழுந்தது. 'இது என்றும் காணவல்ல

சாதாரண வெள்ளியன்று; வானிலே திடீரெனத் தோன்றிப் பிரகாசிக்கும் வால் நட்சத்திரம்' என்றே நம்பினார் டைரக்டர் ராகவன்.

உயர்குடும்ப மங்கை சாரதாதேவி நடிக்கும் 'லட்சியக் கனவு' என்ற படத்திற்குப் பிரமாதமான புகழ் மாலைகளும், விளம்பரங்களும் படம் வெளி வருமுன்பே அடிபட்டன. எல்லோரும் சாரதாவின் நடிப்பைப் பற்றிப் பேசியும் எழுதியும் வந்தனர்.

உண்மையிலேயே சாரதா அதிக சிரத்தையுடன் நடித்து வந்தாள். அவள் புகழும் பெயரும் சம்பாதிக்க எண்ணி நடிக்கவில்லை. கலையில், கலைக்காகவே, கலை ஆர்வத்துடனேயே தன் முயற்சிகளைச் செய்ய லானாள்.

## 2

அன்று......

'லட்சியக் கனவு' வெற்றி முழக்குடன் வெள்ளித் திரையில் விஜயம் செய்யும் நன்னாள்!

தியேட்டரிலே கூட்டத்திற்குக் கேட்பானேன்? டிக்கெட் வாங்குவதற் குள் எவ்வளவோ திண்டாட்டம்.

இன்னும் ஒரு விஷயம் ரசிகர்களுக்குத் தெரியாது. தெரிந்தால் அதன் விளைவு என்னவாகும் என்று சொல்ல முடியுமா? சாரதாவே அந்தப் 'படம் பார்க்க'க் கொட்டகைக்கு வந்திருந்தாள். ஆம்; படம் பார்க்கத் தான் வந்தாளே தவிரப் படவிளம்பரமாக அல்ல.

முதல் நாளன்றே அவள் படம் பார்க்க வந்ததில் ஒரு விசேஷம் உண்டு. படத்தைப் பார்த்து ஜனங்கள் தன்னைப் பற்றியும் என்ன பேசிக் கொள்கிறார்கள் என்று அறியவேண்டுமென்னும் ஆவல் அவள் மனத்திலே வேலை செய்தது. பொதுஜன அபிப்பிராயத்தை அளந்து காட்டும் 'தெர்மா மீட்டர்' தரை மகாஜனங்களே என்பதைச் சாரதா அறியாதவளல்ல. அந்தத் தியேட்டரிலே அதற்குச் சரியான வசதி உண்டு. அங்கே ஸ்திரீகளுக்குச் சலுகை காட்டும் முறையில் தரைக்குப் பதிலாகப் பெஞ்சு களே போட்டிருந்தார்கள். அதன் பக்கத்தில் சற்றுப் பள்ளத்திலே ஆண் கள் அமரும் தரை அமைக்கப்பட்டிருந்தது. கீழே தரையில் என்ன பேசி னாலும், என்ன செய்தாலும், அது பெண்கள் கவனத்தில் படாமற் போகாது.

ஆகவே சாரதா அதிக டாம்பீகமின்றிச் சாதாரண உடையிலேயே ஸ்திரீகள் பெஞ்சுப் பகுதியிலே அமர்ந்திருந்தாள்.

படம் ரஸிகர்களது மனத்தைக் கவர்ந்தது. எல்லா அம்சங்களிலும் 'லட்சியக் கனவு' ஒரு சிறந்த படமாக விளங்கியது. எல்லோரும் உயர் தரமாக நடித்திருந்தனர். எதிர்பார்த்ததை விட அற்புதமாக ஜமாய்த்

திருந்தாள் சாரதா. அவளது நடிப்புத் திறமையைப்பற்றிப் பேசாதவர்களே இல்லை.

* * * *

கொட்டகையில் பரவிய இருளை ஓட்டியடித்து, மகிழ்வுடன் பல்லைக் காட்டின இடைவேளையின் மின்சார விளக்குகள்.

சாரதா தரையை நோக்கினாள்.

பலர் வெளியே எழுந்து போவதும் வருவதுமாக இருந்தனர். தரையில் இருந்தவர்களில் சிலர் கொட்டாவி விட்டனர். சிலர் பேசினர்.

"உம்; பரவாயில்லை" என்ற குரல் கொட்டகையில் மிதக்கும் சுருட்டுப் புகையுடன் கலந்து வந்தது.

"எது எப்படிப் போனாலும் குட்டி பரவால்லேடா" என்றான் ஒரு 'ரஸிகன்.'

"ஆமடா; புதுசா ஒரு குட்டி ஆடுறாளே அவ லட்டுன்னா லட்டுத் தான்" எனப் பல்லைக் காட்டினான், தன் வாயிலிருந்த சுருட்டை எடுத்துக் கையிலேந்திய புண்ணியவான்.

சாரதாவின் மனம் திடுக்கிட்டது. அர்த்தமற்ற கவைரம் ஊசலாடியது. அலைபோல் புரண்ட அவளது பார்வை வேறு இருவர்மீது பாய்ந்தது. தம் அபிப்பிராயங்களைத் தயங்காமல் வெளியிடுவோர் தரைமகாஜனங்களே என்றாலும் அவர்கள் இவ்வளவு துணிச்சலாகப் பேசுவார்களென்று சாரதா எதிர்பார்க்கவில்லை.

ஒருவன் தன் பக்கத்தில் இருந்தவன் தோள்மீது கையைப் போட்டபடியே, கண்களைச் சிமிட்டிக்கொண்டு சொன்னான்: "அடே! அந்தச் சாரதா......அடடா, அவள் மூக்கும், முழியும், அவ கண்ணைச் சுழட்ற சுழட்டும்......"

இவ்வாறு வர்ணிக்கும் பொழுது விளக்குகள் அணைக்கப்பட்டன. மறுபடி இருள் பரவியது. அப்போது சாரதாவின் மனத்திலே சாந்தியைப் புகுத்தியதுபோல் இருந்தது. ஆனாலும் அவளுள்ளேயே ஓர் எரிமலை அக்கினிக் குழம்பைக் கக்கும் நிலையில் கொதிப்படைந்திருப்பதை உணர்ந்தாள்.

சாரதா பிறருடைய அபிப்பிராயங்களை அலட்சியம் செய்யும் குணமுள்ளவள்தான். ஆயினும் இந்தப் பாணங்களை அவளால் பொறுக்கமுடியவில்லை. நாகரிகம் அவளை ஓரளவிற்கு 'ஆண்மை' அங்கி அணிந்தவளாக மாற்றிவிட்ட போதிலும் அவளது பெண்மையை முற்றும் அழித்துவிடவில்லை. கலாசாலைப் படிப்பாலும் கலங்காத திண்மை பெற்ற பெண் உணர்வு அவள் கேட்ட சொற்களால் கலங்கியது.

சாரதா தன்னையே நிந்தித்துக்கொண்டாள். 'வெட்டிச் சனியனை என் விலை கொடுத்து வாங்கினேம்?' என ஏங்கினாள். இன்றுதான் தனது

உண்மைத் தன்மையை உணர்ந்தாள். அதற்கு மேல் அங்கிருக்க அவளால் முடியவில்லை. எழுந்து வெளியே நடந்தாள்.

## 3

சாரதாதேவி தியேட்டரிலிருந்து வெளியே வருவதற்கும், வாசலில் வந்து நின்ற காரின் கதவைத் திறந்து டைரக்டர் ராகவன் இறங்குவதற்கும் சரியாக இருந்தது.

"ஹலோ, குட் ஈவ்னிங்!" என்று உல்லாசமாகக் கைகளை உயர்த்தி அழைத்த ராகவனைக் கண்டதும் சாரதாவின் கலக்கம் அதிகமாகிவிட்டது. அவள் ஒருவருக்கும் தெரியாமல் மறைந்து வீடு செல்லவே எண்ணினாள்.

தன் குறுக்கே வந்து விழுந்த சனியனைப் போல் அவ்வேளையில் தன்முன் நின்ற ராகவனைக் கண்டதும் அவள் மனம் அடைந்த வேதனை முகத்திலே பிரதிபலித்தது. கைகளை நெரித்தாள்.

டைரக்டர் சாரதாதேவியை இந்நிலையில் பார்ப்போமெனக் கனவிலும் கருதவில்லை. வெற்றியினால் உண்டான பெருமை யுணர்ச்சியோடு குதூகலம் பொங்க நிற்கும் ஒரு நடிகையைக் காணலாமென்றே அவர் மனப்பால் குடித்தார். தம் ஏமாற்றத்தைக் காட்டாமலே, "காரிலே ஏறிக்கொள்ளுங்களேன்; வீடுவரை கொண்டுவந்து விடுகிறேன்" என்றார்.

சாரதா அந்நிலையில் அவரது வேண்டுகோளை ஏற்கவா, மறுத்து விடவா என்று நிச்சயிக்கும் திறமின்றித் தயங்கினாலும் முடிவில் காரில் ஏறிக்கொண்டாள்.

டைரக்டர் தம் கடமையை உணர்ந்தவர் போல, தமது முயற்சியின் வெற்றி தொனிக்கும் குரலில், "என்ன தேவி, அடுத்த படம் எப்பொழுது ஆரம்பிக்கலாம்?" என்று கேட்டார்.

சாரதாவின் ஆத்திரமெல்லாம் சூடான வார்த்தைகளாகப் பொங்கிப் பாய்ந்தன.

"ஹூங்...படம்!...மனித உள்ளுணர்வையும், போராட்டங்களையும் உணராது புறநிலைகளையே பிடித்துக் காட்டும் படத்திற்குள்ள உணர்வுதான் உங்களுக்கும் இருக்கிறதா? நீங்கள் கலை, 'டெக்னிக்', அது, இது என்று விளங்காத பாஷையில் பிதற்றலாம். ஆனால் சமூகம் அவற்றை உணரவில்லை. சாதாரண மக்கள் உங்கள் அபார முயற்சிகளை அறிய முயல்வதில்லை. உன்னதக் கலையை ஏற்றுக் கொள்ளும் நிலையில் அவர்கள் மனம் பக்குவம் அடைந்துவிட்டதா? அவர்கள் கண்ணிலே நீரின்மேல் நிற்கும் தாமரைமலர் தென்படக் காணோம். பாசிதான் பளிச்சென அவர்கள் மனத்தில் பதிகின்றது.

"நானும் கோட்டைகள் கட்டினேன். லட்சியக் கனவுகள் கண்டேன். வானத்துச் சந்திரனை எட்டிப்பிடித்துவிடலாம் என்றுதான் கிளம்பினேன். ஆனால் என் கைக்கு எட்டியதோ......"

சாரதாவின் பேச்சு முடிவதற்குள் வீட்டு வாசலில் கார் நின்றது. விர்ரென இறங்கிய அவள், சிதைந்த லட்சியத்திற்கு வணக்கம் செலுத்துபவள்போல், "டைரக்டர் ஸார், நமஸ்காரம். சினிமாவுக்கும் எனக்கும் இனி அவ்வளவுதான். போய் வாருங்கள்" என்று சொல்லி வீட்டினுள் மறைந்துவிட்டாள்.

டைரக்டர் ஒன்றும் விளங்காமல் 'டக்' என மோட்டார்க் கதவை ஆத்திரமாகச் சாத்தினார். அதைவிட ஆவேசமாக முணுமுணுத்தது அவரது வாய்: "சட்! இந்தப் பெண்களை நன்றாகவே தெரிந்துகொள்ள முடிகிறதில்லை. அவர்கள் குரங்குப் புத்தியையும் உணர முடிவதில்லை."



# சியாமளா

## கமலா பத்மநாபன்

### 1

சியாமளாவின் தலை தீபாவளிக்கு இன்னும் மூன்று தினங்களே இருந்தன. அவளுக்கு வயது பன்னிரண்டு. இன்னும் குழந்தையைப் போலவே இருந்தாள். வரப்போகும் தீபாவளிப் பண்டிகையைப் பற்றி எண்ணி எண்ணி அவளுடைய குழந்தை உள்ளம் மகிழ்ச்சியினால் துடித்தது. 'அவர் என்னுடன் என்ன பேசுவார்? தனிமையாகப் பேசச் சந்தர்ப்பம் கிடைக்குமோ? எனக்குக் கான்வென்டில் சொல்லிக்கொடுத்த கவிதைகளை எல்லாம் நான் அவருக்குச் சொல்லிக் காட்டப் போகிறேன். ஒருகால் நான் எதாவது தப்புச் சொல்லிவிட்டால் அவர் சிரிப்பாரோ என்னவோ?' என்று இவ்விதமாகப் பலவித யோசனைகள் செய்வதிலே அவள் மனம் ஆழ்ந்திருந்தது.

அன்று சாயங்காலம், சியாமளாவின் பெரியப்பா சதாசிவ ஐயர், வழக்கத்திற்கு விரோதமாய், ஆபீஸிலிருந்து நான்கு மணிக்கே வீட்டுக்கு வந்துவிட்டார். அதே சமயம் சியாமளாவும் கான்வென்டிலிருந்து வீட்டிற்குத் திரும்பி வந்தாள். காரிலிருந்து இறங்கிய தன் பெரியப்பாவைப் பார்த்து, "பெரியப்பா, இன்றைக்கு ஜவுளிக் கடைக்குப் போகவேண்டுமென்று சீக்கிரமாக வந்துவிட்டீர்களா?" என்று வினவினாள் மிக்க ஆவலுடன்.

அவள் கேட்டதற்குப் பதில் சொல்லாமல், சதாசிவ ஐயர், சியாமளாவை அணைத்துக்கொண்டு உள்ளே அழைத்துச் சென்று, "என் கண்ணே, அந்தப் பாவி உன் தலையில் பெரிய கல்லைத் தூக்கிப் போட்டுவிட்டானே! நான் என்ன செய்வேன்! என் வயிறு எறிகிறதே!" என்று கதறியவண்ணம் ஒரு நாற்காலியில் தொப்பென்று அயர்ந்து கண்ணீர்விடத் தொடங்கினார். சியாமளா ஒன்றும் விளங்காமல் திரு திரு என்று விழித்தாள். இதற்குள் உள்ளிருந்து வந்த சதாசிவ ஐயரின் ஸம்ஸாரம் பார்வதம், தன் கணவனின் நிலைமையைக் கண்டு மனம் பதைபதைத்து "என்ன, என்ன சமாசாரம்? யாருக்கு என்ன வந்துவிட்டது?" என்று கைகளைப் பிசைந்துகொண்டு திகிலுடன் கேட்டாள்.

"மாப்பிள்ளை நேற்று இரவு ஒரு மோட்டார் விபத்தில் அகப்பட்டு இறந்துவிட்டானாம். சம்பந்தி தந்தி அடித்திருக்கிறார். ஐயோ, என் கண்மணி சியாமளாவின் கதி என்ன?" என்று கூறிவிட்டு மறுபடியும் புலம்பத் தொடங்கினார்.

பார்வதமும் இந்தத் துக்க சமாசாரத்தைக் கேட்டு அழ ஆரம்பித்தாள். பிறகு ஸ்திரீ சுபாவப்படி, "ஐயோ! இவ்வளவு அதிர்ஷ்டஹீனமுடைய பெண்ணும் உண்டோ? பிறந்த இரண்டு வருஷத்திற்குள் தாய் தந்தையரை உருட்டி விட்டது! இப்பொழுது கணவனையே முழுங்கிவிட்டதே!" என்றாள்.

இதைக் கேட்டுச் சதாசிவ ஐயர் தம் பற்களை நற நற வென்று கடித்துப் பார்வதத்தை ஒரு முழி முழித்து, "போதும், உன் அசட்டுப் பேச்சை அத்துடன்

நிறுத்து. என் செல்வத்தைத் தூஷிக்காதே!'' என்று கூறிச் சியாமளாவை அன்புடன் தடவிக்கொடுத்தார்.

இதற்குள் விஷயங்களைத் தெளிவாக அறிந்துகொண்ட சியாமளா தன் தலையைத் தன் பெரியப்பாவின் மடியில் கவிழ்த்துக்கொண்டு அழத்தொடங்கினாள். பிறகு சிறிது நேரத்திற்கெல்லாம், ''பெரியப்பா, மாப்பிள்ளை செத்துப்போய்விட்டா ரென்று சொல்லுகிறாயே! அப்படியானால் இந்த வருஷம் நம் ஆத்தில் தீபாவளி கிடையாதா? நான் இனிமேல் பூ வைத்துக்கொள்ளக்கூடாதா? குங்குமம் இட்டுக்கொள்ளக் கூடாதா? எங்கள் ஸ்கூலில் ஆறாவது வகுப்பில் ஓர் ஐயங்கார் பெண் படிக்கிறாள். அவள் நெற்றிக்கு இட்டுக்கொள்கிறதுமில்லை, பூ வைத்துக்கொள்கிறதுமில்லை. அவள் ஒரு 'விடோ' (Widow). நானும் இப்பொழுது ஒரு 'விடோ'வா?'' என்று கேட்டாள்.

சதாசிவ ஐயர் இச்சிறுமியின் வார்த்தைகளைக் கேட்டுத் தமக்கு உண்டான சங்கடத்தை அடக்கிக்கொண்டு, ''இல்லையம்மா. நீ 'விடோ' அல்ல. அழாதே. சமத்தோல்லையோ? நீ போய் உன் வேலைகளைக் கவனி'' என்று சியாமளாவைச் சமாதானம் செய்து அனுப்பினார். பிற்பாடு தம் மனைவியைத் தனிமையில் அழைத்து, ''இதோ பார், நீ உன் அசட்டுச் சாஸ்திரங்களையெல்லாம் மூட்டைகட்டித் தூரவைக்க வேண்டும். தெரியுமா? குழந்தையின் மனத்தைப் புண்படுத்தாதே. அவள்பாட்டிற்கு எப்போதும்போல் பூ வைத்துக்கொண்டு நெற்றிக்கு இட்டுக்கொண்டு பள்ளிக்கூடம் போய்வரட்டும்'' என்று உத்தரவிட்டார்.

பர்வதம் மிகுந்த அதிருப்தியுடன், ''ஆகட்டும்'' என்று தன் கணவனுக்குப் பதிலளித்தாள்.

சதாசிவ ஐயருக்குக் கோலார்த் தங்கச் சுரங்கத்தில் 'சூபரிண்டெண்டெண்ட்' வேலை. மாதம் அறுநூறு ரூபாய் சம்பளம். சியாமளா அவருடைய தம்பியின் பெண். இரண்டு வயதிலேயே தன் பெற்றோர்களை இழந்த இச்சிறுமியைச் சதாசிவ ஐயரே மிகவும் வாஞ்சையுடன் வளர்த்து வந்தார். அவருக்கும் குமுதா என்ற ஒரு புதல்வி உண்டு. அவள் சியாமளாவைவிட இரண்டு வயது சிறியவள். சியாமளாவும் குமுதாவும் ஒரே தாயின் வயிற்றில் பிறந்த சகோதரிகளைக் காட்டிலும் மிகுந்த அன்னியோன்யமாகவே இருந்தனர். பர்வதமும் சியாமளாவின்மேல் அன்புடன் இருப்பவள் போலவே காணப்பட்டாள். ஆனால் உள்ளுக்குள் மாத்திரம் அவளை வெறுத்து வந்தாள். 'இந்தத் துரதிர்ஷ்டம் பிடித்த பெண்ணினால் குடும்பத்திற்கு என்னென்ன கேடு உண்டாகப் போகிறதோ! இது பிழைத்திருந்து என்னத்தைச் சாதிக்கப்போகிறது? இதற்குச் சாகுங்காலம் வாராதா? அவரோ, குமுதாவைவிட இந்தப் பெண்ணினிடம்தான் அதிக அன்பு செலுத்துகிறார்' என்று எண்ணி எண்ணி மனத்திற்குள் சியாமளாவைக் கரித்து வந்தாள். பிறகு சியாமளாவிற்கு விவாகம் ஆனதும் பர்வதத்தின் மனத்திற்குச் சற்றுச் சமாதானமாக இருந்தது. ஏனெனில், கூடிய சீக்கிரத்தில் அவளைப் புக்ககத்திற்கு அனுப்பிவிட்டால் தன் கணவன் அப்பெண்ணைக் கொஞ்சிச் சீராட்டுவதற்கு முடிவு ஏற்படுமென்று நினைத்தாள். ஆனால், பகவான்தான் அதற்கும் வழி இல்லாமல் செய்துவிட்டானே! கல்யாணம் ஆகி ஆறுமாதம் ஆவதற்குள் தன் கணவனையே முழுங்கிவிட்டது அந்தத் துரதிர்ஷ்டம் பிடித்த பெண்!

## 2

சதாசிவ ஐயரின் மாப்பிள்ளை இறந்துபோய் இரண்டு வருடங்கள் ஆகிவிட்டன. சியாமளா வெகு சீக்கிரத்தில் தன் கணவன் இறந்து போனதை அடியுடன்

## கலைமகள் சித்திரப் படங்கள்

ஒவ்வொன்றும் அளவு 30×24 அங்குலம்.

1. காக்கா காக்கா எங்கே போனாய்? (கதை, சம்பாஷணை.)
2. பானையின் கதை.
3. ஈயின் கதை.
4. வாகனங்கள் (தரை மார்க்கம்.)
5. வாகனங்கள் (ஜல மார்க்கம், ஆகாய மார்க்கம்.)
6. அரிசியின் கதை.
7. கதை கதையாம்.
8. தபால் கார்டின் கதை.
9. என்ன காக்கா?
10. வாலறுந்த குரங்கு.

ஒரு செட் 0-6-0: தபாற் செலவு 0-3-0

மானேஜர், கலைமகள் ஆபீஸ், மயிலாப்பூர்

# TO STOP PREGNANCY

"**Rabat**" is an unfailing contraceptive, a three-day use of which ensures life-long relief from the misery of conception without in any way harming the physique or disturbing menstrual regularity. Guarantee form accompanies every order. Price Rs. 5-8-0 or Sh. 10

"**Threenot**" pills recontinue stopped menses regularising M. C. too. With guarantee form. Price Rs. 5-8-0. Foreign Sh. 10.

***Dr. S. H. KHAN,***
*42, K. M. Churchgate Street,*
*Fort, BOMBAY.* *Phone: 21343.*

## கலைமகள் வருடசந்தா

(தபால் செலவுடன்)

இந்தியா, ஸிலோன் ரூ. 4-0-0

பர்மா ரூ. 4-8-0

பினாங்கு, சிங்கப்பூர், நேடால் ரூ. 6-0-0

தனி ஸஞ்சிகை அணா 6

அல்லது 36 சதம்




விலை ரூ. 1-8-0. கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை.

மறந்து எப்பொழுதும் போல் ஓடியாடிக் களித்துக்கொண்டிருந்தாள். சதாசிவ ஐயர் இப்பொழுது முன்னிலும் பன்மடங்கு சியாமளாவின் மேல் அன்பு செலுத்தியது பார்வதத்தினுல் சகிக்கவே முடியவில்லை. இருந்தாலும் வாயைத் திறவாமல், மேலுக்கு மாத்திரம் தானும் சியாமளாவை நேசிப்பவள்போல் நடந்துகொண்டாள்.

ஒரு நாள் மத்தியான்னம், தங்கச் சுரங்க ஆபீஸைச் சேர்ந்த வேலையாள் ஒருவன் பதைபதைக்க ஓடிவந்து, "அம்மா, இன்று எஜமான் 'லிப்ட்' (Lift) ல் உட்கார்ந்துகொண்டு கீழே இறங்கிச் செல்லும்பொழுது 'லிப்ட்' அறுந்து போய் நூறு அடி உயரத்திலிருந்து கீழே விழுந்துவிட்டார். மண்டையில் பலமாக அடிபட்டு உடனே இறந்துவிட்டார். பிணத்தை இன்னும் கொஞ்ச நேரத்தில் வீட்டிற்கு எடுத்து வருவார்கள்" என்ற கொடிய சமாசாரத்தைக் கூறினுன்.

பார்வதம் அப்படியே இடிவிழுந்தவள் போல் ஆனுள்; கதறினுள்; உருண்டு உருண்டு அழுதாள். ஆனுல் என்ன பிரயோஜனம்? மாண்டவர் வருவரோ மீண்டும் மண்ணுலகிற்கு?

பார்வதத்தின் கோபமும் ஆத்திரமும் இப்பொழுது சியாமளாவின் மேல் தங்கு தடையின்றி செலுத்தப்பட்டன. துடைகாலி என்றும் அவளுடைய துரதிர்ஷ்டத்தால்தான் தன் கணவர் அகாலமரணமடைந்தாரென்றும் புலம்பி வாயில்வந்தபடியெல்லாம் தன் வயிற்றெரிச்சல்தீரச் சியாமளாவைத் திட்டினுள். பொறுமைசாலியான சியாமளா தன் பெரியப்பா இறந்துபோன துக்கம் ஒரு புறம் இருக்கத் தன் பெரியம்மாவின் வசை புராணங்களையும் கேட்டுக்கொண்டு சாந்தமாகவே இருந்தாள்.

சதாசிவ ஐயருக்குச் செய்ய வேண்டிய கர்மங்களையெல்லாம் பார்வதத்தின் தம்பியாகிய பாஸ்கரனே செய்தான். பாஸ்கரன் பெங்களூரில் பி. எஸ்ஸிக்கு வாசித்துக்கொண்டிருந்தான். தன் பெண் குமுதாவைப் பாஸ்கரனுக்கே கொடுத்து விவாகம் செய்ய வேண்டுமென்று வெகு நாட்களுக்கு முன்னமே தீர்மானித்திருந்தாள் பார்வதம்.

கிரியைகள் எல்லாம் முடிந்த பிறகு, பாஸ்கரன் பெங்களூரில் ஒரு பங்களாவை ஏற்பாடு செய்து கோலாரிலிருந்த பார்வதத்தின் குடும்பம் பெங்களூரில் வசிக்கும்படி செய்தான். கோலார் தங்கச் சுரங்கத்தில் வேலை நடத்திவரும் கம்பெனியாரால் சதாசிவ ஐயரின் குடும்பத்திற்கு உபகார நிதியாகப் பத்தாயிரம் ரூபாய் அளிக்கப்பட்டது. ஐயர் ஏற்கனவே சேர்த்துவைத்திருந்த முப்பதாயிரம் ரூபாய் ஆஸ்தியுடன் இந்தப் பணத்தையும் பாங்கில் போட்டு அதற்கு வரும் வட்டியைக் கொண்டு பார்வதம் குடும்பம் நடத்திவந்தாள்.

இப்பொழுது சியாமளாவை, வட்டியும் முதலுமாய்ச் சேர்த்துக் கொடுமையாக நடத்த ஆரம்பித்தாள் பார்வதம். தன் பெரியம்மாவின் நடத்தையில் திடீரென்று இவ்வித மாறுதல் ஏற்பட்டிருப்பதைக் கண்டு சியாமளா திகைத்தாள். அவள் எவ்வளவு வினயமாக நடந்துகொண்டபோதிலுங்கூடத் தன் பெரியம்மா தன்மேல் கொண்ட வெறுப்பை மாற்றமுடியவில்லை. எப்பொழுதும் ஒரு காரணமும் இல்லாமல் சியாமளாவைத் திட்டிக்கொண்டே இருப்பாள் பார்வதம். பெங்களூருக்கு வந்தவுடன் சியாமளாவின் படிப்பை நிறுத்திவிட்டு, அவள் இனிமேல், புஷ்பம் குங்குமம் முதலிய மங்களகரமான வஸ்துக்களை உபயோகிக்கக்கூடாது என்று கண்டிப்பாய் உத்தரவிட்டாள். பார்வதம் சியாமளாவின் உடம்பில் இருந்த நகைகளையெல்லாம் தானே கழற்றி உள்ளே வைத்துவிட்டாள்.

சியாமளாவும் புஷ்பம், குங்குமம், நகைகள் இவற்றையெல்லாம் துறக்கச் சிறிதும் ஆக்ஷேபிக்கவில்லை. ஆனால் கல்வியை நிறுத்த அவளுக்குக் கொஞ்சமும் இஷ்டமில்லை. "பெரியம்மா, இந்த வருஷம் நான் ஸ்கூல் பைனல் பரீக்ஷைக்குப் பணம் கட்டப் போகிறேனே. அது பாஸ் ஆனவுடன் நான் படிப்பை நிறுத்திவிடுகிறேன். அது பரியந்தம் நான் படிக்கிறேன்" என்று எவ்வளவோ கெஞ்சி வேண்டிக்கொண்டாள் சியாமளா. ஆனால் பர்வதம் நிர்த்தாக்ஷிண்யமாய் இதற்கு மறுத்துவிட்டாள். "உன் கொஞ்சலுக்கும் அழுகைக்கும் இடம் கொடுக்க உன் பெரியப்பா உயிருடன் இல்லை என்பது நினைவிருக்கட்டும்! நீ இவ்வளவு நாட்கள் படித்துக் குப்பைகொட்டினது போதும்!" என்று ஓர் அதட்டல் போட்டுச் சியாமளா மறுபேச்சுப் பேசாதபடி செய்துவிட்டாள். குமுதா தன் தாயின் தீர்மானத்தை மாற்றிச் சியாமளாவின் படிப்பிற்கு முடிவு ஏற்படாதிருக்கும்படி செய்ய எவ்வளவோ விதமாய்ப் பர்வதத்தை வேண்டினாள். ஆனால் இந்த ஜபமெல்லாம் பர்வதத்தினிடம் சாயவில்லை.

'நான் கொடுத்துவைத்தது அவ்வளவுதான்' என்று எண்ணிச் சற்றுச் சமாதானம் அடைந்து, தான் பள்ளியில் கற்றதை யெல்லாம் மறவாமல் வீட்டிலேயே இருந்து கொண்டு அநேக நல்லறிவூட்டும் புஸ்தகங்களைப் படித்துத் தன் விவேகத்தை விருத்தி செய்துவந்தாள் சியாமளா.

## 3

ஒருநாள் மாலை குமுதாவும் சியாமளாவும் தங்கள் வீட்டு முன்புறத்து ஹாலின் நடுவே போடப்பட்டிருந்த வட்டமேஜையின் அருகே உட்கார்ந்துகொண்டு எதோ பேசிக்கொண்டிருந்தனர். பர்வதம் ஒரு ஸோபாவின்மேல் அமர்ந்து ஒரு புஸ்தகத்தை வாசித்துக்கொண்டிருந்தாள். அப்பொழுது பாஸ்கரன் கம்பீரமாய், "டக், டக்" என்று நடந்து வந்து சியாமளாவிற்கும் குமுதாவிற்கும் நடுவே இருந்த நாற்காலியில் அமர்ந்து சிரித்துக்கொண்டே, "என்ன, வட்டமேஜை மகாநாடோ? நானும் கலந்துகொள்ளலாமோ?" என்று வேடிக்கையாகக் கேட்டான்.

பர்வதம் புஸ்தகத்தை மூடிவிட்டுத் தன் தம்பியை வரவேற்று, "என்ன பாலு, நான்கு நாட்களாய் இந்தப் பக்கம் வரவே காணோமே! (உடனே சியாமளாவின் பக்கம் திரும்பி அவளைக் கடுமையாக ஒரு முழி முழித்து) சியாமளா! உனக்கு எத்தனை தரம் சொல்கிறது? எழுந்து உள்ளே சென்று ராத்திரி சமையலுக்கு காய்கறியாவது நறுக்கிக் கொடு. ஒரு புருஷன் வந்து பக்கத்தில் உட்கார்ந்தானே என்ற கூச்சம் கொஞ்சமும் இல்லாமல் தடிபோல் பல்லை இளித்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிறாயே!" என்று கடிந்தாள்.

சியாமளா உடனே எழுந்து தலை குனிந்தவாறு உள்ளே சென்றாள். குமுதா கண் கலங்கப் பரிதாபத்துடன் சியாமளா சென்ற திக்கையே சிறிது நேரம் நோக்கிக் கொண்டிருந்தாள். பாஸ்கரன், "அக்கா, சியாமளாவும் குமுதாவைப் போல் எனக்கு ஒரு மருமகள்தானே! மாமா என்ற முறையில் என் அருகில் உட்கார அவளுக்குப் பாத்தியம் இல்லையா? நீ அவளை ரொம்பக் கண்டிக்கிறாய். அவள் மனத்திற்கு எவ்வளவு கஷ்டமாக இருக்கும்?" என்றான்.

"நன்றாக இருக்கிறது! அவள் எப்படி உனக்கு மருமகள் ஆக முடியும்? அவள் பெரியப்பா அவளுக்குக் கொடுத்துவந்த செல்லத்தினாலும் சலுகையினாலும் அவள் ரொம்பவும் துணிச்சல் கொண்டு கொஞ்சங்கூட அடக்கமில்லாமல் நடந்துகொள்கிறாள்! ஒரு கைம் பெண் இப்படியெல்லாம் நடந்துகொண்டால் ஊரார் என்ன

சொல்வார்கள்? தன் சொந்தப் பெண்ணுய் இருந்தால் இப்படிக் கவனியாமல் இருப்பாளா என்று என் மண்டையைத்தான் உருட்டுவார்கள்! சியாமளாவின் தலைவிதி அவள் விதவையாகவேண்டுமென்று என்னவோ நேர்ந்துவிட்டது. இனிமேல் அவள் நிலைமைக்குத் தக்கபடி அடக்கவொடுக்கமாய் இருந்தால்தானே தேவலை? அவள் நன்மைக்காகத்தான் நான் அவளைச் சில விஷயங்களில் கண்டிக்கிறேன்'' என்று வெகு நல்லவள்போல் பேசினுள் பர்வதம்.

பாஸ்கரனுக்கு உண்மை விஷயம் எல்லாம் நன்ருகத் தெரியும். சியாமளாவைத் தன் அக்கா படுத்திவைக்கும் பாட்டையெல்லாம் அவன் நன்கு அறிந்திருந்தான்.

''ஆமாம் பாசு, நீ காரில் வந்தாயோ, நடந்துவந்தாயோ?'' என்று கேட்டாள் பர்வதம்.

''காரில்தான் வந்தேன். இவர்கள் எல்லோரும் வந்தால் 'லால் பாக்' (Lal Bagh) கிற்கு அழைத்துச் செல்கிறேன்'' என்ருன்.

''இவர்கள் 'எல்லோரும்' யார்? குமுதாவை அழைத்துக்கொண்டு போய் விட்டு வா'' என்ருள் பர்வதம்.

குமுதா கெஞ்சலாக, ''அம்மா, சியாமளாவும் வரட்டுமே! அவள் பெங்களூருக்கு வந்த இந்த இரண்டு வருஷங்களில் ஒருநாள்கூட வெளியில் போகவே இல்லை! இன்றைக்காவது......'' என்ருள்.

''சீ, அதிகப் பிரஸங்கி! வாயை மூடு'' என்று 'வள்' எனக் குமுதாவின்மேல் எரிந்து விழுந்தாள் பர்வதம். பிறகு தன் தம்பியைப் பார்த்து, ''ஹூம், புறப்படுங்கள். இருட்டிவிடுகிறது'' என்ருள்.

பாஸ்கரனும் குமுதாவும் பதில் பேசாமல் காரில் ஏறிப் புறப்பட்டுச் சென்றனர். அவர்கள், லால்பாக்கிலிருந்து வீட்டிற்குத் திரும்பி வரும்பொழுது மணி சுமார் எட்டு இருக்கும். காரிலிருந்து, மலர்ந்த முகத்துடன் இறங்கிய பாஸ்கரனையும் குமுதாவையும் கண்ட பர்வதத்தின் உள்ளம் பூரித்தது. ''எவ்வளவு தகுதியான ஜோடி! கடவுள் இருவருக்கும் பூர்ண ஆயுளையும் ஆரோக்கியத்தையும் அளிக்கவேண்டும்!'' என்று பிரார்த்தித்தாள்.

அந்தோ! இதே சமயத்தில், மனம் புழுங்கி, தன் தலைவிதியை நினைத்துக் கண்ணீர்விட்டுத் துக்கித்துக்கொண்டிருந்த சியாமளாவின் மனோவேதனையைப் பர்வதம் சிறிதும் உணரவில்லை.

குமுதா காரைவிட்டு இறங்கியதும், ''சியாமளா'' என்று அன்பு ததும்பக் கூப்பிட்டுக்கொண்டே உள்ளே சென்ருள்.

பாஸ்கரன் தான் தங்கியிருக்கும் ஹாஸ்டலுக்குச் செல்லப் புறப்பட்டான். பர்வதம் அவனைப் பின்தொடர்ந்து கார் நின்ற இடத்திற்கு வந்து, ''என்ன பாசு, நீ இன்னும் எத்தனை நாட்கள் இப்படிப் பிரம்மசாரியாகக் காலம் கழிக்கப் போகிருய்? குமுதாவும் விடு விடு என்று வளர்ந்துவிட்டாள். அவளுக்குப் பதினுன்கு வயது முடிந்து விட்டது, தெரியுமா?''

பாஸ்கரன், ''அக்கா, என் இப்படி அனுவசியமாகக் கவலைப்படுகிருய்? உங்கள் வீட்டு முதல் மாப்பிள்ளைதான் ஆயுசுடன் இருந்து வேட்டகத்தில் சீராடக் கொடுத்து வைக்கவில்லை! நான் தம்பி உறவுடன் மாத்திரம் இங்குவந்து போகிறேன் என்று நினைக்காதே! நான் உங்கள் வீட்டு மாப்பிள்ளையாகப் போவதாக ஏற்கனவே தீர்

மானித்துவிட்டேன். இது விஷயமாகத்தான் நானும் குமுதாவும் இன்று மாலை தோட்டத்தில் பேசிக்கொண்டிருந்தோம்'' என்றான்.

பார்வதம் முதலில் முகத்தைச் சுளித்துக்கொண்டு, "சரி சரி, அச்சான்யம் போல் இறந்துபோன அந்தக் கடன்காரனின் பேச்சை எதற்கு இப்பொழுது எடுக்கிறாய்? அதிருக்கட்டும். குமுதாவிற்குச் சம்மதந்தானா?'' என்று ஆவலுடன் கேட்டாள்.

"அவளுக்குச் சம்மதமில்லாவிடில் அவள் முகத்தில் அவ்வளவு மலர்ச்சியும் சந்தோஷமும் எப்படி உண்டாகும்?'' என்று ஒரு மாதிரி கண்ணைச் சிமிட்டிக்கொண்டே கூறிவிட்டுத் தன் அக்காவிடம் விடைபெற்றுக் காரை ஓட்டிச் சென்றான்.

பாஸ்கரன், அந்த வருஷம் மைசூர் ஸர்க்காரால் நடத்தப்படும் எம். வி. எஸ். பரீக்ஷைக்குச் சென்று பரீக்ஷையில் எழுதிவிட்டு ரிஸல்டை எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். பாஸ்கரன் மேற்சொன்னபடி தாராளமாய்த் தன் மனத்தைவிட்டுப் பேசியதைக் கேட்டுப் பார்வதம் மிக்க மகிழ்ச்சி அடைந்தாள். குமுதாவுக்கும் பாஸ்கரனுக்கும் விவாகம் நடந்துவிட்டது போலவே எண்ணினாள். நேரே உள்ளே சென்று குமுதாவைப் பார்த்து, "என்ன மிஸஸ். எம். வி. எஸ்? இன்று மாமாவுடன் லால்பாக்கிற்குச் சென்றது சுயலாபத்திற்குத்தான் போலிருக்கிறதே?'' என்று பரிகாஸம் செய்தாள்.

குமுதா ஒருமாதிரி சிரித்து, "போம்மா, உனக்கு எப்பொழுதும் என்னைக் கேலி செய்வதுதான் வேலை'' என்று சொல்லித் தன் பாடங்களைப் படிக்கச் சென்றாள்.

## 4

மேற்சொன்ன சம்பவம் நடந்து சில தினங்களான பிறகு ஒரு நாள் இரவு பாஸ்கரன் காரில் வந்து இறங்கினான். அப்போழுது மணி எட்டரை இருக்கும். "அக்கா! இன்றைக்கு 'ஸாகர் டாகீஸி'ல் பேஷான ஹிந்தி பேசும் படம் இருக்கிறது. இன்றுதான் கடைசி நாள். எல்லோரும் வருகிறீர்களா? போகலாம்'' என்று கேட்டான்.

பார்வதம் சந்தோஷத்துடன், "அதற்கென்ன; போய்விட்டு வரலாம். குமுதா, சீக்கிரம் புறப்படு. பாசு காத்துக்கொண்டிருக்கிறான்'' என்று தன் பெண்ணை உடை மாற்றிக்கொள்ளச் சொன்னாள்.

பாஸ்கரன், "சியாமளாவும் வராளோ இல்லையோ?'' என்று வினவினான்.

"ஹூஹூம். அவள் வரமாட்டாள். அவளுக்கு மத்தியான்னத்திலிருந்து தலைவலி. ஆத்தில் நிம்மதியாகப் படுத்துக்கொண்டு தூங்கட்டும். துணைக்கு ஆளும் வேலைக்காரியும் இருக்கிறார்கள்'' என்று பதிலளித்தாள்.

குமுதா வேறு உடை உடுத்திக்கொண்டு வந்ததும் சியாமளாவை மாத்திரம் வீட்டில் விட்டுவிட்டு அவர்கள் மூவரும் ஸினிமாவுக்குச் சென்றனர்.

படம் நிஜமாகவே முதல்தரமாக இருந்தது. ஆட்டம் முடியும்பொழுது பன்னிரண்டு மணி. பாஸ்கரன் தன் அக்காவையும் மருமகளையும் அழைத்துக்கொண்டு அவர்கள் வீட்டிற்குச் சென்றான்.

"இன்று ரொம்பப் போதாய்விட்டது. நீயும் இங்கேயே படுத்துக்கொண்டுவிட்டுக் காலையில் எழுந்து ஹாஸ்டலுக்குப் போகலாம்'' என்று பார்வதம் பலவந்தப்படுத்தியதன் பேரில் பாஸ்கரன் அன்றிரவு அங்கேயே தங்கச் சம்மதித்தான்.

சியாமளா படுத்துக்கொள்ளும் அறைக்குச் சென்ற குமுதா அவளை அங்கே காணாமல் வீடு முழுவதும்போய்ச் சுற்றி, "சியாமளா! சியாமளா!" என்று கூப்பிட்டாள்.

பர்வதம், "என்ன குமுதா, நடுராத்திரியில் அவளை எதற்காக எழுப்புகிறாய்? உனக்கு எப்பொழுதும் அவள் ஸ்மரணைதான். போய்ப் படுத்துக்கொள்" என்று கோபித்துக்கொண்டாள்.

"இல்லையம்மா! சியாமளாவைப் படுக்கையிலும் காணவில்லை, வீட்டில் வேறு எங்கேயும் காணவில்லையே! இந்த நட்ட நிசிவேளையில் எங்கே போயிருப்பாள்? இதோ, மேஜையின்மேல் ஒரு கடிதம் இருக்கிறதே! இதென்ன?" என்று சொல்லி அக்கடிதத்தை எடுத்து உரக்கப் படித்தாள்:

"பெரியம்மா!

உங்களுக்கு ஒரு பாரமாக உங்கள் வீட்டில் இனிமேல் வசிக்க நான் விரும்பவில்லை. நான் வீட்டைவிட்டுப் போகிறேன். என்னைத் தேட முயலவேண்டாம். இவ்வளவு வருஷங்களாக என்னை வைத்து ஸம்ரக்ஷித்ததற்கு மிகவும் வந்தனம்.

இப்படிக்கு,
சியாமளா"

படித்து முடித்ததும் குமுதா அழத்தொடங்கினாள். பர்வதம் அவளைச் சமாதானம் செய்து, "குமுதா, அந்த நன்றி கெட்ட நாய் எவனையோ இழுத்துக்கொண்டு ஓடிப்போயிருக்கிறது! அவள்மேல் நீ வைத்திருந்த பாசத்தை இனி மேலாவது விட்டொழி" என்று கூறினாள்.

பாஸ்கரன் சியாமளா ஓடிப்போன விஷயத்தை அறிந்ததும் குமுதாவையும் பர்வதத்தையும் வாயை மூடிக்கொள்ளும்படி சமிக்ஞை செய்து, "உஸ்! இரையாதீர்கள்! சியாமளா ஓடிப்போன விஷயம் வெளியில் தெரிந்தால் அநியாயமாய் நம் மேலே சந்தேகப்படுவார்கள். நான் நாளை அதிகாலை மதராஸுக்குப் புறப்படும் ரெயிலுக்குக் காரை ஓட்டிச் செல்கிறேன். அதில் சியாமளா உட்கார்ந்துகொண்டு ஸ்டேஷனுக்குச் சென்று ரெயிலேறி மதராஸுக்குப் போய்விட்டதாகக் கேட்பவர்களுக்குச் சொல்லிவிடலாம். மதராஸிலிருந்து அவளுடைய மாமா ஒருவர் திடீரென்று வந்து அவளை அழைத்துக்கொண்டு போய்விட்டதாக எல்லோருக்கும் சொல்லிவிடுங்கள்" என்று ஓர் உபாயம் சொல்லிக்கொடுத்தான்.

பர்வதம் இதற்குச் சம்மதித்தாள். 'அந்தத் தடைகாலி வீட்டை விட்டு ஒழிந்தாளே' என்று சந்தோஷப்பட்டாள்.

மறுதினம் அதிகாலை பாஸ்கரன் ஏற்பாட்டின்படி ஒரு சிறிய நாடகம் நடிக்கப் பெற்றது. சியாமளாவை அவளுடைய மாமா சென்னைக்கு அழைத்துக்கொண்டுபோய் விட்டதாக ஒரு பொய் வதந்தியைக் கிளப்பிவிட்டாள் பர்வதம். வீட்டு வேலைக்காரர்களும் ஊர் ஜனங்களும் இதை உண்மையென்றே நம்பினர்.

## 5

சியாமளா மறைந்துபோய்ப் பல மாதங்கள் ஆயின. சியாமளாவை அவ்வளவு அருமையாக நேசித்து வந்த குமுதாகூட அவளை மறந்துவிட்டதாகவே காணப்பட்டாள். பாஸ்கரனுக்கு எம். வி. எஸ்., பரீக்ஷை தேறி, இப்பொழுது மைசூரில் ப்ரோபேஷனராக (Probationer) வேலை பார்த்துவந்தான். குமுதாவும் பாஸ்கரனும்

அடிக்கடி சந்தித்து வெகு குதூஹலத்துடன் காலம் கழித்துவந்தனர். பார்வதம் இவர்களுடைய விவாகத்தைக் கூடிய சீக்கிரத்தில் நடத்திவிடத் துடித்துக்கொண்டிருந்தாள். இது விஷயமாக இன்னும் ஒரு முறை பாஸ்கரனைக் கேட்டபொழுது அவன், "அக்கா, இன்னும் ஒரு மாதத்திற்குள் நான் உங்கள் வீட்டு மாப்பிள்ளையாகிவிடுகிறேன். எனக்கு மதராஸில் கொஞ்சம் வேலை இருக்கிறது. போய்விட்டு இன்னும் ஒரு வாரத்தில் திரும்பி வந்துவிடுகிறேன். நான் வந்தபிறகு முகூர்த்தம் வைக்கலாம்" என்று பதிலளித்தான். அவன் சென்னைக்குப் புறப்படுவதற்கு முன்பு குமுதாவின் கன்னத்தில் விளையாட்டாகக் கிள்ளி, "மாமாவை மறந்துவிடாதே குமு, மாமி வரப்போகிறாள் என்ற சந்தோஷத்தில்!" என்றான்.

"மாமி 'ஆகப்போகிற சந்தோஷத்தில்' என்று சொல், பாசு" என்று தன் தம்பியின் வார்த்தையைத் திருத்தினாள் பார்வதம்: இதைக் கேட்டுக் குமுதாவும் பாஸ்கரனும் ஒரு மாதிரியாகச் சிரித்துக்கொண்டனர்.

பாஸ்கரன் தான் வாக்களித்திருந்தபடி ஒரு வாரத்தில் சென்னையிலிருந்து திரும்பி வந்தான். ஆனால் அவன் மாத்திரம் தனியாக வரவில்லை. கூடவே சியாமளாவும் வந்திருந்தாள்!

"அக்கா, இதோ பார். உன் இஷ்டப்படி உங்காத்து மாப்பிள்ளையாக வந்துவிட்டேன். எனக்கும் சியாமளாவுக்கும் இரண்டு நாளைக்குமுன் அடையாறு பாரத ஸமாஜக் கோவிலில் விவாகம் நடந்தது. நீ நினைத்திருந்தபடி சியாமளா யாரையும் இழுத்துக்கொண்டு ஓடிப்போய்விடவில்லை. அவள் கொஞ்சகாலம் மறைவாய் ஓர் இடத்தில் இருக்கும்படி நான்தான் ஏற்பாடு செய்திருந்தேன். இந்த விஷயத்தில் குமுதாவும் எனக்கு மிகவும் உதவி புரிந்திருக்கிறாள்" என்றான் பாஸ்கரன்.

பார்வதம் சில வினாடிகள் பிரமித்து நின்றாள். பிறகு ஆவேசத்துடன் சியாமளாவை நோக்கி, "அடி சண்டாளி! ஆரம்பத்திலிருந்தே என் குடும்பத்தை அழிப்பதற்காகவே பிறந்தாயாடி நீ! நன்றி கெட்ட நாயே! என் கண்மணி குமுதாவிற்குக் கணவனாக வேண்டியவனை நீ மயக்கி உன் வலையில் சிக்கவைத்தாயாடி! என் வயிறு எரிகிறதே!" என்று கூவிக்கொண்டு கையை ஓங்கிக்கொண்டே சியாமளாவை அடிக்கச்சென்றாள்.

உடனே குமுதாவும் பாஸ்கரனும் ஒரே சமயத்தில் பாய்ந்து பார்வதத்தின் கையைப் பிடித்துக்கொண்டனர்.

"ஏன் அம்மா, நீ என் இப்படி ஆத்திரப்படுகிறாய்? நானும் மாமாவும் இவ்வளவு நாட்களாக வெகு சகஜமாகப் பழகிவந்ததனால், நாங்களிருவரும் ஒருவரை ஒருவர் காதலிப்பதாக நீ பகற் கனவு கண்டு கொண்டிருந்ததற்கு நாங்கள் என்ன செய்ய முடியும்? எங்களிருவருக்கும் இடையே இருந்த நட்பு சாதாரண மாமா மருமகள் சிநேகமே தவிரக் காதல் சம்பந்தப்பட்டதல்ல. நாம் பெங்களூருக்கு வந்தது முதல் மாமா அடிக்கடி ஆத்திற்கு வந்து போய்க்கொண்டிருந்தார். அப்பொழுதிலிருந்தே அவர் சியாமளாவைக் காதலித்து அவளையே விவாகம் செய்துகொள்வதாகத் தீர்மானித்துவிட்டார். சியாமளாவுக்கும் மாமாவின்மேல் அன்பு ஏற்பட்டு அவர் சொல்கிறபடியெல்லாம் நடக்கச் சித்தமாக இருந்தாள். ஆனால் இந்த விஷயத்தை வெளியிட்டால் உன்னுடைய கோபத்திற்கு ஆளாகவேண்டுமே என்று நாங்கள் இதை ரகசியமாகவே வைத்துக்கொண்டிருந்தோம். என்னைக் கல்யாணம் செய்துகொள்ளும்படி நீ மாமாவைத் தூண்டும்பொழுதெல்லாம் அவர் நம் வீட்டிற்கு மாப்பிள்ளை

யாக வருவதாகச் சொன்னாரே தவிர எனக்குக் கணவராகப் போவதாக ஒரு நாளும் சொல்லவில்லை. நாங்கள் ரகசியமாகக் கலந்து பேசிக்கொண்டு மாமாவின் நண்பர் ஒருவர் மூலமாகச் சியாமளாவை வீட்டைவிட்டு வெளியேறும்படி செய்துவிட்டோம். நாம் அன்றொரு ராத்திரி ஸினிமாப்படம் பார்த்துக்கொண்டிருந்தபொழுது, இங்கு மாமாவின் நண்பர் வந்து சியாமளாவை அழைத்துக்கொண்டு போய்விட்டார். இது காறும் சென்னையில் அவர் வீட்டில் வசித்துவந்தாள் சியாமளா. இப்பொழுது என்னுடைய மாமியாகத் திரும்பிவந்திருக்கிறாள். நீ என் விவாகத்தைப்பற்றிச் சிந்திக்கவேண்டாம். எனக்கு இப்பொழுது விவாகம் செய்துகொள்வதில் கொஞ்சமும் இஷ்டமில்லை. பிற்பாடு, மாமா நல்லவராகத் தேடிப் பார்த்துக் கொடுத்தால் அப்பொழுது பார்த்துக்கொள்ளலாம்'' என்று சொல்லிக் குமுதா குறும்புச் சிரிப்புடன் பாஸ்கரனைப் பார்த்தாள்.

யார் என்ன சொல்லி என்ன? பர்வதத்தின் ஏமாற்றமும் கோபமும் கொஞ்சமும் தணியவில்லை. தன் மகளுக்குக் கணவனாகவேண்டியவனை ஒரு கைம்பெண் விவாகம் செய்துகொண்டு, தன் எதிரில் தலையில் தொங்கத் தொங்கப் பூவுடனும், நெற்றியில் காசு அகலமுள்ள குங்குமப்பொட்டுடனும் நிற்பதைக் காண அவள் வயிறு கொதித்தது.

பாஸ்கரன், ''அக்கா! உன் கோபம் முழுவதும் நிவர்த்தியாகட்டும். பிற்பாடு நாங்கள் உன் ஆசிர்வாதத்தைப் பெற வருகிறோம்'' என்று சொல்லிச் சியாமளாவின் கரத்தைப் பற்றி அழைத்துக்கொண்டு சென்று காரில் உட்காரவைத்துத் தன் இருப்பிடம் சென்றான்.



# ஸூலுக்களின் பழக்கவழக்கங்கள்

டர்பன் ச. முனிஸ்வாமி பிள்ளை

தென்னுப்பிரிக்காவில் உள்ள சுதேசிகளாகிய ஸூலுக்களின் பழக்க வழக்கங்கள் விசித்திரமானவை. பரம்பரையாக உள்ள சிலவகை நம்பிக்கைகள் உலகத்திலுள்ள பல ஜாதியாரிடத்திலும் காணப்படுவது இயல்பே.

உண்பதிலும் உடுப்பதிலும் உபயோகிக்கும் பொருள்களிலும் பல வித நம்பிக்கைகொண்டவர்கள் அவர்கள். வியாதி, அங்கவீனமடைதல், இடையூறு, துரதிர்ஷ்டம்போல் அடிபடுதல், மிருகங்களால் தாக்கப் படுதல், அவற்ருல் சாவு, கோபம், பொருமை, மடமை, கலகம், பொய், பகை முதலியவை சகுனங்களால் ஏற்படுகின்றனவென்று சுதேசிகள் நம்புகிருர்கள்.

ஒரு குழந்தை கோழியின் தலையைத் தின்ருல், கோழி தூங்குவது போல் தூங்கும் என்று கூறுகிருர்கள். ஒருவனுடைய மனைவி பிரசவித்தால் அவன் அக்குடிசைக்குள் போகான். அவ்வீட்டைச் சாணத்தால் மெழுகிச் சுத்தஞ்செய்த பின்னரே நுழைவான். அப்படிச் செய்யாவிட்டால் சண்டையில் காயமடைவானும்.

ஸூலு ஜாதியில் ஆண்கள் ஆட்டின் ஈரலைத் தின்னமாட்டார்கள். தின்ருல் வஞ்சகர்களாவார்களாம். சில சுதேசியர்கள் இக்கொள்கைக் காகவே ஆட்டிறைச்சியைச் சாப்பிடுவதில்லை.

பெண்கள் முயல் மாமிசத்தைச் சாப்பிடுவதில்லை. சாப்பிட்டால் குழந்தைக்கு உதடு நீண்டுவிடுமாம். முயலின் மூளையைச் சாப்பிட்டால் குழந்தைக்குத் தலை நீண்டுவிடுமாம்.

சூடாயிருக்கும் உணவை அவர்கள் ஆறவைக்கமாட்டார்கள். அதனல், சண்டையிடும்போது பெரிய வெட்டுக் காயம் உண்டாகுமாம். சுதேசிப் பெண்கள் கூழ் கிளறும் குச்சிக்கரண்டியை நக்குதல் நல்லதாம். ஆனல் ஆண்மகன் அப்படிச் செய்தால் அவன் வஞ்சகனவானும்.

சாப்பிடும்போது பாடக்கூடாது. பாடினல் முட்டாளாவார்களாம். ஆண்கள் பெண்களைத் தாண்டிப் போகக்கூடாது. தாண்டிப்போனல் காரியங்களில் வெற்றி பெற மாட்டார்களாம்.

சுதேசியர்கள் குடிசைக்குள் இருந்துகொண்டு தண்ணீர் வெளியே ஊற்றக்கூடாது. குப்பையை எறியக்கூடாது. அவ்விதம் செய்தால் மின்னலாலோ மாந்திரிகத்தாலோ அபாயம் உண்டாகும்.

அங்கவீனம், அங்கமிகுதி உடையவர்களைப் பார்த்துச் சிரித்தால் அவர்களைப்போல் குழந்தைகள் பிறக்குமாம். வேறொருவர் கழுவின தண்ணீரில் கழுவினால் நட்புக்குப் பகை உண்டாகுமாம்.

ஸெளுஜாதிப் பெண் தன்னிடத்திலிருந்து தன் குடும்பமல்லாத வேறு இடத்திலுள்ள குடிசைக்குப் போனால் தயிரும் மாமிசமும் சாப்பிடமாட்டாள். அங்குள்ள ஆண்களைக் கல்யாணம் செய்துகொள்ளமாட்டாள். அவ்விடங்களில் பச்சை உணவுகள், தித்திப்புப் பொருள்கள், சுட்ட சோளக்கதிர், வள்ளிக்கிழங்கு முதலியவற்றைச் சாப்பிடமாட்டாள். குடிசைக்குப் பின்னால் உட்காரவும் மாட்டாள். முன்னோர் ஆத்மா அங்கே உலாவுமாம். ஆண்கள் உட்காரலாம். அதனால் அவர்களுக்கு முன்னோர்களின் பலம் ஏற்படுமாம்.

குழந்தை, புருஷன், பெற்றோர், தலைவர் இவர்கள் இறந்தால் சுதேசியர்கள் துக்கக்குறி காண்பிக்கவேண்டும். கைம்பெண், குழந்தை இவர்கள் இறந்தால் தயிர் சாப்பிடக் கூடாது. பசுக்களுக்கு ஆகாது.



ஸெளுக்களின் குடிசை

ஸெளுக்களின் குடிசைகள் அநேகமாய்ப் புற்களாலும், மண்ணாலும், மூங்கிலாலும், கம்பி, கயிறு முதலியவைகளாலும் கட்டப்பட்டவை. கிராமங்களில் இப்படிச் செய்யப்பட்ட குடிசைகளே காணப்படும்.

ஒரு கிராமத்துக் குடிசையில் ஒருவர் இறந்தால் எவரும் சாப்பிடக் கூடாது. சமைக்கவும் கூடாது. பசுக்களிடமிருந்து பால் கறக்கக்கூடாது. வீண்வம்பு பேசக்கூடாது. சத்தம் சச்சரவு செய்யக்கூடாது. கிராமத் தலைவர் (இன்டூனா) இறந்தால் மூன்றுமாதம் பயிர் செய்யக்கூடாது. ஓலைப்பின்னல் தவிர மற்றப் பின்னல்கள் செய்யக்கூடாது. இச்சடங்குகள் கிராமத்தின் தராதரப்படி நடத்தப்படும்.

சுதேசிப்பெண் மாட்டுமந்தையின் குறுக்கே போகலாம். அப்பெண்ணுக்குக் கல்யாணம் நிச்சயமானால் அவ்விதம் போக விடமாட்டார்கள். ஒரு குழந்தை தூங்குகையில் முத்தம் கொடுக்கக்கூடாது. கொடுத்தால் பொய்பேசக் கற்றுக்கொள்ளுமாம். கண்ணாடி காண்பித்தால் அப்பிள்ளைக்குக் கண்திருஷ்டி ஏற்படுமாம்; அல்லது அது வளரமுடியாதாம். குழந்தை ஜனித்ததும் குழந்தையின் தாயும் மருத்துவச்சியும் பார்க்கலாம். தகப்பனாயிருந்தாலும் இரண்டு நாள் பார்க்கக்கூடாது. பார்த்தால் பிள்ளைகள் மெலிந்துபோகுமாம்.

கிராமங்களில் சுதேசியர்கள் அநேகமாய் இடுப்பைமாத்திரம் மறைத்துக்கொண்டு உடம்பைத் திறந்தே வைத்திருப்பார்கள். அவர்கள் திட சரீரமுடையவர்களாயும் இருக்கிறார்கள்.



ஒரு ஸுலு வீரன்



ஸுலு வாத்தியக்காரர்

வேறு சில சுதேசிகள் மாட்டின் மாமிசம் உண்ணமாட்டார்கள். மாட்டைக் குத்திக் கொன்ற பின்னரே உண்ணும் வகுப்பாரும் உண்டு. சுதேசியர்கள் இருமுறை சமைத்த மாமிசத்தை உண்ணமாட்டார்கள். எங்கே குளித்தாலும் சூரிய வெளிச்சமில்லாத நிழலிருக்கிற இடத்தில் தான் குளிப்பார்கள். படுத்திருக்கையிலும் தூங்குகையிலும் பின்னால் நெருப்பு வெளிச்சம் இருக்கக்கூடாதாம். வேட்டையாடவேண்டுமானால் காலையில் வீட்டை யாரும் பெருக்கக்கூடாது. பெருக்கினால், வேட்டையாடுபவனுக்கு ஒன்றும் கிடைக்காதாம்.

மாடு, பூமி, உணவு, புல், உட்காருமிடம், மாதவிடாய், கற்பு, கர்ப்பம் முதலிய ஏழையும் மிக முக்கியமாய்க் காப்பாற்றிக்கொள்ளவேண்டுமாம்.

சுதேசியர்கள் அநேகமாய்ப் பாய், கூடை முடைவதிலும் பின்னல் வேலை செய்வதிலும், இரும்பாலும் செம்பாலும் தந்தத்தாலும் காப்புகள் செய்வதிலும், மரக்கட்டையால் பெட்டி, மேஜை, நாற்காலி முதலிய பலவிதப் பொருள்கள் செய்வதிலும் நல்ல தேர்ச்சி பெற்றிருக்கின்றனர்.

சுதேசியப் பெண்களிடம் ஆண்கள் மிகவும் மரியாதையாய் நடந்து கொள்வார்கள். அநேகமாக எல்லோருக்கும் பொடிபோடும் வழக்கமுண்டு. அநேகர் பொடி விற்கும் தொழிலையும் செய்து வருகிறார்கள்.

ஆற்றில் குளிக்கவும், அங்கிருந்து தண்ணீரைக் குடுக்கைகளில் நிரப்பித் தலைமீது ஏற்றிக்கொண்டு வரவும் சுதேசிப்பெண்கள் விருப்பமுடைய

வர்கள். பழக்கமில்லாத ஆண்களிடம் பெண்கள் பேசுவதற்கு அச்சமும் நாணமும் கொள்வார்கள்.

அவர்கள் தாமே, மூங்கிலாலும் சுரைக்குடுக்கைகளாலும் கம்பி களாலும் வாத்தியக்கருவிகளைச் செய்துகொள்ளுகிறார்கள். விசேஷ தினங் களில் ஆணும் பெண்ணும் சேர்ந்து பாடி ஆடி ஆரவாரம் செய்வார்கள்.

ஆண்வீட்டாரே பெண்பார்க்கவேண்டும். கல்யாணம் செய்துகொள் ளும் ஆடவன், பெண் வீட்டாருக்குப் பத்து எருமைகளும், ஒரு பசுவும் தந்து தனக்குப் பேசிய பெண்ணை விவாகம் செய்துகொள்ளலாம். கிராமத் தலைவரே இந்த விவாகத்தை நடத்தி வைப்பார். தான் வரிக்கப் போகும் ஆடவன்மீது பெண்ணுக்கு விருப்பமா என்று தலைவர் இருமுறை கேட்பார்; பெண் ஆம் எனில் கல்யாணம் நடைபெறும்; இல்லை என்றாலும் மௌனம் சாதித்தாலும் கல்யாணம் நின்றுபோகும்.

கிராமத்துக்குள் நடக்கும் தவறுகளை எல்லாம் தலைவரே விசாரித்துத் தண்டிப்பார். அவரால் முடியாவிட்டால் அருகிலுள்ள போலீஸ் தலை வருக்கு அறிவிப்பார். கிராமத்துள் நடக்கும் கலகங்களை அடக்கச் சுதேசியப் போர்வீரர்களும் உண்டு. அவ்வீரர்களும் வேட்டையாடுபவரும் ஒரே விதமாய் அணிந்தும், ஆயுதங்களைத் தரித்தும் இருப்பார்கள்.

பட்டணங்களில் அநேகமாய் இவர்கள் அடிமைத் தொழில் புரிபவர் கள். அநேகர் ரிக்ஷாவை இழுக்கும் வேலையைச் செய்பவர்கள். ரிக்ஷா இழுப்பவன் இறகுகளாலும், பலவித உரோமங்களாலும், பலநிறத் துணிகளாலும், மணிகளாலும், வர்ணப் பூச் சுக்களாலும் தன்னை அலங் கரித்துக்கொள்வான்.



ஸுலு ரிக்ஷாக்காரன்

பட்டணங்களில் வசிக் கும் சுதேசியர்கள் ஆங்கிலம் படிக்கவும் பேசவும் தெரிந்த வர்கள். சிலர் டாக்டர்களாக வும், பி. ஏ., பரீட்சையில் தேறியவர்களாகவும் இருக் கின்றனர்.

# கலிங்கத்தில் பிறந்த பௌத்த கீதை

ரே. கிருஷ்ணையங்கார்

## 1

உலகம் தோன்றிய நாள்முதல் இந்நாள்வரை மற்ற யாரும் கண்டிராத அத்தியாத்ம ஒளியால் பிரதிபலிக்கும் அஹிம்ஸா தர்மத்தை அரசியல் நெறியில் கடைப்பிடிப்பதே நேர்மையான ராஜரிகம் என்ற உண்மையை அன்று அசோகன் காட்டியிருக்கிறான். அவனுக்கு முன்னும் பின்னும் உலகில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் எந்த நாடுதான் பல்லாயிரக்கணக்கான உயிர்க் கொலைகள் செய்யாதிருக்கின்றது?

ஒரு குடை நிழலில் இந்திய தேசங்கள் எல்லாம் தாமாகவே வலிய அவனுடைய ஆணையை மேற்கொண்டன. எந்த மிருகபலத்தால், எந்த ராஜ தந்திரத்தால் அவன் அந்நாடுகளை வெற்றிகொண்டான்? அவனுடைய ஆத்ம ஒளி உலகெங்கும் பரவியது.

அசோகனுக்கு இளம்பிராய முதல் எண்ணும் எழுத்தும் கற்பித்தவர் ஜோதிவர்மர். ராஜ குருவாகிய அவரை ராஜ்யத்தில் உள்ள யாவரும் நன்கு மதித்தனர். அவர் ஒரு பௌத்த பிட்சு. அரசனுக்கு அவரிடம் அன்பு உண்டு; ஆனால் அதில் ஆழமில்லை. சில சமயங்களில் இருவருக்கும் தர்க்கம் ஏற்பட்டு விடும். அப்போது அரசனென்ற செருக்கு அசோகனுடைய பேச்சில் அடிக்கடி தொனிக்கும். அதை வர்மர் அறிந்து புன்னகைகொள்வார். வியவகாரத்தில் வர்மர் வெட்டென நியாயத்தை அரசனென்றும் பாராது பகர்ந்து விடுவார்; அசோகனுடைய மனம் உளையும்; ஆயினும் என்ன செய்வது? அவர் குரு.

அசோகன் பட்டம் தரித்த நான்காம் வருஷம் சித்திரை மாதம் பிறந்தது. நாட்டின் நலன்களைப் பற்றிக் கலந்து ஆலோசிக்க மன்னன் கருதுவானானால் காரியஸ்தர்களை அழைக்கும்பொருட்டு மணிக்கூண்டிலுள்ள மணியை முழக்குவது அக்காலத்து மரபு. ஆகவே அன்று மணிஓசை நகரம் முழுதும் ஒலித்தது.

அழகாகச் சிங்காரிக்கப்பட்டிருந்த மணிமண்டபத்துள் அமைச்சர்கள், தானைத் தலைவர்கள், உத்தியோகஸ்தர்கள், பிரமுகர்கள் யாவரும் வந்து குழுமினர். சற்று நேரத்தில் அரசனும் அங்கு விஜயம் செய்தான். அரசனுக்கு ஆங்குள்ளோர் மரியாதை செய்து தத்தம் ஆசனங்களில் அமர்ந்தனர்.

பக்கத்தில் இருந்த பிரதம மந்திரியை அரசன் நோக்க, அவன் எழுந்து, "பெரியோர்களே, பெரிய சக்கரவர்த்தியின் (சந்திரகுப்தர்) காலத்திலிருந்து மகத ராஜ்யத்தின் பெருமை அளவிட முடியாதது. இப்போது மகதக் கொடியைத் தட்சிணத்திலும் பறக்கச் செய்யக் கருதியுள்ளார் நம் சக்கரவர்த்தி. இவ்விஷயத்தில் உங்களுடைய கருத்துக்களைத் தெரிந்துகொள்ள அரசருக்கு ஆவல் இருக்கிறது" என்றான். சேனைத் தலைவன் காயகேசி, "இன்றுதான் நாங்கள் பிறந்தவர்களானோம்" என்றான். இரண்டாம் அமைச்சன் காங்கேயன், "இதில் என்ன தடை இருக்கிறது? போருடன் முதலில்

போர் தொடுப்பது?'' என்றனன். ''மற்றவர்களுடைய கருத்துக்களையும் வெளியிடலாமே, தயக்கம் என்ன?'' என்றான் அசோகனுடைய தம்பி மஹேந்திரன்.

''தாங்கள் முடிசூட்டிக்கொண்டு இந்நான்கு வருஷங்களாக யுத்த அரங்கம் பாராமல் இருப்பது பற்றிக் கலிங்கநாட்டு மன்னன் ஒரு மாதிரியாக அகங்காரம் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. மகத மன்னரின் பராக்கிரமம் பெரிய சக்கரவர்த்தியோடு மறைந்ததாம்! சென்ற ஆண்டு மஹேந்திரகிரி மன்னன் விஜயதிலகனைப் போரில் வெற்றி கொண்டானும்; அதற்கு அவன் செய்கிற ஆர்ப்பாட்டம் என்ன! தலை சுழன்றுகொண்டுதான் இருக்கிறது!'' என்றான் முதல் மந்திரி.

இவ்வுரை கேட்ட சபையினரும் அரசனும் படபடத்தனர். அப்பொழுது சபையோர், ''மன்னர் பராக்கிரமம் இன்னும் சிறிது நாளில் தெரியும்'' என்று ஆர்ப்பரித்தனர். இவ்வாறு அவர்கள் சம்பாஷித்துக்கொண்டிருக்கும்பொழுது ஜோதிவர்மர் அங்கே தோன்றினார். எல்லோரும் எழுந்து மரியாதை செய்தனர். அவர் அரசனுக்கு ஆசி கூறிவிட்டுத் தம் ஆசனத்தில் அமர்ந்தார்.

''ஏன் பேச்சை நிறுத்திவிட்டீர்கள்? உம்...விஷயம் என்ன?'' என்றார் வர்மர், முகத்தில் புன்முறுவல் தவழ.

''இன்று நடக்கும் விஷயத்தில் நமக்குள் வேறுபட்ட கருத்துக்கு இடம் இல்லை என்று நினைக்கிறேன்'' எனச் சக்கரவர்த்தி பீடிகை போட்டான்.

குரு புன்னகை செய்தார். சபையினர் அவருடைய சமாதானக் குறிப்பைக் கண்டு களிப்படைந்தனர்.

''ராஜ்ய விஸ்தரிப்பை உத்தேசித்து மகதக்கொடியைப் பாரத நாடு முழுவதும் பறக்கவிட வேண்டும் என்பது மகாராஜாவின் நெடுநாள் விருப்பம். அதன் நிமித்தம் கலிங்கர்மீது போர்தொடுக்க உறுதி கொண்டு ஆலோசனை நடந்து வருகிறது. நல்ல சமயத்தில் நீங்களும் வந்து விட்டீர்கள்'' என்று அமைச்சன் சுருக்கிக் கூறினான்.

''சரி, இதில் என்னுடைய அபிப்பிராயம் என்ன இருக்கிறது?''

சே. தலைவன்: ராஜகுருவாகிய தங்களுடைய யோசனை ஏன் தேவையில்லை?

ஜோ. வ: தேவையில்லைதான், அதுவும் முடிவுகட்டிய ஒரு காரியத்திற்கு.

அரசன்: தேவையாக ஏன் இராது?

ஜோ. வ: சக்கரவர்த்தி, நோய் மிஞ்சிவிட்டது. வைத்தியர்கள் சிகித்ஸையால் அது முற்றிவிட்டது; இனி ஔஷதங்களுக்கு அடங்காது. என் சிகித்ஸை இனிப் பிரயோஜனமற்றது.

அரசன்: அவ்வாறாயின் நாங்கள் போரில் தோற்றுவிடுவோம் என்று நினைவா?

அரசன் சினங் கொண்டான் என்பதை அறிந்த சேனைத்தலைவன், ''எதற்காகத் தோல்வி? நமது மூலபலம் என்ன, அந்தப் பஞ்சன் சேனை வலிமை என்ன, நமக்குத் தெரியாதா?'' என்றான்.

ஒரு மந்திரி: செல்வ நிலைமையில்தான் கலிங்கம் என்ன......?

மு. அமைச்சன்: குருவுக்கு அவையெல்லாம் தெரிந்ததுதானே?

அரசன்: தங்கள் எண்ணந்தான் என்ன?

ஜோ. வ: சொல்லவேண்டுமாயின் சொல்லிவிடுகிறேன். சுத்த சுதந்தரன் எவனும் அயலானிடம் மிருகபலத்தை உபயோகிக்கக் கூடாது. அது அவனைக் கீழ்மைப் படுத்திவிடும்.

அரசன்: தங்களுடைய ஸ்தானத்தைக் கௌரவிக்கிறேம். தங்களிடம் கலிங்க ரத்தம் கலந்திருப்பதன் விளைவாகத் தாங்கள் இவ்வாறு ஒருதலைப் பட்சமாகக் கூறினீர்கள்!

ஜோ. வ: ஆயின், அரசே, என்மீது வீண் வருத்தம் வேண்டாம். தங்களைச் சந்திக்கும் காலம் வந்தால் சந்திக்கிறேன்.

பிறகு ஜோதிவர்மர் விடைபெற்று மகதநாட்டை விட்டு அகன்றார்.

சபையினர் முகம் சற்றே மலர்ந்தது; வெற்றியடைந்தனர். நல்ல வேளையாக அரசன் குருவின் புத்திமதிகளை நிராகரித்து விட்டான். "கலிங்கதேசத்தவராக இருத்தலினால்தான் ஆசிரியர் நியாயோபதேசம் செய்ய ஆரம்பித்தார். நாட்டபிமானம் இருக்கத்தானே செய்யும்?" என்று சபையினர் பேசிக்கொண்டனர்.

## 2

கலிங்கநாட்டின் தலைநகராகிய தௌலி யுத்த அரங்கமாயிற்று. மஹாநதியின் இருகரைகளிலும் மகதச் சேனைகள் புற்றிலிருந்து ஈசல் கிளம்புவதுபோல் பெருகிக் கொண்டிருந்தன. கலிங்கப் படையும் அலை மோதின. இருதரப்பிலும் நால்வகைப் படைகளும் ரணகளத்தில் சங்கநாதம் முழக்கின; பற்பலவிதமான யுத்த கோஷங்கள் வானைப் பிளந்தன. கலிங்கமன்னன் யுத்த ஆரம்பத்தில் சக்திதேவிக்கு மானஸிகப் பிரார்த்தனை செய்துகொண்டிருந்தான். பொன்னகையும் புன்னகையும் ஒருங்கே அவனிடம் திகழ்ந்தன. ரதத்தில் அமர்ந்தவாறே அவன் தானைத்தலைவர்களுக்கு உபாயங்கள் பலவும் அவ்வப்போது அறிவித்துக்கொண்டிருந்தான்.

அசோகன் அவ்வரசனுடைய வீரத்தோற்றத்தைக் கண்டு உள்ளூற வியந்தான்.

வெகுதூரத்தில் வில், வாள், சூலம், மழு முதலியன தாங்கிய காலாட்படை வீரர் ஒருவரையொருவர் தாக்கிக்கொண்டிருந்தனர். ஆயிரம் ஆயிரம் குதிரைப் படையினர் மனம் திடுக்கிட மோதினர். இடையில் அகப்பட்ட காலாட்படைகள் குதிரைகளின் காலடிகளில் பட்டுக் காயமடைந்தனர். இதனிடையே யானைகள் திரண்டு அநேக வீரர்களையும் குதிரைகளையும் சின்னபின்னப்படுத்தின. இருதரப்பிலும் சேதம் மிகுதியாயிற்று.

கலிங்கர் மகதப்படைக்குச் சரிசமமான வீரமும் திறமையும் காட்டினர். கலிங்கர் படை பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, ஒரு பகுதி நகரமாந்தர்களுக்கு மாற்றலரால் இடையூறு நேராவண்ணம் அவர்களைப் பாதுகாத்து நின்றது. மற்றொரு பகுதி அரண்மனை, கோட்டை கொத்தளங்களைப் பாதுகாத்து நின்றது. நகரின் வெளிப்புறத்தில் ஆயிரக்கணக்கான வீரர்கள் நாற்புறங்களிலும் அணிவகுத்து நின்றனர். மற்றொரு பெரும்பகுதிதான், லட்சக்கணக்கில் மகத சேனையோடு எதிரிட்டு நின்றது.

குதிரை வீரனொருவன் மஞ்சள் கொடி ஏந்தி அசோகனது தேர்ப்பக்கம் வந்து ராஜமரியாதை செய்துவிட்டு ஓலைச் சுருள் ஒன்றைச் சமர்ப்பித்தான். சக்கரவர்த்தி அதைப் படிக்கலானான்:

"பூபாலா, உன்னிடம் ஒரு யாசகம். அதை நீ அளிப்பாய் என்ற உறுதி கொண்டிருக்கிறேன். உன்னிடத்தில் அதைக் காணிக்கையாகக் கேட்கிறேன். மஞ்சள்கொடிபிடித்த வீரன் எவனுக்கும் நீ இடையூறு செய்யக்கூடாது. இந்த விருப்பத்தால் உனக்கும் மகத நாட்டிற்கும் சிறிதளவு இன்னலும் நேராதென்பதை நம்புக.

இங்ஙனம்,
ஜோதிவர்மன்."

அசோகன் இந்தக் கடிதத்தை வாசித்தான். அவனுடைய உள்ளத்தில் குரு பக்தி சுரக்க ஆரம்பித்தது. ராஜ சபையில் அவரை மனம் வருந்தச் செய்ததற்கு இந்தச் சந்தர்ப்பத்தை உபயோகித்து அவருடைய மனத்தைக் குளிரச் செய்ய எண்ணினான்.

அதே மஞ்சள் கொடி பிடித்த வீரன் மற்றொரு லிகிதத்தைக் கலிங்கமன்னனிடம் நீட்டினான்:

"அரசரே, நான் ஒரு பிட்சு. உம்மிடத்தில் ஒரு யாசகம். மஞ்சள் கொடி பிடித்த வீரர்கள் செய்யும் காரியங்களைத் தடை செய்யாதிருப்பதோடு அவர்களுக்கு யாதொரு தீங்கும் நேராவண்ணம் உம்முடைய சேனைகளுக்குத் தகவல் கொடுக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன். இதனால் தங்களுக்கும் தங்கள் நாட்டிற்கும் எவ்விதமான தீமையும் நேராதென்பது திண்ணம். இங்ஙனம்,

ஜோதிவர்மன்."

* * * * *

ஒரு பக்கம் யுத்தம் மும்முரமாக நடந்துகொண்டிருந்தது. இருதரப்பிலும் கால் ஒடிந்த வீரர்கள் எத்தனை! கண்ணிழந்தவர்கள் எத்தனை! அறுபட்ட தலைகள் எத்தனை! இவையெல்லாம் தரையில் உருண்டுகொண்டிருந்தன. ரத்த வெள்ளத்தில் அந்தப் பிணக்காட்டின்மீது மிதித்துத் துவைத்துக்கொண்டு சென்றன குதிரைப் படைகள். பெரிய பெரிய மரங்கள் புயற்காற்றால் அலறிக்கொண்டு விழுவது போலப் பல வீரர்கள் சூலாயுதத்தால் குத்தப்பட்டுக் கூக்குரலிட்டு அலறிய காட்சி நரகலோக பயத்தை உண்டு பண்ணியது.

அன்றைக் கொடுமையைக் காணச் சகியாதவனைத் தோற்றினான் தினகரனும். பின்பு அடிவானத்தில் தன்னை மறைத்துக் கொண்டான். பைய இருள் கௌவியது தௌலியை.

மறுநாள் முதல் நாளைவிட இரட்டிப்புச் சேனைகள் மும்முரமாக வெறிகொண்டு கடும்போர் நிகழ்த்தின.

இவ்வாறு பத்துத் தினங்களாய்க் கலிங்கப் படை சிறிது சிறிதாகச் சின்னபின்னப்பட்டுக்கொண்டிருந்தது. நகரின் வெளிப்புறத்தில் நின்ற கலிங்கப் படையும் அரங்கத்திற்கு இழுக்கப்பட்டது. கலிங்க மன்னன் மனம் உழன்றுகொண்டிருந்தது.

## 3

போர்க்களத்திற்குச் சற்றுத் தூரத்தில் வயதான ஒரு பெரிய ஆலமரம் வானத்தை அளாவி நின்றது. அது ஒரு தனிப்பட்ட உலகம் போல் தோற்றியது. சுற்றிலும் விழுதுகள், தூண்களைப் போல் பூமிக்குள் வேர் ஊன்றி நின்றன. அவ்விடம் இயற்கை அன்னை களி நடனம் புரியும் கோயிலாக விளங்கியது. அம்மரத்தைச் சுற்றிலும் நிழல் படர்ந்திருந்ததால் போர் செய்து குற்றுயிராய்க் கிடந்தோருக்கும் அங்கங்கள் சிதைந்தோருக்கும் அது புகலிடமாயிருந்தது.

இரு கட்சியையும் சேர்ந்த ஆயிரம் ஆயிரம் புண்பட்ட வீரர்கள் அங்கே படுக்கையிற் கிடந்தனர். அவ்விடத்தில் ஆகாரவசதிகளும் வைத்திய வசதிகளும் ஆயத்தம் செய்யப்பட்டிருந்தன. இரண்டு பௌத்த பிட்சுக்கள், ஒருவர் கிழவர் மற்றவர் வாலிபர்,

நோயாளிகளுக்கு அன்பு ததும்பத் தாங்களே மருந்திட்டுத் தொண்டுகள் பலவும் ஆற்றிக்கொண்டிருந்தனர். தவிர, தொண்டர்கள் பலர் அங்கே பணி செய்யக் காத்திருந்தனர். அவர்கள் பல பகுதியினராகப் பிரிக்கப்பட்டிருந்தனர். ஒவ்வொரு வகுப்பாரும் வெவ்வேறு விதமான அலுவல்களைக் கவனித்தனர். படுக்கைகளை விரிப்பதும் அசுத்தங்களை நீக்கி நறுமணம் கமழும் திரவியம் இடுவதும் ஆகிய தோட்டி வேலைகளையு உள்ளக் களிப்புடன் செய்தனர்.

அவ்வப்போது நோயாளிகளுக்கு வேண்டுவனவற்றைக் கடுகச் செய்யக் காத்திருந்தனர் மற்றொரு பகுதியினர். ஆகார வசதிகளைக் கவனிப்பதற்கும் போர்க்களத்தில் விழுந்து துடிக்கும் வீரர்களை மிகக் கவனமாக ஆலவிருட்சத்தினடியில் கொண்டு வந்து சேர்ப்பிப்பதற்கும் நூற்றுக் கணக்கான தொண்டர்கள் மஞ்சள் கொடிதாங்கிப் போர்க்களம் நெடுகிலும் பம்பரமாகச் சுற்றிக்கொண்டு வந்தனர்.

இரு கட்சி வீரர்களும் ஒருவர் பக்கத்தில் ஒருவர் அங்கே கிடத்தப்பட்டிருந்தனர். தங்களுக்குச் செய்யப்படும் தொண்டினால் அவர்களுடைய உள்ளம் மட்டற்ற மகிழ்ச்சியில் துள்ளித் துடித்தது. அவர்கள் அன்பு என்னும் வெள்ளத்தில் மூழ்கினர். வேற்றுமைப் பேய் ஓடி ஒளிந்தது. யாவரும் அமைதி பெற்றனர்; பரமன் அருளால் உள்ளம் குளிர்ந்தனர் அந்நோய்கொண்ட வீரர்கள்.

## 4

யுத்தம் முடிந்த பாடில்லை. அசோகன் கலிங்க வீரர்களுடைய திறமையை மெச்சினான்; அவர்களுடைய வீரத்தைப் புகழ்ந்தான்.

பதினோராவது தினம்; அசோகன் போர்க்கோலம் கொண்டான். குதிரைமீது ஆரோகணித்து யுத்தகளம் நோக்கிப் புறப்பட்டான். மகத வீரர்களும் உற்சாகங் கொண்டு எதிரிகளை நோக்கிப் பாய்ந்தனர்.

கலிங்கப் படையோ எண்ணிக்கையில் வந்துவிடும் அளவில் தோன்றியது. கலிங்கமன்னன் மனம் வெதும்பினான்; அவன் கண்கள் சிவந்தன; வாள் ஏந்தி மகத வீரர்கள் பல நூற்றுவரை வெட்டி வீழ்த்திக்கொண்டு வந்தான்; கண்டோர் காலன் என அஞ்சும்படி ஒருங்கே அமைந்திருந்தன அவனுடைய தோற்றமும் கோபமும். அசோகனை நெருங்கிவிட்டான் கலிங்கமன்னன்.

ஆம், சிங்கமும் சிங்கமும் எதிர்த்து நின்றன. அவர்களுடைய கண்கள் தீப்பொறி கக்குவன போன்று சிவந்துவிட்டன. வாளொடு வாள் மின்னலை வீசின. இருதிறத்துச் சேனைவீரர்களும் பதறிய நெஞ்சத்தினராயினர். சில மணி நேரம் பூபாலர்களுக்குள் தனிச் சமர் நடந்தது.

அவ்வளவு நாட்களாகப் பல்லாயிர வீரர்கள் சமர்செய்த யுத்தத்தின் முடிவு, பரீட்சையின் முடிவு, சில மணி நேரத்தில் தெரிந்துவிடும்! மகதர் தேசபக்தி யுடையவரா, அல்லது கலிங்க நாட்டினரா? எவர் தியாகம் பெரிது? இதோ தெரிந்து விடும். மகதர் யோக்கியரா, கலிங்கர் யோக்கியரா? இதோ தெரிந்துவிடும். வெற்றி பெறுபவர் யோக்கியரானால் தோல்வியுற்றவர் அயோக்கியர் அல்லவா? இம்முடிவெல்லாம் அசோகன், கலிங்கமன்னன் ஆகிய இருவருடைய ரத்தக்கொழுப்பு, உடல் வலிமை இவைகளைப் பொறுத்திருக்கின்றது! எவனுடைய உடல் மதம் எஞ்சி நிற்கிறதோ அவன் கட்சியே நியாயமுடைத்தாகும்! அவனே தியாகி! அவனே நாகரிகன்! மற்றவன் அயோக்கியன், அநாகரிகன், தேசத்துரோகி!

அசோகன் சோர்வு அடைந்துவிடுவான்போல் தோன்றியது. கலிங்கமன்னன் முன்னேறினான். வாளை ஓங்கிவிட்டான்! ஆ, ஆபத்து! 'சக்கரவர்த்தி, தளராதீர்கள்'' என ஊக்கங் கொடுத்தனர் மகதர். ஆம், மகத ராஜ்யத்தின் பெருமை அழிந்துவிடுமே! சற்று நேரத்தில் நிலைமை மாறிவிட்டது. கலிங்கமன்னன் கால்கள் தள்ளாடின; வாளேந்திய அவன் கரங்கள் நிலை கொள்ளாமல் சோர்ந்தன. ஆனால், அவன் சமர் செய்வதை நிறுத்தவில்லை; ஒரு கரத்தில் வாள் ஆடிக்கொண்டிருந்தது; மற்றொரு கையிலிருந்த கேடயம் அவனுடைய மார்பையும் முகத்தையும் விட்டு அகன்று சற்று விலகி ஒரு பக்கமாக வரவரக் கீழே தாழ்ந்துகொண்டே இருந்தது. சில நிமிஷ நேரங்களில் அவனுடைய வலது கரம் துண்டிக்கப்பட்டுக் கீழே விழுந்தது; அவன் தரையில் சாய்ந்தான். மகத சிங்கம் வெற்றி பெற்றது; எங்கும் போராரவாரம் எழுந்தது.

அப்போது மஞ்சள் கொடி தாங்கிய வீரர் நால்வர் கீழே மூர்ச்சையுற்றுக் கிடக்கும் கலிங்கமன்னனை மெதுவாகத் தூக்கிக்கொண்டு சென்றனர். அசோகன் இதைக் கவனித்தான். ''இவர்கள் யார்? கலிங்கமன்னனுடைய உடலை எங்கே தூக்கிச் செல்லுகின்றனர்?'' என்று அரசன் தன் தம்பியை நோக்கி வினவினான்.

''அண்ணா, இக்கொடி தாங்கிய வீரர்கள் செய்யும் காரியங்களைத் தடை செய்யக் கூடாதென்றும், இவர்களுக்கு யாதொரு தீங்கும் நிகழ்த்தல் கூடாதென்றும் யுத்த ஆரம்பத்தில் தாங்களே அறிக்கையிட்டீர்கள். இரண்டு பிட்சுக்கள், அதோ தெரியும் அந்த ஆலவிருட்சத்தின் கீழ்ப் பல தொண்டர்களின் உதவியால் புண்பட்ட வீரர்களுக்குச் சிகித்ஸை செய்கிறார்களாம். இவனும் அங்கேதான் தூக்கிச் செல்லப்படுகிறான்'' என்றான் மஹேந்திரன்.

அரசனுக்குச் சந்தேகம் உதித்துவிட்டது. ''இல்லை; ஒருகால், பகைவர்களின் சூழ்ச்சியாகவும் இருக்கலாம். இதை அறியவேண்டும்'' என்று சொல்லிக்கொண்டே முதல்மந்திரியை அழைத்து, ''நீங்கள் சென்று கோட்டையைத் தகருங்கள்; நானும் தம்பியும் இரண்டாவது அமைச்சரும் சென்று பார்த்து வருகிறோம்'' என்று கட்டளையிட்டான். ஆயுதம் தாங்கிய சில வீரர்கள் புடை சூழ ஆலவிருட்சத்தை நெருங்கினன் அரசன்.

## 5

அரசன் ஆலவிருட்சத்தின் நிழல் படர்ந்த விஸ்தீரணத்தைப் பார்த்தான்; வியப்படைந்தான். தன் அரண்மனை இவ்வளவு விசாலமாய் இருக்குமா வென்று ஐயுற்றான். ''ஆம், நம்மைப் போன்ற சக்கரவர்த்திக்கன்றோ இது உடைமையாதல் வேண்டும்!'' என்று அவன் ஆனந்தித்தான்.

இவ்வாறு அரசன் எண்ணமிட்டுக்கொண்டு அவ்விடத்தை நெருங்கினான். அப்பொழுது சற்றுத் தூரத்தில் நிற்கும் கிழப்பிட்சு, ''வருக, மகத மன்ன'' என்று வரவேற்றதும் மன்னன் நிமிர்ந்து நோக்கினான்; ஆச்சரியமடைந்தான். ''குருவே! தாங்களா, நல்ல சமயத்தில் தங்களைக் கண்டேன். போரில் வெற்றி இனி நமக்கே தான். கலிங்கர் முறியடிக்கப்பட்டனர். கோட்டையைத் தகர்க்கவேண்டியதுதான் இனி. என், இவ்வளவும் தங்களுக்குத் தெரியாதா? என்னை ஆசீர்வதியுங்கள்'' என்றான் அரசன்.

ஜோ. வ: ஜயமா அடைந்தீர்கள்?

அ: (குரு சொல்லும் அர்த்தத்தைத் தெரிந்து கொள்ளாமல்) ஆம், இதில் என்ன ஆச்சரியம்?

ஜோ: ஆச்சரியத்திற்கு என்ன இடம் இருக்கிறது? பச்சாத்தாபந்தான் உண்டாகிறது.

அ: எதற்காக?

ஜோ: தோல்வியுற்றதற்காக.

அ: (சிரித்துக்கொண்டே) கலிங்கர் தோல்விக்குத் தாங்கள் வருந்துவானேன்? ஹோ! தாங்களும் கலிங்கர் என்பதை மறந்துவிட்டேன். தாங்கள் அவர்களுக்காக வருந்துவது சகஜந்தானே!

ஜோ: இல்லை, அவ்வாறன்று. தாங்கள் அடைந்த தோல்விக்காகத்தான்.

அ: ஆகா! இது என்ன விந்தை! நானு தோல்வியுற்றேன்! (மளமளவென்று நகைக்கிருன்.)

ஜோ: ஆம்.

அ: யார் சொன்னுர்கள்?

ஜோ: நானே சொல்லுகிறேன்.

அ: குருவே, இது என்ன தர்க்கம்? ஏன் என்னிடம் மூரணுக நடந்து கொள்ளுகிறீர்கள்? (வருத்தமடைகிருன்).

ஜோ: புவனேந்திரரே! அழுக்காறு, வெகுளி சிறிதளவும் எனக்கு யார்மீதும் இல்லை என்பதைத் தாங்களே அறியமாட்டீர்களா? நியாயத்தைச் சொன்னுல் தங்களுக்கு அது விபரீதமாகத் தோற்றுகிறது.

அ: ஆயின் நான் எப்படித் தோல்வியுற்றேன்?

ஜோ: தங்களுடைய வெற்றி எவ்வாறு உண்டாயிற்று?

அ: இதென்ன, கலிங்கமன்னனேடு சமரிட்டு அவனையும் வீழ்த்தி அவனுடைய சேனைகளையும் முறியடித்தேனே.

ஜோ: அதன் அர்த்தம் என்ன?

அ: என்ன?

ஜோ: அவனைவிடத் தங்களுக்குத் தேகபலம் இருக்கிறது; அவன் இளைத்துவிட்டான்; அவன் தோற்ருன். தாங்கள் வெற்றிகொண்டீர்கள். இவ்வளவும், வெறும் மிருகபலந்தானே?

அ: எங்களுடைய வீரத்தை அல்லவா வெளிப்படுத்தினேம்? மகத மக்கள் வீரர்கள் என்பதை நிலை நாட்டியதில் தங்களுக்குக் கௌரவம் இல்லையா?

ஜோ: சரிதான், மக்கள் யாருக்காகப் போரில் கலந்துகொண்டனர்?

அ: தங்களுக்காக; தேச கௌரவத்திற்காக.

ஜோ: இல்லை, சக்கரவர்த்தியாகிய தங்களுக்காக; தங்கள் கட்டளைக்காகவே.

அ: என் கட்டளை என்பது தேசத்தின் நன்மைக்குத்தானே?

ஜோ: அப்படியானுல் தாங்கள் இடவேண்டிய கட்டளையின் பொறுப்பைத் துஷ்பிரயோகம் செய்துவிட்டீர்கள். தங்களுடைய ஸ்தானத்தின் பொருளையும் பொறுப்பையும் நினைவுபடுத்திக்கொள்ளுங்கள்.

அ: தாங்கள் குரு முறையாதலின் உங்களிடம் கோபத்தைக் காண்பிப்பது எனக்கு அகௌரவம். ஸ்வாமி, பிடிவாதம் வேண்டாம். என்னை ஆசீர்வதியுங்கள்.

ஜோ: அன்பரே, தங்களையும் மறந்து வியவகார புத்தியையும் மறந்து பேசுகிறீர்கள். நான் உண்மையான ஆசிரியன் என்று தாங்கள் அங்கீகரித்தால், பின்பு நான் தங்களுக்குத் துரோகம் செய்வேனு என்பதை எண்ணிப் பாருங்கள்.

அ: நான் எப்படி என் கட்டளையைத் துஷ்பிரயோகம் செய்தேன்?

ஜோ: மகத மக்கள் தங்களிடம், 'மகத ராஜ்யத்தில் உள்ள பரப்பில் நாங்கள் வாழமுடியாது. இந்தியா முழுவதையும் நாங்கள் அடக்கி ஆளவேண்டும். மற்றத் தேசங்களின் நாகரிகம் பொருளாதாரம் முதலியவற்றை நசுக்கி நாங்களே வாழவேண்டும்' என்று வேண்டினர்களா? அல்லது தாங்களாகவே உலகத்தைக் கட்டியாள ஆசை கொண்டீர்களா?

அ: என் ஜனங்களின் பிரதிநிதிகள், வீரர்கள், பிரமுகர்கள், மந்திரிகள், காரியஸ்தர்கள் ஆகியவர்கள் போர் செய்யச் சம்மதித்தால் அது ஜனங்களின் குரல் அல்லவா?

"மன்ன, இவர்கள் எல்லோரும் தங்கள் தங்கள் பதவியையும் பட்டத்தையும் அதிகரித்துக் கொள்ளுவதோடு நாட்டின் பெரும்பாலரான ஏழைகளை வாட்டி வதக்கி, முதலாளி வர்க்கம் தழைத்து ஓங்கும்படி செய்து தங்கள் இஷ்டம் போல் துரைத்தனத்தை ஆட்டிவைக்கலாம் என்ற சுய நோக்கத்தோடும் இப்போருக்குச் சம்மதித்தனர். நாட்டில் எந்த ஏழையின் பிரதிநிதி தங்கள் ஆலோசனையில் கலந்துகொண்டான்? அவ்வாறுயின், உண்மை சிறிது உண்டு. இதுதான் தாங்கள் செய்த யுத்தத்தின் கருத்து. அப்படி இல்லாவிட்டால், தங்கள் சுயநலந்தான் இவ்வளவு படுகொலைக்கும் காரணம். தங்கள் ஒருவர் விருப்பத்திற்காக, ஆ, எத்தனை ஆயிரக் கணக்கான ஜனங்கள் மாண்டனர்! அவர்களோடு எத்தனை குடும்பங்கள் பட்டுப் போயினவோ! இதோ, பாருங்கள்: அரசே, கை கால் ஊனமுற்றோர் பல்லாயிரர் வெந்தழலில் இட்ட புழுக்களாய்த் துடிக்கின்றனர். தங்கள் கண்களால், இதோ இந்த இடத்தைச் சுற்றிக் கிடந்து உழலும் ஜீவர்களைக் கவனித்துப் பாருங்கள். கொலை செய்த ஒருவனைத் தூக்கிலேற்ற உத்தரவிடும் தாங்களே, பிரஜைகளின் பிதாவே, பல்லாயிரக்கணக்கான உயிர்க்கொலை செய்வதென்றால் அரசன் என்பதற்குப் பொருள், பொறுப்பு, அமைப்பு என்ன இருக்கிறது? நம் தேசத்தவர்களைப் போல் கலிங்கர் அவர்களுடைய நாட்டை விரும்பமாட்டார்களா? அது அநீதியா? சுதந்தரர்களாக வாழ அவர்கள் மட்டும் கடவுளால் படைக்கப்படவில்லையா? பிறர் நாட்டை யுத்தம் என்ற நாகரிகப் பெயரால் கைப்பற்றினல், படுகொலைகள் நெஞ்சு அஞ்சாமல் செய்தால், அதுமட்டும் திருடனின் நியதி அன்றோ?

"உண்மையான சுதந்திர புருஷன் மற்றவரையும் தன்னைப் போல் நினைப்பான்; கௌரவிப்பான். மற்றவர்கள் போலிகள். உண்மையற்றவர்கள்; உள் ஒன்று வைத்துப் புறம் ஒன்று பேசுபவர்! ஆகையால் ஒரு தேசத்தினர் மற்றொரு தேசத்தைச் சுரண்ட, படுகொலைகள் புரிய, என்ன நியதி, என்ன அரசியல்தர்மம் இருக்கிறது? அரசே, என்கடமையை நான் செய்தாகவேண்டும்; செய்துவிட்டேன்; நீங்கள் அதை..." என்று ஜோதிவர்மர் கூறிக்கொண்டு வரும்பொழுது, "தண்...ணீர்..." என்று இருவர் ஒரே சமயத்தில் திணறித் திணறிக்கேட்டனர். உடனே, வர்மர் வெகு வேகமாக ஓடி ஒரு வீரனுக்குத் தண்ணீர் கொடுத்துவிட்டு, கலிங்க அரசன் பக்கம்

சென்று கருணை பொழிய அவனுக்குத் தண்ணீரை வாயில் சொட்டுச் சொட்டாக வார்த்துக் கொண்டிருந்தார். அசோகன் இவைகளைப் பக்கத்தில் நின்று கவனித்துக் கொண்டிருந்தான். அப்பொழுது கலிங்கமன்னன், "ஸ்வாமி, ரத்த வெறி கொண்ட எங்களுக்கு அன்பு வெறி ஊட்டுகின்றீர்களே" என்றான் பிரயாசையோடு. அவனுடைய பார்வையில் விகாரம் அதிகரித்தது. சிறிது நேரத்தில் இவ்வுலக வாழ்வை அவன் நீத்தான்.

இக்காட்சி அசோகனுடைய உள்ளத்தை உருக்கியது. கலிங்கமன்னன் கூறிய சொற்கள் அசோகனுக்கு உணர்ச்சியை உண்டாக்கின. தன் கண்முன் துடிக்கும் ஜீவர்களை அவன் பார்க்கப் பார்க்க மனம் உடைந்தான்; பச்சாத்தாபப் பட்டான். அன்பு என்னும் ஊற்று உள்ளத்தில் பெருக்கெடுத்தது. அவனுடைய இருதயத்தில் ஜோதிவர்மர் நந்தாவிளக்கு எற்றிவிட்டார். அரசன் குருவின் கமலபாதங்களில் விழுந்து நமஸ்கரித்தான்.

"அமர, எழுக" என்றார் ஜோதிவர்மர்.



# பிறந்த நாள்

கி. சங்கரநாராயணன், பி. ஏ., பி. எல்.

"அவாளவா அதிர்ஷ்டம் போல் எல்லாம் நடக்கும். லோகத்திலே எத்தனையோ புருஷாளும் பொம்மண்டாட்டிகளும் இருக்கா; இப்படியா இருக்கா?"

சச்சுவின் முணுமுணுப்பு சீனியின் காதில் விழவேயில்லை. அவன் ஆபீசில் கணக்கில் ஏதோ சிக்கல் ஏற்பட்டுப் பிராணனை வாங்கி விட்டது. அது இன்னும் சரிப்படவில்லை. 'இன்றைக்கு எப்படியாவது அந்தச் சனியனை அலசிப் பார்த்து முடித்து விடுவது' என்ற தீர்மானத்தோடு அன்று சிறிது முன்னதாகவே ஆபீஸுக்குப் புறப்பட எண்ணி இலையில் உட்கார்ந்தான்.

"நான் ஒருத்தி இருக்கேனேன்னு ஞாபகம் உண்டா? நான் எக்கேடு கெட்டால் என்ன? மனுஷாளுக்கு அவாளவா காரியந்தான் பெரிசு."

சீனியின் காதில் இந்த வாக்கியங்கள் அரையுங்குறையுமாக விழுந்தன. ஒரு நாளும் இல்லாதபடி சச்சு அப்படிப் பேசுவதற்குக் காரணம் என்ன என்று யோசிக்க அவனுக்கு நேரமில்லை.

"ஆபீஸுக்குச் சீக்கிரம் போகவேணும்; சோறு போடும்போது என்ன முணுமுணுப்பு!" என்று வள்ளென்று விழுந்தான். அவன் சங்கடம் அவனுக்கல்லவா தெரியும்?

"ஆபீஸ், ஆபீஸ், எப்போதும் ஆபீஸ்தான். வீடுன்னு ஒண்ணு இருக்கு; அங்கே ஒத்தி வேலைக்காரி மாதிரி இருக்கா என்கிற ஞாபகம் எதுக்கு?" அவள் அதோடு நிறுத்தவில்லை. சாப்பிட்டு முடிகிறவரையில் குறை சொல்லிக்கொண்டே இருந்தாள்.

அவன் ஒன்றையும் கவனியாமல் அவசரமாக நாலு பிடி வாயில் அள்ளிப் போட்டுக்கொண்டு ஆபீஸுக்குப் புறப்பட்டுவிட்டான்.

தன் சிறிய வீட்டின் வாயிற் கதவைப் 'படேர்' என்று கதவு பிளந்து போகும்படி சாத்தியவண்ணம் சீறிக்கொண்டே வெளியே வந்தான். ஆபீஸுக்குப் போக நேரமாகிவிட்டதால் தாமதிக்கமுடியவில்லை. சிடுசிடுத்த முகத்துடன் புருவங்களை நெரித்துக்கொண்டு கோட்டு ஜேபியில் கையைப் போட்டவண்ணம் தன் வேஷ்டியைக் குனிந்து பார்த்துக்கொண்டே உதடுகள் துடிக்கத் தெருக்கோடியை அடைந்தான். குனிந்த தலை நிமிராமலே கோபத்தினால் ஆவேசம் கொண்டவனாய் அதிவேகமாக நடந்தான். டிராம் நிற்கவேண்டிய இடத்தை அடைந்தான். கோபம் தணிந்த பாடில்லை. நடைபாதையில் அங்கும் இங்கும் உலாவினான். நிரபராதியான

பூமியைக் காலால் ஓங்கி உதைத்தான். அடுத்து அடுத்துப் பெருமூச்சும் விட்டான்.

சீனிக்கும் சச்சுவுக்கும் கல்யாணமாகி வருஷம் ஒன்று ஆகிறது. ஆறு மாதங்களாகத்தான் தனிக்குடித்தனம் ஆரம்பித்து நடத்திவருகிறார்கள். புதிய இல்வாழ்க்கையில் இதுவே முதல் முதலாக ஏற்பட்ட சச்சரவு. ஆகையினால்தான் சீனி இந்தப் பாடுபட்டான். "ச்சட்" "த்தட்" என்று முணுமுணுத்துக்கொண்டிருந்தான். டிராம் வந்து நின்றவுடன் வண்டிக்குள் பாய்ந்து ஒரு மூலையில் போய்த் தனியாக உட்கார்ந்தான். ஸாதாரணமாய்த் தினந்தோறும் அவனோடு அந்தச் சமயத்தில் ஸல்லாபம் செய்யும் டிராம் நண்பர்கள் சிலர் உண்டு. அவர்களுடன் அவன் வேடிக்கையாகப் பேசுவான். இன்று சீனி ஒரு விதமாக இருந்தது அந்த நண்பர்களை ஆச்சர்யத்துக்குள் ஆழ்த்தியது. ஒன்றிருவர் அவனை, "உடம்பு அசௌகரியமா?" என்று கேட்டதுகூட அவன் காதில் விழவில்லை. டிராம் ஜன்னலில் வலது முழங்கையை ஊன்றி இடதுகையை மோவாய்க் கட்டைக்கு முட்டுக்கொடுத்துக் குத்திட்ட பார்வையுடன் உட்கார்ந்திருந்தான். கண்டக்டர் இரண்டு தடவை நீட்டிய கையுடன் அவனைத் தாண்டிப் போனதுகூடத் தெரியவில்லை. "டிக்கட் ஸார்" என்றவுடன்தான் டிராமிலிருக்கும் நினைவு அவனுக்கு உண்டாயிற்று. திடுக்கிட்டவன்போல் சில்லறையை எடுத்துக் கண்டக்டரிடம் கொடுத்தான்.

டிராமில் இருந்த இருபது நிமிஷங்களும் சீனிக்குச் சுயநினைவே இல்லை. அவன் உடல் மாத்திரம் டிராமில் இருந்தது. காலையில் பரிமாறிக் கொண்டே கண்களில் நெருப்புப் பொறி பறக்க விஷவார்த்தைகளைக் கக்கிய சச்சுவின்மேலேயே உள்ளமெல்லாம் இருந்தது. சொன்ன வார்த்தைகளை எண்ண எண்ண அவன் இன்பக்கனவு மறைந்துவிட்டது. 'என்னைவிட மனைவியைப் பிரியமாக வைத்துக்கொள்ளுகிறவன் யார் இருக்கிறான்? அவள் வேறு நான் வேறு என்ற வேற்றுமை இல்லாமல் அவளுக்கு வேண்டிய சுற்றுக் காரியங்கள், அடுப்புச்சாம்பலை வாங்குவதுகூடச் செய்து கொடுத்திருக்கிறேன். அவள் வஸ்திரத்தைப் பிழிந்து உலரவைத்திருக்கிறேன். இதெல்லாம் சுயமரியாதையுள்ள எந்தப் புருஷன் செய்வான்?' என்று இன்னும் ஏதேதோ தனக்குள்ளே நினைத்து வருந்தினான். மறு விநாடி அவன் மனம் சற்று மாறியது. 'இல்லை, சச்சு அப்படிப்பட்ட பெண்ணல்ல. பொறுமையுள்ளவள்தான். அனாவசியமாக அவளுக்குக் கோபம் வருவானேன்? என்மேல்தான் ஏதாவது தவறு இருக்கவேண்டும். இல்லாவிட்டால் அவளுக்குக் கோபம் வந்திருக்காது' என்று எண்ணினான். சச்சுவின்மேல் கொஞ்சம் இரக்கம் கொண்டான். ஆனால் அடுத்த நிமிஷமே சற்று விலகி நின்ற அவனுடைய அகங்காரம் நன்றாக அவனை மறுபடியும் சூழ்ந்துகொண்டது. திரும்பவும் கோபம் தலைக்கேறியது. "சச்சுவின் பிறந்த வீட்டில் எல்லோருக்குமே வாய்க்கட்டு மட்டு" என்று வெறுப்போடு சொன்னான்.

டிராம் ஆபீஸுக்கு முன் வந்து நின்றதையும் சீனி கவனிக்கவில்லை. வண்டியில் ஏறுவோரும் இறங்குவோரும் அவன்மேல் மோதிய பின்தான் அவனுக்கு வண்டியை விட்டு இறங்கவேண்டுமென்ற நினைவு உண்டாயிற்று. கோபம் மட்டும் குறைந்தபாடில்லை. வேகமாக ஆபீஸுக்குள் நுழைந்தான். எதிரில் சந்தித்தவர்களைக்கூடச் சரியாகக் கவனியாமல் நேராகத் தன் மேஜையிடம் போய் உட்கார்ந்தான்.

ஆபீஸ் கட்டுக்களை எடுத்து வைத்துக்கொண்டு பிசகிப்போன கணக்கை மறுபடியும் பார்க்க ஆரம்பித்தான்; ஒன்றும் ஓடவில்லை. வேலையில் புத்தி நிலைத்து நின்றால்தானே. பேனாவை மேஜைமேல் விசிறிப் போட்டுவிட்டுத் தலையில் கையைவைத்துக்கொண்டு சிந்தனையில் மூழ்கினான். காலை வீட்டில் நடந்த நிகழ்ச்சிகள் ஒன்றன்பின் ஒன்றாய் அவன் மனக்கண்முன் வந்து தோன்றின. எவ்வளவு பிரயத்தனப்பட்டும் அவற்றை மறந்து வேலையில் ஈடு பட அவனால் முடியவில்லை. சச்சுவின் துர்க்கா ஸ்வரூபமே அவன் மனத்தில் கோயில் கொண்டிருந்தது. ஆபீஸில் அவனுடன் வேலை செய்பவர்கள் அவனைப் பார்த்து உடம்பு அசௌகர்யமென்று எண்ணி அவனை உபசரித்து ஓய்வு எடுத்துக்கொள்ளும்படி கூறினார்கள். கணக்கில் ஏற்பட்ட சிக்கலும் வீட்டில் நடைபெற்ற சம்பவமும் அவனுக்கு மிக்க வருத்தத்தை உண்டாக்கின. நல்லவேளையாக அன்று சம்பளநாளாக இருந்தது. சம்பளம் பெற்றபோது சிறிது ஆறுதலடைந்தான். ஒருவாறு மாலை ஐந்துமணியும் ஆயிற்று. சீனி வீட்டிற்குப் புறப்பட்டான். வீட்டில் சச்சு காபிகொடுப் பாளோ அல்லது மௌனமாக இருந்துவிடுவாளோ என்ற சந்தேகம் உண்டாயிற்று. காலையிலும் அவன் சரியாகச் சாப்பிடவில்லை. ஒரு ஹோட்டலுக்குச் சென்று மசாலா தோசை, காபி முதலானவைகளைக் கொஞ்சம் பார்த்துக்கொண்டு புறப்பட்டான். வயிறு கொஞ்சம் நிரம் பியதும் மனத்தின் உஷ்ணமும் தானாகக் குறைய ஆரம்பித்தது. புத்தி நிதானத்திற்கு வந்துகொண்டிருந்தது. தான் சச்சுவின் மனம் நோகும் படி ஏதாவது சொல்லி இருக்கவேண்டும் என்ற தீர்மானத்திற்கு வந்தான். அவன் மனம் இளகியது. சச்சுவிடம் உடனே மன்னிப்புப் பெறவேண்டும் என்ற அவா உண்டாயிற்று. 'நாம்தான் ஆபீஸுக்கு ஓடிவந்து விட்டோம். கோபங்கொண்டால் சச்சுவுக்குப் போக்கிடம் ஏது? வீட்டி லேயே கிடந்து அவியவேண்டியதுதானே. பாவம்! என்ன வருத்தப் படுகிறாளோ! அழுகிறாளோ என்னவோ? காலை முதல் சாப்பிட்டாளோ இல்லையோ!' என்று எண்ணும்போது அவனுக்குத் துக்கம் தொண்டையை அடைத்துக்கொண்டது. சச்சு சில மாதங்களாக ஸ்நானம் செய்யாமல் இருந்தாள். அந்த விஷயம் அவனுக்கு ஞாபகம் வந்தவுடன் அவன் தன்னையே நொந்துகொள்ளலானான். அவள் என்ன காரணத்துக்காக அப்படிப் பேசினாளென்று அப்பொழுதே கேட்டிருந்தால் இவ்வளவு தூரத் திற்கு வந்திராதே என்று பச்சாத்தாபப்பட்டான். 'பெண்கள் மனம் மலர் போன்றது. அதைக் கசக்கி மோந்து பார்க்கக்கூடாது. அவர்கள்

தங்கள் விருப்பத்தை வெளிப்படையாகத் தெரிவித்துக் கொள்ளமாட்டார் கள். அவர்கள் குறிப்பறிந்து நடந்துகொண்டால் எவ்வளவோ நன்மையும் சந்தோஷமும் உண்டாகும்' என்று எங்கேயோ படித்திருந்தது இலக்கிய ரஸிகனாகிய அவனுக்கு ஞாபகத்திற்கு வந்தது. 'நான்தான் முட்டாள்' என்று வாய்விட்டுச் சொல்லிக்கொண்டான்.

சீனியின் கால்கள் எங்கும் நிற்கவில்லை. வீட்டிற்குச் செல்ல விரைந் தன. டிராமில் ஏற ஓடினான். சைனாபஜாரிலிருந்த நகைக் கடை ஒன்று அவன் கண்களைக் கவர்ந்தது. அதைக் கண்டவுடன் அவன் கால்கள் சற்றுத் தயங்கின. கடைக்குள் நுழைந்தான்.

அங்கே கறுப்பு வெல்வெட்டுப் பெட்டியிலிருந்த முத்து மாலை ஒன்றை அவன் கையில் எடுத்தான். போனமாதமுதல் அந்தப் பக்கத்தில் அவன் வரும்போதெல்லாம் அந்த மாலை அவன் கண்களை இழுத்து வந்தது. 'இந்த மாலை சச்சு கழுத்தில் இருந்தால்—' என்று அவன் யோசனை விரியும். அவன் அகக்கண்ணில் அவனது பூர்ணப் பிரேமைக்கும் லக்ஷியமான ஸரஸ்வதி மாலையை அணிந்து முகத்தில் புன்னகை தவழ நிற்கும் கோலம் தோற்றும்.

இன்று அக்காட்சியை உண்மைக்காட்சியாகக் கண்டு மகிழ்வ தென்ற தீர்மானத்தோடுதான் அவன் கடைக்குள் நுழைந்தான். சம்பளப் பணம் கையிலிருக்கும்போது அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதற்குத் தடை என்ன?

அதை உடனே வாங்கிக்கொண்டு டிராமில் ஏறினான். டிராமிலிருந்த இருபது நிமிஷங்களும் வேறுவிதமான மனக்கோட்டைகளைக் கட்டிக்கொண் டிருந்தான். முத்துமாலையைக் கண்டதும் பூரித்த சச்சு அப்படியே சொக் கிப்போய் நிற்கும் காட்சியை மனத்தில் சித்திரித்துப் பார்த்துக்கொண்டிருந் தான். வீட்டுக்கு வந்துசேர்ந்தான்.

என்ன பரிதாபம்! வீடு பூட்டப்பட்டிருந்தது!! மனம் பதைபதைத் தது. க்ஷணநேரம் ஒன்றும் புரியாமல் சீனி நின்றான். அவன் மனம் என்ன என்னவோ நினைத்துக் குழம்பியது. மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு எதிர் வீட்டில் சச்சு சாவி கொடுத்திருக்கிறாளா என்று விசாரித் தான். அவள் சாவி கொடுத்திருந்தாள். அவசரமாக வீட்டைத் திறந்து அறை அறையாகத் தேடினான். எதைத் தேடினானென்று அவனுக்கே தெரியாது. பூட்டி இருந்த வீட்டிற்குள் சச்சு எப்படி இருப்பாள்? ஆனால் பேதை மனம் அவளைத் தேடும்படி அவனைத் தூண்டியது. வீடு நிச்சப்தமாக இருந்தது ஒருவிதமான பயத்தை உண்டுபண்ணிற்று. 'பிறந் தகம் சென்றுவிட்டாளோ!' என்று ஏங்கினான். சற்றுநேரம் ஒன்றும் தோன்றாமல் பிரமித்து விழித்தான்.

மேஜைமேல் மைக்கூட்டின் கீழ் மடித்து வைத்திருந்த ஒரு கடிதம் அவன் கண்ணில் பட்டது. எடுத்துப் பிரித்தான். படிப்பதற்குள் அவன்

முகம் வேர்த்தது; கைகால்கள் உதறின. உள்ளம் பதைபதைத்தது. படித்து முடித்த பிறகுதான் "அப்பாடா!" என்று நாற்காலியில் சாய்ந்தான்.

"முன்பு நாம் செய்த ஏற்பாட்டின்படி இன்று நடைபெறுமென்று எதிர்பார்த்தேன். நீங்கள் கிருபை செய்யவில்லை. நானாவது அந்த ஏற்பாட்டை ஒரு விதமாக நடத்திவிடலாமென்று என் தோழி சரளாவுடன் சினிமாவுக்குப் போகிறேன்.....சர்க்கரைப் பீரோவில் காபி வைத்திருக்கிறேன்."—இதுதான் அந்தக் கடிதத்தில் எழுதியிருந்தது.

அப்போழுதுதான் சீனியின் மந்தபுத்திக்கு மர்மம் இன்னதென்று புலப்பட்டது. அன்று அவளுடைய பிறந்த நாள். அதைக் கொண்டாடுவதற்கு ஏதாவது சந்தோஷமாகப் பொழுது போக்குவதென்றும் சீனியும் சச்சுவும் சினிமாவுக்குப் போய்வருவதென்றும் ஒரு வாரத்துக்கு முன் பேசி முடித்திருந்தனர். இந்த ஏற்பாட்டைத்தான் கடிதத்தில் குறித்திருந்தாள்.

அதை முற்றும் மறந்து ஒரு வார்த்தைகூட அதைப்பற்றிச் சொல்லாமல் ஆபீஸுக்குப் போவதென்றால் அவன்மேல் ஏன் கோபம் வராது? பிறந்தநாளைக் கொண்டாட ஒருவிதமான ஏற்பாடும் நடக்காததைச் சச்சு எவ்விதம் சகிப்பாள்? சச்சு நேற்று வரையில் சின்னக் குழந்தைதானே? தன் ஆசைகளையும் அபிலாஷைகளையும் அடக்கிவைத்துக்கொள்ள அவளுக்கு அவ்வளவு விரக்தி வந்துவிட்டதா என்ன? சீனி உடனே மனத்தில் ஓர் அபூர்வமான சூழ்ச்சி புரிய நிச்சயம் செய்துகொண்டான்.

* * * *

"என்ன, இவ்வளவு சீக்கிரமா வந்துவிட்டீர்கள்?" என்று சொல்லிக் கொண்டே புன்சிரிப்புடன் சாந்தஸ்வரூபிணியாகச் சச்சு ஆறரைமணிக்கு வீட்டிற்குள் நுழைந்தாள்.

அவள் நுழையும்போதே சீனி எதிரில் சென்று அசட்டுச் சிரிப்புடன் முத்துமாலையை, "சூ! மாயக்காளி, பார்!" என்று எடுத்துக்காட்டி அவள் கழுத்தில் சூட்டினான்.

"என்ன இது; இதுவும் சினிமாக்காட்சிதானோ!" என்று சச்சு பிரமித்தாள்.

"இல்லை, இல்லை, வாஸ்தவமான காட்சி. இன்று உன் பிறந்த நாளுக்கு நீ எதிர்பாராமல் இருக்கும்போதே இதைக் கொடுக்கவேண்டுமென்று நான் திட்டம் போட்டிருந்தேன். நீ அதற்குள் அவசரப்பட்டு......" என்று தான் நினைத்துவைத்திருந்த 'சூழ்ச்சி'யின்படி சொல்லி முடிப்பதற்குள், "காபி சாப்பிட்டேளோ?" என்று கேட்டபடியே அவள் உள்ளே நுழைந்தாள்.

---

# தெய்வ சித்தம்

'மாயாவி'

## 1

கிருஷ்ணமூர்த்திக்கும் எனக்கும் சிநேகம் ஏற்பட்டுச் சரியாக மூன்றுமாதம் ஆகவில்லை. ஆனால் அதற்குள்ளாகவே, நாங்கள் உயிருக்குயிரான நண்பர்களாய் விட்டோம்.

கிருஷ்ணமூர்த்தி, எங்கள் காலேஜ் புரொபசர் வைத்தீசுவர ஐயரின் ஒரே பிள்ளை. பி. ஏ. (ஹானர்ஸ்) பரீக்ஷையில் முதன்மையாகத் தேறிய அவன், யாதொரு வேலைக்கும் பிரயத்தனம் செய்யாமல் வீட்டிலே அடைந்துகிடந்தான். அவன் தந்தை நினைத்திருந்தால், அவனையும் பெரிய உத்தியோகத்தில் அமாத்தியிருக்கலாம்; அத்தனை செல்வாக்கு அவருக்கு இருந்தது. கிருஷ்ணமூர்த்தியோ, இவற்றில் ஒன்றையும் விரும்பவே இல்லை. ஏன்? எவ்வளவு வருந்தி அழைத்தாலும், அவனை வீட்டை விட்டு வெளியே கிளப்புவதுகூடச் சற்றுச் சிரமம். நான் ஒன்றிரண்டுதடவை, அவன் இவ்வாறு இருப்பதன் காரணத்தைக் கேட்டிருக்கிறேன். அதற்கு அவன் கூறிய பதிலிலிருந்து நான் கிரகித்துக்கொண்டது, "வாழ்க்கைப்படியில் எங்கோ சறுக்கி விழுந்ததுதான் அவன் முன்னேற்றத்தைத் தடைசெய்தது" என்பதே. ஆனால் அதன் முழு விவரங்களையும் நான் அறிந்துகொள்ளக்கூடவில்லை.

* * * * * *

அந்த வருஷம் என் தலை தீபாவளி. மாமனாரிடமிருந்து எனக்கு அழைப்புக் கடிதம் வந்தது. கோமதியின் கடிதமும் அதோடு வந்தது என்று நான் சொல்ல வேண்டியதில்லை.

அக்கடிதங்களுடன் நான் மூர்த்தியிடம் சென்று அவனையும் என்னுடன் தீபாவளிக்கு வரும்படி அழைத்தேன்.

"என்னை மன்னித்துக்கொள், மணி. தீபாவளிக்கு மட்டும் என்னைக் கூப்பிடாதே. வேறு எந்த விசேஷத்திற்கு வேண்டுமானாலும் நான் வருகிறேன்" என்றான்.

"அது முடியாத காரியம். நீ வந்துதான் ஆகவேண்டும். நாம் நண்பர்களான பின், இப்பொழுதுதான் உன்னை முதல்முதலாக ஒரு விசேஷத்திற்கு அழைக்கிறேன். அந்த அழைப்பை நீ மறுக்கவே கூடாது. மேலும் நீ இப்படி வீட்டில் அடைந்துகிடந்து, மனத்தில் எதையோ நினைத்துக்கொண்டு எப்பொழுதும் வருத்தப்பட்டுக்கொண்டிருப்பது எனக்குக் கட்டோடு பிடிக்கவில்லை. ஓர் உல்லாச யாத்திரையாவது செய்தால்தானே உன் மனக்கவலை சிறிது நீங்கும்? கட்டாயம் நாளை என்னுடன் புறப்படத்தான் வேண்டும்" என்று பலவந்தப்படுத்தினேன்.

"உன் அழைப்பை நான் மறுப்பதாக எண்ணிக்கொள்ளாதே. நீ சொல்கிறபடி உல்லாச யாத்திரை எனக்கு அவசியந்தான். ஆனால் உன்னுடன் தீபாவளிக்கு

வருவதால், என் மனக்கஷ்டம் இன்னும் அதிகரிக்குமே தவிரக் குறையப்போவ தில்லை'' என்றான்.

நான் சிறிதும் விட்டுக்கொடுக்காமல் ஒரு மணிநேரம் அவனுடன் வாதாடி அவனைச் சம்மதிக்கச் செய்தேன். எங்கள் ஏற்பாட்டின்படி, நாங்கள் மறுநாள் (தீபாவளிக்கு முந்தியநாள்) காலையில் $7\frac{1}{2}$ மணிக்குச் செங்கோட்டைப் பாஸஞ்சரில் தஞ்சாவூருக்குப் பிரயாணமானோம்.

## 2

மழைக்கும் தீபாவளிக்கும் என்ன உறவோ தெரியாது; தீபாவளி வருவதும், அடைமழை பிடித்துக்கொள்வதும் வருஷந்தோறும் நடக்கும் ஒரு சம்பவமாயிருக்கின்றன. வருஷத்தில் பாக்கி நாட்களிலெல்லாம் மழை கொட்டு கொட்டென்று கொட்டக்கூடாதா? இந்தத் தீபாவளியை முன்வைத்துத்தானா பெய்யவேண்டும்?

எழும்பூர் ஸ்டேஷனை விட்டு எங்கள் வண்டி புறப்பட்டதும் மழை பிடித்துக் கொண்டது. வழி நெடுக மழைதான். கதவுகளையும் ஜன்னல்களையும் இறுக மூடி விட்டோம். நல்ல வேளையாக நாங்கள் ஏறியிருந்த வண்டியில் அவ்வளவு ஜனக் கூட்டம் இல்லை. நீட்டி நிமிர்ந்து பெஞ்சியில் படுத்துக்கொண்டோம்.

நான் எவ்வளவு உல்லாசமாகப் பிரயாணம் செய்யவேண்டுமென்று எண்ணியிருந் தேனோ, அவ்வளவையும் மழை கெடுத்துவிட்டது. மேலும் மூர்த்தியோ, உற்சாக மற்றவனாய் ரெயிலின் மேற்பரப்பைப் பார்த்து ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்தான்.

சாதாரணமாக, மற்றச் சமயங்களில் அவன் உற்சாகமற்றவனாயிருந்தாலும், என்னைக் கண்டுவிட்டால் ஸந்தோஷமாகப் பேசிக்கொண்டிருப்பான். ஆனால் இன்று ரெயிலேறிய பிறகு அவன் முகத்தில் ஸந்தோஷத்திற்குப் பதிலாக வருத்தக் குறியே அதிகமாகக் காணப்பட்டது. ''உன்னுடன் தீபாவளிக்கு வருவதால், என் மனக்கஷ்டம் இன்னும் அதிகரிக்குமே தவிரக் குறையப்போவதில்லை'' என்று அவன் முந்திய நாள் சொன்னது போலவே இருந்தது அவன் தற்போதைய நடவடிக் கையும். எதற்காக இச்சமயத்தில் அவன் மனக்கவலை அதிகரிக்கவேண்டும்? ஒரு வருக்கும் வெளியிடாமல் மனத்துள்ளே புதைத்துக்கொண்டு நாள்தோறும் இப்படி வருத்தப்பட்டுக்கொண்டிருக்கும் ரகசியம் என்ன? அவனைப் பித்தனாகச் செய்த அச்சம்பவத்தை அறிய என் மனம் என்னைத் தூண்டியது. ''இந்த இழவு மழை இன்றுதானா பெய்யவேண்டும்? இதனால் நமக்கு எவ்வளவு அசௌகரியம் பார்'' என்று அவனைப் பேச்சிற்கு இழுத்தேன்.

''இதையெல்லாம் உத்தேசித்தே நான் வரமாட்டேன் என்றேன். நீ என்னை அடிபிடி கட்டாயமாய் இழுத்து வந்து விட்டாய்'' என்றான் சிந்தனை கலந்த மூர்த்தி.

''நீ சொல்வதை நான் கொஞ்சங்கூட நம்பவில்லை. இந்த மழையைக் காரண மாக வைத்து நீ ஒரு நண்பனின் கோரிக்கையை மறுப்பாயென்று நான் நினைக்க முடியாது. நீ இவ்வாறு சந்தோஷமிழந்து காணப்படுவதற்கு வேறு ஏதாவது அடிப் படையான காரணம் இருந்துதான் ஆகவேண்டும். அதை மறைத்து நீ மழையைச் சாக்கிடுவானேன்?'' என்று அவனைப் பேச்சில் மாட்டினேன்.

''நீ சொல்வதிலும் உண்மை இருக்கத்தான் செய்கிறது. ஆனால் அதுதான் என் மனக்குறைக்கு முக்கிய காரணமென்று அவ்வளவாகச் சொல்லமுடியாது'' என்று மழுப்பினான்.

"மனத்தை மூடாதே; மூர்த்தி, என்னிடங்கூட மறைக்கும்படி அவ்வளவு ரகசியமானதா அது?" என்று கேட்டேன்.

"வேண்டாம், மணி. என் மடமைக்காக நான் இப்பொழுது படும் மன அவஸ்தை போதாதா? நீ வேறு அதைக் கேட்டுச் சிரிக்கவேண்டுமோ?"

"என்ன, சிரிப்பதா? என் புத்தி அவ்வளவுக்குக் கெட்டுப் போய்விடவில்லை. எப்படியானாலும் நீ அதை இன்று வெளியிட்டுத்தான் ஆகவேண்டும்" என்று அவனைக் கட்டாயப்படுத்தினேன்.

"அந்த மூடச்செய்கையை நீ கேட்டுத்தான் ஆகவேண்டுமென்றால், சொல்கிறேன்" என்று ஆரம்பித்தான் கிருஷ்ணமூர்த்தி.

## 3

என் தாயை உனக்குத் தெரியாது. அவளை, பாவி நான் மூன்று வருஷங்களுக்குமுன் விழுங்கிவிட்டேன். என் மடமையே அவள் சாவிற்குக் காரணம்.

அவள் என்மீது வைத்திருந்த பாசத்தை அளவிடமுடியாது. "என் பிள்ளை, என் பிள்ளை" என்று ஒருவர் விடாமல் எல்லோரிடமும் பெருமையடித்துக்கொள்வாள். நானும் அவளிடம் பெரு மதிப்பு வைத்திருந்தேன். எங்கள் பாசத்தைக் குலைக்கும் சம்பவம் ஒன்று சீக்கிரத்தில் என் வாழ்க்கையில் நேரிட்டது.

'ஹானர்ஸ்' பரீக்ஷையில் நான் தேறியதும், அவள் என் கல்யாணத்தை நிச்சயம் செய்தாள். சுந்தராங்கியான ஜானகியின் கையைப் பிடிக்கும்போது, என்னைப்போல் அதிருஷ்டசாலி யாருமே இருக்கமுடியாது என்று நான் பெருமை கொண்டேன்.

ஜானகி தாய் தந்தையற்றவள். அவள் அண்ணு ராஜாராமுக்குச் சிதம்பரம் தேவஸ்தானத்தில் வேலை. அவனுடன் சிதம்பரத்தில் இருந்தாள் ஜானகி. அவ்வளவு பணக்காரக் குடும்பம் இல்லை என்றாலும், சாதுக்கள், ஒழுக்கத்தில் சிறந்தவர்கள் என்ற சொல்லே என் தாயை அச்சம்பந்தத்தில் கவியச் செய்தது.

அந்த வருஷம் தலை தீபாவளிக்கு எல்லோரையும் புறப்பட்டு வரும்படி எனக்குத் தனியாகவும், என் பெற்றோருக்குத் தனியாகவும் ராஜாராம் கடிதம் எழுதியிருந்தான். அச்சமயம் என் தந்தைக்குச் சிறிது உடம்பு அசௌக்கியமாயிருந்ததால் நான் மாத்திரமே போகவேண்டியதாயிற்று. நாம் இப்பொழுது போகும் இதே ரெயிலில், இதே தலைதீபாவளிக்கு அப்போது எவ்வளவு களிப்புடன் சிதம்பரத்திற்குப் பிரயாணம் செய்துகொண்டிருந்தேன் தெரியுமா? என் ஜானகியைக் கல்யாணத்தின்பின் மறுபடி பார்க்கப்போகிறேன் என்பதை நினைத்தபோது, நான் உள்ளூற ஆனந்தத்தை அடைந்தேன். அவளுடன் எப்படிப் பேசுவது, என்ன பேசுவது என்பதைப்பற்றி நான் மனக்கோட்டை கட்டிக்கொண்டிருந்தேன்.

ஆனால் மறு ஐந்து நிமிஷத்தில் என் மனக்கோட்டை தகர்த்து எறியப்பட்டது. ரெயிலில் என்னுடன் பிரயாணம் செய்துகொண்டு வந்தார் ஒரு பெரியவர். அவருக்கு வயது அறுபதிற்குமேல் இருக்கும். வெகு தூரத்திலிருந்து வருபவர்போல் காணப்பட்டார். அத்தனை நேரமும் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்த அவர் கொட்டாவி விட்டுக்கொண்டு எழுந்து உட்கார்ந்தார். என்னை ஒரு தடவை மேலும் கீழும் பார்த்துவிட்டு, "எந்த ஊருக்குப் போகிறாயப்பா?" என்று கேட்டார்.

"சிதம்பரம் வரையில்" என்றேன் நான்.

"நானும் சிதம்பரத்திற்குத்தான் வருகிறேன். அங்கே என்ன, வியாபார விஷயமாகப் போகிருயா?" என்று கேட்டார் அவர்.

"இல்லே, தீபாவளிக்காக வேட்டகத்திற்குப் போகிறேன்" என்று பெருமை யுடன் எடுத்துரைத்தேன்.

"சிதம்பரத்திலா உன் வேட்டகம்? உன் மாமஞர் பெயர் என்ன?"

"என் மாமஞர் இறந்து போய்விட்டார். என் மைத்தனன் ராஜாராமுக்குச் சிதம்பரம் தேவஸ்தானத்தில் வேலே" என்றேன்.

"ஓ! ராஜாராமின் தங்கை ஜானகியின் கணவஞ? அந்தத் துர்ப்பாக்கியஞ நீ?' என்ருர்.

அவர் வார்த்தைகள் என்னேத் திடுக்குறச் செய்தன. என் சந்தோஷம் ஓடி மறைந்தது; கவலே என் மனத்தைச் சூழ்ந்தது. என் முகமாறுதலேப் பார்த்துத்தாஞே என்னவோ, அக்கிழவர் ஜன்னல் பக்கமாகத் தம் முகத்தைத் திருப்பிக்கொண்டார்.

"நீங்கள் சொல்வதொன்றும் புரியவில்லேயே. சற்று விவரமாகச் சொல்லுங் கள்" என்று அவர் கவனத்தை இழுத்தேன்.

"அது பெரிய கதை, நீ சிறுபையன். உனக்கு அதைப்பற்றித் தெரிந்துகொண்டு ஆகவேண்டியது ஒன்றுமே இல்லே. ஆனல், தீர விசாரியாமல், உன்பெற்றேர் இந்தச் சம்பந்தத்தில் வந்து இறங்கிஞர்களே என்றுதான் விசனப்படவேண்டியதாயிருக்கிறது. நான் அந்த ரகசியங்களேயெல்லாம் வெளியிட்டால், ஒரு பெண்ணின் வாழ்க்கையைக் கெடுத்த பாவம் என்னே வந்து சாரும். எனக்கு ஏன் இந்த வம்பெல்லாம்?" என்று சொல்லி மறுபடியும் முகத்தைத் திருப்பிக்கொண்டார்.

என் மனத்தில் கோடானுகோடி எண்ணங்கள். அவைகளினூடே சந்தேகப் பேயின் தாண்டவம். முழுவிவரங்களேயும் தெரிந்துகொள்ள ஒரு துடிப்பு. "சற்று இங்கே பாருங்கள், தாத்தா. நான் அவசரப்பட்டு அப்படியொன்றும் ஒரு பெண்ணின் வாழ்க்கையைக் கெடுத்துவிடமாட்டேன். நீங்கள் தயை செய்து அந்த ரகசியத்தைச் சொல்லுங்கள்" என்று கெஞ்சினேன்.

ஒரு நிமிஷம் அவர் என் முகத்தை உற்றுப் பார்த்தபடி இருந்தார். "நான் சொல்லப்போகும் சங்கதி உன் மனத்தில் ஈட்டிகொண்டு குத்துவதுபோல் இருக் கும். சம்மதமாஞல் சொல்லுகிறேன்" என்ருர்.

"சும்மா சொல்லுங்கள். என்னவாஞலும் பாதகம் இல்லே" என்றேன்.

"நீங்கள் சம்பந்தம் செய்துகொண்டிருக்கும் குடும்பத்தினருக்கு நடத்தை அவ் வளவு போதாது. அதிலும் உன் மைத்துனன் ராஜாராம் மனேவியின் நடத்தைப் பிசகு ஊரறிந்த சமாசாரம். உன் மனேவி எப்படியோ தெரியாது. இருந்தாலும் பன்றியுடன் சேர்ந்த கன்றுதானே? இன்றைக்கு இல்லாவிட்டால் நாளேக்கு..."

"போதும் நிறுத்துங்கள்" என்று அலறினேன் நான். கோபமும் அவமான மும் என்னேச் சூழ, "இதற்கு ஏதாவது அத்தாட்சி உண்டா?" என்று கேட்டேன்.

"அத்தாட்சி என்ன வேண்டிக்கிடக்கிறது? அவர்கள் இதையொன்றும் ரகசிய மாய்ச் செய்யவில்லேயே. உலகறியத்தான் நடக்கிறது" என்ருர் அவர்.

அவர் வார்த்தைகள் ஒவ்வொன்றும் பேரிடியாக என்னேத் தாக்கின. நான் அப்படியே கல்லாய்ச் சமைந்துவிட்டேன். என் மன அலேகளின் கொந்தளிப்பு அடங்க வெகு நேரமாயிற்று. "நான் அப்பொழுதே சொல்லவில்லேயா, அவ்வார்த்

தைகள் உன்னைப் புண்படுத்துமென்று?'' என்று அக்கிழவர் சொன்னபோது என்னை ஏளனம் செய்வதுபோல் இருந்தது.

என்னுள் ஒரு பெரிய போராட்டம் நிகழ்ந்தது; 'ஊருக்குத் திரும்புவதா? அல்லது சிதம்பரத்திற்குப் போய், வேறு யாரிடமாவது இதைப்பற்றி விசாரிப்பதா? சீ! இந்த வெட்கக்கேட்டை வெளியில் விசாரித்து என் மானத்தை நானே போக்கடித்துக் கொள்வதா? இச்செய்தியை என் பெற்றோர் அறிந்தால் அவர்கள் மனம் என்ன பாடு படும்! வெகுநேரம் இவைகளைப்பற்றிச் சிந்தித்து ஒரு முடிவிற்கு வந்தேன். இவ் விஷயத்தை என்னுடனே வைத்துக்கொள்ள வேண்டும். யாரிடமும் இதைப்பற்றிச் சொல்லக்கூடாது. கடந்த சம்பவங்கள் எவ்வளவு இருந்தாலும், அவற்றையெல்லாம் உதறித்தள்ளிவிட்டு, ஜானகியை இனி ஒரு நிமிஷமும் சிதம்பரத்தில் விட்டுவைக் காமல், அடுத்த ரெயிலிலே சென்னைக்கு அழைத்து வந்துவிடவேண்டும். நாளடை வில் அவளிடமிருந்து ரகசியமாக இவ்விஷயங்களைக் கிரகித்துக்கொள்ளவேண்டும்.''

ஆனால் என் முடிவிற்கு நேர்விரோதமாகக் காரியங்கள் நடந்தேறின. சிதம் பரத்தில் போய் இறங்கினதும் ஜானகியைத் தனியாக அழைத்து என்னுடன் உடனே ஊருக்குப் புறப்படவேண்டுமென்று கூறினேன்.

''தீபாவளிக்கு வந்தீர்களா? என்னை அழைத்துப் போக வந்தீர்களா? விளையாடு வது அப்புறம் இருக்கட்டும். காப்பி ஆறிப்போகிறது, குடியுங்கள்'' என்றாள் ஜானகி.

''இவ்வீட்டில் ஜலபானங்கூடச் செய்யப்போவதில்லை. நீ என்னுடன் வருவதா யிருந்தால் பேசாமல் புறப்படு. இல்லாவிட்டால் நான் இதோ போகிறேன்'' என்றேன்.

நான் பேசுவது விளையாட்டல்ல என்பது அவளுக்குத் தெரிந்துவிட்டது; ''உங்களுடன் வருவதற்கு நான் தயார்தான். ஆனாலும் உங்களுக்கு இவ்வளவு கோபம் ஏற்படும்படியாக நாங்கள் என்ன குற்றம் செய்தோம்? அதையாவது சற்றுச் சொல்லுங்களேன்'' என்றாள்.

''அதையெல்லாம் இப்பொழுது சொல்வதற்கில்லை. நீ வருகிறாயா, வர வில்லையா?'' என்று கண்டிப்பாகக் கேட்டேன்.

''அப்படியானால் இருங்கள்; அண்ணாவிடம் சொல்லிவிட்டுப் பெட்டியை எடுத் துக்கொண்டு வந்துவிடுகிறேன்'' என்றாள்.

''அதெல்லாம் ஒன்றும் வேண்டாம். நீ யாருடனும் சொல்லிக்கொள்ளாமல் புறப்படவேண்டும்'' என்றேன்.

''மன்னியிடம் மாத்திரம் சொல்லிக்கொண்டு வந்துவிடுகிறேன். அவள் எனக்குத் தாய்போன்றவள் அல்லவா?'' என்றாள்.

என் பதற்றம் அதிகரித்தது. என்னால் அடக்கமுடியவில்லை. ''என்ன, அந்த விபசாரியிடமா?'' என்று என்னையும் அறியாமல் கூறினேன்.

இதைக் கேட்டு ஜானகி அப்படியே நடுங்கிவிட்டாள். ''ஐயோ சிவ சிவா! இது என்ன அபாண்டம்! காதால் கேட்கக்கூடவில்லையே'' என்று தன் காது களைக் கைகளால் பொத்திக்கொண்டாள்.

''உன் வியாக்கியானங்கள் இருக்கட்டும். நீ இப்பொழுது புறப்படுகிறாயா? இல்லையா?'' என்றேன் கோபத்தில்.

''மனத்தைச் சற்றுச் சாந்தப்படுத்திக்கொள்ளுங்கள். நல்ல வேளை: அந்த வார்த்தை வேறொருவர்காதிலும் விழவில்லை. உங்கள் மனத்தை யாரோ கலைத்திருக்க

வேண்டும். யார் யாரோ சொல்வதைக் கேட்டுக்கொண்டு நீங்கள்கூட இப்படிப் பிடிவாதம் செய்யலாமா? என்னைப் பாருங்கள். எனக்காகவாவது, நீங்கள் இன்றிரவு இங்கிருந்து, நாளைக் காலையில் தீபாவளியைக் கழித்துவிடுங்கள். நாளைக்கு நாம் இருவரும் புறப்பட்டுவிடலாம்'' என்று என் தாடையைப் பிடித்துக்கொண்டு கெஞ்சினாள்.

ஆனால் அவள் அவ்வாறு தாமதப்படுத்துவதெல்லாம் என் படபடப்பை அதிகரிக்கச் செய்தன. ''யாருடனும் சொல்லாமல் நீ இந்த நிமிஷமே வெளியேறுகிறாயா, இல்லையா?'' என்று அதட்டினேன்.

அவள் கண்களில் பலபலவென்று கண்ணீர் வழிந்தது. ''நான் இப்பொழுதே வருவதற்குத் தயார்தான். ஆனால் அண்ணாவிடமும் மன்னியிடமும் சொல்லிக் கொள்ளாமல் என்னால் புறப்படமுடியாது. அவர்கள்மூலந்தானே நீங்கள் எனக்குக் கிடைத்தீர்கள்? அவர்கள்தாமே என்னை இவ்வளவுநாள் காப்பாற்றியது......?''

அவள் சொன்ன வார்த்தைகள் முழுவதையும் நான் கேட்டுக்கொண்டிருக்கவில்லை. ''அப்படியானால் இதுதான் நமது கடைசிச் சந்திப்பு'' என்று சொல்லி அறையை விட்டு வெளியேறினேன். ஜானகி என்பின்னால் ஓடிவந்து, ''போகாதேயுங்கள்; போகாதேயுங்கள்'' என்று கால்களைப் பிடித்துக் கண்ணீர்விட்டு மன்றாடினாள். அந்தச் சப்தத்தைக் கேட்டுவிட்டு ராஜாராம் ஓடிவந்து என்னைச் சமாதானப் படுத்த ஆரம்பித்தான். அவர்களெல்லோரையும் மீறிக்கொண்டு, நான் நேராக ஸ்டேஷனுக்கு நடந்து மறு ரெயிலில் சென்னை வந்து சேர்ந்தேன்.

ஜானகியின்மீது நான் அபாரப் பிரேமை கொண்டிருந்தேன். அவளும் அவ்வாறே என்மீது காதல் கொண்டிருப்பாளென்று எண்ணியிருந்தேன். ஆனால் அவள் அன்று என்னுடன் வர மறுத்தது என் மனநிலையை முற்றும் மாற்றிவிட்டது. இனி அவளைக் கண்ணாலும் பார்ப்பதில்லை என்று திடசங்கல்பம் செய்து கொண்டேன்.

நாள் தீபாவளியன்று காலையில் வீடுதிரும்பிவிட்டதைக் கண்ட என் பெற்றோர் திகைப்படைந்தனர். நான் வீட்டிற்குள் நுழையும்போதே அம்மா, ''ஏண்டா திரும்பி வந்துவிட்டாய்?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டாள்.

நான் ரெயிலில் கிழவரைச் சந்தித்ததுமுதல் நடந்த எல்லா விவரங்களையும் கூறினேன். அதைக்கேட்டதும் அவர்கள் இருவரும் என் செய்கைக்காக வருத்தமுற ஆரம்பித்தனர்: ''அட பைத்தியமே! யாரோ ரெயிலில் போகிறவன் சொன்னானென்று அவசரப்பட்டு அவர்களை இப்படிக் கலவரப்படுத்தி வந்துவிட்டாயே. அப்படி உனக்கு ஸந்தேகமாயிருந்தால் நேராக வந்து எங்களிடம் சொல்லவேண்டியிருக்க, சிறுபிள்ளைத்தனமாய் நடந்துகொண்டாயே'' என்று கடிந்துகொண்டார் என் தந்தை. ''நான் அந்த ஊர் முழுவதும் அவர்களைப்பற்றி விசாரித்தேன். ஒரு குற்றமும் சொல்லவில்லை. அவன் யாரோ, அவர்களுக்கு விரோதியோ என்னவோ, அவன் கதையைக் கேட்டுக்கொண்டு, இப்படி ஒரு பிள்ளை கூத்தாடுமோ? நான் சாயங்கால ரெயிலில்போய் அவர்களை ஸமாதானப்படுத்திவிட்டு ஜானகியையும் அழைத்து வந்துவிடுகிறேன்'' என்று கூறிப் பிரயாணத்திற்குச் சித்தம் செய்யப் புறப்பட்டாள் என் தாய்.

நான் பொறுமையை இழந்தேன். ''நீங்கள் அவளை அழைத்துக்கொண்டு இந்த வீட்டிற்குள் வருவதாயிருந்தால் என்னை உயிருடன் காணப்போவதில்லை.

எவ்வளவிருந்தாலும், நான் கூப்பிட்டால் அவள் வரவேண்டியதுதானே? எப்பொழுது அவள் வரமாட்டேனென்ருளோ, அப்பொழுதே எங்கள் பந்தம் அற்றுவிட்டது. இனி நான் அவளை இந்த ஜன்மத்தில் பார்க்கமாட்டேன்'' என்று கத்தினேன்.

அவர்கள் என்னை எவ்வளவு சமாதானப்படுத்தியும் நான் ஒரே பிடிவாதமாக இருந்தேன். இதன் மத்தியில் நாட்கள் சென்றுகொண்டிருந்தன. ராஜாராமிடமிருந்தும் ஜானகியிடமிருந்தும், எனக்கும் என் பெற்ருேருக்கும் பல கடிதங்கள் வந்தன. அவை ஒன்றிற்கும் நான் பதில் எழுதவில்லை. என் பெற்ருேரையும் எழுதக்கூடாது என்று தடை செய்தேன். ராஜாராம் ஒரு தடவை ஜானகியை அழைத்துக் கொண்டு வந்தான். அவளை வீட்டுவாயிலிலே தடைசெய்து அனுப்பும்படி செய்துவிட்டேன்.

இச்செய்கைகளெல்லாம் என் தாய்க்கு அதிக வருத்தத்தைக் கொடுத்தன. நாள் ஆக ஆக, அவளுக்கு என் பிற்கால வாழ்க்கையைப்பற்றிய கவலை அதிகரித்தது. கல்யாணமாயும் பிரமசாரியாய் இருப்பதை நினைத்து நினைத்து ஏங்க ஆரம்பித்தாள். வேறு கல்யாணமாவது செய்துகொள்ளும்படி எவ்வளவோ தொந்தரவு செய்தாள். நான் கொஞ்சமாவது இணங்கவில்லை. என்னைப்பற்றிய ஏக்கமே அவளுக்கு யமனுக வந்தது. அவள் தேகம் இளைத்து உருகிவிட்டது. கடைசியாக ஒருநாள் காய்ச்சலால் படுக்கையில் படுத்தவள், அதினின்றும் எழுந்திருக்கவே இல்லை. நான் அவள் உயிரைக் கொள்ளைகொண்டுவிட்டேன்.

இந்த இடத்தில் மூர்த்தி தன் கதையை முடித்து, கண்களில் ஓடிக்கொண்டிருந்த கண்ணீரைக் கைக்குட்டையால் துடைத்துக்கொண்டான்.

## 4

''இவ்வளவுதானு?'' என்று கேட்டேன் நான்.

''ஆமாம்'' என்ருன் மூர்த்தி.

''இல்லை. இன்னும் கொஞ்சம் இருக்கிறது. அதையும் சொல்லிவிடு'' என்றேன்.

''இன்னும் என்ன இருக்கிறது? எல்லாம் முடிந்துவிட்டதே'' என்ருன்.

''நீ சொல்லமாட்டாயா? வேண்டுமானுல் நானே அதை உனக்குச் சொல்கிறேன் கேள்'' என்று ஆரம்பித்தேன்.

''உன் தாய் இறந்தபிறகு, முன்பு ரெயிலில் சந்தித்த அக்கிழவரை உங்கள் வீட்டண்டை மறுபடி பார்த்தாய். அவர் உன்னை அடையாளம் தெரிந்து கொண்டு, 'என்னப்பா? ஜானகி சௌக்கியமா?' என்று கேட்டார். அவரைப் பார்த்ததும், உன் ஆத்திரம், வருத்தம் எல்லாம் ஒன்ருய்ச் சேர்ந்துகொண்டன. உன் வாழ்வைக் கெடுப்பதற்குக் காரணமாயிருந்த அவரிடம் நெருங்கி, அவர் கழுத்தை இருகைகளாலும் கெட்டியாய்ப் பிடித்துக் கொன்றுவிட முயன்ருய். கிழவர், தம் உயிருக்கு ஆபத்து நேரவிருப்பதை அறிந்து, தாம் முன்பு கூறிய அபாண்டமான பொய்யை நீ அறிந்துகொண்டுதான் தம்மைத் துன்புறுத்த நினைக்கிருய் என்றெண்ணி, 'என்னை மன்னித்துக்கொள். உண்மையைச் சொல்லிவிடுகிறேன். என்னை விட்டுவிடு, விட்டுவிடு' என்று அலறினுர். உன் பிடியைத் தளரச்செய்ததும் அவர் தமக்கும் ராஜாராமுக்கும் ஏற்பட்ட பகையின் காரணமாக, அவர்கள்

குடும்பத்தைப்பற்றி ஓர் அவதூறு கிளப்பி உன் மனத்தைக் கலக்க எண்ணின தாகத் தெரிவித்தார். இதைக் கேட்டு நீ அங்கே நில்லாமல் வீட்டிற்குள் ஓடி விட்டாய். இவ்வளவுதான் எனக்குத் தெரியும். என்ன, நான் சொன்னதெல்லாம் உண்மைதானே? இன்னும் ஏதாவது உண்டானால் நீதான் சொல்லவேண்டும்'' என்றேன்.

நான் சொன்னவைகளைக் கேட்டதும் மூர்த்தி அளவற்ற வியப்படைந்தான்; ''நீ என்ன, தீர்க்கதரிசியா அல்லது திரிகால ஞானியா? உனக்கு எப்படி இந்த ரகசியங்களெல்லாம் தெரிந்தன?'' என்று கேட்டான்.

''முதலில் கதையை முடி. பிறகு அதைத் தெளிவாக்குகிறேன்'' என்றேன்.

மூர்த்தி மறுபடி சொன்னான்: ''கிழவர் வார்த்தைகளை அப்படியே நம்பி நான் ஜானகியை வெறுத்து ஒதுக்கித் தாயின் போதனைகளையும் அசட்டைசெய்து அவளை ஏங்கி அழியச் செய்தேன். அவர் பொய்யைச் சொல்லியிருப்பாரென்று நான் கனவிலும் நினைக்கவில்லை. அன்று என்னவோ, அவரைக் கண்டதும் என் ஆத்திரம் பெருகிற்று. ரெயிலில் அவர் இவ்விஷயத்தைச் சொல்லியிராவிட்டால் நான் இச்சமயம் எவ்வளவு சந்தோஷமாக இருப்பேன் என்பதை எண்ணிப் பார்த்தேன். அதேசமயம் கிழவர் ஏளனமாக, 'ஜானகி சௌக்கியமா?' என்று கேட்டது என் மனநிலையைத் தாக்கியது. அவ்வளவுதான்; நான் அறிவை இழந்து அவர் கழுத்தைப் பிடித்துவிட்டேன். என் கோபத்தில் நான் அவரைக் கொன்றுவிடுவேனென்பதைக் கிழவர் உணர்ந்திருக்கவேண்டும். அவர், 'உண்மையைச் சொல்லிவிடுகிறேன்' என்று கூறியவுடன்தான் நான் நிலைமையை அறிந்து கைகளை எடுத்தேன். அவர் விஷயத்தைக் கூறியதும், அவமானமும் துக்கமும் என்னை வளைத்துக்கொண்டன. என் மடமையையும் அதன் விளைவையும் உணர்ந்து அன்றிரவே ஜானகியிடம் மன்னிப்புப் பெறச் சிதம்பரத்திற்கு ரெயிலேறினேன்.

''ஆனால் நான் அவளை அங்கே காணமுடியவில்லை. விசாரித்ததில் ராஜாராமின் மனைவி இறந்துவிட்டாளென்றும், தேவஸ்தானத்தில் வேலை போய்விட்டபடியால் அவர்கள் அவ்வூரை விட்டுப் போய்விட்டார்களென்றும் தெரிந்தது. வாழ்க்கையில் ஏற்பட்ட ஏமாற்றத்தின் சின்னம் இன்னும் என்னை விட்டு நீங்காமல் வாட்டி வதைக்கின்றது'' என்று கூறி நிறுத்தினான் மூர்த்தி.

''உன் வாழ்க்கைக்கு அணைபோட்டதில் நானும் ஒருவகையில் காரணமாகிறேன். என்னை மன்னித்துக்கொள்'' என்றேன் நான்.

''என்னடா உளறுகிறாய்?'' என்றான் மூர்த்தி.

''நான் சொல்வது முற்றும் உண்மைதான், மூர்த்தி. அக்கிழவர் வேறு யாருமல்ல. என் தந்தைதான் அவர். முதலில் ஜானகியை எனக்குக் கொடுப்பதாகத் தீர்மானித்திருந்தான் ராஜாராம். அச்சமயம், நாங்கள் சிங்கப்பூரில் இருந்தோம். என் தந்தை அங்கே வியாபாரம் செய்துகொண்டிருந்தார். என்ன காரணத்தைக்கொண்டோ ராஜாராம் திடீரென்று என் கல்யாண ஏற்பாட்டை நிறுத்தி உனக்கு ஜானகியைக் கொடுத்துவிட்டான். இச்செய்கையே என் தந்தையை அவர்கள்மீது விரோதம் கொள்ளச்செய்தது. அவர்கள் குடும்பத்தைச் சின்னபின்னப்படுத்திவிடுவதாகக் கூறிக்கொண்டு அவர் சிங்கப்பூரிலிருந்து இங்கு வந்தார். வழியில் அவர் உன்னைக் கண்டு, அவர்கள் குடும்பத்தின்மீது ஒரு பழியைச் சுமத்தி உன் மனத்தைக் கலைத்துத் தம் காரியத்தைச் சாதித்துக்கொண்டார். என் படிப்புக் காரணமாக, அதன்பின் நாங்கள் சென்னைக்குக் குடிவந்துவிட்டோம்.

"பிறகு அவர் என் கல்யாண விஷயத்தில் முனைந்தார். பல இடங்களிலிருந்து ஜாதகங்களும், போட்டோக்களும் அவர் வாங்கிவந்தார். ஆனால் நான், என் படிப்பு முடியுமட்டும் கல்யாணம் செய்துகொள்ளப் போவதில்லை என்று சங்கற்பம் செய்துகொண்டிருந்தேன். பெண்களையும் தட்டிக் கழித்துக்கொண்டே வந்தேன். அவர் எவ்வளவோ என்னைக் கட்டாயப்படுத்தியும் நான் முடியாதென்று சொல்லி விட்டேன். அப்பொழுது அவர் 'ம்......எல்லாம் தலை எழுத்து. அநியாயமாக ஒரு பெண்ணின் வாழ்க்கையைக் கெடுத்த பாபம் சும்மா போகுமா?' என்று தமக்குள் சொல்லிக்கொள்வார். என்னைக் கல்யாணத்தில் முனையச்செய்ய அவர் அவ்வாறு சொல்கிறார் என்று எண்ணினேன் நான்.

"என் தகப்பனாருக்கு வெகுநாட்களாக நீரிழிவு வியாதி உண்டு. இச்சமயத்தில் அவர் கையில் ஒரு கட்டி புறப்பட்டு அது பெருகி அவரைப் படுக்கையில் சாய வைத்துவிட்டது. வியாதி முற்றியிருக்கும் சமயமும் அவர் என்னைக் கல்யாணம் செய்துகொள்ளும்படி தூண்டிக்கொண்டுதான் இருந்தார். அப்பொழுதும் அவர், 'அந்தப் பெண்ணின் வாழ்க்கையைக் கெடுத்த பாபம்' என்ற வார்த்தைகளை அடிக்கடி கூறிக்கொண்டிருந்தார். ஒருநாள் அவர் என்னை அழைத்துத் தம் படுக்கையருகில் உட்காரவைத்துக்கொண்டு, ராஜாராமின் குடும்பத்தைத் தாம் பாழ்படுத்திவிட்டதைக் கூறி, அந்தப் பாபம் தம்மைச் சார்ந்திருப்பதாலே என் கல்யாணம் தடைப்படுகின்றதோ என்று தாம் அஞ்சுவதாகவும், தம் கண்ணால் என் மணக்கோலத்தைக் கண்டாலன்றித் தம் ஆத்மா சாந்தியடையாதென்றும் கூறினார். அவர் இறுதிக் கோரிக்கையை நிறைவேற்றுவதற்காகவே நான் இவ்வளவு சீக்கிரம் விவாகம் செய்துகொண்டேன்" என்று விளக்கினேன்.

## 5

அச்சமயம் ரெயில் பாபநாசம் ஸ்டேஷனில் வந்து நின்றது. மழையும் விடாமல் கொட்டிக்கொண்டிருந்தது. அப்பொழுது இரவு எழு மணியிருக்கும். வெகு நேரமாக ரெயில் புறப்படாமல் நிற்பதைக் கண்டு நான் ஜன்னலைத் திறந்து வெளியே எட்டிப் பார்த்தேன். கார்டும் ஸ்டேஷன் மாஸ்டரும் ஒவ்வொரு வண்டியாக வந்து, "மழையின் காரணமாக லயன்களெல்லாம் பிடுங்கப்பட்டுவிட்டதால் ரெயில் பாபநாசத்திற்கப்புறம் போகாது" என்று சொல்லி ஜனங்களை வண்டியிலிருந்து இறக்கிக்கொண்டிருந்தனர்.

நாங்களும் இறங்கி ஸ்டேஷனில் போய் விசாரித்தோம். மழை நின்றாலொழிய உடைப்பைச் சரிப்படுத்த முடியாதென்றும், ஆகவே மறுநாள் மாலைவரையில் வண்டி அப்புறம் போகமுடியாதென்றும் தெரிந்துகொண்டோம்.

வண்டி ஒன்று பேசிக்கொண்டு, 'டாக்ஸி' கிடைக்குமிடத்திற்கு விடச் சொன்னோம். அந்தக் கொட்டுகிற மழையில், அரைமணி நேரம் சந்து பொந்தெல்லாம் சுற்றிவிட்டு, ஆபாசமான தெரு ஒன்றில் வண்டியைக் கொண்டுபோய் நிறுத்தினான் வண்டிக்காரன். "கொஞ்சம் இருங்க சாமி. இதோ டிரைவர் ஐயாவை இட்டாந்திடுறேன்" என்று சொல்லி ஒரு சந்திற்குள் புகுந்து போனான். இன்னும் ஒரு பதினைந்து நிமிஷம் காத்திருந்தோம்.

கறுத்துத் தடித்து முறுக்கிய மீசையுடன் வந்த ஓர் ஆசாமி எங்கள் வண்டியின் பின்புறத்தத் திரையைத் தூக்கி, "என்ன ஸார், நீங்கள்தானே தஞ்சாவூருக்கு டாக்ஸி கேட்டது?" என்றான். அவனிடமிருந்து சாராய வாடை 'குப்' என்று

வீசியது. வேறு புகலில்லாததால் அவன் டாக்ஸியையே வாடகை பேசி முடித்தோம்.

"ஐந்தே நிமிஷம், இந்த 'ஷெட்'டில் உட்கார்ந்திருங்க ஸார். இதோ போய், நம்ப 'கிளீனர்' பையனைக் கூட்டிக்கிட்டு வர்ரேன்" என்று சொல்லி எதிரிலிருந்த 'ஷெட்டை'க் காண்பித்தான்.

வண்டிக்காரனை அனுப்பிவிட்டுச் 'சிவனே' என்று ஷெட்டிலிருந்த காரில் போய் உட்கார்ந்தோம். இன்னுமொரு அரைமணி நேரம். பன்னிரண்டுவயதுப் பையன் ஒருவனுடன் டிரைவர் வந்தான். "என்ன ஸார், புறப்படலாமா?" என்றான்.

"இன்னும் ஏதாவது தாமதமுண்டோ?" என்றேன் நான், பொறுமையை இழந்தவனாய்.

"இல்லே ஸார். புறப்பட வேண்டியதுதான். அடே பையா! காரில் சாமான்களை எடுத்துவையடா. அடேய்! பெட்ரோல் டின்கூட. ஒரே ஒரு நிமிஷம் ஸார். சட்டையை மாட்டிக்கொண்டு வந்துடறேன்" என்று சொல்லி டிரைவர் மறுபடி வெளியே போய்விட்டான்.

பையன் காரில் எடுத்துவைத்த சாமான்கள் இரண்டு 'ஒர்க்ஷாப்'புகளுக்குப் போதுமானவை. "ஏண்டா பையா, காரில் ஏதாவது 'ரிப்பேர்' செய்யப்போகிறீர்களா?" என்று சந்தேகத்துடன் கேட்டான் மூர்த்தி.

"இல்லே ஸார். எங்க டிரைவர் எங்கே போனாலும் 'ரெடிமேட்' ஆகத்தான் போவது வழக்கம்" என்று சொல்லிக்கொண்டே பெட்ரோல் டின் ஒன்றை எங்கள் ஆஸனத்தில் கொண்டுவந்து வைத்தான் பையன்.

இதற்குள் டிரைவர் சட்டையை மாட்டிக்கொண்டு வந்து சேர்ந்தான். "அடேய்! எல்லாம் ரெடியாடா?" என்று கேட்டுக்கொண்டு வீட்டில் உட்கார்ந்து, "சுத்துடா" என்றான்.

நாங்கள் எதிர்பார்த்த அளவுக்குக் கார் மோசமில்லை. எங்கள் சந்தேகங்களுக்கு இடங்கொடுக்காமல் ஏரோப்ளேனுக்கு மேலாகச் சப்தம் செய்துகொண்டு அது ஷெட்டை விட்டுப் புறப்பட்டது. மழைஇன்னும் விட்ட பாடில்லை. காற்றும் பலமாக அடித்துக்கொண்டிருந்தது. ஒன்றிரண்டு மைல்கள் போவதற்குள் நாங்கள் நன்றாக நனைந்துவிட்டோம்.

எங்கும் காரிருள் சூழ்ந்து நின்றது. காற்றில் சாலைமரங்கள் ஒன்றோடொன்று மோதும் சப்தமும், சாலையின் இருபுறமும் பெருகி ஓடும் தண்ணீரின் சப்தமும், நிமிஷத்துக்கு நிமிஷம், ஆங்காங்கு ஆந்தைமுதலிய பறவைகளின் கூக்குரலும், காரின் அலறலுக்குமேல் மிதந்து வந்துகொண்டிருந்தன. பாதையில் ஓடும் பிரவாகத்தைப் பிளந்துகொண்டு கார் முப்பதுமைல் வேகத்தில் போய்க்கொண்டிருந்தது. பாதையின் அழகோ கேட்கவேண்டியதில்லை. அவ்வளவும் மேடும் பள்ளமும், குண்டும் குழிபுந்தான். ஒவ்வொரு குழியிலும் ஏறி இறங்கியபோது, கார் எங்கள் தலைக்குச் சரியான தண்டனை கொடுத்துக்கொண்டிருந்தது. வழியில் ஓர் ஓடையில் சுமாராகத் தண்ணீர் ஓடிக்கொண்டிருந்தது. வேகமாகப் பள்ளத்தில் இறங்கிய கார் மேலே ஏற மறுத்துவிட்டது.

டிரைவர் 'ஸெல்ப்-ஸ்டார்ட்டரை' இரண்டு மூன்றுதரம் அமுக்கிப் பார்த்தான். ஆனால் கார் சத்தியாக்கிரஹம் செய்துவிட்டது.

டிரைவர் காரிலிருந்து இறங்கி எஞ்சின் பக்கமாகப் போய் அதில் ஏதோ ஒரு பாகத்தை அப்படியும் இப்படியும் அசைத்துப் பார்த்துவிட்டு மறுபடி புறப்படும்படி செய்து பார்த்தான். ஆனால் கார் அப்பொழுதும் புறப்படவில்லை.

"என்னப்பா கோளாறு?" என்று கேட்டேன் நான்.

"ஒன்றுமில்லை ஸார். இதோ ஒரே நிமிஷம். பெட்ரோல் இல்லைபோலிருக்கு" என்று சொல்லிவிட்டு மறுபடி காரிலிருந்து இறங்கி, "அடே பையா! பெட்ரோல் டின்னை எடுத்து வாடா" என்றான். தூங்கி வழிந்துகொண்டிருந்த பையன் பதறி எழுந்து எங்கள் வீட்டிலிருந்த பெட்ரோல் டின்னை எடுத்துப் போனான்.

பெட்ரோல் டின்னைப் பார்த்ததும் டிரைவர் ருத்திரமூர்த்தியாக மாறினான். "ஏண்டா மடையா! உனக்குக் கொஞ்சமாவது மூளை இருக்காடா? பெட்ரோல் டின்னை எடுத்துவைக்கச் சொன்னால் தண்ணீர் அடைத்துவைத்திருந்த டின்னை எடுத்து வைத்திருக்கிறாயே!" என்று சொல்லி அந்தப் பையனுடைய கன்னத்தில் இரண்டு கொடுத்தான்.

மழை இன்னும் பெய்துகொண்டுதான் இருந்தது. டிரைவர் அந்த மழையில் நனைந்தவாறே, கன்னத்தில் கையை வைத்துக்கொண்டு ஆலோசனையில் ஆழ்ந்தான்.

"என்னப்பா நின்றுகொண்டிருக்கிறாய்? இது எந்த ஊர்? இங்கே, எங்கே யாவது பெட்ரோல் கிடைக்குமா, பாரேன்" என்றேன் நான்.

"திட்டை என்ற கிராமம் ஸார் இது. இந்த ஊரில் காரே கிடையாதே; பெட்ரோல் எங்கிருந்து கிடைக்கப்போகிறது? தஞ்சாவூருக்குப் போய்த்தான் பெட்ரோல் வாங்கி வரவேண்டும்."

"யாரிடமாவது சைக்கிள் கிடைக்குமானால் வாங்கிக்கொண்டு பெட்ரோல் கொண்டுவர ஏற்பாடு செய்யேன்" என்றான் மூர்த்தி.

"ஆமாம் ஸார். அப்படித்தான் செய்யவேண்டும். நீங்கள் இந்த மழையில் நனைந்துகொண்டு இங்கே காரில் உட்கார்ந்திருக்க வேண்டாம். எனக்குத் தெரிந்த ஐயர் வீடொன்று பக்கத்துத் தெருவில் இருக்கிறது. வாருங்கள். அங்கே கொண்டு போய் உங்களை விட்டு விடுகிறேன். பெட்ரோல் வாங்கிவந்ததும் மறுபடி அழைத்துப் போகிறேன்" என்றான்.

## ௬

குளிரால் ஒடுங்கிப்போயிருந்த எங்களுக்கு எங்கேயாவது தங்குவதற்குச் சிறிது இடம் கிடைத்தால் போதுமென்று இருந்தது. பேசாமல் டிரைவர் பின்னால் எழுந்து நடந்தோம். வழியெல்லாம் தண்ணீர் பெருகி நின்றது. அந்த மை இருட்டில், கொட்டுகிற மழையில் அதன் வழியாக நடந்து டிரைவர் காட்டிய வீட்டை அடைந்தோம்.

"ஸார், ராமலிங்க ஐயர்! ராமலிங்க ஐயர்!" என்று டிரைவர் கதவை இடித்துக் கொண்டே கத்தினான்.

இரண்டு நிமிஷங்களுக்குப் பிறகு, கையில் ஒரு விளக்குடன், சுமார் இருபது இருபத்திரண்டு வயது மதிக்கக்கூடிய ஸ்திரீ ஒருத்தி, "யாரது?" என்று கேட்டுக் கொண்டே கதவைத் திறந்தாள். தன் கையிலிருந்த விளக்கை உயர்த்தி எங்கள் முகத்தை வெளிச்சத்தில் பார்த்தாள். அதே சமயம் நாங்களும் அவள் முகத்தைப் பார்த்தோம்.

"ஜானகி! ஜானகி! நீயா!" கிருஷ்ணமூர்த்தியின் இக்குரல் என்னை ஸ்தம்பிக்கச் செய்தது.

"யாரது நீங்களா?" என்றாள் அம்மங்கை. அடுத்த நிமிஷம் அப்படியே மூர்ச்சையாய்க் கதவில் சாய்ந்துவிட்டாள். கிருஷ்ணமூர்த்தி ஓடிப்போய் அவளைக் கைகளில் தாங்கிக்கொண்டான். நான் தண்ணீர் சொட்டிக்கொண்டிருந்த என் மேல் துண்டிலிருந்து அவள் முகத்தில் தண்ணீரைப் பிழிந்தேன்.

சிறிது நேரத்திற்குப் பின் அவள் கண்ணை விழித்து எங்களையெல்லாம் பார்த்து விட்டு லஜ்ஜையுடன் எழுந்திருந்தாள்.

"ஜானகி, நான் பெரிய பாவி. அநியாயமாக உன்னைத் தவிக்கவிட்டுவிட்டேன். என்னை மன்னித்துவிடு" என்று கெஞ்சினான் மூர்த்தி.

"ஐயோ, இதென்ன பாவம்! நானா உங்களை மன்னிப்பது? உங்கள் விருப் பத்திற்கு மாறாக நடந்ததற்குத் தகுந்த தண்டனை எனக்குக் கிடைத்துவிட்டது. இனி நான் உங்களை ஒரு கணமும் விடமாட்டேன். என்னை மன்னித்து இப்பொழுது உங்களுடன் அழைத்துச் செல்லுங்கள்" என்று கண்ணீர் வழியக் கூறினாள் ஜானகி.

எதிர்பாராத இச்சந்திப்பால் வியப்பும் களிப்பும் கொண்ட நான் தெய்வ சித்தத்தை வியந்து நின்றேன். என் பக்கத்தில் நின்ற டிரைவர் இவை ஒன் றையும் அறிந்துகொள்ளாதவனாய் வாயைப் பிளந்துகொண்டு நின்றான். நான் டிரைவரைப் பெட்ரோல் வாங்கிவரும்படி அனுப்பிவிட்டு மூர்த்தியுடன் வீட்டினுள் சென்றேன்.

உள்ளே சென்றதும் மூர்த்தி, "ஜானகி, உன் அண்ணா எங்கே? நீங்கள் எவ்வளவு நாட்களாக இங்கே இருக்கிறீர்கள்?" என்று கேட்டான்.

"நீங்கள், அன்று கோபித்துக்கொண்டுபோன பின், அண்ணா என்னிடம் காரணத்தை விசாரித்தான். அன்று நீங்கள் கூறிய அபாண்டத்தை என்னால் அண்ணாவிடம் சொல்லமுடியவில்லை. அதை மறைத்து நீங்கள் என்னை யாரிட மும் சொல்லிக்கொள்ளாமல் புறப்படும்படி கூறியதாகவும், நான் அவர்களிடம் சொல்லிக்கொண்டுதான் வரமுடியும் என்று சொன்னதே உங்கள் கோபத்திற்குக் காரணம் என்றும் கூறினேன். அண்ணா என் செய்கைக்காக மிகவும் வருந்தி, 'ஜானகி, கட்டிய கணவன் கூப்பிடும்போது நீ போகாமல் ஏதேதோ காரணம் கூறி, அவன் கோபத்திற்கும் வெறுப்பிற்கும் பாத்திரமாகிவிட்டாயே. நாளைக்கு அவனல்லவா உன்னை வைத்துக் காப்பாற்றவேண்டுமென்பதை மறந்து, உன் தலையில் நீயே மண்ணை அள்ளிப் போட்டுக்கொண்டாயே' என்று என் மடமையை எடுத்துரைத்தான். அதன்பிறகு நானும் அண்ணாவும் பல கடிதங்கள் உங்களுக்கு எழுதியும் பதில் வரவில்லை. நேரில் வந்தும் உங்களை அடையும் பாக்கியம், இந்தப் பாவிக்குக் கிடைக்கவில்லை. இனி, என் வாழ்நாள் முழுதும் தலைவிதியை நொந்து நான் சாகவேண்டியதுதான் என்று தீர்மானித்துக்கொண்டிருந்தேன். எங்கள் போதாத காலம், மன்னி மாரடைப்பால் திடீரென இறந்து போனாள். அண்ணாவுக் கும் தேவஸ்தானத்தில் வேலை போய்விட்டது. அண்ணாவின் நண்பரான இந்த வீட்டு ராமலிங்க ஐயர், எங்கள் நிலைக்கு இரங்கித் தம் சிங்கப்பூர்க் கடையில் அண்ணா வுக்கு ஒரு வேலை கொடுத்து, அவனை அனுப்பிவிட்டு, என்னைத் தம் பெண்போல் வளர்த்துவருகிறார். அவரும் அவர் மனைவியும் நேற்றுத்தான் பக்கத்தூரில் தங்கள் பந்துக்கள் வீட்டில் ஒரு விசேஷத்திற்காகச் சென்றார்கள்" என்றாள் ஜானகி,

"பாவி, என்னால்தான் உங்கள் குடும்பத்திற்கே இவ்வளவு கஷ்டமும். இந்தப் பாபத்திற்கு நான் எவ்விதத்தில் பரிகாரம் தேடிக்கொள்ளப் போகிறேனோ?" என்றான் மூர்த்தி.

"நீ மறுபடி உன் மனைவியை அழைத்துக்கொண்டு சந்தோஷமாக இல்வாழ்க்கை நடத்துவதுதான் பாப பரிகாரம்" என்றேன் நான்.

மூர்த்தியும் ஜானகியும் சிரித்தனர். "டப் டபார்" என்ற சீனுவெடிகளின் சப்தம் எங்கள் காதுகளைத் துளைத்தது.

"அடே! விடியப்போகிறதா?" என்றான் மூர்த்தி.

"இல்லை. மணி மூன்றுதான் ஆகிறது. இன்று தீபாவளியோ இல்லையோ?" என்றேன் நான்.

"இருங்கள், இதோ எல்லோருக்கும் குளிப்பதற்கு வெந்நீர் போடுகிறேன்" என்று சொல்லி உள்ளே சென்றாள் ஜானகி.

மூர்த்தி என்னைப் பார்த்தான்.

"எல்லாம் தெய்வ சித்தம்" என்றேன் நான்.



# ஒரு பைத்தியம்

நா. ராமரத்னம், எம். ஏ.

அவன் ஒரு கிழவன். அவன் தலைமயிர் நரைத்து, ஒட்டின பஞ்சைப்போலத் தனியாக இராமலும் ஒரே சடையாகப் போகாமலும் நாலுபுறமும் பறந்துகொண்டிருந்தன. அவன் முகத்தில் காலத்தின் சின்னங்களாகிய மேடுபள்ளங்கள் அமைந்திருந்தன. காலதேவன் உழுத படைச்சாலைப்போல நெற்றியில் வரிகள் விளங்கின. கண்கள் ஒளிமறைந்து மங்கலாயிருந்தன. வாயில் பல பற்களைக் காணவில்லை. அவன் சிரிப்ப துண்டு; ஆனால் அதைச் சிரிப்பென்று சொல்லக்கூடாது; பழகிப்போன ஓர் அசட்டுத்தனம் அந்தச் சிரிப்பிலே பொங்கி வழியும். இவ்வளவும் சேர்ந்த அந்த முகத்தோற்றத்தில் ஏதோ ஒரு பொலிவு, விசனகர மான பொலிவு, இருந்தது; பார்த்த முதல் முறையிலேயே இரக்கத்தை அது உண்டாக்கும்.

அவன் தேகம் வயசினால் அரிவாள்போலக் கூனிக் குறுகி வளைந்திருந் தது. இடுப்பிலே ஒரே ஒரு கிழிந்த துணி. அதில்தான் எத்தனை அழுக்கு! அந்த அழுக்கு அவ்வாடையை இடுப்போடு பசைவைத்தாற் போல ஒட்டச்செய்தது.

காலில் புழுதி படிந்திருந்தது. அவன் நாடெங்கும் சஞ்சாரம் செய்பவன்.

அவன் ஏழை; பரம ஏழை. அவன் தொழில் பிச்சை எடுப்பது; வீடுவீடாகச் சென்று பிச்சை எடுப்பதே.

*　　*　　*　　*　　*

அன்று மத்தியான்ன வேளையில் எங்கள் வீட்டு வாசற்கதவைத் தட்டி னான். கதவைத் திறந்தேன். உடனே தள்ளாடித் தள்ளாடிச் சிறிது உள்ளே வந்து உட்கார்ந்தான். அப்படி உட்கார்ந்த அளவிலே ஓர் ஆனந்தம் அவனுக்கு இருந்ததுபோலும்.

அவனைப் பார்த்ததும் என்னை அறியாமலே என் உள்ளத்தில் அவன் மேல் இரக்கம் ஏற்பட்டது.

மெல்லிய குரலில், "ஐயா!" என்றான். அந்த உடலிலிருந்தா தொனி கிளம்புகிறதென்று நான் பிரமித்துப் போனேன். அந்த ஒரு வார்த்தையிலே அவனுடைய தைன்யம் அவ்வளவும் பொதிந்திருந்தது.

"ஒரு வாய்ச் சோறு கொடுப்பீர்களா? உங்கள் பிள்ளைகுட்டிகள் நன்றாக இருக்கவேண்டும்."

அப்புறம் ஒரு பெருமூச்சு விட்டான். அவன் ஏழைமைக்கோலத்திலே என் கண்கள் இரண்டும் பதிந்திருந்தன. அவன் கெஞ்சும் குரல் என் காதுவழியே புகுந்து உள்ளத்தை வசப்படுத்தியது.

"நான் சாப்பிட்டு எவ்வளவோ காலம் ஆச்சு."

அந்தத் தொனியிலே, அவன் பார்வையிலே, அவனது நடுக்கத்திலே, அவன் தோற்றத்திலே அந்த வாக்கியத்தின் வியாக்கியானம் அடங்கியிருந்தது.

மறுபடியும் ஒரு பெருமூச்சு.

"என்மேல் மனமிரங்குங்கள்."

இதை அவன் சொல்லவேண்டிய அவசியமே இல்லை. என் மனம் முன்பே உருகி அவனிடம் ஐக்கியப்பட்டிருந்தது.

*    *    *    *    *

இந்த ஐக்கியத்தைக் கலைப்பதற்காகவே இவள் வந்தாளோ! என் மனைவி, பேச்சுக் குரலைக்கேட்டு உள்ளே இருந்து ரேழிக்கு வந்தாள். "ஐயோ! இவனை யார் உள்ளே விட்டார்கள்!.........போ, போ! உனக்கு இங்கே என்ன வேலை?" என்று படபடவென்று வார்த்தைகளைக் கொட்டிக் கொண்டே அவள் பிரஸன்னமானாள்.

அவன் நிமிர்ந்து பார்த்தான். அந்தக் கூனலுடம்பை நிமிர்த்திப் பார்ப்பதுகூட அவனுக்குக் கஷ்டமாகத்தான் இருந்திருக்கும்.

"அம்மா! ஒரு கவளம் சோறு போட்டால் சாப்பிட்டுவிட்டுப் போவேன். சற்றே மனமிரங்கவேண்டும். உங்களுக்குப் புண்ணியம் உண்டு, அம்மா!"

அவ்வளவு பேச்சையும் ஒரேயடியாகப் பேசிவிட்டானே! ஆனால் பிறகு இரண்டு நிமிஷநேரம் பெருமூச்சு வாங்கி இளைப்பாறினான்.

"உன்னை யார் உள்ளே விட்டது?" என்று அவள் உறுமினாள்.

அந்தக் கர்ஜனைக்குமுன் அவனது வேதனைக்குரல் விளக்கமாக என் காதில் ஒலித்தது.

"இவர் கருணையால்தான் அம்மா நான் உள்ளே வந்தேன். நான் ஓர் ஏழை, அம்மா! பிச்சைக்காரன், அம்மா!"

ஏழை, பிச்சைக்காரன் - இந்த இரண்டு வார்த்தைகளும் என் உள்ளத்தில் என்ன என்னவோ உணர்ச்சிகளை எழுப்பிவிட்டன.

"பிச்சைக்காரனு! நீ பிச்சைக்காரனும் இல்லை; ஒன்றும் இல்லை. நீ ஒரு பைத்தியக்காரன் இல்லையா?........." என்று சொன்னவள் என்னைப் பார்த்து, "முந்தாநேற்றைக்கு அலமேலு வீட்டுக்கு வந்து கண்டதையெல்லாம் பிதற்றினாளம். பிச்சைக்காரனுக்கும் பைத்தியக்காரனுக்கும் வித்தியாசம் தெரியாதோ உங்களுக்கு?" என்றாள்.

நான் இன்னும் என் மௌனத்தினின்றும் கலையவில்லை.

அவனோ, அந்த வார்த்தைகளைக் கேட்டுச் சிரித்தான்; அவனது அசட்டுச் சிரிப்பிலே அவளுக்குப் பதில் அளித்தான். அந்தச் சிரிப்புக்கு அர்த்தம் இன்னதென்று அவளுக்கு விளங்கியிருக்குமா?

ஏழை, பிச்சைக்காரன் - இந்த இரண்டோடு அவள் சொன்ன ஒரு வார்த்தையும் சேர்ந்துகொண்டது - 'பைத்தியக்காரன்.'

என் உள்ளத்தில் பொங்கிய இரக்கம் வழியத் தொடங்கியது. அதை அடக்கமுடியவில்லை. என் மௌனம் கலைந்தது.

"போகிறது. அவனுக்குக் கொஞ்சம் சாதம் போடேன். நமக்குப் புண்ணியந்தானே?" என்று அவனுக்காகப் பரிந்து பேசினேன்; அவனுக்காகக்கூட அல்ல; அப்படிச் சொல்லாவிட்டால் என் மனம் உறுத்திக் கொண்டே இருக்கும்; என் உள்ளம் உடைந்துபோயிருக்கும். அத்தனை வலிமையோடு அந்தப் 'பைத்தியக்காரன்' என்னைக் கவர்ந்தான்.

* * * * *

என்ன ஆச்சரியம்! அவளுக்கும் மனம் இளகிவிட்டது. "ஆகட்டும்" என்றாள். அந்த இடத்தில் யார் புகுந்தாலும் அவர் உள்ளத்தில் கருணை சுரக்குமென்பதில் சிறிதும் சந்தேகம் இல்லை. அவள் ஒரு நிபந்தனையைப் போட்டாள்: "அப்படியானால் நீங்கள் அவனுடன் பேச்சுக் கொடுக்காதீர்கள். அவன் பைத்தியக்காரன். அவன் வாயைக் கிளப்பினால் பிதற்றக் கிளம்பி விடுவான்; ஜாக்கிரதை!" என்று சொல்லிவிட்டு அவள் உள்ளே சென்றாள்.

அவள் போகும்போது சிறிதுதூரம் அவன் பார்வை அவளை ஆவலுடன் தொடர்ந்தது. அதனை அவன் மீட்டுக்கொண்டான். அதற்கு மேல் போக அதற்குச் சக்தி இல்லை. அவ்வளவு தளர்ச்சிபோலும்!

அவன் மறுபடியும் புன்னகை செய்தான். அவன் சிரித்தது அவளைப் பார்த்தா? என்னைப் பார்த்தா?

அவள் அவனைப் பைத்தியக்காரனென்றல்லவா சொன்னாள்? அவன் பைத்தியமா? அவள் பைத்தியமா? எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டு நின்ற நான் பைத்தியமா?

மறுபடியும் பேசத் தொடங்கினேன்; அவனைப் பார்த்துத்தான் பேசினேன்.

"நீ எங்கே அப்பா இருக்கிறாய்?"

"நானா? எனக்குத் தங்கக் கூரை ஏது? இருக்க இடமேது?"

அந்த வார்த்தைகள் என் கண்களிலிருந்து மளமளவென்று சில நீர்த்துளிகளை வெளிப்படுத்தின. பேசமுடியவில்லை. நிதானித்துக்கொண்டேன்.

"அப்படியானால், நீ இப்போது எங்கே இருந்துதான் வருகிறாய்?" என்ற கேள்வியைக் கேட்டேன்.

"எனக்கே தெரியவில்லை. நான் எங்கிருந்தும் வருவேன். இங்கிருந்து தான் என்று எப்படிச் சொல்லமுடியும்?" என் கேள்விக்கு அவன் வேறொரு கேள்வியைப் பதிலாகக் கேட்டான். நான் அதற்குப் பதில் எங்கிருந்து கண்டுபிடிப்பேன்?

"ஜனங்கள் உன்னிடம் மனமிரங்குகிறார்களா?"

"இரக்கம் வரவரக் குறைகிறது, ஐயா!"

"அப்படியானால் எதற்காக ஊர் ஊராகத் திரியவேண்டும்?"

இந்தக் கேள்வியைக் கேட்டுக்கொண்டே உட்பக்கம் பார்த்தேன். சிவகாமி இன்னும் வரவில்லை.

"ஐயா, மனிதர்கள் இதயக்கதவை மூடிவிடாமல் இருப்பதற்காகத் தான். தயையும் இரக்கமும் உலகிலிருந்து மறைந்துபோனால் அப்புறம் ஜீவர்கள் வாழமுடியாது."

'இதென்ன இப்படிப் பேசுகிறான்! இவனா பைத்தியம்!' அவனை ஏற இறங்கப் பார்த்தேன். அவனுடைய முதுமையை என் பார்வை ஒருவாறு அளந்து பார்த்தது.

"ஆமாம்; உனக்கு வயசு என்ன? ரொம்ப வயசு ஆகியிருக்கும்போல் இருக்கிறதே!"

அவன் அந்தப் பழைய அசட்டுச்சிரிப்போடு விடை கூறினான்: "ஆமாம் ஐயா, ரொம்ப ஆய்விட்டது. கணக்குக்கூட விட்டுப்போயிற்று. மனிதர்கள் உண்டான காலமுதல் இருந்து வருகிறேன்."

என் கண்கள் பிரமிப்பினால் மலர்ந்தன. என் மனைவி வரும் காலடிச் சப்தமும் கேட்டது. எனக்கு அவன் பெயரைக் கேட்டுவிடவேண்டுமென்ற வேகம் உண்டாயிற்று.

"உன் பெயரென்ன? சொல்லவில்லையே" என்று கேட்டேன்.

"வறுமை" என்றான்.

நான் என்னை மறந்தேன்.

* * * * *

என் மனைவி வந்துவிட்டாள். "இந்தப் பைத்தியத்தோடே பேச ஆரம்பித்துவிட்டீர்களோ, இல்லையோ!" என்று சொல்லிக்கொண்டே அவனுடைய விரிந்த கைகளில் பிசைந்த சாதத்தைப் போட்டாள். அவள் பேச்சு என்னை மீண்டும் இந்த உலக நினைவிற்குக் கொண்டுவந்தது.

அவன் மிக்க ஆவலுடன் வாயை ஆவென்த் திறந்து அந்தச் சோற்றை விழுங்கினான். அவனா விழுங்கினான்? நானே விழுங்குவது போல இருந்தது. அவன் உடம்பில் ஏற்படும் ஒவ்வோர் அசைவையும் நான் கவனித்தேன்—இல்லை, இல்லை; அப்படிக் கவனிக்கும்படி அவன் செய்து விட்டான்.

ஒரு பருக்கைகூட இல்லாமல் விழுங்கிவிட்டு உள்ளங்கையையும் புறங்கையையும் நக்கினான். பிறகு ஒரு சிறிய மூச்சு விட்டான். அதிலே தான் எத்தனை திருப்தி! அதைக்காட்டிலும் எனக்கு ஆயிரமடங்கு திருப்தி.

அவனுக்கு வயிறு நிரம்பியதோ இல்லையோ, எங்கள் செல்வம் இப்போதுதான் நிரம்பி நிற்பதுபோன்ற உணர்ச்சி எனக்கு ஏற்பட்டது; ஏன்? வளர்ச்சி யடைந்துவிட்டதுபோன்ற ஆனந்தமே உண்டாயிற்று.

அவன் சாப்பிட்டுவிட்டு ஒரு செம்பு நிறையத் தண்ணீர் வாங்கி மடக்கு மடக்கென்று குடித்தான். என் மனத்தில் உண்டான சாந்தி மயமான சங்கீதத்துக்கு அந்த இனிய ஒலி லயமாக அமைந்தது.

அவன் வாழ்த்திவிட்டுச் சென்றான். அவன் வார்த்தைகளால் வாழ்த்தியது மிகைதான்.

என் மனைவியைப் பார்த்தேன்; "நீ சொன்னது சரி; அவன் ஒரு பைத்தியக்காரன்தான்" என்றேன். அவள் புன்னகை பூத்தாள்.

* * * * *

உங்கள் இதயக்கதவைத் திறக்க அவன் ஒருநாள் உங்கள் வீட்டிற்கு வந்தாலும் வருவான்; வாசற்கதவைச் சார்த்திவிடாதீர்கள்.






## மகிஷவாகன பண்டிதர்

'உமா'

அநேக வருஷங்களுக்கு முன் ஓர் ஊரில் மகிஷ வாகன பண்டிதர் என்னும் வைத்தியர் ஒருவர் இருந்தார். அந்த ஊரில் மட்டுமன்றி அந்த ஜில்லா முழுவதுங்கூட அவரைத் தெரியாதவரே இல்லை. அவர் ஆயுர்வேத சிகித்ஸையில் மிகவும் கெட்டிக்காரர். நல்ல கைராசி உடையவர். ஊரில் பணக்காரர்கள் முதல் ஏழைகள் வரையில் யாரும் அவரிடந்தான் வைத்தியம் செய்துகொள்வார்கள். மகிஷ வாகனரும் நோயாளிகளிடமிருந்து அவரவருக்குத் தக்கபடி சம்மானம் வாங்குவார். ஏழைகளிடம் மிகவும் இரங்கி முடிந்தவரையில் இலவசமாகவே வைத்தியம் செய்வார்.

மகிஷவாகனரிடம் வைத்தியத்தில் அவருடைய கைமுறைகளைக் கற்றுக்கொள்வதற்காகச் சில சிஷ்யர்களும் இருந்து வந்தார்கள். வைத்தியர் தாம் செய்யும் ஔஷதங்களுக்கு வேண்டிய பச்சிலைகளை மைபோல் அரைப்பதற்கும், பூண்டு, வேர், மூலிகைகளைக் காயவைத்து இடித்து வஸ்திரகாயம் செய்வதற்கும், கஷாயங்கள் தயாரிப்பதற்கும், புடங்கள் போடுவதற்கும் அந்தச் சிஷ்யர்களையே ஏவி வந்தார். சிஷ்யர்களுக்கு அதுதான் பயிற்சி.

மகிஷவாகனர் நல்ல குணமுடையவரென்றுதான் எல்லோரும் எண்ணினார்கள். ஆனால் அவருடைய சிஷ்யர்களுக்கு மட்டும் அவரிடம் வருத்தம் இருந்து வந்தது. அதற்கு அவரிடம் இருந்த ஒரே ஒரு கெட்ட குணந்தான் காரணம்.

சிஷ்யர்கள் குரு இடும் கட்டளைகளைச் சிரத்தையாகவே நிறைவேற்றி வந்தார்கள். நாள்முழுவதும் கஷ்டப்பட்டுச்

செய்தாலும் சரி, ஒரே வேலையை நூறு தடவை செய்த போதிலுங்கூடக் குருவின் வாயால், 'செய்தது போதும்', 'நன்றாய் இருக்கிறது' என்ற வார்த்தைகள் வாரா. சிஷ்யன் என்ன செய்திருக்கிறான் என்பதைக்கூடத் திரும்பிப் பாராமலே, "இன்னும் ஒரு தடவைசெய்தாலும் தேவலை; அப்பொழுதுதான் நன்றாய் இருக்கும்" என்பார். சிஷ்யர்கள் இரவும் பகலுமாய் அதையே செய்தாலும் குருவுக்குத் திருப்தி என்பதே இல்லை. இதனால் சிஷ்யர்களுக்குக் குருவிடம் வெறுப்பு உண்டாகிவிட்டது.

ஒரு நாள் குரு சில பச்சிலைகளைச் சிஷ்யன் ஒருவனிடம் கொடுத்து, "இவற்றை நன்றாக மைபோல் அரைத்து வை" என்று உத்தரவு செய்துவிட்டுவெளியே சென்று சீட்டுக் கச்சேரியில் உட்கார்ந்தார். சிஷ்யனும் பச்சிலைகளைக் கல்வத்தில் வைத்து ஒரு ஜாமம் வெண்ணெய்போல் அரைத்தான். தொட்டுத் தொட்டுப்பார்த்துவிட்டுக் கல்வத்திலிருந்தவற்றை வழித்து உருட்டி எடுத்துக் கொண்டு குருவிடம் வந்தான். வணக்கத்துடன், "ஸ்வாமி, மசிந்தது போதுமா



என்று பார்த்துச் சொல்லவேண்டும்" என்று பச்சிலை உருண்டையை அவரிடம் நீட்டினான். சீட்டுக் கச்சேரியில் ஈடுபட்டிருந்த குரு உருண்டையைப் பாராமலே இடது கைவிரலால் அதை நெருடிவிட்டு, "இன்னும் நன்றாய் வெண்ணெய்போல் மசிய வேண்டும்" என்றார். சிஷ்யனும் பொறுமையாய்க் குருவின் உத்தரவுப்

படியே, ஒரு தடவை இல்லை, அவர் சொல்லச் சொல்லப் பல தடவையும் அரைத்து அரைத்து எடுத்துக்கொண்டு போய்க் காண்பித்தான். குருவோ அதைப் பாராமலே, "இன்னும் மசிய வேண்டும், இன்னும் மசிய வேண்டும்" என்று சொன்னரே தவிர, "போதும்" என்று சொல்லுவதாகவே இல்லை. எவ்வளவு தடவைதான் அரைப்பான் சிஷ்யன்? கல்வத்தெதிரில் தலையில் கையை வைத்துக் கொண்டு உட்கார்ந்து யோசனை செய்தான். இந்தக் குருவை எவ்விதந்தான் திருப்தி செய்வதென்று அவனுக்குத் தோன்றவில்லை. அவனுக்கு அவ்வளவு அறிவுத் திறமை போதாது. வெளியே போயிருந்த மற்ருெரு சிஷ்யன் அவ்விடம் வந்தான். பச்சிலை உருண்டையும் கையுமாய் உட்கார்ந்துகொண்டு யோசனையில் ஆழ்ந்திருக்கும் நண்பனைக் கண்டு ஆச்சரியம் அடைந்தான். நடந்த ஸமாசாரத்தை விவரமாய்க் கேட்டுத் தெரிந்து கொண்டான். உடனே சிஷ்யர்கள் எல்லோரையும் கூட்டிவைத்து எப்படியாவது குருவுக்குப் புத்தி கற்பிக்கவேண்டுமென்று யோசனை செய்தான். சிறிது குறும்புத் தனமுள்ள



ஓர் இளைஞன் எழுந்தான்; "ஏய்! நீங்கள் எல்லாரும் என்னேடு வாருங்கள்" என்று சொல்லிவிட்டு, ஓர் உரித்த தேங்காய் அளவு வெண்ணெயை உருட்டிக் கையில் எடுத்துக் கொண்டு குருவை நோக்கிச் சென்ருன். சிஷ்யர்கள் ஒன்றும் தோன்ருமல், 'என்னதான் நடக்கிறது, பார்ப்போம்' என்று

ஆவலுடன் வாசற்படியில் நின்று எட்டி எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

மும்முரமாய்ச் சீட்டாட்டத்தில் மூழ்கியிருக்கும் குருவிடம் வெண்ணெய் உருண்டையை நீட்டி, "ஸ்வாமி, இவ்வளவு நேரம் அரைத்தேன். மசிந்தது போதுமா? சற்றுப் பார்க்கவேண்டும்" என்று கம்பீரமாகக் கூறிவிட்டுக் குருவின் பதிலை எதிர்பார்த்துக்கொண்டு நின்றான் சிஷ்யன். அதற்குள் மற்றச் சிஷ்யர்கள் குசு குசு என்று ஒருவருக்கொருவர் காதோடு பேச ஆரம்பித்தார்கள். குருவோ அப்பொழுதும் பாராமலே இடது கையால் வெண்ணெயை ஒரு தடவை நெருடிவிட்டு, "இன்னும் கொஞ்சம் மசிந்தால்தான் வெண்ணெய்போல் இருக்கும். இன்னும் அரை" என்றார். ஒரே அறையாய் வெண்ணெயைக் குருவின் முகத்தில் அறைந்துவிட்டு, "போதுமையா போதும்; இப்பேர்ப்பட்ட குருவிடம் வித்தையைச் சீக்கிரம் கற்றுக்கொண்டு விடலாம்! வாங்கடா வாங்க, குருவாம்! குருகுல வாசமாம்! எங்காவது மாடு மேய்க்கப்போவோம்" என்று சொல்லிவிட்டு மற்றச் சிஷ்யர்களை அழைத்துக்கொண்டு கிளம்பினான் அச்சிஷ்யன்.

வெண்ணெய் குருவின் முகத்தில் அப்படியே அப்பிக் கொண்டிருந்தது. எல்லோரும் கைகொட்டிச் சிரிக்க ஆரம்பித்தார்கள். அப்பொழுதுதான் முகத்தில் அப்பியது என்னவென்று நெருடிப் பார்த்தார் மகிஷவாகன பண்டிதர். அது பச்சிலை அல்ல, நிஜமான வெண்ணெயே என்று அறிந்தார். வெட்கித் தலை குனிந்தார். அந்த ஊரையே விட்டு விட்டு வெளியூரில் போய்க் குடியேறினார்.



# மண்ணாசை

'சித்ரா'

நம் தமிழ்நாட்டு வாழ்க்கையின் ஒவ்வோர் உண்மையான அம்சம் மிக அழகுபெற ஒவ்வொரு சிறு கதையில் அமைந்து வருகிறதை நோக்குந்தோறும், 'தமிழ் இறந்து போகவில்லை; அதற்கு உயிருண்டு; அது தழைத்தோங்க மார்க்கம் உண்டு' என்ற எண்ணங்களெல்லாம் நம் மனத்திலே குவிந்தெழுகின்றன. ஆனால் வாழ்க்கையைப் பல மூலைகளிலிருந்து நோக்கிப் புல பாத்திரங்களைச் சிருஷ்டித்துக் காட்டக்கூடிய நாவல்கள் இல்லையென்றே சொல்லிவிடலாம். நாடகங்களோ மேல்நாட்டார் நாடகங்களைத் தழுவியே இருக்கின்றன. ஏதோ நாவல்கள் என்று உலாவுகின்ற நாவல்கள் நாவல்களல்ல; நம்நாட்டு ஜீவன் அவைகளில் அடிக்கவில்லை. நம்நாட்டு மண்ணும் மணமும் கமழக்கூடிய நாவல்கள் வரவேண்டும்.

வரும் என்று சூசிப்பிக்கிற ஒரு நாவல் நம் நாட்டில் தோன்றியிருக்கிறது. அதில் காவிரி ஆற்றங்கரை மாமரத்தின் மணம் வீசுகிறது. காற்றில் தொப்புத் தொப்பென்று விழும் தேங்காயின் ஒலி கேட்கிறது. அருவிகளின் இன்னிசை காதில் விழுகிறது. வடிகால் கரைமேல் கிடக்கிற ஈரக்களி பிசுக்குப் பிசுக்கென ஒட்டிக்கொள்ளுகிறது. கிராமவாசிகள் பேச்சுக்கள் உள்ளபடி நம் செவிகளில் விழுகின்றன. வாழ்வுச் சித்திரங்கள் உண்மையாய் அமைந்து கிடக்கின்றன. அந்த நாவல்தான் ஸ்ரீ சங்கராம் எழுதிய 'மண்ணாசை.'

ஆனால் என் மனத்தில் ஒரு பெருங்குறை. இந்நாவல் தமிழில் முதலில் எழுதப்படவில்லை; ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. இக்குறைக்கு ஒரு பரிகாரமும் உண்டு. ஆங்கிலத்திலிருந்து வேறொருவர் மொழிபெயர்த்திருந்தால் மூலத்தின் சுவை குன்றிப்போயிருக்கலாம். ஆசிரியரே அக்காரியத்தை ஏற்றுக்கொண்டதால், இந்நாவலை வாசிக்கும்பொழுது ஒரு மொழிபெயர்ப்பென்ற எண்ணமே மனத்திற்கு வரவில்லை. தமிழ் வாழ்க்கையின் வேரிலிருந்து ஊறிவரும் ரசத்தை இவரது நாவல்மூலம் பருக முடிகிறது. 'மண்ணாசை' என்ற பெயர் இந்த நாவலுக்கு மிகப் பொருத்தமே. இவ்வாசை நாவலின் இறுதிவரையில் தொடர்ந்து வருகிறது. இவ்வாசையின் உருவும் கனவும் வேங்கடாசலம் என்றே சொல்லிவிடலாம். இவ்வுரு மண்ணிலே தோன்றி மறைந்துவிட்டது. இல்லை, இல்லை; தான் புதைந்து கிடக்கிற 'நத்தைக்காடு' நிலம் அழிந்துபோகாமலிருக்கிறதா என்று அதைச் சதா சுற்றிவருகிறது. அத்தனை அழியாத ஆசை அவ்வுருவத்திற்கு.

"அந்தப் பாவிக்கு 'நத்தைக்காட்டு' மேலேதான் உயிரெல்லாம். அதுலேயே அவனைப் பொதச்சு ஒரு மடம் கட்டிடலாம்."

ஆசாபாசங்களைச் சுலபமாய் அறுத்துத் தள்ளிவிட முடிகிறதில்லை. கொஞ்சதூரம் ஓர் ஆப்த நண்பரோடு போய் மார்க்கத்தில் பிரிந்தால் ஏதோ மனத்தைச் சங்கடம் செய்துவிடுகிறது. ஒரு வீட்டில் கொஞ்சநாள் இருந்துவிட்டு வேறு இடத்திற்கு ஜாகை மாற்றுகிறபொழுதும் நமக்கு வருத்தம் வராமல் இல்லை. நிலத்திலே தோன்றி, நிலத்திலே மறைந்து, நிலத்திலே பெற்று வளர்த்து, நிலத்திலே சுக

துக்கங்களை அடைந்து, நிலத்திலே பல கனவுகளைக் கண்டு, நிலத்திலே பல ஆசைகளை வளரவிட்டுக் கருகிய ஆசைகளோடும், வாடிய எண்ணங்களோடும் நிலத்திலே நிதம் மடிகிற குடியானவர்களுடைய மண்ணாசையை முற்றும் சித்திரித்துவிட இயலுமோ? நம் சொற்கள்தாம் ஏழையாய்ப் போய்விடும்.

இம்மண்ணாசையை ஓர் இதிகாசம்போல இருக்கிற 'நல் நிலம்' ('Good Earth') என்ற அரிய நாவலில் பேரல் பெக் செஞ்சொற்களில் சித்திரித்திருக்கிறார்.

"வானத்தில் மழையின் சின்னம் ஒன்றுமே காணோம். பயிர்கள் வாடின; பஞ்சம் வந்தது. மனிதர்களும் வாடி வதங்கிப் போயினர். உணவின்றிச் சிலர் உயிர் துறந்தனர். உயிருக்கே ஆபத்து வருகிற நேரத்தும் தன் நிலத்தை விற்க மனமில்லை வான் லங்குக்கு. ஒரு காலத்திலாவது நிலம் தன்னைக் காப்பாற்றுதா என்ற எண்ணத்துடன் பட்டணத்திற்குக் குடும்பத்தோடு போய்விட்டான். நிலம் அவனை ஏமாற்றவில்லை. வானம் நீர் வழங்கியது; நிலம் தழைத்தது. வேண்டியவெல்லாம் பூமி வழங்கிற்று. செல்வனாய் வாழ்ந்தான். வயதானபடியால் நிலத்திற்குப் போக முடியவில்லை. அப்படியிருந்தும் தன் நிலத்தின் ஒரு பிடி மண்ணைக் கையிலே எடுத்த மாத்திரத்தில் ஒரு தனி உவகை அவன் உடம்பு முழுவதும் பாய்ந்து, மயிர்க்கால்கள்தோறும் எட்டிப்பார்த்தது.

"தன் பிள்ளைகள் நிலத்தின் ஒரு பாகத்தை விற்றுவிடுவதாகப் பேசிக்கொண்டிருக்கிறதைக் கேட்டு அவனுக்குக் கோபம் வந்தது. 'நிலத்தையா விற்கப் போகிறீர்கள்? நிலத்தோடு குடும்பமும் போய்விடும். நிலத்திலேதான் தோன்றினோம்; நிலத்திலேதான் மடியப்போகிறோம். நிலம்மட்டும் இருந்தால் என்றைக்கும் சோறுபோடும். நிலத்தை எடுத்துக்கொண்டு எவரும் போகமுடியாது' என்று தொண்டை அடைக்கப் பேசினான்."

செக்கோவின் 'செர்ரித் தோட்ட'த்திலும் இதே ஒலியைத்தான் கேட்கிறோம். கடன்பட்ட மதாம் ரென் எவ்சிக்கி இந்த நிலையில்தான் புலம்புகிறாள்.

"இந்த இடத்தில்தான் பிறந்தேன் நான்; இந்த இடத்தில்தான் என் தகப்பனார் வாழ்ந்தது, என் தாய் வாழ்ந்தது, என் பாட்டன் வாழ்ந்தது. இந்த வீடென்றால் எனக்கு உயிர். இந்தச் செர்ரித் தோட்டம் இல்லாத வேறு வாழ்வை நினைக்கக்கூட என்னால் முடியவில்லை."

பேரல் பெக்கும் செக்கோவும் மண்ணாசையை விஷயமாக வைத்து, முறையே நாவலும், நாடகமும் நமக்குத் தந்திருக்கிறார்கள். ஸ்ரீ சங்கரராம் அவர்களும் மண்ணாசைக் கதையை ஒழுங்காகச் சமைத்திருக்கிறார். ஒரு பெரிய இதிகாசமாவதற்கு வேண்டிய விஷயங்கள் இதில் அடங்கியிருக்கின்றன. ஒரு தெய்வப் புலவன் இவைகளை வைத்துக்கொண்டு ஒரு மாக்கதை செய்துவிடுவான். ஆனால் இவர் கையில் ஒரு குறுகிய நாவலாய் அமைந்து கிடக்கிறது. இம்'மண்ணாசை'யில் கடைசிவரையில் மண்ணாசையினால் பிறந்த ஏக்கக் குரலைக் கேட்கிறோம். வேங்கடாசலத்தைக் கடன்வந்து மூடிவிடுகிறது. தத்தளிக்கிறான். அருமந்த பொருள்களெல்லாம் ஏலம்போடப்படுகின்றன, அவன் செய்கிற பிரயத்தனங்கள் மண்ணோடு மண்ணாய் மடிந்துவிடுகின்றன. விதி அவனை நிரம்பச் சோதித்துவிடுகிறது. ஆனால் நிலத்தை விற்க மனம் வரவில்லை. நிலத்தை விற்றுக் கடன்கொடு என்று அவனுக்குப் புத்தி சொல்ல வந்த மதுரை முதலானவர்கள் விரோதிகளாய்விடுகிறார்கள். பிள்ளைபோலத் தான் பாவித்துவந்த வேலன்மீது அவன் சீறிவிழுகிறான். மண்ணில் வைத்த மோகம் எல்லாவற்றையும் மறைத்துவிடுகிறது.

"அட துரோகக்காரப் பயலே! நீயும் வீரப்பனோடேயும் மதுரையோடேயும் சேந்துக்கிட்டயா? என்ன துணிவுடா உனக்கு! என் நெலத்தையா விக்கச்சொல்றே? நீ யார்ராவன்? அந்தப் பேச்சையெடுக்க ஒனக்கென்ன அதிகாரமடா? ஹா! ஹா! என் புத்தியைச் செருப்பாலே அடிக்கணும். ஆயிரம் செஞ்சாலும் நீ வேத்து மனிசன்தானே! என் வவுத்துலே பொறந்தவனா? நான் எங்க நிலத்துமேலே எவ்வளவு உயிர் வச்சிருக்கேன்."

இம்'மண்ணாசை'யில் காதற்கதை அருவி பாய்கிறது. முதலிலே காதல்விதையை விதைத்துவிடுகிறார்; விதையும் காவிரி வண்டலில்தான் விழுகிறது. அக்காதல் விதை வெடித்து அரும்பிப் பூத்துக் கனிந்த பழமாகிவிடுகிறது. அவ்வரும்பை உதிர்க்க எத்தனையோ வாழ்வுப் புயல்களெல்லாம் அடித்தன. ஆனால் பூவினும் மெல்லிய அக்காதல் அவைகளைத் தாங்கிவிட்டது. ஆலங் கட்டி மழை பெய்கிற சமயம் வடிகாலிலிருந்து வள்ளியை வேலன் தூக்கினபொழுதே விதி அவ்விருவர்களையும் சேர்த்து விடுமென்று தோன்றுகிறது. கதை ஆரம்பத்தில் மற்றொரு விஷயம் நம் மனத்திற் படாமற் போகவில்லை. வேலனுக்கும் மாயாண்டி மகனுக்கும் எழுந்த சீற்றப் பொறியைப் பார்க்கிறோம். இச் சீற்றப் பொறி உள்ளே கனிந்துகொண்டே இருக்கிறது. கடைசியில் ஒரு பெருந் தீயாய்க் கொழுந்துவிட்டு எரிகிறது. மல்லன் மாயாண்டி இவர்கள் குடும்பத்தையே சுட்டெரித்துவிடும்போல் இருக்கிறது.

"போ, மாமா! அதெல்லாம் ஒண்ணுமில்லே. இந்த அருவா என்ன கேக்குது தெரியுமா? அந்த மாயாண்டிப் பய பொடணி ரத்தத்தை ருசி பார்க்கணுமிங்குது! இப்ப தெரிஞ்சிடுச்சா?" என்று அவன் (வேலன்) தலையைப் பலமாய் ஆட்டினான்.

இந்நாவலுக்கு அமைப்புச் சரிவர ஏற்பட்டிருக்கிறது. மண்ணாசையை நன்றாக விளக்கிக் காட்டியிருக்கிறார். காதற் பாதை கல்லும் முள்ளும் என்ற விஷயமும் நன்கு இங்கே பொருத்தப்பட்டிருக்கிறது. ஆனால் ஒன்றிரண்டு விஷயங்கள் கலை உணர்ச்சிக்கு முரண்படுகின்றன. மாயாண்டிக்கும் அவன் மூத்தமகன் சோளனுக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டிருக்கிறது என்பது மாயாண்டி மனைவி தேவானைக்கும் மூத்தமகனுக்கும் ஏற்படுகிற சம்பாஷணைமூலம் தெரிகிறது.

"நான் என்னம்மா பண்ணுவேன்? நான் போன எடமெல்லாம் என் பங்காளி கூடவே வாறானே. ஒருவன் தவறாதே எல்லாருகிட்டேயும் என்னைத் திட்டுகிறான். நான் திருடனும், குடிகாரனும், பொய்யனும். ஊம்...இன்னும் என்ன வேணும்? ஒரு தோப்பன் தன் மவனுக்குச் செய்யற ஒவகாரம் இது! பிச்சக்காரப்பய! என்னிக்காவது ஒரு நாளைக்கு அவன் காலையும் கையையும் ஒடிச்சுப் போடாட்டி என்னு கேளு."

இந்த ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு சம்பாஷணை மூலம் தெரிவித்ததுமட்டும் போதாது. கோபம் தீராத வைரமாக முற்றுவதற்கு இன்னும் பல நிகழ்ச்சிகளைச் சிருஷ்டித்திருக்கவேண்டும். தகப்பனைச் சோளன் கொல்லுவதற்குக் காரணம் அப்பொழுது பலப்படும்.

மேலும் வேலன் கொலை செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டுக் கூண்டில் நிற்கிறான்; சோளன் அந்தத் தறுவாயில் குற்றத்தை ஒப்புக் கொள்ளுகிறான். இந்தச் சம்பவத்தில் நாடக மேடையின் சாயை அடிக்கிறது.

"அட பாவி! நான் உள்ளே போயாவணுமே? நான் ஜார்ஜி அய்யாவோடு பேசி ஆவணுமே—இல்லாட்டி, அநியாயமா ஒரு பாவமும் அறியாத பையன், அவனையல்லோ

கொன்னுடுவாங்க! எங்கப்பனைக் கொன்னது நான்தானின்னு தொரைகிட்டே சொல்லணும், ஐயா."

இம்மாதிரி ஸம்பவங்கள் வாழ்க்கையில் நிகழக்கூடாத விஷயங்களல்ல. இல்லாதன அல்ல இவ்வுலகில். ஆனால் இது அபூர்வம். விக்டர் ஹ்யூகோவின் ஜீன் வால் ஜீன் ஞாபகம் வராமற் போகாது. கள்ளங்கபடில்லாத குடியானச் சாதிகளில் ஒருகால் நிகழலாம். ஆனால் உயிர் யாருக்கும் வெல்லந்தானே? மரணதண்டனையிலிருந்து தப்ப வழிதேடுவதுதானே மனிதனது இயல்பு? வேலனுக்கும் சோளனுக்கும் விசுவாசம் ஏற்படக்கூடிய நிகழ்ச்சிகளைக் குறித்திருந்தால் ஒரு பரிகாரம் இதற்கு இருந்திருக்கக்கூடும்.

ஆனால் இங்கு ஒன்று நோக்கத்தகுந்தது. இந்த நாவல் சம்பிரதாய முறையில் மங்களம் பாடி முடியவில்லை. கஷ்டதசையிலே, ஒருவனுக்குக் கண்ணுக்குத் தெரியாத திசையிலிருந்து இறந்துபோன உற்றார் உறவினரிடமிருந்து விசேஷமான செல்வம் வந்துவிடும். அப்புறம் ஒரே மகிழ்ச்சிதான்; கொம்மாளந்தான். இந்த நாவலிலும் விசேஷமான தனம் வருகிறது. இது வருவதற்குமுன் இதைக் கண்டு சந்தோஷிக்க வேண்டியவன் மாண்டுவிடுகிறான். செல்வமத்தியில் வேலனுக்கு ஆழ்ந்த மனத்தாங்கல் ஏற்பட்டுவிடுகிறது. வாய் கயப்புறச் சில வார்த்தைகளை மொழிகிறான். இந்தப் பகுதியில் துக்கம் சேர்ந்த இன்பந்தான் வாழ்வு என்பதை நன்கு உணர்த்தியிருக்கிறார் ஆசிரியர்.

"ஆஹா! என் தோப்பனாரு செத்தாரு; எங்க 'அப்பா' செத்தது; எனக்கு ஆறு லச்சம் வந்திடுச்சி. இன்னமே, எனக்கு என்ன கொறவு?" என்று வேலன் பரிகாசமாய்ச் சிரித்தான்.

"என்னாத்தை அறியறது! எனக்கு ஒண்ணும் விளங்கல்லியே! கண்காணாத சீமையிலே என்னைப் பெத்த தோப்பன் செத்துட்டது இன்னா, அது எனக்கு ஏற்கில்லையே. அது எனக்கு ஒரு வேத்து மனிசன்தானே!—ஆனா எங்கப்பாவைப் பாத்தா, ஐயோ! என் வவுறு எரியுதே! ஐயோ, அப்பா! அப்பா!" என்று நாவில் வார்த்தை எழும்பாமல் குழறினான் வேலன்.

கதா பாத்திரங்கள் உண்மைவாழ்விலே எழுந்தவைகளாகவே உள்ளன. மன நிகழ்ச்சிகள், ஓட்டங்கள் குறுக்கோட்டங்கள், உள்ளவாறு சித்திரிக்கப்பட்டிருக்கின்றன. உதாரணமாக, வேலனுடைய கிலேசம், தடுமாற்றம், திகைப்பு, காதல், நிர்வேதம் முதலியன உள்ளபடி நம்முன் விரிகின்றன.

இக்கதா பாத்திரங்களில் மீனாக்ஷியை மறக்கமுடியாது. மீனாக்ஷி மாயாண்டியின் தமக்கை. பணத்தோடு வீட்டுக்கு அறுத்துவந்தவள். அவள் பண்ணுகிற அட்டஹாஸத்திற்கு அளவேயில்லை. மாயாண்டியை ஆட்டிவைத்துவிட்டாள். மீனாக்ஷியை அநேக வீடுகளில் பார்க்கிறோம். மீனாக்ஷியிடம் பொதுதர்மத்தையும் தனிச்சிறப்பையும் பார்க்கிறோம். இதுமாதிரி பணக்காரக்கைம்பெண் வந்து, வீட்டிலிருக்கிற சொந்த மனைவிக்குக்கூட ஒரு சுவாதீனமில்லாமல் செய்துவிடுகிறாள். வீட்டுக்காரன் ஒரு நாய்போல் ஆகிவிடுகிறான். இப்படிக் குட்டிச் சுவராய்ப் போன எத்தனை குடும்பங்கள் உண்டு! மாயாண்டிவீட்டை நாசம் பண்ணவந்தவள் மீனாக்ஷிதான்.

"அடபாவி, வாணண்டா! வாணண்டா! ஒன்னைப் பெத்த தோப்பண்டா, ஏண்டா பாவத்தைத் தலையிலே கட்டிக்கிறே? அவுங்கமேலே என்னடா தப்பு? நம்ம

தலையெழுத்து, இல்லாட்டி அந்த முண்டச்சி, அவ பணத்தோடே இங்கே வந்து சேருவானேன்?"

இம் மீனாக்ஷி தனிச்சிறப்புடையவள். மீனாக்ஷி உருவமும் மாயாண்டி உருவமும் நம்முன் எழுகின்றன. ஒரு வயிற்றிற் பிறந்தவர்களுக்கு இவ்வளவு தாரதம்மியம் எங்குமே இராது. 'மீனாக்ஷி பூதாகாரமான ரூபத்தை யுடையவள். மாயாண்டியோ ஆகாரமில்லாமல் மெலிந்து ஒடுங்கிப் போன நரிக்குட்டிபோல் இருந்தான். மீனாக்ஷி யின் தோற்றமே ஓர் ஆண்மகன்கூடக் கெட்டான்; ஆனால் பார்ப்பவர்களுக்கு ஓர் அருவருப்பு உண்டாகும்படி உதடுகள் மிகத் தடித்தும் கண்ணிமைகள் வீங்கினாற் போல் பருத்துத் தொங்கிவிழிகளைப் பாதி மூடிக்கொண்டும் இருந்தன. குரல் எப்பொழுதும் தொண்டை கட்டிக்கொண்டாற்போல் இருந்தது. மாயாண்டியைப் பார்த்தாலோ, பல நாட்களாகத் துரத்தப்பட்டு வெருண்டு ஓடும் ஒரு சோனி நாயின் முகந்தான் ஞாபகத்துக்கு வரும்.'

வர்ணனைகளும் சம்பிரதாயமுறைகளில் இல்லாமல் பார்த்து அனுபவித்தபடி அமைந்து கிடக்கின்றன. கள்ளுக்கடை, சந்தை, தைப்பூசத் திருவிழா இவைகளெல்லாம் நம் கண்ணெதிரில் காட்சி அளிக்கின்றன.

தைப்பூசத் திருவிழாவின் பலாப்பழ வாசனையை இவர் விடவில்லை. கள்ளுக் கடைச் சண்டையை இவர் மறக்கவில்லை. புறங்கையில் மாம்பழச் சாறு வழிகிறதை இவர் கவனித்திருக்கிறார். வலிப்புவந்தால் இரும்புச் சாவியைக் கையில் கொடுக்கிறதை இவர் நோக்கியிருக்கிறார். வயதானால் எல்லாவற்றிலும் சந்தேகம் வந்துவிடும்; இதை இவர் ஞாபகத்தில் வைத்து எழுதியிருக்கிறார்.

"மாடுகள் வண்டியில் பூட்டப்பட்டன. அப்பொழுது அண்ணாமலைத் தாத்தா லாந்தரை எடுத்துக்கொண்டு ஒவ்வொரு கடையாணியையும் நன்றாகத் தடவிப் பார்த்தான். மற்றவர்களெல்லாம் சிரித்தார்கள்."

பேசுகிற பேச்சுக்கள் என் ஊர்க் குடியானத் தெருப் பேச்சுக்கள்போல் என் செவிகளில் விழுகின்றன. இப்பேச்சுக்களில் தமிழின் ஜீவநாடி பேசுகிறது.

சம்பிரதாயம் வந்துவிட்டால் இலக்கியத்திற்குச் சாவு வந்துவிட்டது என்று சொல்லிவிடலாம். நம்மிடத்தில் பௌதிகசாஸ்திர மனப்பண்பு கொஞ்சங் கூட இல்லை. சித்திரங்கள் எல்லாம் சம்பிரதாயச் சித்திரங்கள்தாம். கண்ணால் கண்டு அனுபவித்த விஷயங்களுக்குத்தான் தக்க உருக் கொடுக்கமுடியும். அச்சித்திரங்களில் தான் ஜீவன் உண்டு, கலை உண்டு. இம் மண்ணாசையில், ஒழுங்கான முறையில் நம் நாட்டு இலக்கியம் செல்லுமென்ற சின்னத்தைப் பார்க்கிறேன்.



## மொழிபெயர்ப்பு நாவல்கள்

**கிருகதாகம்:** [ஆசிரியர்: சரத்சந்திர சட்டர்ஜி; மொழிபெயர்ப்பாசிரியர்: அ. கி. ஜயராமன். நவயுகப் பிரசுராலயம், ஜி. டி. சென்னை. இரண்டு பாகங்கள்; ஒவ்வொரு பாகமும் விலை ரூ. 1—12—0.]

இதயத்தின் ஆழம் காண இயலாத போக்கையும், காதலின் தடுக்கமுடியாத பிரவாகத்தையும் உண்மையில் காணவேண்டுமென்றால் வங்காளி நாவல்களில்தான் கூடும் என்று நான் நினைக்கிறேன். மனிதரிடை, அதுவும் இந்தியர்களிடை, இவ்வளவு காதல் சிக்கல்கள் இருக்குமோ என்ற சந்தேகம் நமக்குச் சிற்சில சமயம் உண்டாகத்தான் செய்கிறது. இவ்விதம் காதல் நுட்பங்களை வர்ணிப்பதில் மிகத் திறமை பெற்ற வங்க ஆசிரியர்களுக்குள் ஜனத்திரளின் மனத்தை அதிகமாகக் கவர்ந்தவர் சரத்சந்திர சட்டர்ஜி. ஓர் ஆசிரியர் கீர்த்திபெற்றுவிட்டார் என்பதற்கு அடையாளம், அவர் எழுதுவதைப்போலவே கேலி (Parody) செய்து எழுதுவது என்று சொல்வார்கள். "கண்ணம்மா—என் காதலி" என்று பாரதியார் எழுதியதைப் பின்பற்றி, "முத்தம்மா—என் மனைவி" என்று எழுதினால் அது பாரதியாரின் கீர்த்திக்கு அமரத்வ முத்திரையை வைப்பதாகும். இவ்விதம் பரிகஸிக்கப்பட்ட சொற்ப ஆசிரியர்களில் ஒருவர் சரத்சந்திர சட்டர்ஜி. ஜனத்திரளின் மனத்தை அவர் எவ்வளவு கவர்ந்திருக்கிறார் என்பதற்கு இஃது ஓர் அறிகுறி.

சரத்பாபுவின் முக்கிய நாவல்களில் ஒன்றாகிய 'கிருகதாகம்' என்ற இப்புத்தகத்திலும் காதல் பிரச்னை ஏற்பட்டுக் கதாபாத்திரங்களையும், கதை வாசிப்பவர்களையும் சஞ்சலத்தில் ஆழ்த்தி, "அது சரியோ? இது சரியோ?" என்று தவிக்குமாறு செய்கிறது. சரத்பாபுவின் கதாபாத்திரங்கள் உயிருடன் ஜீவிப்பவர்கள். அவர்களின் போக்கும், மனப்பான்மையும், துடிப்பும், உணர்ச்சி வேகத்தில் அகப்பட்டு அவர்கள் அலைவதும் நமக்கு ஆச்சரியத்தை உண்டாக்கினபோதிலும், அவர்களைப்பற்றி நமக்குச் சந்தேகம் தோன்றுவதில்லை; "இந்தக் கதை பொய், நடந்திராது" என்ற எண்ணம் உண்டாவதில்லை. ஆசிரியரின் திறமைக்கு இது சான்றாகும்.

மொழிபெயர்ப்பு நன்றாக இருக்கிறது. ஆனால் இன்னும் சற்று நன்றாக இருக்கலாம். தமிழின் போக்கிற்கு ஏற்றதாக இல்லாமல், படிக்கும் சமயம் வேறு ஏதோ பாஷையைப் படிப்பதுபோன்ற உணர்ச்சியை உண்டாக்கும் சிற்சில வாக்கியங்களைக் கூறவில்லை.

"இல்லை, அப்பா, உடம்பு அசௌகரியம் ஏன் வரவேண்டும்? நான் நன்றாகத்தான் இருக்கிறேன்" என்றாள் அசலா.

"ஆமாம், அன்று ஒரு மாதத்திற்குள் எனக்குப் பெண் தேடிக்கொடுப்பதாகச் சொன்னாயே; அது என்ன ஆயிற்று?—இதைச் சொல்."

இவைபோன்ற வாக்கியங்கள் கவனப்பிசகினால் ஏற்படுபவை. ஆனால், "சாயங்காலம் தலை குனிந்துகொண்டு தன் விடுதியை நோக்கி மெல்லச் சென்றுகொண்டிருக்கும் மஹிமின் முகத்தைப் பார்த்தவர்கள், அப்பொழுது அவனுடைய உயிர் துன்பத்தினால் வெளியே செல்ல அவன் ஹிருதயச்சுவரில் துவாரம் செய்ய முனைந்திருந்தது என்று சொல்லிவிட முடியாது" என்பதுபோன்ற வாக்கியத்தை இரண்டு

மூன்று முறை படித்தபின்னே நமக்கு இவ்வளவு சுற்றி வளைத்துத் தலையைத் தொடுவதன் அர்த்தம், 'மஹிமின் மனம் துன்பப்படுவதை முகம் காண்பிக்கவில்லை' என்னும் சுலபமான விஷயம் என்று புரியும்.

இவ்விதப் பிழைகள் சிற்சில இருப்பினும் காதல் கதையை விரும்புபவர்கள் இந்த நாவலை மிக ரஸிப்பார்கள் என்றே சொல்லலாம்.

பெண்: [ஆசிரியர்: ஸியாராம் சரண குப்தர். மொழிபெயர்ப்பாசிரியர்: கா. ஸ்ரீ. ஸ்ரீநிவாஸாசாரியார். நவயுகப் பிரசுராலயம், ஜி. டி. சென்னை; விலை ரூ. 1—12—0.]

வங்காளி நாவல்களில் இருப்பவைபோன்ற மனிதர் குணங்களைப்பற்றின சிக்கலான பிரச்னைகள், ஆராய்ச்சிகள் முதலியவைகள் ஹிந்தி நாவல்களில் இருப்பதில்லை. ஹிந்தி ஆசிரியர்களின் போக்கே சரளமானது. நேர்மைக்குணம், சாதாரணமான குடும்பக்கஷ்டங்கள், தாயின் அன்பு, குழந்தைகளின் மனோகரமான சேஷ்டைகள் இவைகளையே ஹிந்தி நாவல்களில் அதிகமாகக் காணலாம். 'பெண்' என்ற இந்த நாவலில் கதாநாயகியான ஜம்னு பெண்மைக் குணங்களையெல்லாம் காண்பிக்கிறாள்; பயப்படுகிறாள்; அறியாத்தனமான காரியங்களைச் செய்கிறாள்; சஞ்சலமடைகிறாள். இருந்தும் பெண்மைக் குணத்தின் சிகரத்தையும் அவள் அடைகிறாள். உணர்ச்சிகளை அடக்கி ஏற்ற வழியில் செலுத்துவதே அக்குணம். பெண் என்பது உணர்ச்சிக்குவியலே. அந்த உணர்ச்சிகளைத் தர்ம வழியில் செலுத்தினால்தான் ஒரு பெண்ணுக்கு விமோசனம் ஏற்படும். உணர்ச்சிகளை அடியோடு அடக்கிவிடாமல்கூடப் பெண்மைக்குணம் போய்விடுவதுண்டு.

ஜம்னுவிற்கும் நம்மெல்லோருக்கும் ஏற்படுவதுபோல் ஒரு தினம் சோதனை ஏற்படுகிறது. அபலையாக இருந்தும், அவளுக்குப் புத்திமதி கூறுபவர் எவரும் இல்லாமலிருந்தும், படிக்கத் தெரியாத ஒரு பட்டிக்காட்டுப் பெண்ணாக இருந்தும் அவள் அந்தச் சோதனையில் வெற்றியே பெறுகிறாள். தன் உணர்ச்சியை வெல்லுகிறாள். மனத்தின் சஞ்சலத்தை அடக்குகிறாள். ஆனால் அதேசமயம் உணர்ச்சியைக் கொன்றுவிடவில்லை. "தன்னுடைய பிள்ளையின் கையைப் பிடித்துக் கொண்டு செல்கிறாள்" என்கிறார் ஆசிரியர். தர்மமுறையில் தனது உணர்ச்சியைச் செலுத்துகிறாள். இதுதான் பெண்ணின் வெற்றி.

ஆசிரியர் தாயின் குணத்தையும், பிள்ளை ஹல்லியின் குணத்தையும் மிக அழகாகச் சித்திரித்திருக்கிறார். ஒரு பட்டிக்காட்டில் ஒரு குடியானவப் பெண்மணியிடமிருந்து இவ்வளவு உயர்ந்த குணத்தைத் தோண்டி எடுத்துக் காட்டியிருப்பது சேற்றில் தாமரை பூத்திருப்பதைச் சித்திரிப்பதுபோல் இருக்கிறது. சில ஆசிரியர்களைப் போல் சேற்றில் ரோஜாவும் மல்லிகையும் பூத்திருப்பதாகச் சித்திரிக்கவில்லை.

'கிருகதாக'த்தின் மொழிபெயர்ப்பில் இருப்பதுபோல் இந்த மொழிபெயர்ப்பிலும் சிற்சில சிறிய தவறுகள் இருக்கின்றன. 'ஸப்தநதி'களை மொழிபெயர்த்ததில் பெற்ற வெற்றியை இவ்வாசிரியர் இம்மொழிபெயர்ப்பில் பெறவில்லை. ஒரு ஸம்பவத்தை, ஒரு செய்கையை, ஒரு பாஷையிலிருந்து மற்றொரு பாஷையில் சொல்வதில் அதிகத் தவறுகள் ஏற்படா. ஆனால் ஓர் உணர்ச்சியை அல்லது மனோபாவத்தை வர்ணிக்கும் சமயம், அந்த உணர்ச்சியின் வர்ணனை மொழிபெயர்க்கப்படும் பாஷையின் போக்கிற்கு ஏற்றதாக இருக்கவேண்டும்; இல்லாவிடில் பொருத்தமற்றதாகி விடும். இதனாலேயே ஒரு யாத்திரை நூலை மொழிபெயர்ப்பது சுலபம்; ஒரு நாவலை மொழிபெயர்ப்பது சற்றுக் கஷ்டம். ஒரு காவியத்தை மொழி

பெயர்ப்பது மிகவும் கஷ்டம். ''அவன் போனன்'' என்பதை இங்கிலீஷில் ''He went'' என்று சுலபமாய்ச் சொல்லலாம். ''அவன் மனம் துடித்தது'' என்பதை ''His mind throbbed'' என்று மொழிபெயர்த்தால், ''அவன் மனம் என்ன, ஓர் ஏரோப்ளேனின் எஞ்ஜினு?'' என்றே தோன்றும். இவ்விதச் சமயங்களில் மூலத்தில் இருப்பதன் கருத்தை ஆசிரியர் கிரகித்துக்கொண்டு மொழிபெயர்க்கப்படும் பாஷையின் போக்கிற்கு ஏற்றதாகத் தம் சொந்த வார்த்தையில் அதைச் சொல்ல வேண்டும். இதனுல் மூலத்திற்கும் மொழிபெயர்ப்பிற்கும் சற்று வித்தியாசம் ஏற்பட்டாலும் பாதகமில்லை. உமார் காயம் பாரசீகபாஷையில் எழுதிய பாடலைப் பிட்ஸ் காரல்டு மொழிபெயர்த்திருக்கிருர். மூலத்திற்கும் மொழிபெயர்ப்பிற்கும் நேருக்கு நேரான கருத்து ஓரிடத்திலும் இல்லை என்றே சொல்லலாம். இருந்தும் மொழி பெயர்ப்புக்குள் அவரதே மிக விசேஷமானது எனக் கருதப்படுகின்றது. ஸ்ரீ கா. ஸ்ரீ. ஸ்ரீநிவாஸாசாரியாருக்கு இக்கொள்கைகள் தெரியாதவையல்ல. சிற்சில இடங்களில் இவைகளைப் பின்பற்றியிருக்கிருர். ஆனல் பொதுவில் இம்மொழி பெயர்ப்பு மிக வேகமாகச் செய்யப்பட்டது என்ற எண்ணமே நமக்கு உண்டாகிறது.

'குமுதினி'

---

**முருகன் மதுர கீர்த்தனை:** [மாயூரம் ஸ்ரீ விசுவநாத சாஸ்திரி இயற்றியது; கிடைக்குமிடம்: ஸங்கீதஸதனம், 135, தம்பு செட்டித் தெரு, ஜி. டி. சென்னை; விலை, ரூ. 2—4—0.]

தமிழில் நல்ல கீர்த்தனங்கள் இல்லையென்ற குறை இப்பொழுது வரவர நீங்கி வருவதைப்பற்றி ஸங்கீத அபிமானிகள் ஸந்தோஷிக்கவேண்டும். ஸ்ரீமான் விசுவநாத சாஸ்திரிகள் இயற்றி வெளியிட்டுள்ள இக்கீர்த்தனைகளில் அவருடைய பக்தியும் ஸங்கீதத் திறமையும் நன்கு வெளியாகின்றன. அவர் கீர்த்தனங்களில் தீக்ஷிதருடைய பாணியைப் பின்பற்றியிருக்கிருர். ஆசிரியர் பெயர், ராகப்பெயர் இவை பெரும்பான்மையான கீர்த்தனங்களில் அமைந்துள்ளன. பல இடங்களில் உள்ள ஸ்வராக்ஷரப் பிரயோகம் ஸங்கீதத்திற்கும் ஸாஹித்தியத்திற்கும் உள்ள இயைபை அதிகமாக்குகின்றது. இத்தகைய கீர்த்தனங்களை ஸங்கீத வித்துவான்கள் ஸபைகளில் பாடி ஊக்கமளித்தால் இன்னும் பல கீர்த்தனங்களைச் சக்தியுடையவர்கள் இயற்ற முன்வருவார்கள்.

**'பாபூ' அல்லது நானறிந்த காந்தி:** [ஸ்ரீ கனசியாம தாஸ் பிர்லா ஹிந்தியில் எழுதியதை ஸ்ரீ அ. சுப்பையா மொழிபெயர்த்தது; விலை ரூ. 1—8—0; லலிதா அண்ட் கம்பெனி, 289, லிங்கி செட்டித் தெரு, ஜி. டி. சென்னை.]

நல்ல விஷயங்களைப்பற்றி நல்ல நடையில் நல்ல உருவத்தில் புஸ்தகங்களைக் கண்டால், 'இந்தமாதிரி நம் தமிழ்ப்பாஷையில் வரக்கூடாதா?' என்று புஸ்தகப் பிரியர்கள் ஏங்கின காலம் உண்டு. அந்தக் காலம் இப்போது மலையேறிவிட்டது. இது காந்தியடிகளோடு நெருங்கிப் பழகிய கோடீசுவரர் ஒருவர் எழுதியதன் மொழி பெயர்ப்பு. ஸ்ரீமான் சுப்பையா மொழிபெயர்ப்பைப் பக்தி சிரத்தையோடு செய்திருக்கிருர். கவர்ச்சியுள்ள படங்களும் உருவமும் எல்லோருக்கும் இன்பத்தை உண்டாக்கும். மூலநூலைப்பற்றிச் சென்ற இதழில் 'குமுதினி' எழுதியவற்றைப் படித்தவர்கள் அப்புஸ்தகம் இவ்வளவு விரைவில் தமிழில் வெளிவந்திருப்பதைப் பாராட்டி வாங்கிப் படிப்பார்களென்று நம்புகிறோம்.

---

# குறிப்பும் திரட்டும்

## சிறுவர் கதைக்குப் பரிசு

கலைமகளில் வெளிவரும் சிறுவர் பகுதிக்கேற்ற கதைகளை எழுதுபவர்களுக்கு ஊக்கமுண்டாக்குவதற்காக இரண்டு பரிசுகள் ஏற்படுத்தியிருக்கிறோம். முதல் பரிசு ரூ. 25. இரண்டாவது பரிசு ரூ. 15.

சொந்தக் கற்பனையாக உள்ள கதைகளுக்கே முதல் ஸ்தானம் அளிக்கப்பெறும். வேறு பத்திரிகைகளில் வந்த கதையைக் கூட்டியோ குறைத்தோ மாற்றியோ எழுதாமல் இருக்கவேண்டுமென்று அன்பர்களிடம் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

பரிசு பெறாத கதைகளில் பிரசுரிப்பதற்கு ஏற்ற கதைகள் கலைமகளில் வெளிவரும்போது உசிதம்போல ஸம்மானம் அளிக்கப்படும்.

1941-ஆம் ௵ அக்டோபர் ௴ முதல் தேதிக்குள் எங்கள் கைக்குக் கிடைக்கும் கதைகளை இந்தப் பரிசுத்திட்டத்திற் சேர்த்துக்கொள்வோம்.

பரிசோ, ஸம்மானமோ பெறும் கதைகள் சம்பந்தமான உரிமைகளெல்லாம் கலைமகள் காரியாலயத்தாரைச் சார்ந்தவை.

கதைகளை யாவரும் எழுதியனுப்பலாம்.

அனுப்பும் கதைகளைப்பற்றிய விவரங்களையோ, இந்தப் பரிசுத்திட்ட ஸம்பந்தமான செய்திகளையோ தெரிந்துகொள்ள விரும்புபவர்கள் பதிலுக்கு வேண்டிய தபால் முத்திரைகளை அனுப்பவேண்டும்.

பத்திராசிரியர்.

## ஏஜெண்டுகள் தேவை

கலைமகள் பிரதிகளை விற்பனை செய்யவும் சந்தாதார்கள் சேர்க்கவும் கீழ்க்கண்ட இடங்களில் ஏஜெண்டுகள் தேவை. நிபந்தனைகளுக்கு எழுதுக.

| | |
|---|---|
| நாமக்கல் | செங்கற்பட்டு |
| பழநீ | கடலூர் |
| ராசீபுரம் | ரங்கூன் |
| திருப்பூர் | பெங்களூர் |
| விழுப்புரம் | லாஹூர் |
| வேலூர் | புனா |

மானேஜர்—கலைமகள்—மயிலாப்பூர்

## ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்

காலஞ்சென்ற ராவ்சாஹிப் பி. எஸ். கிருஷ்ணஸ்வாமி ஐயரவர்கள்
('தர்மாலயம்', மயிலாப்பூர்)

ஸம்ஸ்க்ருத மூலத்துடன் வசனநடையில் இயற்றிய மூலத்திற்கு நேரான அழகிய தமிழ் மொழிபெயர்ப்பு

ஆரண்யகாண்டம்: விலை ரூ. 5-0-0

சுந்தரகாண்டம்: விலை ரூ. 6-8-0

எல்லாக் காண்டங்களும் தயாராகிவிட்டன.

சுந்தரகாண்ட மாஹாத்ம்யமும் பாராயணம் செய்வதற்கு மூலமும்:

விலை ரூ. 1-4-0

*

கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர்

புதிய வசன புஸ்தகம்

## டாக்டர் உ. வே. சாமிநாதையர்

எழுதியது

# நினைவு மஞ்சரி

292-பக்கங்கள்—24 வரலாறுகள்—9 படங்கள்

—:o:—

### இதில் அடங்கிய விஷயங்கள்

1. கடல் கடந்து வந்த தமிழ்
2. மணிமேகலையும் மும்மணியும்
3. செண்டலங்காரர்
4. இடையன் எறிந்த மரம்
5. மாவிந்த புராணம்
6. உத்தம சம்பாவனை
7. அந்தத் தொடிசு
8. அடுத்த குறள்
9. மணி ஐயர்
10. வி. கிருஷ்ணசாமி ஐயர்
11. பெற்ற மனம்
12. மல்லரை வென்ற மாங்குடியார்
13. மன்னார்சாமி
14. ஆவலும் அதிர்ஷ்டமும்
15. பெரிய திருக்குன்றம் சுப்பராமையர்
16. கிர்ர்ர்ரனி
17. அன்னமும் சொன்னமும்
18. பூசைத்தாயார்
19. நாயகர் மீட்சி
20. பொன்னம்பலம் பிள்ளையின் திருப்பணி
21. எங்கள் பாவம்
22. ஒருவன் தானா?
23. உயிர்மீட்சி
24. தாய் நாடு

விலை ரூபா ஒன்று * தபாற் கூலி வேறு.

மானேஜர் - தியாகராஜ விலாஸம் - திருவல்லிக்கேணி

## கலைமகள் காரியாலய வெளியீடுகள்

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| 1. | முருகன் ஓர் உழவன்—ஸ்ரீமான் வேங்கட ரமணி அவர்கள் எழுதிய அரிய நாவல் ... | 1 | 8 |
| 2. | குமுதினி—ஸ்ரீ ரவீந்த்ரநாத் டாகுர் எழுதிய நாவல் - வங்காளியிலிருந்து ஸ்ரீமதி ரங்கநாயகி மொழிபெயர்த்தது ... | 1 | 8 |
| 3. | மாயாவிநோதினி—ஸ்ரீ ரவீந்த்ரநாத் டாகுர் எழுதியது - ஸ்ரீமதி தஞ்சம் மொழிபெயர்த்தது | 1 | 8 |
| 4. | பைரவி—சரத்சந்த்ர சட்டர்ஜி எழுதியது- ஸ்ரீ த. நா. குமாரஸ்வாமி மொழிபெயர்த்தது... | 1 | 8 |
| 5. | விதியின் செயல் முதலிய கதைகள்— ஸ்ரீ ஏ. எஸ். பஞ்சாபகேச ஐயர், ஐ.ஸி.எஸ். எழுதியது ... | 0 | 6 |
| 6. | ரிஷப விஜயம்—ஓர் இனிய நாடகம் - ஸ்ரீ கே. வி. பஞ்சநதையர் எழுதியது ... | 0 | 12 |
| 7. | மண்ணாசை—ஸ்ரீ சங்கரராம் எழுதிய நாவல். | 1 | 8 |
| 8. | ஸ்ரீ சங்கராசார்யார் உபந்யாஸங்கள்— 50 உபந்யாஸங்கள் கொண்ட புஸ்தகம் ... | 1 | 8 |
| 9. | ஸ்ரீ சங்கர விஜயம்— ஸ்ரீ காமகோடி பீடாதிபதியவர்கள் திருவாய்மலர்ந்தருளியது ... | 0 | 10 |
| 10. | சியாமளா தண்டகம்— வடமொழி மூலமும் தமிழுரையும் - ஸ்ரீ அனவரதவிநாயகம் பிள்ளையவர்கள், எம்.ஏ., எல்.டி. மொழிபெயர்த்தது ... | 0 | 1 |
| 11. | கலைமகள் சித்திரப் படங்கள்—10 படங்களடங்கிய ஸெட் ஒன்றுக்கு ... | 0 | 6 |
| 12. | த்வாதசோபநிஷத்—தமிழில் ஸ்ரீ என்.எஸ். ராஜாராமையர் மொழிபெயர்த்தது ... | 2 | 0 |
| 13. | முப்பெரு வீரர்—ஸ்ரீ ஏ. எஸ். பஞ்சாபகேசையர் எழுதிய அரிய நவீனம் ... | 2 | 0 |
| 14. | நிர்மலா—ஸ்ரீ பிரேம்சந்த் (ஸ்ரீ கா. ஸ்ரீ. ஸ்ரீநிவாஸாசாரியார் ஹிந்தியிலிருந்து மொழிபெயர்த்த நாவல்) ... | 1 | 8 |

மானேஜர்—கலைமகள்—மயிலாப்பூர்

# கபால குண்டலா

**பங்கிம் சந்த்ரர் நாவல்—நெ. 11**

வங்காளி மூலத்திலிருந்து

ஸ்ரீமான்

**த. நா. குமாரசுவாமி, பி.ஏ.**

அழகாய் மொழிபெயர்த்தது.

படங்கள் கொண்டது

**விலை ரூ. 1-8-0**

(எங்கள் புதுப் புத்தக ஜாப்தாவுக்கு எழுதுக.)

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.

---

# THE SANATANA DHARMA

OR

# THE HINDU VIEW OF LIFE

BY

**SRI SANKARACHARYA**

OF

**SRI KANCHI KAMAKOTI PITHAM**

**Translated from the original in Tamil**

BY

**V. R. SUNDARARAMAN, M.A.**

**With a Foreword by**

**Sir MANMATHNATH MUKERJEE, Kt.**

**Ex-Chief Justice, High Court, Calcutta.**

**Price Rs. 1-8-0... Postage extra.**

**For Kalaimagal Subscribers ... Price Rs. 1-4-0. Postage extra.**

---

**THE MANAGER, KALAIMAGAL,**

**MYLAPORE, MADRAS.**

வணக் காப்பக நிலையம்
24866
600 008

# புதிய நாவல்

தமிழ் நாட்டுக் கதை

தமிழ்நாட்டுக் கிராமவாழ்க்கை

தமிழ் நாட்டுக் காட்சிகள்

தமிழ் நாட்டுப் பேச்சுக்கள்

எல்லாம் சேர்ந்தது

# மண்ணாசை

என்னும் நாவல்

ஸ்ரீமான் ‘சங்கராம்’ எழுதியது

வெளிவந்துவிட்டது

உங்கள் ஊர்க் கலைமகள் ஏஜெண்டிடம் விசாரியுங்கள்

விலை ரூ. 1-8-0. தபாற் கூலி வேறு.

மானேஜர்—கலைமகள்—மயிலாப்பூர்